# கோயிற் பூனைகள்



கோவைகிழார்

திராவிடர் கழக வெளியீடு

# கோயிற் பூனைகள்

MADURAI KAMARAJ UNIVERSITY LIBRARY
MADURAI

கோவை கிழார்

திராவிடர் கழக வெளியீடு
பெரியார் திடல், 50, ஈ.வெ.கி. சம்பத் சாலை,
வேப்பேரி, சென்னை –600 007.

முதற் பதிப்பு – 1945

இரண்டாம் பதிப்பு – 1999

© பதிப்புரிமை பெற்றது

238860

நன்கொடை (குறைந்த அளவு) ரூ. 40/–

அச்சுக் கோர்ப்பு

பெரியார் கணினி ஆய்வுக் கல்வியகம்

அச்சிட்டோர்

'விடுதலை' ஆஃப்செட் பிரிண்டர்ஸ்

பெரியார் திடல், 50, ஈ.வெ.கி. சம்பத் சாலை,

வேப்பேரி, சென்னை –600 007.

MADURAI KAMARAJ UNIVERSITY LIBRARY

# அன்பளிப்பு

இக்''கோயில் பூனைகளின்'' இரண்டாம் பதிப்பை அன்புடன் ஏற்றுக்கொள்ள இசைந்த தொழிற்கலை அறிஞர் திருவாளர் கோபால துரைசாமி நாயுடு அவர்களுக்கு இதன் ஆசிரியர் அளிக்கும் அன்பளிப்பு உரை.

## (I) எளிமைத் தோற்றத்தவர்:

ஓர் அழகிய மாளிகையில் மெல்லிய உடலும் வளர்ந்த மேனியும் கொண்ட ஒருவர் நின்று கொண்டிருந்தார். உடையோ நாட்டுப்புறத்து எளிய குடிகள் உடுக்கும் உடை; தோற்றமோ அகந்தையில்லாத எளிமைத் தோற்றம்; பேச்சோ பெருமிதம் இல்லாத சாந்தப்பேச்சு. இந்தத் தன்மைகளைக் கொண்ட ஒருவரை முன்பின் கண்டிராத ஒருவர் முதல் முறை கண்டால் என்ன நினைத்துப் பேசுவார்? திரு ஜி. டி. நாயுடு அவர்கள் இருக்கிறாரா என்று அவரையே கேட்டும் விடுவார். அத்தனை எளிய தோற்றத்தைக்கொண்ட பெரியார் ஒருவர் அந்த மாளிகையின் உரிமையாளர். அம்மாளிகையிலும் அவரது இயந்திரச்சாலைகளிலும், தோட்டங்களிலும், கல்விபயிற்றும், கூடங்களிலும், தொழிற் பணி செய்யும் ஆட்களைக் காட்டிலும் எளிமையான உடை அணிந்திருந்தால், அப்பெரியாரின் பண்புகளை எடுத்து உரைக்கவும் வேண்டுமோ? தொழிலில் ஏற்றத் தாழ்ச்சி இல்லை என்பது தற்கால அறிஞர் துணிபு. அத்துணிபை, செயற்கையில் காட்டி நிற்பவர் நமது நாயுடு அவர்களே!

ஒரு நாள், அப்பெரியாரை சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தேன். என் கையில் இருந்தது கோயிற்பூனையின் முதல் பதிப்பு. அது என்னவென்று கேட்டார். அதனை அவரிடம் கொடுத்தேன். வாங்கிப்பக்கங்களை ஒருமுறை புரட்டினார். பொருளடக்கம் படித்தார். உடனே உள்ளுரையின் தன்மையை அறிந்து கொண்டார். இருபத்தைந்து பிரதிகளை அனுப்பிவிடுங்கள் என்று சொல்லிவிட்டுப் பிற சங்கதிளைப்பறிப் பேசினார்.

பெரியாருடைய மனப்பான்மை எனக்குப் புலப்பட்டது. மற்றொரு முறைகண்டு பேசியபோது அந்நூலைப் படித்திருந்தார் என்று தோன்றிற்று. ஏனைய பெரியோர்களைப்போல நூல்கள் 'அலமாரிக்கு அலங்காரம்' என்பது இப்பெரியாரிடம் இல்லை. நூலில் கண்ட

கருத்துக்கள் அவருக்கு ஒத்தன என்று அறிந்தேன். முன் எழுதின கருத்துக்களை ஒட்டி வேறு ஆறு கதைகளையும் இயற்றி அவைகள் ஒரு நூலாக வெளியிடப்படும் என்று அவர்பால் அறிவிக்கப்பட்டது. இரண்டாம் பதிப்பு தனக்கு அன்பளிப்பாக ஏற்றுக்கொள்வதாகக் கூறினர். இச்செய்தி அவரது எளிமைக் குணத்திற்கு ஏற்ற செயல் ஆக இருக்கிறதென்று அறிந்துகொண்டேன்.

## (ii) தொழில் அறிஞர்:

பெரியார் தோன்றியது நாட்டுப்புறம். குடும்பம் குடித்தனத் தொழில் கொண்டது. அவர் ஏற்றுக் கொண்டதும் தொழில் முறையே ஆகும். அன்றுமுதல் இன்றுவரை தொழிலையே மதிப்பார். பிறந்த தொழிலாகிய குடித்தனத்தை மறக்கவில்லை. ஆனல், அதில் பன்மடங்கு விளைவு உண்டாகும்படி செய்திருக்கிறார். பிறருடைய பருத்திச்செடி அரை இராத்தல் பருத்தி தந்தால் இவருடைய செடியோ ஐந்து இராத்தல் பருத்தி தரும். அது போலவே சோளமும், வாழையும், பப்பாளியும் என்க. ஐயப்படுவோர் அவருடைய போத்தனூர் பண்ணையைப் போய்ப் பார்க்கலாம். பருத்தி முதலிய அஃறிணை பொருள்களும் அவரைக் கண்டால் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றவோ என்பீர்கள்.

குடித்தனத் தொழிலுக்குத் துணையாக கைத்தொழில்கள் அமைய வேண்டுமென்பது ஆன்றோர் கொள்கை. அக்கைத்தொழில்களில் பண்டைமுறைகளைக் காட்டிலும் சீர் பெற்ற முறைகளே நாட்டிற்கு வேண்டும். கைத்தொழில் என்றால் சிறு தொழில்கள் மட்டுமல்ல. வெறுமனே கையினால் செய்யும் தொழில்கள் மட்டும் அல்ல; கையினால் செய்த கருவிகளைக் கொண்டு செய்யும் தொழிலும் கைத்தொழிலே ஆகும். அப்படிப்பட்ட தொழிலாலே தான் மேலைய நாடுகள் செல்வாக்கு அடைந்திருக்கின்றன. 'நாமும் ஏன் செய்யலாகாது' என்பது நாயுடுவின் ஆர்வம். சின்னஞ் சிறு வயதிலேயே மோட்டார் என்ற விசை வண்டியை ஓட்டினார். அதைப்போல் ஒன்றைத் தானும் செய்தார். அது முதல் கருவிகளைச் செய்யும் தொழிலை மேற்கொண்டு அதில்மேம்பாடு அடைந்தார். அப்படிப்பட்டவர் சிறந்த தொழில் அறிஞர் அல்லவா? தொழிலே நமது நாட்டிற்குச் செழிப்புத் தருவது ஆகும் அல்லவா!

## (iii) கலை அறிஞர்:

கலை அல்லது விஞ்ஞானம் மிகவும் போற்றப்படுபவைகளில் ஒன்று ஆகும். அதனால் தான் மேல்நாடுகள் சிறப்புற்றும் செல்வாக்கு

அடைந்தும் இருக்கின்றன. நமது நாட்டிலோ பண்டையக் காலத்தில் கலை அறிவு இருந்தது. போய்வர விசை வண்டித் திட்டத்தை ஒழுங்குபெற ஏற்படுத்தினார்; ஆங்காங்கே வண்டி நிலையங்க்ள் பொதுமக்களுக்கு ஏற்றபடி அமைத்திட்டார்; தன் ஆட்களைப் பொது மக்களின் ஊழியத்திற்கு என்று விடுத்து இறுமாப்பும் வீண் பெருமையும் ஏற்படாமல் அடக்கி ஆட்சி புரிந்தார்; இந்தத் திட்டத்தில் பெரியார் கொண்டிருக்கும் அமைப்பு மிகச் சிறந்தது; பல நூற்றாண்டுகளாக ஆட்சி முறையில் ஈடுபட்டுத் தேர்ந்த ஆட்சியாளரும் இவருடைய ஆட்சித் திறத்தைக் கண்டுவியக்க வேண்டும்.

## (iv) தற் பயிற்சியாளர்:

மேல் நாடுகளில் புதுக்கருவிகளைக் கண்டுபிடித்த பெரியார்களும், ஆழ்ந்த கருத்துக்களை வெளியிட்ட அறிவாளர்களும் உயர்ந்த கல்விச் சாலைகளில் தேர்ந்தவர்கள் அல்லர். தற்பயிற்சியினாலே முன்னேற்றம் அடைந்தார்கள். நம் நாட்டிலோ கல்விக் கழங்களில் பயின்றவர்களே கலைவாணர்கள் என்ற தப்பு எண்ணம் உண்டு. இப்போதும்கூட ''சென்னைப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்களே புதுக்கலை நூல்களை இயற்றவல்லவர்கள். ஏனையோர் 'தகுதியுள்ளவர்கள் அல்லர்'' என்று எண்ணுவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். இதற்கு எதிர் மறையாக நாயுடு அவர்கள் விளங்குகின்றார். பாடாசாலையில் மேல் படிப்புப் பெறாதிருந்தும் தற் பயிற்சியினாலே பொதுமக்கள் அறியக்கூடாத உயர்ந்த கல்லகளை அறிந்திருக்கின்றார். பலவகைகளிலும் ஆராய்ச்சிகள் செய்து புதுப்புது கலைஞானங்களை அறிந்திருக் கின்றார். கருவிகளைச் செய்வதிலும் பயிர்களை வளர்த்துவருவதிலும் மின்சாரம் முதலிய ஆற்றல்களை வசப்படுத்திப் பயன்பெறுவதிலும் நாயுடு அவர்கள் மிகத் தேர்ச்சி பெற்றிருக்கின்றார். தற்பயிற்சி யினுடைய பலனை அறியவேண்டுமாயின் அவரைக் கண்டு தெரிந்துகொள்ளலாம். கலைக் கழகங்களில் உயர்ந்த பட்டம் பெற்றவர்களும் இவரிடம் பணிய வேண்டியதுதான். ஆங்கிலத்தில் பெரும் தேர்ச்சி இல்லாதிருந்த போதிலும் விஞ்ஞானச் சொற்களை எவ்வாறு மனனப்படுத்தினாரோ சொல்ல இயலாது. கலையி ) சோதனை செய்யும் வகையில் நாயுடு மிகச் சிறந்தவர் என்று அறிய வேண்டும். முன்னாளில் தற்பயிற்சி பெற்றவர்கள் திருவின் கடாட்சம் இல்லாதிருந்தார்கள். ஆனால், நாயுடுவோ கலைமகள், திருமகள் இருவரின் கண்ணோட்டத்திற்கும் ஆளானவர் என்று அறியலாம்.

## (v) பகுத்தறிவாளர்:

இந்நாளில் பகுத்தறிவு என்ற சொல் எங்கும் பரவி இருக்கின்றது. அதனுடைய பொருளைப் பொதுமக்கள் நன்றாக அறிவார்கள். அதனுடைய மேன்மையை எல்லாரும் போற்றுகிறார்கள். ஆனால் உண்மையாக உட்புகுந்து பார்த்தால் அப்பகுத்தறிவை அவர்களிடம் பார்ப்பது கடினம். அதனைப்பற்றிப் பேசுபவரிடம் அது இருப்பதில்லை. வீண் பெருமைகளை ஏற்றுக் கொண்டு பகுத்தறிவைப் புறக்கணித்து வருகிறார்கள். ஆனால் நாயுடு அவர்களிடம் உண்மைப் பகுத்தறிவு உண்டு. வீணான பயனற்ற சடங்குகளைத் தெரிந்து அறிவுக்கு உகந்த செயல்களிலேயே ஈடுபடுபவர். இதனை அவர் செய்யும் செயல்களில் மட்டும் அன்று, அவருடைய மாளிகையில் உள்ள நூலகங்களைப் பார்த்தாலே போதும். தாம் வாங்கின நூல்களைப் படித்து அவைகளை இரண்டு பிரிவாகப் பிரித்து 'இவைகள் இருக்கத்தக்கவைகள்'. 'இவைகள் எரிக்கத்தக்கவைகள்' என்று பெயர்கள் எழுதி ஒட்டி இருக்கின்றார். மனிதனுடைய உணவிற்கும் இன்பம் துய்த்தற்கும் ஏற்ற அறிவே இருக்கத்தக்கதென்றும், வெறும் மனக்கோட்டைகளைக் கட்டும் கருத்துக்களும், கதைகளும் எரிக்கத்தக்கவைகள் என்றும் பாகு படுத்தியிருக்கின்றார். தற்காலத்தில் உணவுக்கு வழி இன்றி வருந்தும் கோடிக்கணக்கான மக்கள் பசித்திருக்க வீணாக ஆகாயக் கோட்டைகளைக் கட்டிக்கொண்டு வானத்தை நோக்கும் மக்களின் அறிவு சரியா என்று அவர் கேட்கின்றார். அப்படிப்பட்டவர் பகுத்தறிவில் ஒப்பற்றவர் என்பதில் ஐயமா?

## (vi) சோதனை அறிவாளர்:

மேல் நாடுகளில் இயற்கையைப் பரிசோதனை செய்து அதிலிருந்து வரும் விளைவுகளை மக்களுடைய வாழ்க்கைக்காகப் பயன்படுத்திக் கொள்ளுவார்கள். அதனாலே அவர்களுடைய செல்வாக்கு அதிகரித்திருப்பதுமன்றி, நாகரிகத்திலும் அவர்கள் முற்போக்கு அடைந்திருக்கிறார்கள். அவ்விதமான கலைப் பரிசோதனையில் நாயுடு அவர்களுக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. இரண்டுவகைகளில் நாயுடு அவர்களுடைய சோதனைகள் வெற்றி அடைந்திருக்கின்றன. ஒன்று கருவி ஆக்கம், இரண்டு உணவுப் பெருக்கம், கருவி ஆக்கத்தில் நூதனமாகப் பல பொருள்களை இயற்றியிருக்கின்றார். அவைகளில் புதுமுறை இயந்திரங்கள் பல உண்டு. விசை வண்டிகளுக்கு வேண்டிய சிறு சிறு பகுதிகள், நீர் இறைக்கும் யந்திரங்கள், அலுமினியத்தால் செய்த

பெரிய கெடியாரங்கள், வெகு நுட்பமான சிறைக்கும் கத்திகள் முதலான பல அரிய பொருள்கள் உண்டு செய்திருக்கின்றார். அரசியல் ஆதரவு இருக்கும் பட்சத்தில் இன்னும், பன்மடங்கு சோதனைக் கருவிகளை ஆக்கியிருக்கக்கூடும். உணவுப் பெருக்கத்தில் அவர்செய்திருக்கும் சோதனை மிக அருமையானது. இக்காலத்து நெருக்கடியில் அதனை அரசியலார் ஏற்றுக்கொள்ளாதது ஒரு பெரும் குறை அன்றோ! ஒரு சோளச்செடியில் பதினான்கு கிளைக் கதிர்களும், 25 அடி உயரமுள்ள தண்டும் ஏற்பட்டால் அதனை எவர் அங்கீகரிக்கக்கூடாது? அதைப் போலவே பருத்தியும், ஆனால் பல்கலைக்கழகத்தார் போலவே அரசியலாரும் தங்கள் பட்டம்பெற்ற ஆட்களை நோக்குகிறார்களே அன்றி நாயுடு போன்றவர்களை மதிப்பதில்லை. இது நமது நாட்டில் பண்டைநாள் முதற்கொண்டு ஏற்பட்ட ஊழ்வினை போலும்.

## (vii) தொழிற் கல்விக் கழகத்துறையாளர்:

பெரிய நகரங்களிலே கழகங்கள் ஒருநாள் தோன்றி ஒருநாள் அழிகின்றன. ஒன்றிரண்டு பேச்சாளர்கள் இரண்டு மூன்று கூட்டங்களில் பேசுவார்கள். ஒன்றிரண்டு ஆண்டுவிழாக்கள் நடைபெறும். யாராவது ஒரு மந்திரி பேசுவார். அத்தோடு அக்கழகம் நின்றுவிடும். ஆனால் கோபால் பாக்கிலோ மாதம் தவறினாலும் கூட்டம் தவறாது. ஊரில் மிகப்படித்துத் தேர்ந்தமக்களே நூற்றுக்கணக்காக வருவார்கள். இந்தியாவிலும் வெளிநாட்டிலும் மிகச் சிறந்த தொழிலறிஞர்கள், விஞ்ஞான அறிஞர்கள், மற்றக் கலையறிஞர்கள் விஜயம் செய்வார்கள், அருமையாகப் பேசுவார்கள். அவை முழுவதும் நூல்கள் மூலமாக வெளியிடப்படும் இந்தச் சபையை நிறுவின பெரியார் நாயுடு அவர்கள். இச்சபையின் பெயர் தொழில் கல்விக் கழகம். (Industrial Labour Welfare Association Ltd) இதன் அங்கத்தினர் இந்தியா முழுதும் உள்ளார்கள். அதுசெய்யும் பிரச்சாரம் இதுவரை எந்தக் கழகமும்செய்திராது. தமிழ்க் கவிஞர் முதற்கொண்டு கவர்னர் வரையில் இக்கழகத்தைப் புகழ்ந்திருக்கிறார்கள். இதைப்போல் ஒரு கழகம் எந்த நகரிலும் இந்நாட்டில் இல்லை எனலாம்.

## (viii) கலங்கா நெஞ்சம் படைத்தவர்:

இத்தனை ஆற்றல் ஒருவனுக்கு இருந்தால் மேல்நாடுகளில் அவனுக்கு ஏற்படும் ஆதரவிற்கு அளவும் இருக்குமோ? ஆனால் நமதுநாட்டிலே அழுக்காறும், பொறாமையும் சிறந்து விளங்கும். இந்தப் பேய்க் குணங்களால்ஒருவனுக்கு ஏற்படும் துன்பத்திற்கு

அளவேயில்லை. ஆனால், அவைகளுக்கு நாயுடு அவர்கள் அஞ்சுவது இல்லை. கலங்காத நெஞ்சம் படைத்துள்ளதினால் எப்படிப்பட்ட பொருளழிவுகள் ஏற்பட்ட போதிலும் தன்னுடைய தொழிலிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார். எதிர்த்துவரும் போராட்டங்களை அஞ்சா நெஞ்சத்துடன் தடுத்துக்கொண்டே வருகின்றார். அவை இல்லாதவரை அவருடைய ஆற்றல் இன்னும் பன்மடங்கு வேலை செய்து வரும் அல்லவா! இங்கிலாந்து ஹாம்டனைப்போல் இந்தியாவில் ஒரு ஹாம்டன் என்று இவரைக் கூறினால் மிகையாகாது.

## (ix) அன்பளிப்புக்கு உரிமையாளர்:

இப்படிப்பட்ட அரிய பண்புகளைக்கொண்ட ஒரு பெரியாருக்கு இந்நூலை அன்பளிப்பதாகத் தருவதில் ஒருவித அமைதி உண்டல்லவா? நமது நாட்டுச் சமயங்களில் பகுத்தறிவிற்கு எதிரிடையான சடங்குகளும் கொள்கைகளும் நிரம்ப ஏற்பட்டு மக்களுக்குத் தீங்குசெய்து வருகின்றன. அவைகளை நீக்கும் ஆற்றலும் மனத்திட்பமும் பொதுமக்களுக்கு இல்லை. தலைவர்களும் அச்சத்தால் தலை குனிந்துகொண்டு வாளா இருக்கின்றனர். அப்படிப்பட்ட வேளையில் நாயுடு போன்றவர்கள் முன்நின்று வினையை முற்றுவிக்கக்கூடும். இந்தக் கருத்தைக்கொண்டே இந்நூலை இதிலுள்ள பண்பைப் போன்ற குணம் வாய்ந்த பெரியார் நாயுடு அவர்களுக்கு அன்பளிப்பாகத் தருவதே சிறப்புடையதல்லவா? அவரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார். அந்தப் பெருமை இந்நூல் அடைந் திருப்பதே சாலச் சிறந்தது ஆகும். அதனை இங்கே கூறிக்கொள்ளலாம் அல்லவா?

**-கோவை கிழார்**

# பொருளடக்கம்

*முன்னுரை*

1. கள்ளனோ, குள்ளனோ? ,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,, 1

2. திருவாபரணத் திருப்பணி ,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,, 7

3. கன்னிகையோ, காணிக்கையோ? ,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,, 15

4. மூர்த்திகளின் சிறைவாசம் ,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,, 21

5. திருமண் வழக்கு ,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,, 29

6. திருமுழுக்குப் பிரபாவம் ,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,, 35

7. தேர்தல்-கூத்து ,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,, 44

8. ''இதுவோ ஜிமிக்கி?'' ,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,, 54

9. தபோவனத்து ஞானயோகம் ,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,, 60

10. திருநீற்றிலும் முயற்சி ,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,, 66

11. மூர்த்திகளின் ஏற்றுமதி ,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,, 72

12. பேயோ பிசாசோ?,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,, 80

13. விடா முண்டன் ,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,, 87

14. செடில் இராட்டினம் ,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,, 93

15. சாமி சொல்கிறது ,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,, 102

16. சிறந்த அறம் யாதோ? ,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,, 112

17. இதில் வியப்பில்லை! ,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,, 120

# இரண்டாம் பதிப்புரை

முதற் பதிப்பில் பதினொரு பூனைகள் தங்கள் வரலாறுகளைச் சொல்லி மகிழ்ந்தன. அவைகளைக் கேட்டும் படித்தும் மக்களில் பல ஆயிரம் பேர் மகிழ்ந்தார்கள். இன்னும் மற்றப் பூனைகளின் வரலாறுகளையும் கேட்க வேண்டும் என்றும் ஆர்வங் கொண்டார்கள். ஆனால், முதற் பதிப்பு முழுவதும் தீர்ந்து விட்டது. ஒரே நூற்பிரதியைப் பல பேர் படித்து மகிழ்ந்தார்கள். ஆனால் கடிதம் அழியக் கூடியதே. நூற்பிரதிகளும் சில மாதங்களில் மறைந்துவிட்டன. ஒரு தடவை படித்தவர்கள் பல பேர்க்கும் அதைச் சொன்னார்கள். கேட்டவர்கள் நூற்பிரதிகள் வேண்டும் என்றும் விரும்பினார்கள். சில செய்தித் தாள்கள் இவ்வரலாறுகளில் சில பகுதிகளை வெளியிட்டன. அவைகளைப் படித்த மக்களும் நூல்களை முழுதும் கேட்க விரும்பினார்கள். கடைகளில் தேடினார்கள். இருந்தால்தானே கிடைக்கும். பிரதிகள் இல்லையே, ஆகவே மறுபதிப்பிற்கு வேண்டுகோள் வந்தது. இராண்டாம் பதிப்பிற்கு இதுவே காரணம்.

மற்ற வரலாறுகளையும் கேட்க வேணும் என்று சிலர் சொன்ன வேண்டுகோள் நினைவிற்கு வந்தது. ஆகவே அவைகளில் சிலவற்றைப் பொறுக்க வேண்டி வந்தது. முதலில் சொன்ன பதினொரு வரலாறுகளோடு வேறு ஆறு வரலாறுகளையும் இதில் சேர்த்துப் பதினேழு வரலாறுகளை இப்பதிப்பில் கூட்டியுள்ளோம். ஏன் பதினேழு என்று கேட்கவேண்டாம்? அதற்குக் காரணம் இல்லை. ஆறு வரலாறுகள் நினைவிற்கு வந்தன. அவைகளைக் கேட்ட படி சேர்த்தோம். பதினெட்டு என்பது மார்வாடிகளுக்குப் பிடிக்காது, பத்தொன்பது என்பது அசுபம், இருபது மிகப் பெரிது. இவை முதலான காரணங்கள் நமக்கு இல்லவே இல்லை. வந்தமட்டும் போதும் என்ற திருப்தியிலே இவைகளை வெளியிடுகிறோம். வெளியிடுவது மட்டும் நமது செயல் மற்ற உரிமைகளைப் பூனைகளுக்கே விட்டு விடுவோம்.

பூனைகளுக்கும் மக்களுக்கும் எப்போதும் உறவு உண்டு அல்லவா? மக்கள் இல்லாவிடத்தில் பூனைகள் இருப்பது அரிது அப்படி இருந்தால் அதனைப் புலி என்பர். இரண்டும் ஒரே இனம் அல்லவா? எலிக்குப் புலியாகிய பூனையிடத்தில் மக்களுக்கு உறவு ஏன் ஏற்பட்டதென்று கேட்க வேண்டாம்? மக்களில் பூனைகள் உண்டு என்று பி.ஸ்ரீ. முதற் பதிப்பில் கூறியுள்ளனர். அதுவே போதிய சான்று என்க. தக்க அறிஞரின் வாக்கு மூலம் உண்மை யானது. அதில் ஐயம் கொள்ள வேண்டாம். ஆகவே நான்கு கால் பூனைக்கும் இரண்டு கால் பூனைக்கும் குணப்பொருத்தம் மிகுதி என்க. 'நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி' என்பது முதுமொழி. ஆகையினால் பூனைகளின் வரலாறுகளை மக்கள் ஆர்வத்துடன் ஏற்றுக்கொண்டு தம் வாழ்க்கையுடன் ஒத்திட்டுப் பார்த்து மகிழ்வார்கள் அல்லவா? இந்த உணர்ச்சிக்காக இக் கதைகள் பூனைகளின் கதைகள் ஆனாலும், நன்கு அறிவுறுத்தும் பொருட்டு மக்களின் பெயர்களை இட்டுச் சிறிது மாற்றி எழுதுவோம். இதைப் பற்றி எவரும் கோபித்துக் கொள்ள மாட்டார்கள் என்று, தாழ்ந்த வணக்கத்துடன் விண்ணப்பித்துக் கொள்கிறோம்.

***இரண்டாம் பதிப்பாசிரியர்***

## முதற் பதிப்பின் முன்னுரை

கோயிலிலே பூனைகள் உண்டு. நாமும் நேரில்கண்டிருக்கிறோம். பிறரும் பார்த்திருக்கிறார்கள். ஆகவே காட்சி அளவைப்படி கோயிலிலே பூனைகள் உண்டு என்பது உண்மை. ''கோவிற் பூனை தேவர்க்கஞ்சாது'' என்ற பழமொழி ஒன்று உண்டு. அப்பழமொழி பல நாளாக நமது நாட்டிலே உலாவிக்கொண்டு வருகிறது. அது பழைய மொழி; ஆகையால், கோயில் ஏற்பட்டது முதற்கொண்டே அப்பழமொழியும் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆகவே அதில்உண்மை இருக்கவேண்டும். அறிஞர்களும் மூத்தோர்களும் பழமொழி களிலிருந்து பல உண்மைகளை எடுத்தாளுகிறார்கள் அல்லவா? ஆகவே அனுமான அளவையினாலும் கோயிலிற் பூனைகள் உண்டு எனலாம். இரண்டு அளவைகளினாலே ஒரு பொருள் உறுதியானால் மூன்றாவது அளவையைக் குறித்து ஆராய வேண்டியதேயில்லை

என்பர். ஆனால் நாம் எடுத்துக்கொண்ட பொருளுக்கு மூன்றாவதாகிய நூல் அல்லது ஆகம அளவையும் இருக்கிறதாம். ஒவ்வொரு கோவிலிலுள்ள ஒவ்வொரு பூனையும் தன்னுடைய வரலாற்றைக் குறித்து ஒவ்வொரு சரிதத்தைஎழுதி வைத்திருக் கிறதாம். ஆனால் அவ்வாறு தம் சுய சரிதங்களை எழுதி வைத்திருக்கும் பூனைகள் தங்களுடைய பெயர்களையும் தங்களுடைய பெருமைகளையும்வெளிப்படையாக எழுதி அந்நூல்களுக்குச் சிறப்புப் பாயிரங்களை அமைப்பது கிடையாது. பூனைகள் கோயிற் பணிவிடைகளிலேயே ஈடுபட்டவைகள். ஆகையால் அவை தற்போதம் இழந்து தற்புகழ்ச்சி நீக்கி உலக நல நினைப்பையே உட்கொண்டவை. ஆகவே தம் சுய சரிதைகளைப் பிறர் வாயிலாகவே சொல்லப்பட்டதாக எழுதி வைத்துள்ளன. ஒவ்வொரு பூனையும் தன் சரிதையை வடநாட்டிலே பல்லாயிரங் காதங்களுக்கு அப்பால் உள்ள நைமிசாரணியத்திலே சனகாதி முனிவர்களுக்குச் சூதபுராணிகர் சொன்னதாகவே உறுதியாகக் கூறுகின்றது. இந்த உண்மையை அறியாத பாமர மக்கள் இம்மேலான சரிதைகளைத் தலபுராணங்கள் என்ற சுவையற்ற சொற்களாகவே மறைத்து கூறிவிடுகின்றார்கள். உண்மையில் அவை கோயிற் பூனைகளின் சுய சரிதைகள் என நாம் அறிய வேண்டும். ஆகவே மூன்றாவதாகிய ஆகம அளவையும் கிடைத்துள்ளது. இம்மூன்று அளவைகளும் நமக்கு எப்போது கிடைத்தனவோ அப்போதே தருக்க நூலின்படி கோயிலில் பூனைகள் உண்டு என்பது உறுதியாயிற்று.

இனி, கோயிலிலே பூனைகள் இருந்தால் யானைகள் இல்லையோ என்ற கேள்வி பிறக்கும். கோயிலில் யானைகளும் இருக்கின்றன. அதனை நிலை நாட்டுவதற்கு வேண்டிய அளவைகளும் உண்டு. ஆனால் ஒன்று உறுதியாகக் கூறலாம். எல்லாக் கோயில்களிலும் யானைகள் இல்லை. சில புகழ்பெற்ற கோயில்களிலேதான் உண்டு. பெரும்பான்மையான கோயில்களிலே யானைகள் இல்லை. அவைகளை வைத்துக்கொண்டு யாரால் தீனி போட முடியும்? அந்த யானைகளின் வரலாறுகள் மிகக் கடினமானவை. அவைகளைப் படிப்பதற்காக, நாம் முன்வர வேண்டியதில்லை. பெரிய அறிஞர்களுக்கே அந்த வரலாறுகளை விட்டுவிடுவோம். இங்கே

பூனைகளுடைய வரலாறுகளை மட்டும் சிறிது ஆராய்வோமாக. அவைகளை முழுதும் ஆராய நமக்கு நேரம் இல்லை அல்லவா? ஆகவே முழு வரலாறுகளையும் ஆராயாத ஒவ்வொருவகைப் பூனையின் வரலாற்றிலிருந்து ஒவ்வொரு கூற்றை மாத்திரம் எடுத்துக்கொண்டு படிப்போம். சுவையுள்ள பகுதிகளை மாத்திரம் வைத்துக்கொண்டு மற்றவற்றை விட்டுவிடுவோம்.

கோயிற் பூனைகளைப் பற்றி நாம் ஆராய்ச்சி செய்யலாம் என்று எடுத்துக்கொண்டபோதே, ஏன் வீட்டுப் பூனைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்யக்கூடாது என்று கேட்கலாம் அல்லவா? ஆம் கேட்கலாம். வீட்டுப் பூனைகளைப் பற்றி நாம் நன்றாக அறிவோம். அறிந்த பொருளைப்பற்றி ஆராய்ச்சி என்னத்திற்காக வேண்டும்? மேலும் வீட்டுப் பூனைகள் எப்போதும் திருடும் குணம் உள்ளவைகள். அந்தத் திருட்டையும் அவை திருட்டுத்தனமாகவே செய்கின்றன. நம்மைக் கண்டவுடன் அஞ்சி ஓடிவிடுகின்றன. சிறிதேனும் தைரியம் கிடையாது. வீரம் என்பது அவைகளிடம் காணல் அரிது. அப்படிப்பட்ட அற்பப் பிராணிகளுடைய வரலாறுகளால் நமக்கு என்ன பயன்? வீரத் தாய்மார்களின் வரலாறுகளைப் படித்துப் படித்து நெஞ்சில் உரம் ஏறிய தமிழ் மக்களாகிய நாம் பயங்காளிகளுடைய வரலாறுகளைப் படிக்கலாமா? கூடாது, கூடாது. நம் வீட்டுப் பூனைகள் இருக்க இருக்க எலிகளைப் பிடிக்கவும் ஆற்றல் இல்லாமற் போயின. பக்குவப்படுத்தி வைத்தத் தின் பண்டங்களை மாத்திரம் காணாமல் தின்றுவிட்டு ஏப்பம் விட்டுக்கொண்டு ஆள் அரவம் கேட்டவுடன் ஓடிவிடும். ஆனால் கோயில் பூனைகளோ தேவர்களுக்கும் அஞ்சாது என்று பண்டைப் பழமொழி கூறுகின்றது. ஆகவே, அப்பூனைகள் அஞ்சா நெஞ்சு படைத்திருக்க வேண்டும். தேவர்கள் என்றால் சாமனிய மானவர்களா? அவர்கள் இராவணாதி இராக்கதர்களையும், சூரபத்மாதி அவுணர்களையும், திரிபுரர் பாண்டாசுரன் முதலான அசுரர்களையும் தவிடுபொடியாக்கினவர்கள் அல்லவா? அவர்களுக்கும் அஞ்சாத பேர்வழிகளாகப் பூனைகள் இருந்தால் அவைகள் மிக்க வீரர்களே ஆகும். ஆகவே அவைகளின் வரலாறுகள் படிக்கத்தக்கவைகள் என்பதில் ஐயமா?

ஒருநாள் நான் எங்கள் ஊர்த்திருக்கோயிலுக்குச் சென்றேன். காலைக் கடன்களெல்லாம் முடித்துக்கொண்டு கோயிலுக்குச் செல்ல மணி 9.30 ஆயிற்று. அப்போது இரண்டாம் வேளைப் பூசை ஆகும் என்பது என் எண்ணம். ஆனால் கோயிலுக்குள் புகுந்து உள்ளே செல்லுகையில் அப்போதுதான் அர்ச்சகர் கர்ப்பகிரகத்தைத் திறந்துகொண்டிருந்தார். இன்னமும் உஷாப் பூசையும் நடக்கவில்லை என்று எண்ணினேன். ஆனால் கதவாவது திறக்கப்பட்டதே, காலை விசுவரூபக் காட்சியாவது கிடைக்குமே என்று மகிழ்ச்சியுடன் உள்ளே சென்றேன். திருக்கதவு திறக்கப்பட்டதும் உள்ளே என்ன காட்சி கண்டேன்! கடவுளுடைய திருமேனியின்மீது ஒரு பூனை வெகு அமைதியாக ஆரோகணம்கொண்டு வீற்றிருந்தது. அது அறிதுயில் கொண்டு யோக நிஷ்டையில் இருந்தது என்று எண்ணுகிறேன். ஏனெனில், கதவைத் திறந்த அர்ச்சகர் அதனைக் கைதட்டி நிஷ்டையிலிருந்து எழுப்பி வெயியேற்றும் வரை அது அஞ்சாமல் அந்தச் சவாரி நிலையிலேயே இருந்தது. சிவபெருமான் நந்தியின் பேரிலும், திருமால் பெரிய திருவடி பேரிலும், பிரமன் அன்னத்தின் பேரிலும் ஏறுவதாகப் புராணங்கூறும். ஆனால் இந்தப் பூனையோ கடவுளின்மீதே ஏறி இருப்பதனால், இது எப்படிப்பட்ட தவமூர்த்தியோ என்று எண்ணினேன். ஆகவே பூனையினுடைய தவப்பெருமையும் அஞ்சா நெஞ்சமும் பாராட்டத்தக்கன அல்லவா?

என்னுடன் கூட வந்த ஒரு சில்லறைப் பேர்வழி, ''ஐயா இரவெல்லாம் இந்த இருட்டறையிலே இந்தப் பூனை இருந்திருக்கு மானால், எங்கே மலசலம் கழித்திருக்கும்?'' என்று கேட்டான். ''ஐயோ அசடே! அந்தப் பொருத்தமற்ற சொற்களை ஆலயத்துக்குள் பேசக்கூடாது. திருமுழுக்கு முதலிய பதங்களை அல்லவோ பேச வேண்டும்?'' என்றான் மற்றொருவன். இருவரையும் அதட்டிவிட்டு ''அவ்வெண்ணங்களையே நாம் கொள்ளக்கூடாது'' என்று சொல்ல அத் தீய வாக்குவாதத்தை நிறுத்திவிட்டேன்.

கார்த்திகை தோறும் நான் முருகக் கடவுள் ஆலயத்திற்குச் சென்று வழிபடுவது உண்டு. அன்று ஆலயத்திலே ஓரழகிய மரத்து நிழலில் அமர்ந்து திருமுருகாற்றுப்படை, கந்தரனுபூதி இவைகளை வாசிப்பது

உண்டு. நடுப்பகலில் முருகபிரானுக்குத் திருமுழுக்குச் செய்வதுண்டு. ஒரு தடவை கார்த்திகையன்று சிறப்பாக முழுக்குச் செய்வித்தேன். சிறுமலைப்பழம் ஐந்நூறு, அதற்கு வேண்டிய வெல்லம், கருப்பஞ்சாறு, நெய், கற்கண்டு, திராட்சை முதலிய நறும் பொருள்களைச் சேகரித்து அனுப்பி வைத்தேன். அர்ச்சகர் முதலியோர் திருமுழுக்குக்கு வேண்டிய திருப்பணிகளை யெல்லாம் செய்துகொண்டிருந்தார்கள். நானும் எப்போதும் போலவே மரத்தடியில் அமர்ந்து திருமுருகாற்றுப்படை, அனுபூதி முதலான புகழ் நூல்களைப் பாராயணஞ் செய்துவிட்டு ஆலயத்திற்குள்ளே சென்றேன். முழுக்குத் தொடங்கிற்று. முழுக்குப் பொருள்களைப் பார்த்தேன், நான் அனுப்பியவைகளில் காற்பங்குகூட இருக்க வில்லை. பின்னால் வரும் என்று எண்ணிச் சும்மா இருந்தேன். முழுக்கும் முடிந்தது. தீபாராதனை தொடங்கிற்று. ''சுவாமி, முழுக்குச் சாமான்கள் எல்லாம் கொண்டு வந்தானா என் ஆள்?'' என்றேன். ''ஆமாம், கொண்டுவந்தான்'' ''நான் எழுதிக் கொடுத்த அட்டவணைப்படி ஐந்நூறு பழம், அதற்குச் சேர்ந்த பொருள்கள் எல்லாம் இருந்தன. சுவாமி முழுக்குச் செய்யும் போது அத்தனை காணப்படவில்லையே'' என்றேன். ''என்ன செய்யட்டும்? பொருள்களை அறையில் வைத்துவிட்டு முழுகச் சென்றேன். அப்போது பூனைகள் சிலவற்றைச் சாப்பிட்டு விட்டன. பூனைத் தொல்லை இங்கே மிக அதிகம்'' என்றார். ஆனால் ஒரு பூனை முந்நூறு பழம் சாப்பிட்டு விடுமா என்று நினைத்தேன் கற்கண்டு, வெல்லம், கருப்பஞ்சாறு, இவைகளையும்கூட இந்தக் கோயிற் பூனை சாப்பிடும் பழக்கம் பெற்றுவிட்டதென்று எண்ணினேன். அதற்குள் பெரிய குருக்கள் வந்தார். ''சாமி முழுக்குப் பொருள்களைப் பூனைகள் சாப்பிடுகின்றனவாம்; அதனால் குற்றம் ஆவதில்லையா?'' என்றேன். அவர் ''மனிதர்கள் தொட்டால் தான் குற்றம், வாயில்லாப் பிராணிகள் தொட்டால் குற்றம் இல்லை'' என்றார்.

இதற்கு ஒரு புது ஸ்மிருதி இருக்குமோ? என்று எண்ணினேன். ''ஒருவேளை அப்பிராணிகள் எடுத்துக் கொள்ளும் பாகத்தை அவிர்ப்பாகமாய்க் கொள்ளலாமோ?'' என்றேன். குருக்கள் சிரித்து விட்டு, ..அல்ல, முதல் தாம்பூலமாகவாவது முதல் தீர்த்தமாகவாவது

கொள்ளலாம். என்றார். எனக்கும் சிறிது பொருள் விளங்கிற்று. ''முதல் தீர்த்தமானால் சண்டை வருமே. பூனைகளுக்குள்ளும் அவ்விதச் சண்டை உண்டோ?'' என்று கேட்டேன். ''இல்லாமல் என்ன! இரண்டு மூன்று பூனைகள் சேர்ந்து பாகத்திற்கு வந்து விட்டால் சண்டைதான் பிடிக்கும்! அதிகக் கூசைல் ஏற்பட்டால் எங்களைப் போன்ற பெரிய குருக்கள் சென்று அவகளைத் துரத்த வேண்டியதுதான்'' என்றார்.

பெருமாள் கோயில்களிலே முதல் தீர்த்தத்திற்காகச் சீயர்களும் ஆச்சாரிய புருடர்களும் சண்டையிடுவது போல முழுக்குச் சாமான்களுக்காக பூனைகள் சிவாலயங்களில் சண்டை பிடிக்கும் என ஊகித்தேன். சிறு பூனைகளுக்குள் சண்டை மும்முரமாகி விட்டால் பெரிய பூனைவந்து அச்சண்டையை ஒழித்துப் பெரும் பாகத்தைத் தானே விழுங்கிக்கொள்ளும் என அறிந்தேன். அல்லது இராஜசூய யாகத்தில் முதல் தாம்பூலம் யாருக்குக் கொடுப்பது என்ற கேள்வி வந்தபோது கண்ணனுக்குக் கொடுக்கும்படி பெரியவர்கள் சொல்ல மற்றவர்கள் தடை செய்தும் கண்ணனே பலத்தினால் பெற்றான் என்றபடி, பூனைகளில் பெரிய பூனை பெற்றதுவோ என்று எண்ணினான். அல்லது வேள்வி செய்த காலத்தில் அவிசுகளை இந்திராதி தேவர்கள் பெற்றார்போல் முழுக்குப் பொருள்களைப் பூனைகள் பெற்றனவோ என்றும் நினைத்தேன். ஆனால், 'முருகப் பிரானுக்கு வைத்திருந்த பொருள்களை முதலில் பூனைகள் ஏன் எடுத்துக்கொண்டன?' என்று எண்ணினேன். அதற்குச் சமாதானமாகக் குருக்கள், ''யாதவர்கள் கோவர்த்தனகிரியில் இந்திரனுக்கு வைத் திருந்த பூசனைப் பொருள்களைக் கண்ணன் ஏன் எடுத்துக் கொண்டான்?'' என்றார்.

ஒருவேளை வைணவத்தில் குருக்களுக்கு இருந்த மன வேறுபாட்டினால் இவ்வாறு சொல்லுகிறாரோ என்று எண்ணி அவருடைய கருத்தை நா்ன் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்த நிகழ்ச்சி ஏற்பட்டது முதற்கொண்டு பூனைகள் என்றால் எனக்கு மிக அச்சம். பூனையை அதிலும் கோயிற் பூனையைக் கனவில் நினைத்தாலும் எனக்கு அச்சமேதான்!

பாருங்கள் , பூனைகளின் அஞ்சாநெஞ்சும், தீரமொடு வீரமும் ஒப்புயர்வற்ற சாகசச் செயல்களும்! இவை மற்றெந்தப் பிராணிகளுக்கு உண்டு? இராக்காலங்களில் கோயில் முழுதும் அவைகளுடைய அரசுதான். தீர்த்தம், தலம், மூர்த்தம் எவைகளும் இவைகளுக்கு இலட்சியம் இல்லை. மூர்த்திகளின் பேரில் ஏறிக்கூடத் தாவுமாம். கண்ணப்பருடைய வாய் எச்சில் தனக்கு முழுக்குநீர், அவருடைய காலடி தனக்கு முருகனுடைய காற்சுவடு, என்றெல்லாம் சொன்ன ஈசன் பூனைகளின் தொடர்புகளை என்ன திருவிளையாடல்? என்று விவரிப்பாரோ! அறியோம். மிகத் தைரியமாகக் கோயில்களின் கருவூலம், சரக்கறை, சாமான்பிரை முதலியவைகளில் எல்லாம் தாமே புகுந்து அரசாட்சி செய்யும்; மேல் அதிகாரிகளின் உத்தரவின்றி எல்லாப் பொருள்களையும் தம் வசப்படுத்திக் கொள்ளும். இப்படிப்பட்ட தைரியம் யாருக்கு உண்டு? மேலும் மற்றொரு முக்கிய பத்ததி உண்டு. இப்பூனைகள் தலைமுறைத் தலைமுறையாக ஆலயங்களில் உரிமை பாராட்டுமாம். ஒரு பூனை சில நூற்றாண்டுகளுக்கு முன் ஒரு ஆலயத்திற் புகுந்து கொண்டால் அதனை விலக்க வேறு எந்தப் பூனைக்கும் உரிமையில்லை. அப்பூனையினுடைய பரம்பரையிலேயே அக்கோயில் முதல் உரிமைகள் வரவேண்டும்; அக்கோயிலிலே அதனுடையமகள், பேர்த்தி, கொள்ளுப் பேர்த்தி முதலிய வரிசைகளுடன் உரிமை பாராட்டும். இந்த உரிமைகள் நாகரிகம் பெற்றதாகத் தற்புகழ்ச்சி பேசிக்கொள்ளும் எந்த நாட்டில் உண்டு? ஆகவே நம் நாட்டுக் கோயில்களில் உள்ள பூனைகளுக்கு ஏற்பட்ட வீரம், உரிமை முதலியவைகள் எந்த நாட்டிலும் எக்காலத்திலும் இருந்ததில்லை எனலாம்.

வெகுகாலம் வரைக்கும் நமது ஆலயங்களில் நாலுகால் பூனைகள் மாத்திரம் உண்டு என்று எண்ணி இருந்தேன். ஒரு நாள் எனது நண்பன் ''ஒரு ஆலயத்தில் இரண்டு கால் பூனைகளும் இருக்கின்றன! என்றான். நானோ திகைத்துப்போனேன்! ''அவ்வதியசப் பூனைகளை எந்தப் பிரமன் படைத்தான்?'' என்றேன். அதற்கு நண்பன், ''அவைகளைப் படைக்க ஒரு பிரமன் வேண்டியதில்லை. தாமேபடைத்து கொள்ளும்'' என்றான். ''அவர்களைப்பற்றிய

குணங்கள் எவை?'' என்றேன். ''நீங்கள் பார்த்த நான்குகால் பூனைகளுக்குள்ள குணங்களெல்லாம் உண்டு. அவைகளுக்கு மேலும் தாம் யாரால் ஆதரிக்கப்படுவார்களோ அவர்களையும் ஏமாற்றி அவர்கள் தலை மீது ஏறிக்கொள்ளும் வீரமும் உண்டு'' என்றான். ''அப்படியானால் அன்னாரின் வரலாறுகளிற் சில கூறுவீர்களா?'' என்றேன்.

''அதற்கென்ன, கூறுகிறேன்'' என்று சொல்லிச் சிலவற்றைக் கூறினான்.

அவைகளை அவன் சொன்னபடி எழுதுவேனாக, பிழைகள் இருந்தாலும், பெயர் மாறாட்டமாக இருந்தாலும், வேறொருவருக்குப் பொருத்தமாக இருந்தாலும், அக்குறைகள் என்னுடையவையல்ல, அவைகளைச் சொன்னவன் தலையிலும் பார்த்தெழுதியவர் கையிலும், அச்சடித்தவர் கண்ணிலும் ஏற்றி விடுகிறேன்.

கோயமுத்தூர், **கோவை கிழார்**

2-10-45.

# கோயிற் பூனைகள்

## 1

### கள்வனோ குள்வனோ?

திருக்குணவாயிற் கோயிலில் ஒரு பெருந் திருட்டுப் போயிற்று. கோயில் அதிகாரிகள் பெருந் திருவிழாவிற்காக நகைகளை எடுக்க ஸ்ரீ பண்டாரத்தைத் திறந்தார்கள். விலையுயர்ந்த நகைகளைக் காணவில்லை; வைரமுடி, தங்கக் கவசம் இவைகளைக் காணவில்லை. இவைகள் பத்து ஆண்டுகளுக்கு முந்தித்தான் பூண்டிச் சமீந்தாராலும், ப.ழ.பெ.ந. இராமன் செட்டியாராலும் செய்துத் தரப்பட்டன. இக்களவு உடனே போலீசுக்குத் தெரியப்படுத்தப் பட்டது. போலீசார் இரண்டு மாதம் வரை துப்பு ஆராய்ந்தார்கள். இறுதியில் ஒரு பழைய திருடன் வீட்டைச் சோதனை போட்டதில் ஒரு சில கோயில் நகைகள் கிடைத்தன. அவனை அடித்து நொறுக்கியதில் அவை பொன்னப்பா பத்தர் மூலமாகத் தனக்குக் கிடைத்தன என்று சொல்லிவிட்டான். பொன்னப்பா பத்தரைச் சிறைசெய்து விசாரித்ததில் வைத்தியநாத கனபாடிகள் சில தங்க நகைகளைத் தந்து உருக்கச் சொல்லிக் கைவளையல்களாக்கிக் கொண்டு போனார் என்று சொன்னார். மறுபடி இதே துறையில் போலீசார் துப்பு விசாரிக்கையில் திருப்பனைத்துறை மடத்தார் வைத்து நடத்தும் அன்னதானக் கட்டளைக் கணக்குப் பிள்ளை சொக்கப்பா பிள்ளையும், வைத்திய நாத கனபாடிகளும், பொன்னப்பா பத்தரும் சேர்ந்து இக்களவைச் செய்திருக்க வேண்டும் என்று போலீசார் முடிவுக்கு வந்தார்கள். போதுமான சான்றுகள் கிடைக்காததனால், பொன்னப்பா பத்தரை விட்டு விடுவதாக ஆசை காட்டினதில் அவன் சர்க்கார்ச் சாட்சியாக வருவதற்கு இசைந்தான். ஆகவே, சொக்கப்பா பிள்ளையையும் வைத்தியநாத கனபாடிகளையும் குற்றவாளிகளாகச் சேர்த்து குற்றவழக்குத் தொடங்கினார்கள்.

முதல் வகுப்புக் குற்றவிசாரணை நீதிபதி கச்சேரியில் விசாரணை நடந்தது. பெரிய வழக்கறிஞர்களை எதிர்க் கட்சிக்கு வைத்திருந் தார்கள். மடத்தார் தம் ஆளுக்குத் தண்டனையானால் தம் மடத்திற்குக் கேவலம் என்று எண்ணி அவர்களும் பொருளுதவி முதலியவைகளைச் செய்தார்கள். ஆகவே கனபாடிகளுக்கும் ஒரு வழக்கறிஞர் இலவசமாகக் கிடைத்தார். சர்க்கார் தரப்புச் சாட்சிகள் முதலில் விசாரிக்கப்பட்டார்கள்.

கனபாடிகளுடைய கட்சி என்னவெனில், திருட்டுப் போன நாளில் தாம் சென்னையில் இருந்ததால் தமக்குத் திருட்டுச் செய்தியே தெரியாது என்பதாம். அதற்காகச் சாட்சிகளை விசாரித்தார்.

## முதற் சாட்சி-பாலு நாயுடு

**வழக்கறிஞர்**: உமக்கு என்ன வேலை?

**சாட்சி**: நான் சென்னையில் ஒரு மிரசுதார், வர்த்தகமும் செய்து வருகிறேன்.

**வ**: எத்தனை வரி கொடுக்கிறீர்?

**சா**: ரூ. 500 முனிசிபல் வரி, ரூ. 1,000 தீர்வை ரூ.1,000 வருமான வரி.

**வ**: சென்ற ஜனவரி மாதம் 25ந் தேதி எங்கிருந்தீர்?

**சா**: சென்னையில் இருந்தேன்.

**வ**: என்ன செய்தீர்?

**சா**: எங்கள் வீட்டு மேல்மாடியில் நானும், சோமுபிள்ளையும், கோதண்டராம முதலியாரும், வைத்தியநாத கனபாடிகளும் சீட்டு ஆடிக்கொண்டு இருந்தோம். பிறகு முதலியாருடன் ஒளிப்படம் (சினிமா) பர்க்கச் சென்றோம். அன்றிரவு முதலியாரின் விருந்தினராக இருந்தோம்.

**வ**: அன்றாவது, அதற்கு முந்திய நாள் பிந்திய நாட்களிலாவது கனபாடிகள் திருக்குணவாயிலில் இருந்தாரா?

**சா**: இல்லவே இல்லை.

## குறுக்கு விசாரணை :

**சர்க்கார் வழக்கறிஞர் :**

கனபாடிகள் ஜனவரி 25ந் தேதி உங்களுடன் சீட்டு ஆடினார் என்று எப்படி நினைவு இருக்கிறது?

சா: எனக்கு மிக நான்றாக நினைவு இருக்கிறது.

ச.வ: ஏதாவது தினசரிக் குறிப்பு எழுதி வைத்திருக்கிறீரா?

சா: இல்லை.

ச.வ: ஏதாவது வரவு செலவுக் கணக்கில் எழுதி வைத்திருக்கிறீரா?

சா: இல்லை.

ச.வ: அதனைப்பற்றி யாருக்காவது கடிதம் எழுதி இருக்கிறீரா?

சா: இல்லை. அன்று சினிமாவில் 'நவயுகம்' நடந்தது.

ச.வ: அது எத்தனை நாள் நடந்தது?

சா: இரண்டுமாதம்,

ச.வ: எத்தனையாவது நாள் அதைப் பார்த்தீர்?

சா: ஞாபகம் இல்லை. பலதடவை அதனையே பார்த்திருக்கிறேன்.

## இரண்டாம் சாட்சி-சோமு முதலியார்

பாலு நாயுடுவைப்போலவே சொன்னார்.

## மூன்றாம் சாட்சி-கோதண்டராம முதலியார்

**வழக்கறிஞர்:** உங்களுக்கு என்ன தொழில்?

சா: சினிமா நடத்துகிறேன்.

வ: வருமானம் என்ன?

சா: 1,500 ரூபாய்.

வ: கனபாடிகளைத் தெரியுமா?

சா: நன்றாகத் தெரியும்.

ப: எப்படித் தெரியும்.

சா: பல ஆண்டுகளாகத் தெரியும். அவர் எங்கள் சினிமாவிற்கு நாடக பாத்திரங்களைச் சேர்த்து உதவி புரிந்து வருகிறார்.

வ: கடைசியாக அவரைச் சந்தித்த தெப்போது?

சா: ஜனவரி மாதம் 27,28,29-ந் தேதிகளில்.

வ:, அப்போது என்ன செய்தீர்கள்?

சா: மூன்று நாளும் எங்கள் கொட்டகைக்கு வந்து போய்க் கொண்டிருந்தார். 29ந் தேதி பாலுநாயுடு மாடியில் சீட்டு ஆடினோம். பிறகு இரவில் 'நவயுகம்' என்ற படம் பார்த்தோம்.

## குறுக்கு விசாரணை :

ச.வ: அவர் உம்மோடு இருந்ததற்கு யாதாவது எழுத்து மூலமான சாட்சியம் உண்டா?

சா: இல்லை.

ச.வ: தினசரியிலாவது எழுதி வைத்திருக்கிறீரா?

சா: இல்லை.

ச.வ: பிறகு எப்படி நினைவு இருக்கிறது?

சா: சீட்டு ஆடிவிட்டுப் படம் பார்க்கச் சென்றது அந்த ஒருநாள்தான்.

ச.வ: எந்த எந்த நாளில் யார் யாரைக் கூட்டிக் கொண்டு போனீர் என்று வரிசையாகச் சொல்லுவீரா?

சா: முடியாது.

ச.வ: பின்னே இந்தத் தேதி மாத்திரம் எவ்வாறு நினைவு இருக்கிறது.

சா: (மௌனம்).

ச.வ: என்ன பதில்

சா: நினைவுதான்.

ச.வ: சரி, கனடாடிகளின் கையெழுத்துத் தெரியுமா?

சா: தெரியும்.

ச.வ: (ஒரு கையெழுத்திட்ட புத்தகத்தை எடுத்து ஒரு பக்கத்தில் மற்றவற்றை மறைத்துக்கொண்டு ஒரு கையெழுத்து மாத்திரம் காட்டி) இது யாருடைய கையெழுத்து?

சா: கனபாடிகள் கையெழுத்துபோல் இருக்கிறது.

ச.வ: உண்மையாகச் சொல்லும், அவருடைய கையெழுத்தா, அல்லவா?

சா: ஆமாம், அவருடைய கையெழுத்து.

ச.வ: அந்த வரி முழுதும் வாசியும்.

சா: பெயர் - வைத்தியநாத கனபாடிகள் ; தகப்பன் பெயர் - சாமிநாத கனபாடிகள் ; தொழில் - வைதீகம் ; ஊர் - திருக்குணவாயில், கையெழுத்து - வைத்தியநாத கனபாடிகள்.

ச.வ: இந்த விவரங்கள் எல்லாம் சரிதானே? இரண்டாம் குற்றவாளியினதா?

சா: சரிதான். ஆமாம்.

ச.வ: இந்தப் பக்கத்தில் மேல் பாகத்தை வாசியும்.

சா: திருக்குணவாயில் கோயிலில் திருப்பனைத்துறை மடாலயத்தார் செய்துவரும் அன்னதானக் கட்டளையின் சார்பில் நடந்துவரும் அன்னதானம் பெற்று வரும் யாத்திரிகர்களின் தினசரிக் குறிப்பு.

ச.வ: தேதி பாரும்.

சா: ஜனவரி மாதம் 27-ந் தேதி.

ச.வ: முந்திய பிந்திய தேதிகளைப் பாரும்.

சா: இவ்விரண்டு நாட்களிலும் அவருடைய கையெழுத்து இருக்கின்றது.

ச. வ: சரி, போகலாம்.

திருப்பனைத்துறை மடத்தார் திருக்குணவாயில் கோயிலில் அன்னதானக் கட்டளையை நடத்த வந்தார்கள் அங்கே கட்டளைக் கணக்குப்பிள்ளையாக இருந்தவர் சொக்கப்பா பிள்ளை. அவர்

சரியாக அன்னதானம் செய்வதில்லை என்ற புகார் இருந்தது. அதற்காக மடத்தார் சாப்பிட வருபவரின் குறிப்பு ஒன்று வைக்கச் சொல்லித் தினந்தோறும் சாப்பிடுபவர்களின் கையெழுத்தை வாங்கும்படி கட்டளை இட்டனர். அவ்வாறு வைக்கப்பட்ட தினசரிக்குறிப்புதான் துப்பறியும் அதிகாரியால் கண்டுபிடிக்கப்பட்டு நீதி மன்றத்தில் சாட்சிக்குக் காண்பிக்கப்பட்டது. அதில் அந்தத் தேதிகளில் கனபாடிகள் சாப்பிட்டதாகக் கையெழுத்து இருந்தபடியால் கனபாடிகள் ஏமாந்து போனார்.

நீதிபதி, சொக்கப்பாவுக்கு ஓர் ஆண்டும், கனபாடிகளுக்கு ஒன்பது மாதமும் தண்டனை இட்டார்.

ஆனால், கனபாடிகள் கையெழுத்து இருப்பதைப் பார்த்து ஆச்சரியத்திலும் ஆச்சரியம் அடைந்தார். தாம் திருட்டுக்கு உடந்தையாக இருந்தபோதிலும் அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகச் சென்னைக்குச் சென்று மூன்று நாள் சினிமாக் கம்பெனி முதலியாரிடம் இருந்துவந்தார். அப்படியிருக்கையில் குறிப்பில் கையெழுத்து எப்படி ஏற்பட்டது? சிறையில் இருந்தபோது வெகுநாள் இதைப்பற்றியே ஆராய்ச்சி செய்தார். சாப்பாட்டுக் குறிப்பில் ஒன்று சேர மூன்று நான்கு நாட்கள் கையெழுத்து வாங்கி விடுவது சொக்கப்பாவின் செயல் என்று நினைவுக்கு வந்தது. ''திருட்டில் தான் சிக்கிக்கொண்டால் தன் சகா ஏன் தப்பிக்கொள்ள வேண்டும்? அவனும் தண்டனை அனுபவிக்கட்டும்'' என்ற கொடிய எண்ணம் வைத்துக்கொண்டு, சொக்கப்பா இவ்விதம் பித்தலாட்டம் செய்திருக்கவேண்டும் என்று கனபாடிகள் தீர்மானித்துக் கொண்டு சிறைவாசத்தை அனுபவித்து வந்தார்.

# 2

# திருவாபரணத் திருப்பணி

திருவம்பலம் என்ற திருத்தலத்தில் திருஞானப் பிரகாச மூர்த்தி மடம் என்ற ஒரு பெயர் பெற்ற மடம் இருக்கிறது. அம்மடம் மிகப் பழமையானது. இப்போது குரு மூர்த்தமாக வீற்றிருக்கும் பெரியார் 25-வது பட்டம் பெற்ற மடாதிபதி. மடம் ஊருக்கு அடுத்தாற்போலச் சிவாலயத்தை ஒட்டி இருக்கிறது. சிவாலயமும் மிகப் பழமையானது. ஐவராலும் பாடப்பெற்றதெனச் சொல்லுவார்கள். ஒரு பண்டைய புராணமும் உண்டு. அம்மடத்து ஆதீனப் புலவர் ஒருவரால் முற் காலத்தில் அருமையான செய்யுளால் எழுதப்பெற்றது அது இன்னும் அச்சுவாகனம் ஏறவில்லை. ஆகையால், அதன் சொல்லழகும் பொருளழகும் பாமர மக்கள் அறியமுடியாது போயிற்று. ஆதீனத்தில் குரு பூசைத் திருவிழாவின் போதுதான் ஆதீனப் புலவர் அப்புராணத்திலிருந்து ஒன்றிரண்டு கடவுள் வாழ்த்துச் செய்யுட்களைக் கூறி மகிழ்வதுண்டு. அந்தத் தலத்திற்கு ஒரு வடமொழி புராணமும் இருக்கிறதாகக் கூறுவர். ஆலயக் குருக்கள் அது ஏட்டுப் பிரதியில் இருப்பதாகவும், அதனை அச்சடிக்க முயலுவதாகவும் சென்ற 25 ஆண்டுகளாகச் சொல்லிக் கொண்டு வருகின்றனர். இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தியே மடத்தாரின் ஆன்மார்த்த பூசைக்குரிய மூர்த்தமாம். ஆகவே, ஆலயத்தினுடைய சொத்துப் பரிபாலனத்திலும் மடத்தார்கள் அடிக்கடி உரிமை பாராட்டுவதுண்டு. இந்த முறையில் அர்ச்சகர்களுக்கும் மடத்தார்களுக்கும் அடிக்கடி வழக்குகள் ஏற்பட்டு அதிகமாகத் தொகைகள் விரயமாயின. ஆகவே, இப்போது மடத்தின் பொருளாதார நிலைமையைப்பற்றி யாருக்கும் ஒன்றும் தெரியாது.

மடாதிபதி முதிர்ந்த கிழவர், இன்னமும் எத்தனை ஆண்டுகள் பட்டத்தில் வீற்றிருந்தருளுவர் என்று கூற முடியவில்லை. சீட வர்க்கங்களில் ஒவ்வொருவரும் அவர் சிவபதம் அடையும் நல்ல நாளை எதிர் பார்த்த வண்ணம் இருந்தனர். சிலர் ஜோதிடமும் ஆரூடமும் கேட்டார்கள். சிலர் அப்பெரியாரிடம் மிகுந்த அன்போடு இருந்தனர். இதுவரையிற் காட்டாத ஓர் அன்பை ஏன் இப்போது சீடர்கள் காட்டத் தொடங்கினார்கள் என்று கேட்பீர்களா? காரணம்

நீங்களே தெரிந்து கொள்ளுங்கள். சுவாமிகள் சிவனடி அடைவதற்கு முந்தியே தம் ஆசாரிய பதவியாகிய காவியுடையையும் முத்திரையையும் தம் சீடர் ஒருவருக்கு அளிக்கவேண்டும். அவ்வாறு அளித்ததும் அளிக்கப்பட்டவர் மடாதிபதியாவர். இப்புனிதச் சடங்குகளுக்காகப் பல சீடர்கள் இரவும் பகலும் காத்திருந்தனர். அவர்களுக்குள் இருந்த போட்டிக்கு அளவே இல்லை. இவ்வாறு சில மாதங்கள் கழிந்தன.

ஒருநாள் காலையில் மடத்திற்கு ஒரு வாலிபத் துறவி வந்தார். உடல் செக்கச் செவேல் என்றிருந்தது. முகம் மிகத் தெளிவாக இருந்தது. கண் மிகக் கூர்மை; பார்த்தவர் நெஞ்சை அவைகள் ஊடுருவிச் செல்லும் தன்மை பொருந்தியவை; தலையை நன்றாக முண்டிதம் செய்து கொண்டிருந்தார்; அழகிய காவியுடை தரித்திருந்தார்; துறவியாக இருந்தபோதிலும் திருமேனியின் பொலிவு இரதி தேவியையும் கவர்ந்துவிடும்; இப் புனிதவான் மடத்தை எட்டினதும் பலபேர் தங்களை அறியாமலேயே எதிர்கொண்டழைத் தனர். பெரிய சுவாமிகள் சமூகத்தில் கொண்டு விடுத்தனர். சுவாமிகளுக்குப் புதியவர் மீது ஒருவிதப் பற்று ஏற்பட்டது. சீடராக அங்கீகரித்தனர்; ஏனையபழைய சீடர்களுக்கோ மனத்தில் தம்மை அறியாமலேயே ஒருவித அழுக்காறு ஏற்பட்டது; புதியவரும் மடத்திலேயே தங்கிவிட்டார்.

பெரிய சுவாமிகள் சீக்கிரம் பரமபதம் சென்றிடுவார் என்று எண்ணியது உலகம்; ஆனால் புதியவரைக் கண்டதும் அவருடைய உடல் நலிவு நீங்கித் திடம் பெற்றது. அதனைப்' பலரும் விரும்பவில்லை. ஒருநாள் ஒரு சோதிடர் வந்தார். அவர் புதியவருக்கு அறிமுகப்பட்டவர் போலத் தோன்றிற்று. ஏனெனில் இருவரும் மிகப் பழகியவர் போல அந்தரங்கத்திற் பேசிக்கொண்டி ருந்தார்கள். அவர் சுவாமிகளுடைய சாதகக்குறிப்பைப் பார்த்து விட்டுச் சுவாமிகளுக்கு எதிரே ஒரு விதமாகச் சொல்லிவிட்டுச் சீடர்களிடம், ''சுவாமிகளின் இருதயம் பலக்குறைவாக இருக்கின்றது. இரத்தக்கொதிப்பு ஒருவாறு தொடங்கியிருக்கின்றது. ஆகவே எதிர்காலத்தை பற்றி உறுதியாகக் கூற முடியாது'' என்று சொல்லிப் பரிசு பெற்றுப்போனார். சீட வருக்கத்தில் மகிழ்ச்சியும் பொறாமையும் ஏற்பட்டன.

ஒருநாள் இரவு உண்டி முடிந்த பிறகு சீடர்கள் எல்லாரும் தம் தம் விடுதிகளுக்கு இளைப்பாறச் சென்று விட்டார்கள். புதியவர் மாத்திரம் பெரிய சுவாமிகளுடன் அந்தரங்கத்தில் இருந்தார். நடுயாமத்தில் பெரிய சுவாமிகளின் ஒடுக்கத்திலிருந்து, 'அரகர சம்போ மகா

தேவா' என்ற ஒலி பிறந்தது. கண்டாமணியும் அடித்தது. சீடர்கள் எல்லாரும் தடபுடலாக விழித்துக்கொண்டு ஒடுக்கத்தண்டை வந்தார்கள். பெரிய சுவாமிகள் தம் பீடத்தில் கண் உறங்கினாற்போல வீற்றிருந்தார். கண் பார்வை மேல் நோக்கி இருந்தது. முன்னிலையில் புதியவர் மிக பயபக்தியுடன் தலை வணங்கிக் கொண்டு பாதம் வருடிக்கொண்டி ருந்தார். அவர் உடலின்மீது காவி மேலாடையும், தாழ்வடமும், சின்முத்திரையும் இருந்தன. வந்த சீடர்கள் நடந்த சேதியைத் தெரிந்து கொண்டார்கள். ''பெரிய சுவாமிகள் பரமபதம் அடைந்து விட்டனர். புதியவருக்குப் பட்டம் அளித்துவிட்டனர்'' என்பதே. உடனே சிலர் புதிய சுவாமிகள் பக்கம் சேர்ந்தனர்; சிலர் ஏதோ கொடிய செயல் நடந்திருக்கிறது என்று ஆட்சேபித்தார்கள். சிறிது சிறிதாக முணுமுணுத்தல் தோன்றவே புதிய மடாதிபதி, ''அரகர சம்போ மகாதேவா! பார்வதி பதயே அரகரமகாதேவா ! தென்னாடுடைய சிவனே போற்றி !'' என்று உரக்கக் கூவினர். எல்லோரும் ''அரகர மகாதேவா, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்று மாறொலி இட்டனர். இத்திருவொலிகள் ஓங்கிடவே புதிய குருக்கள் சார்பிலே பெரும்பான்மையோர் ஒதுங்கினார்கள். ஏனையோர் மெதுவாக வெளியேறினர். புதியவர் வெற்றியடைந்தார், உடனே பழையவருக்கு அந்தியக் கிரியைகள் நடத்தப்பட்டன. புதியவருக்கு எல்லா மரியாதைகளும் வந்தன. பழையவர் எவ்வாறு உயிர் நீங்கினார்?'' என்று கேள்வி கேட்பாரும் இல்லாமற் போய்விட்டது. ஒரிருவரே அதிகாரிகளுக்கு மொட்டை மனுக்கள் செய்தார்கள். ஆனால் அவர்கள் கையில் காசு இல்லை. ஆகவே அம்மனுக்கள் குப்பைத் தொட்டியிற் போய்ச் சேர்ந்தன.

புது ஞானப் பிரகாச சுவாமிகள் ஆதீனத்துப் பீடத்திற்கு அலங்காரமாக இருந்தார். வெறும் அலங்காரர் மாத்திரம் அல்லர். கூரிய மூளை பெற்றவர். ஆகவே மிக எளிதில் தாம் எண்ணியபடி மடத்தின் பொருள் வருவாய் இல்லை என அறிந்தார். பெரும்பான்மையான நிலங்கள் நிரந்தரக் குத்தகைக்காரர்களிடம் இருந்தன. அவர்கள் ஒவ்வொருவரும் பத்து ஆண்டு பாக்கி வைத்திருந்தார்கள். அவைகளை நெருக்கிக் கேட்டால் வீண்சச்சரவு விளையுமேயன்றிப் பயன் இல்லை. மடத்தில் கணக்கும் சரியாக இல்லை. கச்சேரி ஏறுவதற்கும் பயம். கார்பார்த் தம்பிரான் புதியவருக்கு இணங்கியவர் அல்லர். ஆகவே முதல் ஆண்டில் குத்தகைக்காரர்கள் கொடுத்த காற்பங்கு மாசூல்தான் கிடைத்தது. நான்கு வழிகளையும் (சதுர் உபாயங்கள்) பயன்படுத்த முயன்றார்; ஆனால் பலிக்கவில்லை. சுவாமியார் மிகவும் தந்திரசாலி யாகையால் மிக எச்சரிக்கையாகவும் சமாதானமாகவும் நடந்துகொண்டார்.

ஒவ்வொருவராக மெல்லச் சரிப்படுத்திக்கொண்டு நடந்து வந்தபடியால் இரண்டாண்டுகளில் தம் பீடத்தை நிலைப்படுத்திக் கொண்டார்.

மடத் தலைவராகி மூன்று ஆண்டுகள் ஆயின. தாம் எண்ணினபடி இந்திரபோக வாழ்விற்கு வேண்டிய வசதிகள் கிடைக்க வகையில்லை என்று அறிந்தார். சொத்துக்கள் கடிதத்தில் அதிகம் தோன்றின போதிலும் உண்மையில் சொற்பமே. வருவாயும் மற்றக் குடியானவர்களுக்குக் கிடைப்பதிற் காற் பங்கும் கிடைப்பதில்லை. சிறிது கண்டித்தால் பல விவகாரங்கள் விளைகின்றன. சுவாமிகளுக்கு மன அமைதி சிறிது குறைந்துவிட்டது. இந்த மடத்திற்குப் பொது மக்களில் சீடர்கள் குறைவு. மற்றச் சைவ மடங்களைப் போல் இது பெரியதுமல்ல. ஆகவே சீடர்கள் வருவதில்லை, காணிக்கையும் இல்லை, பெரிய பணக்காரர்களையும் ஜமின்தார்களையும் வலையிற் சிக்கவைப்பதற்கு இது சரியான காலமுமல்ல. ஆகவே சுவாமிகள் பல நாள் தீர ஆராய்ந்து ஒரு திடமான தீர்மானத்திற்கு வந்தார்.

பொது மக்களிடம் சமய உணர்ச்சி இன்னுங் குறையவில்லை, அதிலும் ஆலயம் செல்லுவதில் நம்பிக்கை போகவில்லை. ஆலயத் திருப்பணிகளில் மக்களுக்கு அதிக ஊக்கம் இன்னமும் இருக்கிறது.

நாட்டில் பல பண்டைய கோவில்களையெல்லாம் செல்வர்கள் புதுப்பிக்கிறார்கள். பணக்காரர்களோ இலட்சக் கணக்கான பணங்களைக் கொட்டுகிறார்கள். நடுத்தர மக்களும் திருவாபரணங் களைச் செய்து காணிக்கையாகத் தருகின்றார்கள். ஒரு கோவிலில் எத்தனை நகை இருந்தாலும், கோரிகொள்ளுகிற மக்கள் புதிதாகத் திருவாபரணங் களைத் தானம் செய்கிறார்கள். ஆகவே திருவாபரணத் திருப்பணியினால் மக்களை வலைவீசிப் பிடிக்கலாம் என்று அவர் தீர்மானித்தார்.

உடனே அவர் சில கைதேர்ந்த கம்மாளர்களை வேலைக்குச் சேர்த்துக்கொண்டு திருவாபரணப் பட்டறை ஒன்று மடத்தில் ஏற்படுத்தினார். முதன் முதலில் மடத்திலிருந்த பழைய பொன் வெள்ளி எல்லாம் உருக்கி இரத்தினங்களைப் பொறுக்கித் திருவாபரணம் செய்வித்தார். கண்டிகை, அட்டிகை, மோகனமாலை, மாங்காய் மாலை, தோடு, சுட்டி, முடி, தலையலங்காரம் முதலிய நகைகள் மாதிரிக்கொன்று செய்வித்தார். அவைகளைத் திருவம்பலப் பெருமானுக்குச் சாத்துவதாகப் பெரிய விளம்பரம் விட்டார். அதற்கு ஒரு பெரிய திருவிழா நடத்தினார். பல செல்வர்கள் வந்தார்கள். சிலர் காணிக்கைகள் தந்தார்கள். சிலர் அவ்விதத் திருப்பணியைத் தாமும் செய்வதாக வாக்களித்தார்கள். திருவிழா வெற்றியாக

முடிந்தது. செலவழித்த பணம் முழுவதும் காணிக்கைகளிலேயே வந்து விட்டது. ஆபரணத் திருப்பணி என்பது முப்பத்திரண்டு அறங்களிலும் சிறந்த தென்றும், அதுவே பெருமானின் திருமேனியைத்தொடுவதனால் மிகுந்த புனிதமான திருப்பணி என்றும், அதனால் பலன் அதிகம் என்றும் தெரியப்படுத்தினார். நம்பிக்கை உள்ள பலரும் அவ்வலையில் வீழ்ந்தார்கள். பெரிய மீன்களைச் சரியான வலையில் வீழ்த்தி விட்டார் சுவாமிகள்.

ஆபரணத் திருப்பணி என்ற காய்ச்சல் நாடெங்கும் பரவிவிட்டது. பல கோயில்களிலும் புதுப்புது ஆபரணங்களைச் செய்து திருமேனிகளுக்குச் சாத்தினார்கள். ஆனால் அதில் சுவாமிகளுக்குத் திருப்தி இல்லை. ஒரு நகரத்துச் செட்டியாருக்குத் திருமுகம் அனுப்புவார். அவர் வருவார். பேரம்பலத் திருக்கோயிற் பெருமானுக்கு மோகன மாலை கட்டாயமாகச் சாத்தவேண்டுமென்பார். வைரமாலை ரூபாய் பதினாயிரம் என்பார். செட்டியார் ஏற்றுக்கொண்டு தொகை தருவார். அதனை மடத்துப் பட்டறையில் செய்விப்பார். உடனே அது மடத்திலேயே பூசையில் வைக்கப்பெற்று பிறகு ஒரு குறித்த நாளில் சுவாமிக்கு அணிவிக்கப்படும். ஒரு திருமுழுக்கும் நடைபெறும். சாத்துகிற செலவு ரூபாய் ஐயாயிரம் ஆகிவிடும். சுவாமிகளுக்கு வேண்டிய காணிக்கைகள் கிடைக்கும். இந்த வகையில் பெருத்த திருப்பணிக் கோலாகலம் நடந்து வந்தது. பல செட்டியார்கள் இத்திருப்பணியில் ஈடுபட்டார்கள். திருவாபரணம் மடத்துப் பூசையில் இருக்குமட்டும் மாசிலா நகைதான். அப்போது செட்டியாரும் பார்த்திருப்பார். ஆனால், பெருமான் திருமேனியின்மீது படும்போதும், கோயிற் பண்டாரத்துக்குச் செல்லும்போதும் அது தானா வேறா என்று யாரும் பார்த்ததில்லை. திருவம்பலம் கோவில் நகைகள் சொக்க நகைகள்தான். அவைகள் சுவாமியார் வசத்திலேயேதான் இருக்கும். ஆனால் ஏனைய கோவில்களுக்குச் சென்ற நகைகள் போலி நகைகள் என்று சொன்னால் நம்பமாட்டோம். எந்த நகையானாலும் சொக்க நகையின் விலையே சுவாமியார் கைக்கு வந்தது. இந்த வகையில் மடம் செல்வத்தில் திளைத்தது.

நடுவம்பலத் திருக்கோயிலுகந்த பெருமானுக்கு ஒரு மோகனமாலை சாத்தவேண்டுமென்று திரு. கரு. பெரு. அரு. சாமி செட்டியார் வேண்டிக்கொண்டார். உடனே மடத்துக்குத் தெரியப்படுத்தினார். கூடிய விரைவில் ரூபாய் பதினாயிரம் அனுப்பப்பட்டது. ஒரு மாதத்தில் நகை தயாராகி விட்டதாகச் சுவாமிகள் தெரிவித்தார்கள். செட்டியார் உடனே மடத்திற்கு

வரவில்லை. சிறிது உடல் நலம் குன்றி இருந்தது. தம் செயலாளரை அனுப்பி நகையைக் கொண்டுவரும்படிச் சொன்னார். செயலாளர் வந்தார். சுவாமிகள் தாம் முன்னமேயே செய்து வைத்த ஏதோ மாலையை மெருகிட்டுச் செயலாளரிடம் கொடுத்தார். கொண்டு வந்த நகையைச் செட்டியார் பார்த்தார். அக்காலத்து விலைக்கு நகை சிறிது கூடுதலான மதிப்பைப் பெற்றிருந்தது. செட்டியார்கள் குணம் தெரியுமே ! உடனே தட்டானை அழைத்து அந்நகையின் முகப்பில் தம் விலாசம் செதுக்கி வைத்து அதில் நடுவம்பலப் பெருமானுக்கு, திரு. கரு. பெரு. அரு. சாமி செட்டியார் உபயம் என்று எழுதி வைத்தார். எழுத்துக்கள் மிகவும் நுட்பமாய் எழுதிவைத்ததினால் ஊன்றிப் பார்த்தால்தான் தெரியும். பிறகு அதனை மடத்திற்கு அனுப்பிப் பூசையில் வைக்கச் சொன்னார். பூசையில் அது வைக்கப்பட்டது. பெயர் செதுக்கினதை மடத்தில் எவரும் கண்டுகொள்ளவில்லை. சுவாமிக்கு நகை சாத்துகிறதற்கு ஒருநாள் குறிக்கப்பட்டது. எப்போதையும்போலவே அது இரவு 10மணிக்கு மேல் என்று விளம்பரப்படுத்தினால் யாதொரு வியப்பும் இல்லை. செட்டியாரும் ஆலயத்திற்கு வந்தார். பெருமான் நகை சாத்திக்கொண்டு திருவுலா வந்தார். நகை பேரொளியுடன் விளங்கிற்று. திருவிழாவிற்கு வந்த மக்கள் அனைவரும் செட்டியாரின் தருமசீலத்தை மெச்சிப் புகழ்ந்தார்கள். சுவாமியாரின் தெய்வபக்தியை வியந்தார்கள். செட்டியாரும் சுவாமிகள் திருவடியில் விழுந்து தகுந்த காணிக்கை இட்டுத் தொழுதுவிட்டுச் சென்றார்.

திருவாபரணத் திருவிழா நடந்த ஆறாம் மாதம் நடுவம்பலத்துக் கோவிலில் பெருந் திருவிழா நடந்தது. செட்டியார் அன்று போய், சுவாமியைத் தாம் சாத்தின நகையோடு காணவேண்டுமென்ற அவாவுடன் சென்றார். திருவுலாவில் சுவாமி அணிந்த நகை, முன் தாம் கொடுத்தபோது இருந்தவிதமாக ஒளி வீசவில்லை. செட்டியாருக்கு என்னவோ சிறிது ஐயம் ஏற்பட்டது. மறுநாள் அங்கேயே தங்கியிருந்து குருக்களுக்குச் சம்பாவனை கொடுத்து அந்நகையைக் காட்டும்படி சொன்னார். பணம் என்னதான் செய்யாது? குருக்கள் நகையைக் காட்டினார். செட்டியார் தம் விலாசம் அதன் முகப்பில் இருக்கிறதா என்று தேடினார். அதில் ஒரு முகவரியும் இருக்கவில்லை. மேலும் கற்கள் போலிக் கற்கள் என்பது செவ்வையாகத் தெரிந்தது. குருக்களோ அதேதான் செட்டியார் சாத்தின நகை என்று சத்தியம் செய்தார். செட்டியார் தாம் ஏமாந்துவிட்டதை அறிந்தார். தாம் இப்போது கண்ட நகையோ ஐந்நூறு ரூபாய்க்குமேல் போகாது. எத்தனை பெரிய களவு ! இதனை

யார் செய்திருக்கவேண்டும் ? செட்டியாருக்கு ஒரே ஏக்கமும் பித்தும் ஏற்பட்டுவிட்டது.

ஊருக்குச் சென்றதும் செட்டியார் தம் வழக்கறிஞரைக் கேட்டார். உடனே ஒரு பிராது எழுதிப் போலீசுக்கு அனுப்பப்பட்டது. பெரிய திருட்டாகையினாலே அதனை விசாரிப்பதற்கு அரசாங்கத்தார் ஒரு துப்பறியும் வல்லவரை அனுப்பினார்கள். அவரும் இரகசியமாய்ப் பல ஆலயங்களுக்கும் சென்று விசாரித்தார். நகைகளைச் சோதித்தார். மடத்தின் மூலமாக வந்த நகைகள் எல்லாம் போலி நகைகளே என்பது தெரிய வந்தது. துப்பு முழுதும் கண்டுபிடித்தப் பிறகு நீதிபதியிடம் சுவாமிகளைக் கைது செய்ய ஒரு உத்தரவும் பெற்றுக் கொண்டு துப்பறிபவர் மடத்திற்கு வந்தார்; அவர் முன் எச்சரிக்கையாய்ப் பல செந்தலைச் சேவகர்களை மடத்தின் நாலா திக்குகளிலும்; வாசல்களிலும் காக்கும்படி நிறுத்திவைத்தார். பிறகு உள்ளே சென்றார். சுவாமிகள் இந்த ஆர்ப்பாட்டச் செயல்களை எப்படியோ அறிந்துகொண்டு தம் ஒடுக்க அறைக்குள் சென்றுவிட்டார். துப்பு வல்லார் உள்ளே சென்றதும் சுவாமிகள் எங்கே என்று விசாரித்தார். சுவாமிகள் ஒடுக்கத்தில் நிட்டையில் இருக்கிறார் என்றும், யாரும் உள்ளே செல்ல அனுமதி இல்லை என்றும் சொல்லப்பட்டது. அறையும் உள்ளே தாள் இடப்பட்டிருந்தது. அவர் சிறிது நேரம் காத்துப் பார்த்தார். கதவு திறக்கப்படவில்லை. வருவது வரட்டும் என்று சொல்லி துப்பறிஞர் கதவைத் தட்டினார். சீடர்கள், அது சம்பிரதாயத்திற்கு விரோதமென்றும் ஆட்சேபித்தனர். பதில்ஒன்றுமில்லை. ஒருமணி நேரம் காத்திருந்தும் கதவு திறந்தபாடில்லை. உடனே சேவகர்களைக் கொண்டு கதவு பிளக்கப்பட்டது. என்ன ஆச்சரியம்! உள்ளே யாரும் இல்லை. எல்லாப் பொருள்களும் மிக அமைதியாக வைக்கப்பட்டிருந்தன, மடம் முழுவதும் தேடினார்கள் சுவாமிகளைக் காணோம். சேவகர்கள் விசாரிக்கப்பட்டார்கள் சுவாமியார் வெளியே செல்லவில்லை, பின் வாசல் சேவகன் மாத்திரம், ''ஒரு தோட்ட வேலையாள் ஒரு பூக்குடலையை எடுத்துச் சென்றான்'' என்றான். ''ஏன் அவனை விட்டாய்?'' என்று கேட்டுவிட்டு, ''இனிமேல் மிரட்டி, என்ன பயன்?'' என்று எண்ணினார் துப்பு வல்லார். அந்தக் கூடைக் கூலியாளுக்குச் சடை, முடி, தாடி இல்லை, அப்படியாயின் யார் அவனைச் சந்தேகிக்க முடியும்? கூடையில் பூ இருந்ததோ, நகையும் பணமும் இருந்தனவோ என்று யார் அறிந்தார்கள்?

ஒடுக்க அறையைச் சோதித்ததில் ஒருவித நகையோ பணமோ இருக்கவில்லை. அவை மடத்தில் எங்கும் காணப்படவும் இல்லை. ஆனால் ஒடுக்கத்தில் இரகசியக்கதவு ஒன்று இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. திருட்டு கண்டுபிடிக்கப்படவில்லை என்று போலீசார் வெளியிட்டார்கள். செட்டியார் முகம் வாடியது. ஆனால் போலீசாருக்கோ சில இரகசியங்கள் கிடைத்தன. சுவாமிகள் ஒரு பழைய கைதி என்றும், சிறையிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு முந்தித் தப்பிச் சென்றவன் என்றும்தான் துப்புக் கிடைத்தது. ஆனால் என்ன பயன்? கிளி பறந்துவிட்டது. வெறும் கூண்டுதான் மிச்சம். ஆனால் ஒரு வெற்றி நாட்டிற்குக் கிடைத்தது. திருவாபரணத் திருப்பணி அன்றோடு நின்று விட்டது என்பதே !

## 3

# கன்னிகையோ காணிக்கையோ?

பரன்சேர்வழி கொங்கு நாட்டில் நடுமத்தியில் உள்ள ஒரு பண்டைக் காலத்திய சிறு ஊர். ஊரைச் சுற்றிலும் சோளம், கம்பு, இராகி, புகையிலை, மிளகாய் முதலிய புன்செய்த் தானியங்கள் விளையக்கூடிய நிலங்கள் பரந்துகிடக்கும். ஊருக்கு அடுத்து ஒரு சிறு ஓடை ஓடுகின்றது அதில் மழைக்காலத்தில் பெரு வெள்ளம் வரும். அதில் அடித்துக்கொண்டு வரும் வண்டல் நீர் அடுத்த புன்செய் நிலங்களில் பாய்ந்து அவைகளுக்கு நல்ல உரம் கொடுக்கும். அவ்வோடைக்கு அடுத்தாற்போல் அதன் கரையில் ஒரு சிவாலயமும் பெருமாள் கோயிலும் உண்டு. அவைகளை அண்டிப் பிழைக்கும் இரண்டு மூன்று பிராமணக் குடும்பங்கள் உண்டு. பரம்பரையாகச் சிவாலயத்தில் ஒரு குருக்களும் பெருமாள் கோயிலில் ஒரு பட்டாச்சாரியாரும் இருந்துவருகிறார்கள். இக்குடும்பங்களில் முன் இருந்த அர்ச்சகர்களில் இருவர் ஒன்று சேர்ந்து இவ்வூருக்கு ஒரு புராணமும் பாடி வைத்துள்ளார்கள். அதன்படி இவ்வோடை உபேந்திர நதி என்ற ஒரு திவ்ய நதி என்றும், அதில் ஸ்நானம் செய்து பரனைச் சேரும் வழியைக் கண்டுகொண்டான் என்றும், அதனாலே இவ்வூருக்குப் பரன்சேர்வழி என்ற திருநாமம் வந்ததென்றும் முதலான வரலாறுகள் அதில் எழுதப்பெற்றுள்ளனவாம். இவ்விருத்தாந்தத்தைக் கூறும் அர்ச்சகர்களோ அப்புராணப் பிரதியை மட்டும் யாருக்கும் தருவதில்லை. மகா மகோபாத்தியாயர்களெல்லாம் ஏடுகளைத் தேடுவதற்காக, அந்த ஊர் சென்றபோது அதனைத்தராது சாக்குச் சொன்ன அர்ச்சகர்கள் அதனை நமக்குக் கொடுப்பார்களா? ஆனால் அவ்வரலாற்றில் முழு நம்பிக்கையும் அவ்வூர் வேளாளர்களுக்கு உண்டு. மிகுந்த பயபக்தியுடன் அவர்கள் அக்கதையைக் கேட்டுவிட்டு அபிஷேகாதிகளைச் செய்துவிட்டு, காணிக்கைகளைச் செலுத்திப் பிறகு பெருமையுடன் வீடு செல்வார்கள். அப்படியானால் அவ்வாலயங்களில் வழிபாடு செய்யும் அர்ச்சகர்களுக்கு என்ன குறை? பெருமாள் கோயில் பட்டாச்சாரியார் பெயர் கோபாலையங்கார். அவர் பிரபந்தம் வாசித்திருக்காவிட்டாலும் கர்ண

பரம்பரையாக ''ஓங்கி உலகளந்த உத்தமன்'' என்று ஒரு பாசுரம் கம்பீரமாகச் சொல்லுவார். அர்ச்சனை செய்யும்போது 108 திரு நாமங்களிலே 25-வது சொல்லுவார். உச்சரிப்பு சிறிது பிசகிச் சொன்னால் அது கொங்குநாடுதானே என்று விடை கூறிவிடலாம் அல்லவா?

கோபாலையங்காருக்கு நல்ல வரும்படி உண்டு. கௌண்டன்மார் மாத்திரமேயன்றி அருகில் கரிசல் நிலங்களில் பருத்தியைப் பொன்னாக்கும் கம்மவார் நாயக்கன்மார்களும் அவரிடம் மிகுந்த விசுவாசம் வைத்துக் காணிக்கைகள் தருவார்கள். அவர் மிகுந்த பயபக்தியோடு பூசை செய்து காட்டுவார். உடம்பில் துவாதச நாமங்களில் ஒன்றும் குறையாது பட்டைபட்டையாக விளங்கும். அவர் திருமேனியைக் கண்ட சிலர் அவர் 'அபிநவ பாஷ்யகாரர்' என்றுகூடக் கூறுவார்களாம். கோபாலையங்காருக்குப் பாவம், ஒரே ஒரு பெண் குழந்தை. பல குழந்தைகள் பிறந்து இறந்துவிட்டன. திருப்பதி வெங்கடேசுவரப் பெருமாளிடம் ஆணை வைத்து ஒரு உண்டியல் கட்டிவைத்தார். ஆண் குழந்தை பிறந்ததும் அவ்வுண்டியலை முடியுடன் ஏழுமலையானுக்குச் சமர்ப்பிப்பதாகக் கோரிக்கைக் கொண்டார். உண்டியலும் நாளுக்குநாள் நிர்ம்பிக்கொண்டே வந்தது. அது பூசையறையில் வைக்கப்பட்டிருந்தது. பூசை ஆனவுடன் நாடோறும் அதில் ஒரு தம்பிடிக் காசு விழும். அதில் காசு பெருகப் பெருகத் தம் பத்தினிக்கும் திருவயிறு வாய்க்கும் என்று நம்பி வந்தார்.

கோபாலையங்கார் திருமகள் பெயர் கமலாவதி; மிகுந்த வனப்புள்ளவள்; தவிர, புத்திசாலி, வெகு நல்ல சாரீரம் அழகாக பாடுவாள். அவ்வூர் ஸ்தல ஸ்தாபன (ஜில்லா போர்டு)ப் பாடசாலையில் 4-வது வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்தாள். ஜில்லாக் கல்விச் சங்கத்தார் பார்வையில் அது இருந்தது. கடவுள் வணக்கம் தினந்தோறும் தொடக்கத்தில் சொல்லவேண்டுமென்று அவர்கள் உத்தரவு விட்டிருந்தார்கள். அதற்காகக் கடவுள் வணக்கச் செய்யுட்கள் என்ற சிறு நூலை வாங்கி உபாத்தியாயர் அப்பாட சாலைச் சிறுவர் சிறுமிகளுக்குப் பாடக்கற்றுக்கொடுத்திருந்தார். கமலமோ அந்நூலிலிருந்து தேவாரம் மட்டுமன்றிப் பிரபந்தப் பாக்களையும், நன்றாகப் பாடுவாள். 'பட்டி மேய்ந்தோர் காரேறு', 'வாரணமாயிரம்' என்ற பாடல்களைப் பாடும்போது, பிரம்புத்தடிப் பெருமாள் வாத்தியாரும் உருகிவிடுவார் என்றால் நான் அதிகம் கூறவேண்டியதில்லை. அவளுடைய அழகிய கானத்தைக் கேட்டுச்

செவிமடுத்த வாத்தியார் அவளையே தினந்தோறும் பாடும்படிக் கட்டளை இட்டார்.

ஒருநாள் காலையில் பாடசாலை கூடிற்று. எப்போதும் போலவே பெருமாள் வாத்தியார் பிள்ளைகளை 'நில்' என்றார். எல்லாரும் நின்றார்கள். 'கமலம் பாடு' என்று கத்தினார். பாட்டு எழும்பவில்லை. நிசப்தமாக இருந்தது. வாத்தியார் ஆச்சரியத்துடன் கமலம் சாதாரணமாக நிற்கும் இடத்தை நோக்கினார். கமலம் காணோம். அடுத்த குழந்தை, ''கமலம் இன்று வரவில்லை சார்! என்றது. ''ஏன்?'' என்றார். அவரது பிரம்புத்தடியைக் கண்ட பிள்ளைகள் நடுக்கத்தினால் ஒன்றும் கூறாமல் நின்றார்கள். மறுபடியும் ''ஏன் வரவில்லை? யார் அடுத்த வீட்டுப் பயல்? என்று கத்தினார். ஒரு பையன் தைரியமாய், '' நான் வரும்போது அவள் வீடு சாத்தி இருந்தது சார்! என்றான். என்ன செய்வார் உபாத்தியார்? வேறு ஒரு பையனைப் பாடச் சொல்லிவிட்டுப் பாடம் தொடங்கினார். அடுத்த இரண்டு மூன்று நாட்கள் பார்த்தார். கமலம் வரவில்லை. பிரம்புப் பிரயோகம் அதிகமாகச் செய்து வந்தவராக இருந்தாலும் உபாத்தியாருக்கு நல்ல குழந்தைகளின்மீது உண்மையான பிரியம் உண்டு. கமலத்தைப் பெற்ற தகப்பனைவிட அதிகமாகப் பிரியம் வைத்திருந்தார். கமலம் பாடசாலைக்கு வாராதிருக்கவே அவருக்கு ஏதோ ஒரு விலையுயர்ந்த பொருளை இழந்தாற்போலத் தோன்றிற்று. ''ஏன் வரவில்லை?'' என்று விசாரித்தார். கோபாலையங்கார் ஆலயத்திற்கும் சரியாய் வருவதில்லை என்றும், அவர் மனைவி அசௌகரியமாய்ப் படுத்திருக்கிறாள் என்றும் தெரியவந்தது. ஆனால் கமலத்தைப் பற்றி ஒரு துப்பும் கிடைக்கவில்லை. கமலம் வீட்டில் இல்லை என்று மாத்திரம் தெரிந்தது. ஆனால் ஐயங்காரைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வழியில்லாமல் இருந்தது.

சிலநாள்களில் பாடசாலைப் பரீஷாதிகாரி வருவதாகத் தகவல் வந்தது. அப்போதுதான் நல்ல பிள்ளைகள் இருந்தால் தமக்கு நல்ல பேர் வரும் என்பது உபாத்தியாயரின் எண்ணம். எப்படியாவது கமலத்தை வரச்செய்து, பரீஷாதிகாரி முன்னிலையில் பாடச் செய்துவைக்கவேண்டும் என்பது உபாத்தியாயரின் கருத்து. உடனே தாமே ஐயங்கார் வீட்டிற்குச் சென்றார். ''கோபால ஐயங்கார் சுவாமிகள்!'' என்று உரக்கக் கூப்பிட்டார்.

''யாரது?'' என்ற சப்தம் உள்ளிருந்து கேட்டது ''நான்தான் பெருமாள், பாடசாலை உபாத்தியாயர்''

''என்ன வேண்டும்?''

''நாளைப் பரீட்சை. உங்கள் குழந்தை கமலத்தைப் பாடசாலைக்கு அனுப்புங்கள். அதற்காக நானே நேரில் வந்திருக்கிறேன். அவள் வராவிட்டால் அதிகாரி கோபித்துக்கொள்வார்.''

''குழந்தை, கிழந்தை! அவளில்லை போங்கள். பாட்டி வீட்டிற்குப் போயிருக்கிறாள்.''

''ஐயோ, அபாண்டமான பொய்! என் முத்தே, கண்ணே, மணியே! எங்கே சென்றாயடி? என்னை முன்னே கொன்றிருக்கலாகாதா?'' என்ற ஒரு பெரும் அழுகைக் குரல் கேட்டது. அது ஐயங்காரின் மனைவியின் குரல் என்று அறிந்தார் உபாத்தியாயர்.

''அடிபாவி என்னைத் தொலைத்துவிடுவையோ?'' என்று ஒரே ஒரு இரைச்சலுடன் வைதுவிட்டு வெடுக்கென்று கதவைச் சாத்திக்கொண்டார் ஐயங்கார்.

இதைக்கண்ட பெருமாளுக்கு அதன் பொருள் ஒன்றும் விளங்கவில்லை. அதைப் பற்றி யோசித்துக் கொண்டே பாடசாலை சென்றுவிட்டார். பரீட்சை ஒருவாறு நடந்தது. ஆனால் பெருமாளுக்குத் திருப்தி இல்லை. கமலம் இருந்திருந்தால் தமக்கு என்ன பெருமை கிடைத்திருக்கும் என்று எண்ணினார். ஐயங்கார் சம்சாரம் அழுது கொண்டு கத்தின பேச்சுக்கள் அவர் காதைத் துளைத்துக் கொண்டே இருந்தன. ''அபாண்டமான பொய், என்னை முன்னே கொன்றிருக்கலாகாதா ? இவ்வார்த்தைகளின் அர்த்தம் என்ன? ஐயங்கார் ஏன் என்னை உள்ளேவிடாமல், சாத்திக்கொள்ளவேண்டும்?'' என்று ஆலோசித்தார். கமலம் பாட்டி வீட்டிலும் இல்லை என்று தெரிந்தது, அவள் மீது வைத்திருந்த பேரன்பினால் இந்த மர்மத்தை விசாரிக்க வேண்டும் என்று முனைந்து நின்றது அவர் மூளை.

பரன்சேர்வழி காங்கய வட்டத்தைச் சேர்ந்தது. அந்த ஊர்ப் போலீசு உத்தியோகஸ்தர் பெருமாளுடைய நண்பர். அந்த மாதத்திய உபாத்தியாயர் கூட்டமும் காங்கயத்தில் நடந்தது. அதற்குப் பெருமாள் சென்றார். கூட்டம் முடிந்தவுடன் போலீசு நண்பர் திருமலையிடம் சென்றார்; கமலம் காணுமற்போன செய்தியைச் சொன்னார் ! திருமலைக்கோ நல்ல பேர் வாங்கவேண்டுமென்ற பேராசை உண்டு. சின்ன வழக்குகளில் எல்லாம் பெருத்த அக்கறை எடுத்துக்கொண்டு பாடுபடுவார். ஆகவே, இக்கதையைக்

கேட்டவுடன் சும்மா இருப்பாரா? உடனே தாம் வந்து விசாரிப்பதாக உறுதி கூறினார். பெருமாளும் வெகு திருப்தியுடன் ஊர் திரும்பினார்.

தம் சொற்படி, அடுத்த ஞாயிற்றுக்கிழமையன்று திருமலை பரன்சேர்வழி வந்தார். ஊரில் பலரிடம் விசாரிக்கக் கோபால ஐயங்காரின் நடவடிக்கைகளைத் தெரிந்து கொண்டார். கமலம் காணாமல் போனது முதற்கொண்டு அவருடைய நடவடிக்கை சந்தேகத்திற்கிடமானது என்று அறிந்தார். அவரது மனைவியை விசாரிக்கச் சென்றார். முதலில் கோபாலய்யங்காரின் வீட்டிற்குள் செல்லவே முடியவில்லை. கட்டாயப்படுத்தி உள்ளே செல்லவே ஐயங்கார் மறைந்துவிட்டார். அம்மாளைப் பரிசோதிக்க அவள் உடம்பில் பல காயங்கள் ஆறி வருவதாகக் கண்டார். பெருத்த சந்தேகம் ஏற்பட்டது. நயமும் பயமும் காட்டினதில் அவள் உண்மையை வெளியிட்டாள். பெருமாளுக்காகக் கட்டி வைத்திருந்த உண்டியலில் நான்கணுவைக் கமலம் எடுத்து விட்டதாகக் கோபாலையங்கார் சந்தேகப்பட்டு ஆத்திரத்துடன் அவளை அடித்ததாகவும், அவள் மறுக்கவே அவள் தலையைச் சுவரில் மோதினதாகவும், அதனால் அப்பெண் கீழே விழுந்துவிட்டதாகவும், அதனால் காயங்கள் ஏற்பட்டதாகவும் தெரிந்தது. கமலம் எங்கே என்றதற்கு அன்றிரவே அவள் இரத்தத்தைக் கக்கி இறந்துவிட்டதாகவும், ஐயங்கார் பயந்துகொண்டு அவள் உடலைப் புறக்கடையில் புதைத்து வைத்ததாகவும் கூறினாள். உடனே புறக்கடை சோதிக்கப்பட்டது. பாவம் கமலத்தின் உடல் எடுக்கப்பட்டது.

ஐயங்கார் ஓடிவிட்டார். வாரண்டு பிறந்தது. இரண்டு மாதம் கழித்து ஒரு குக்கிராமத்தில் மாறு வேடத்துடன் கைது செய்யப்பட்டார். விசாரனை தொடங்கிற்று. பணக்காரச் சீடர்கள் நல்ல வழக்கறிஞரை (வக்கீல்) வைத்துத் தந்தார்கள். அவரும் நன்றாக வாதாடினார். ''கமலம் இறந்தது உண்மை. ஆனால் அவள் தகப்பன் கொலை செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் அடிக்கவில்லை.'' சுவாமியின்மீது வைத்திருந்த பக்தியினாலே காணிக்கைக் காசு எடுத்தாள் என்று கோபங்கொண்டு அடித்தார். அது தவறி மண்டையில் பட்டது. 'ஒரு மகளைக் கொலைசெய்ய ஒரு தகப்பன் எண்ணுவானா?' என்று போதனை செய்யப்பட்டது. அப்படியானால் ''மனைவியை ஏன் அடித்தான்?'' என்று ஒருவரும் கேட்கவில்லை. அது தனிக்குற்றம் அல்லவா? ஆகவே அதனை இதில் கலக்கக்கூடாதாம்! 'திருப்பதி வேங்கடேசப்பெருமானுக்கு என்று வைத்திருந்த காணிக்கையைத் தொட்டால் பெரும் பாதகம்

அல்லவா? ஆகவே, ஏன் அவருக்கு அடக்கமுடியாத கோபம் வராது? பெருங் கோபம் பைத்தியத்திற்குச் சமானமல்லவா? அப்படிப்பட்ட சமயத்தில் செய்யும் குற்றம் பெருங் குற்றமல்ல. ஆகவே கொலைக்குற்றம் ஆகாது' என்று தீர்ப்பு கூறினார் நீதிபதி. ஆகவே கொடுந் துன்பத்திற்காகக் குற்றம் சாட்டி 7 வருடம் சிறைத்தண்டனை விதித்தார். மனைவியைத் துன்புறுத்தியதற்காக ஒரு வருடம் சிறை கிடைத்தது.

குழந்தை உயிரைவிடக் காணிக்கைக்கு மதிப்பு எத்தனை அதிகம் ! இப்பேயெண்ணம் நாட்டில் இக்காலத்திலும் தாண்டவம் ஆடுகிறது ! சிட்சையில் திருமலைக்குத் திருப்தி இல்லை. ஒரு அந்நிய நீதிபதி வாய்க்கவில்லையே என்று நொந்துகொண்டார். எல்லாரிலும் பெருமாளுக்குச் சிறிதும் மனச்சாந்தி இல்லை. கமலத்தின் நிர்மலமான ஆத்மா எவ்வாறு தவிக்கிறதோ என்று ஒரே கனாவாகக் கண்டு கொண்டிருக்கிறார். அவளுடைய இனிய பாசுரங்கள் இன்னமும் அவர் காதில் ஒலித்துக் கொண்டு ஆனந்தத் துக்கத்தைத் தந்து கொண்டிருக்கின்றன.

# 4

## மூர்த்திகளின் சிறைவாசம்

ஊரைச் சின்னதென்பர்; ஆனால் சின்னதல்ல. பெருமாளோ பெரிய பெருமாள்; அவர் ஆலயமும் பெரியதே. திருவிழாவோ மிகப்பெரியது. சொல்ல வேண்டுமா? வைஷ்ணவ கோஷ்டிகளுக்கு அளவில்லை. பாகவதர்களோ எப்போதும் நிறைந்தே உள்ளார்கள். சன்னிதித் தெருக்களில் திருமாளிகைகளுக்கு அளவில்லை. ததியோதனம், புளியோதனம், திருக்கண்ணமுது, அக்கார அடிசில்கள் முதலியவைகளைத் தலத்தார்கள், மிராசுதார் முதலியோருக்கும் அவர்களுடைய பந்து வர்க்கத்தார்களுக்கும் விநியோகம் செய்த பிறகும்கூட, தலத்திற்கு யாத்திரையாக வரும் சகல மக்களுக்கும் விற்கப்படும் என்றால் இத்தலத்தின் சிறப்பைப் பற்றிக் கூறவும் வேண்டுமா? ஆலய நிர்வாகமோ அதே முறைகளை நூற்றாண்டுகள் கணக்காக நடைபெறுகின்றது. பரம்பரைப் பாத்தியம் என்றால் குடும்ப வகையில் மாத்திரம் அல்ல; அவ்வாலயத்தில் உள்ள யானை, பசு, பூனை, எலி முதற் கொண்டு எல்லாச் சீவராசிகளுக்கும் உண்டு; ததியோதனம், புளியோதனம், இட்டலி முதலிய வகைகளுக்கும் உண்டு என்றறிக. எந்த நிலையில் எந்த முறையில் எந்த அளவில் வந்தார்களோ அதே நிலையில், முறையில், அளவில், களவில் செய்யப்பட வேண்டிய உரிமை அவைகளுக்கும் உண்டு. ஆகவே அவ்வசேதனப் பொருள்களுக்கும் பரம்பரை பாத்தியம் உண்டு என்றேன்; நீங்கள் அதனைப் பத்ததி அல்லது வழக்கம் எனலாம். இப்பரம்பரைகள், உரிமைகள், பத்ததிகள், சுதந்திரங்கள் எல்லாம் ஆங்கில ஆட்சி வந்தது முதற்கொண்டு மேன்மைதாங்கிய நீதிமன்றங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. அவ்வாலயத்திற்குச் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு கைங்கரியதாரருக்கும் கைங்கரியத்திற்கும் நீதிமன்றத் தீர்ப்பு ஒன்! இருக்கிறதென்றால் இதனை யார் தான் மறுத்து எதிர்த்துப் பேச முடியும்? யாராவது ஒருவர் இதனை அறியாது வாதுக்கு வந்தாலும், அசட்டை செய்தாலும் இவ்வாலயத்தில் பூனையும் எலிக்குஞ்சும் நம் சக்கரவர்த்திக்கு எழுதி அவரால் ஆணையிடப்பட்ட ஒரு தீர்ப்பு

நகலை அவர்கள் மிரண்டோடு மாறு கண்ணுக்கெதிரில் காட்டிவிடுமாம்! இத்தனைப் பாதுகாப்புகளினால் காக்கப்பட்ட ஓர் ஆலயத்தில் இனிமேலும் விவகாரங்கள் வரமுடியுமா என்று நீங்கள் வியந்து கேட்கலாம். ஆனால் மனிதனுக்கு அறிவு இருக்கும்வரையில், ஆசாபாசங்கள் அதனோடு ஒத்துழைக்கும் காலம்வரையில், விவகாரங்கள் ஏற்படாமல் இருக்குமா? ஆங்கில ஆட்சி ஏற்பட்டு ஒன்றரை நூற்றாண்டு ஆகியும், நீதித்தலங்கள் ஒவ்வொரு கேள்விக்கும் ஒவ்வொரு தீர்ப்பளித்தும், அத்தீர்ப்புகளின் அளவுகளை அறியவேண்டி மறுபடியும் நீதிபதிகளை அண்டவேண்டியது முறையல்லவா? அல்லது நீதிபதிகள் ஏன் நியமிக்கப்படவேண்டும்? என்ற கேள்வி கிளம்பும். ஆகவே ஆலய அன்பர்கள் எப்போதும் நீதிபதிகளுக்கு வேலை கொடுத்து வந்தார்கள். எப்பேர்ப்பட்ட மேலதிகாரிகள் வந்தாலும் அவர்களுக்கும் வேலை கொடுப்பதில் தவறார் ஆலயத்திற்குச் சம்பந்தப்படாத ஆப்காரி உத்தியோகஸ்தர், கல்வி இலாகா அதிகாரி, நெசவு இலாகாதாரர், வேறு எவர் வந்தபோதிலும் அவர்களுக்கும் ஒரு மனுக் கொடுத்து விசாரிக்கச் சொல்லி ஒரு சிறு வேலையாவது கொடுப்பார்கள். சமீபகாலத்தில் அறநிலையச் சங்கத்தார், சுகாதாரச் சங்கத்தார் முதலியோர் இவ்வாலயத்தாரிடம் அகப்பட்டுக் கொண்டு திண்டாடிவரும் தொல்லை எழுதமுடியாது. இதையெல்லாம் நன்கறிந்த பெரிய நீதி மன்றம் இப்பெருமாளைக் கவனிக்கும் பணியில் ஸ்ரீ வைணவர்கள் இருப்பது அழகல்ல என்று எண்ணி ஒரு சுமார்த்தரையோ அல்லது மாத்துவரையோ நியமிக்கவேண்டுமென்று தீர்மானித்தனர். அன்னிய சமயத்தார் வந்தால் என்ன, விவகாரங் குறைந்து போகுமோ, அது வீண் பிரமை என்று எடுத்துக் காட்டுவர் வடக்கு மாளிகைக் கோவிந்தாச்சாரியார்.

ஆனால், பெரும் பிசகு ஏற்பட்டுவிட்டது. ததியோதனத்திற்கும் புளியோதனத்திற்கும் உரிமைப்பாத்தியம் வழங்கின நீதிபதிகள், பெரிய பெருமாளுக்கும்அவருடையதொண்டர்களாகிய ஆழ்வாராதியர்களுக்கும் யாதொரு தீர்ப்பும் பாதுகாப்பும் தரவே இல்லை. என்ன இருந்தாலும் சட்டத்தில் இம்மூர்த்திகள் மைனர்களாகவே இருக்கிறபடியால் அவர்களைப் பாதுகாக்கக் கார்டியன்கள் இருக்க வேண்டும். அக்கார்டியன்களுக்கு உரிமை கொடுத்தால் போதுமானது என்பர். கார்டியன்களுடைய அருமை பெருமைகளைப் பற்றி நாம் எடுத்துரைக்க வேண்டியதில்லை. மைனருடைய சொத்து என்னவானாலுமென்ன? தம் நிலைமையை உயர்த்திக்கொள்ள வேண்டியதுதான் தமதுரிமை என்ற கொள்கை உறுதிப்படுத்திக்கொண்டு அம்மைனர் வயது வருவதற்குள் ஒரு புது

வீடு, ஒரு நன்செய் நிலம், ஒரு தென்னந்தோப்பு இவைகளை வாங்கி வைப்பது வழக்கம். மைனர் வயது வந்தவுடன் தடையில்லாமல் உள்ள ஒரு சொத்தாவது கிடைத்ததே என நன்றி செலுத்த வேண்டும். இல்லாவிடில் மைனர் கதி அதோகதிதான். வாயுள்ள ஆறறிவு மக்களே இந்த நிலைமையை அனுபவித்தால வாயில்லாத அர்ச்சா விக்கிரகங்கள் என்ன செய்ய முடியும்? அம்மூர்த்திகளை எப்போது நீதிமன்றங்கள் மைனர்கள் என்று தீர்மானித்தனவோ அப்போதே அவர்கள் ஒடுக்கப்பட்ட அடிமைகள் ஆகிவிட்டார்கள். தலத்தார், அர்ச்சகர், சுதந்திரத்தார் எவ்விதமாக ஆட்டுவார்களோ அவ்விதமாக ஆடவேண்டி வந்தது. மானிட மைனர்களுடைய இருப்பிடங்கள் இடிந்துவிட்டாலும் கார்டியன்களுடைய கூறை வீடுகள் சில நாட்களில் மாடமாளிகையாக மாறிவிடுவதை நாமறிவோம். அக்கதியே நமது மூர்த்திகளுக்கும் வரும் அல்லவா? உலக இயற்கை ஒன்றுதானே!

இந்தத் திவ்வியதேசத்துப் பெருமாளைச் சதா சேவை செய்து கொண்டிருக்க ஆழ்வார்களும் ஆச்சாரியர்களும் ஆலயத்தைச் சுற்றி எழுந்தருளியிருப்பார்கள். பல நூற்றாண்டுகளுக்கு முந்தி நாட்டில் எங்கும் பரம பாகவதர்கள் திகழ்ந்திருந்த நன்னாட்களில் சில மகோபகாரிகள் இவ்வாழ்வார்களுக்குத் திருத்தளிகளை அமைத்தார்கள். ஆதியில் இட்டிகை ஆலயங்களாக இருந்தவை நாளாவட்டத்தில் கற்றளிகளாயின. ஆழ்வாராதியரும் அவைகளில் சுகமாக எழுந்தருளி நாடோறும் பூசை, ஆராதனை, திருவமுது முதலியவைகளைப் பெற்றுக்கொண்டு சாத்துமுறை நாட்களில் புறப்பாடு, அருளிப்பாடு, திவ்விய சேவை முதலியவைகளை ஏற்றுக்கொண்டு சுகமாக வாசஞ்செய்து வந்தார்கள். ஆனால் கல் கட்டடமானாலும் பழுது பார்க்காமல் விட்டால் சீர்ணமாகி விடாதா? அவ்வப்போது சீர்ணோத்தாரணம் செய்ய வேண்டியது கார்டியன்களான அறக் காப்பாளர்களைச் சேர்ந்தது. ஆனால் அவர்களோ மற்றக் கார்டியன்களைப் போன்று தம் தேக போஷணை, திருமாளிகை அமைப்பு இவைகளைக் கவனித்தார்களேயன்றி ஆழ்வார்களின் திருமாளிகைகளைக் கவனிக்கவில்லை. நாளா வட்டத்தில் சிறகினங்களான பாகவதர்கள் பெருமாளைச் சேவித்துப் பழவர்க்காதிகளைத் திருவமுது செய்ய விரும்பிய போது அவர்களுக்கு ஏற்ற உணவு விடுதி ஆழ்வாராதிகளின் திருத்தளிகளின் மேல் தளங்களே ஆகும் என்று பரம கருணையுடன் ஈந்துதவினார்கள். சிறகினங்கள் வைத்துச் சென்ற உச்சிட்டமான சேஷங்களைச் சுத்திசெய்ய வருணனும் வாயுபகவானுமே வரச் சம்மதித்தார்கள். ஆனால் சில தடவைகளில் 'நெல்லுக்கிட்ட நீர்

புல்லுக்குமாம்' என்ற நியாயப்படி வருண வாயுக்கள் அகற்றின சேஷங்கள் கற்களின் இடையில் சிக்கி வேரூன்றின. நாளா வட்டத்தில் வேர்கள் பலப்பட்டுச் செடிகளாயின; மரங்களும் மாகி, 'நெட்டிருப்புப் பாறைக்கு நெக்கு விடாப்பாறை பசு மரத்தின் வேருக்கு நெக்கு விடும்' என்றாற்போல் கற்களைப் பிளந்து திருத்தளிகளைக் கற்குவியல்களாக்கத் தொடங்கி விட்டன. பலமான சில தளிகள் பார்வைக்குப் பிருந்தாவனங்களாகவும் துளசி மாடங்களாகவும் ஆகிவிட்டன. இத்தகைய ஆல்யங்களுக்குள் ஆதிசேடர்களும் வாசம் செய்யத் தொடங்கினர். அர்ச்சகர்கள் பரம பக்தியுடன் ஆலயங்களுக்கருகில் செல்லாது வெளியே இருந்து ஆராதித்தனர்.

ஒரு முறை ஒரு சிறு ஆலயத்தின் மேல்தளியும் விழுந்து திருமூர்த்தியின் உருவமே சிறிது சிதைவடைந்தது. அப்போதுதான் அறநிலையக் காப்பாளருக்கும் கண் தெரிந்தது. ஊரில் பாகவதர்களில் பெரும் பூசலும் நிகழ்ந்தது. பரமபாகவதர்கள் பிரயோகிக்கக் கூடிய துர்வாசத் திரவியங்களின் அபிஷேகங்களுக்கும் திருச் சிலாப்பூசைக்கும் அஞ்சி, சீரணம் அடைந்த ஆலயங்களில் இருந்த மூர்த்திகளை யெல்லாம் ஒரே நாளில் புறப்பாடு செய்வித்து, சீர்ணம் அடையாது தப்பி யிருந்த ஓர் ஆலயத்திற்குள் எழுந்தருளச் செய்தனர். அன்று முதல் தனித்தனியாக இருந்த ஆழ்வார்கள் 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு' என்ற சொல்லின்படி ஒரே அறையில் ஒற்றுமையுடன் வசிக்கத் தொடங்கினர். அறக் காப்பாளர்களுக்கோ முந்தியிருந்த தொல்லையில் பெரும் பாகம் குறைந்தது. பதினைந்து ஆலயப் பணிவிடைகளும் சாமக்கிரியைகளும் ஒரே இடத்தில் ஒரே அளவில் ஏற்பட்டன என்றால், சிக்கனத்தின் சிறப்பிற்கு இதை விட வேறு உதாரணம் வேண்டியதில்லை அல்லவா? இனி, கணக்குப் பரிசோதகரும் அதிகச் செலவு என்று முறையிடமாட்டார் அல்லவா? இந்த வகையில் பெரிய அபாயத்தை இந்தப் பரம காருண்ய அற நிலையர்ளர்கள் விலக்கிவிட்டார்கள். இதனை உலகம் ஏன் மெச்சிக்கொள்ளாது? இவ்வாறு பதினைந்து மூர்த்திகளை ஒரே மண்டபத்தில் சிறையிட்டதிலே தர்மகர்த்தர்களுக்கு வெகு திருப்தி. செய்ற்கரிய செயலைத் தாம் செய்ததாகப் பெருமையுடன் பேசிக்கொண்டார்கள். ஒரு கல்லாலே இரண்டு பறவைகளைக் கொன்ற தீரத்திற்குத் தம் சாகசத்தை ஒப்பிட்டுப் பேசினார்கள். மூர்த்திகளுக்குத் தகுந்த அடைக்கல இடம் தேடிக் கொடுத்ததனாலே ஊர் வாயை மூடிவிட்டது ஒன்று; ஆலயச் செலவுகளைக் குறைத்துத் தம் வருவாயைப் பெருக்கிக் கொண்டது இரண்டு என்பதாம். பதினைந்து மூர்த்திகளுக்கும் ஒரே துணி உடுத்தி ஒரே தட்டத்தில்

பிரசாதம் காட்டி ஒரே கற்பூரத்தால் தீபங் காட்டுவது மாத்திரம் அல்ல; மற்றொரு அதிசயமான வேறுபாட்டினை நிகழ்த்தி வைத்தார்கள்.

தனி ஆலயமாக இருந்தால் ஒவ்வொரு ஆழ்வாருக்கும் சாத்துமுறை நாளிலே புறப்பாடு கோஷ்டி நிவேதனம் முதலியன நடத்தவேண்டி வரும். ஆழ்வார்கள் அனைவரும் ஒரே இடத்தில் இருந்தால் ''எவ்வாறு யாருக்குச் சாத்து முறை நடத்துவது? ஆகவே இம்முறை ஆகமங்களுக்கு விரோதமானது'' என்று சொல்லிச் சாத்துமுறைகளை நிறுத்திவிட்டார்கள். இதனால் பெருஞ் செலவு நின்று விட்டது. ஆனால் பெருஞ் செலவு நின்றதனால் ஆலயத்தில் மிச்சம் ஏற்பட்டதோ என்றால் அதுதான் இல்லை. தருமகர்த்தர்கள் வெகுநாளைய அநுபவம் பெற்றவர்கள். ஆகவே வெகு நுட்பமாகக் கணக்கு எழுதிப் பரிசோதகராலும் காணமுடியாதவாறு வரவு செலவுகளை நேர் செய்து வைத்துவிடுவார்கள். இம்முறையில் இரு வகையிலும் வெற்றி பெற்றார்கள். ஆனால் இவ்வெற்றி வெறும் லௌகிகமான பணவகை வெற்றிமாத்திரம் அல்ல. இதில் வைதீக வெற்றியும் ஒன்று உண்டு. தருமகர்த்தர்கள் பண்டைக்காலத்தில் கோடி கன்னிகாதானம் செய்து பெரும் புண்ணிய கீர்த்திபெற்ற மூல புருஷனுடைய சந்ததியார். இக்கோடி கன்னிகாதானம் என்றால் அதுஒரு நந்தா விளக்குப்போல் என்றும் அழியாமல் பரம்பரையாக ஆங்கில நாட்டுப் பிரபுப் பட்டம்போல் பின் சந்ததியாருக்கு வருவதொன்றாம். கோடி கன்னிகாதானம் என்பது ஒரு புண்ணியச் செயலானால் அக்கோடிக் கன்னியர்களில் ஒருவரும் பொற்றாலி பெருக்கிக் கொண்டவர் இருக்க வில்லையா என்ற கேள்வி இப்போது எழுப்புவதில் யாதொரு பயனும் இல்லை. பல தலைமுறைகளுக்குப் பின்வந்த தற்காலத் தருமகர்த்தரும் அந்தவாய் நிறைந்த பட்டத்தை வகிப்பர். அவருடைய பெயருக்கு முன் அப்பட்டத்தைத் திறந்து பார்க்காமலே கிழித்துவிடுவார். போதாக் குறைக்கு அவர் ஒரு பெரும் வடகலைச் சம்பிரதாயர். கீர்வாணத்திலேயே பிறந்தபோது அழுததாகச் சொல்லிக்கொள்ளுவார். ஆனால் யாதாவதொரு சுலோகத்தைக் கொடுத்து நாம் ஒரு சந்தேகம் கேட்டால் ஒரு சிறிது முழங்கால் வலி என்றாவது அல்லது ஒரு அவசரச் செய்தி வந்ததென்றாவது சொல்லி அப்போது மறைந்து விடுவார். ஆனால்தென்கலையாளரைக் கண்டால் உடனே அவர்களைப் பஸ்மீகரிப்பதற்கு நெற்றிக்கண் இல்லையே என்று வருந்துவார். சில தடவைகளில் திருத்தடிப் பிரயோகமும் திருவாய் மலர்ச்சியும் கைக் கொண்டதினால் நீதிமன்றம் ஏறி வெண்பொன்னைத் தானம்

செய்திருக்கிறார். அப்படிப்பட்ட புண்ய சீலருக்கு ஆழ்வார்களை ஒரு அறையில் சிறைப்படுத்தியது பெருமகிழ்ச்சி.

தென்கலையார் ஆழ்வராதியர்களைத் தம் கலையினர் என்று வாதாடுவதுண்டு. வடகலையினர் தம் மூர்த்திகள் என்று சொன்னால் அவர்கள் விடுவதில்லை. ஆழ்வாராதியர்கள் தமிழிலேயே திருவாய் மலர்ந்திருக்கிறபடியால், வடகலை யாருடைய கட்சி அத்தனைச் சிறப்புப் பெறுவதில்லை. ஆகவே வடகலைத் தருமகர்த்தர் இவ்வாழ்வாராதியாரை எவ்வாறு அப்புறப்படுத்துவதென்று எண்ணி இருந்தார். ஒரு மண்டபம் இடிந்ததும் அந்தச் சாக்கைக் கொண்டு எல்லா ஆழ்வார் ஆதியரையும் ஒரு அறையில் சிறைப்படுத்தி விட்டார். செலவும் குறைந்தது, சாத்துமுறைத் திருவிழாவும் நிறுத்தப்பட்டது. சாத்து முறையைத் திருப்பி நடத்தவேண்டுமென்று தென்கலையார் செய்த முயற்சியும் வீணாய்விட்டது. ஆலயங்களைப் புதுப்பித்த பிறகு சாத்து முறை நடத்தவேண்டும் என்று தீர்ப்பும் ஆயிற்று. வடகலையார் வெற்றி பெற்றனர். ஆலயங்களை எப்போது புதுப்பிப்பது? தரும சிந்தனையுள்ள தனவந்தர்களின் வரவைத் தென்கலையார் எதிர் பார்த்திருக்கின்றனர். வடகலையார் இலேசானவரா? தனவந்தர் வரும்போது ஒரு தடை போடுவார். காரியம் நிறைவேறுவதில்லை. ஆழ்வார்கள் எப்போது விடுதலை பெறுவார்களோ என்று இன்றும் அருந்தவம் செய்து கொண்டிருக்கிறார்கள்! தென் கலையார் களுடைய கொட்டத்தை ஒரே அடியில் அடக்கவேண்டும் என்று வடகலைத் தருமகர்த்தர் வெகுநாளாகச் சிந்தனை செய்து வந்தார். ஆழ்வார்களைச் சிறைப் படுத்தியது போதாது. அவர்களை வடகலையினர்களாக ஆக்கவேண்டுமென்று பிரதிக்கினை செய்து கொண்டார். அவ்விதம் செய்து விட்டால் தென்கலையே மாய்ந்துவிடும் என்பது அவர்கள் கோரிக்கை.

அதற்குச் செய்யவேண்டிய முயற்சியும் எடுத்துக் கொண்டார். அவ்வூரில் கோபால பட்டர் என்ற ஒரு தென்கலை அந்தணர் உண்டு. பெருமாள் கைங்காயத்தில் மிகுந்த ஈடுபாடு அவருக்கு உண்டு. வடகலைதென்கலைப் போர்களில் எப்போதும் முன்னணியில் நிற்பார். எந்தக் கச்சேரி வழக்கிலும் கட்சிக்காரர் அல்லது சாட்சியாக இருப்பார். தென்கலைக்கு ஒரு தூண்போல் விளங்குவார். யாருடைய அகத்திலும் சாப்பிடமாட்டார். சென்னைக்கு விவகாரத்திற்குச் சென்றால், தம்மூர் சேருமட்டும் நீரும் உணவும் உட்கொள்ளாமலே இருப்பார். ஆனால் திருமேனி அமாவாசை இரவுபோல விளங்கிக்கொண்டிருக்கும். அந்தத்திருமேனியில், வெண்மைத்

திருமண் இட்டு வெளிக்கிளம்பினால் இரண்டு காத தூரத்திலும் அது தெரியுமென்பர். ஒரு தடவை ஒரு நீதி மன்றத்தில் அப்பெரியார் சாட்சியாக வந்தார்; பெட்டி ஏறினார், நீதிபதியோ ஒரு முதலியார் பட்டாச்சாரியாருடைய திருமேனியின் வண்ணத்தைக் கண்டதும் அவர் ஒரு சாத்தாதவர் என்று எண்ணினூர். வகுப்பைப் பற்றிக் கூறுகையில் ஸ்ரீ வைஷ்ணவர் என்று கேட்டவுடன் ''சுவாமி, இராமானுஜர் பரம காருண்யத்தினால் வைணவராக்கப்பட்ட வைணவர்களில் ஒருவரோ நீர்?'' என்று வேடிக்கையாகவும் சமத்காரமாகவும் பேசுவதாக எண்ணிக்கொண்டு கேட்டுவிட்டார். உடனே கிளம்பினார் பட்டாச்சாரியார், கோர்ட்டார் ஓரம் செய்பவர் என்று மாற்றல் மனுக் கொடுத்தார். தம்மை நிந்தனை செய்ததாக அவதூறு மனுக்கொடுத்தார். இவையெல்லாம் பெரிய நீதிமன்றம்வரை சென்றது. முதலியார் கதி திண்டாட்டத்திற்கு வந்தது, வேடிக்கை வினையாகிவிட்டது என்று எண்ணவேண்டி வந்தது. இறுதியில் பெரிய நீதி மன்றத்தார், இவ்வார்த்தைகள் கெட்ட எண்ணத்துடன் சொல்லப்படவில்லையென்று மனுக்களைத் தள்ளிவிட்டு, முதலியாரை இனிமேல் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று எச்சரித்து விட்டுவிட்டனர்.

இப்பேர்ப்பட்ட விடாக்கண்டரான பட்டர் ஒருநாள் இரவு ஆழ்வார்கள் சிறையிடப்பட்ட ஆலயத்தருகில் சென்று கொண்டிருந்தனர். ஆலயத்துக்குள் ஒரு சிறு விளக்கு வெளிச்சம் இருந்தது. எலி உராய்தல்போல ஒரு சிறு ஒலியும் கேட்டது. ஐயப்பட்டுத் திறவுகோல் துவாரத்தில் நோக்கினார். யாரோ ஒருவர் என்னவோ செய்துகொண்டிருப்பதாகத் தெரிந்தது. கதவு தாழ்ப்பாள் இடப்பட்டிருந்தது. தட்டினார்; ஒலி நின்றது ; விளக்கும் மாய்ந்தது. பிறகு என்ன முயன்றும் ஒன்றும் தோன்றவில்லை. மறுநாள் பட்டர் ஆலயந்திறந்தவுடன் உள்ளே சென்று பார்த்தார். ஆனால் பட்டருக்குப் பெருஞ் சந்தேகம்தான்.

ஒருதடவை கணக்குப் பரிசோதகர் ஆலயக் கணக்குகளையும் சொத்துக்களையும் பரிசோதித்தார். பலபேர்கூட இருந்தனர். பட்டரும் இருந்தார். ஆழ்வார்கள் விடுதியில் கணக்கு எடுத்தார்கள். பட்டர் உள்ளே சென்று வெகு தீவிரமாக மூர்த்திகளைச் சோதித்தார் மூர்த்திகளுடைய திருமுகங்களில் தென்கலை நாமங்களுக்கு மாறாக வடகலை நாமங்கள் இருந்தன. விரலால் தடவிப் பார்த்தார். நாமத்தின் பாதம் இராவப்பட்டிருந்தது. உடனே எழும்பினது சீற்றம். வடகலையாரை மனதிற்குத் தோன்றினபடி வைதார். அடுத்த நாளே நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. தருமகர்த்தரோ ஒரே

விடையில் எதிர் வழக்காடினார். ஆழ்வார்களின் உருவங்களில் எப்போதுமே வடகலைத் திருநாமம்தான் இருந்தது. அது வார்ப்பிலேயே அவ்விதம். என்றனர். தென்கலை என்பதற்கு ஒரு விதச் சாசனமும் கிடைக்கவில்லை. ஒருவேளை இருந்தாலும் வழக்கு வந்தால் அவை வெளிவருமோ? நீதிபதி உண்மை அறியவேண்டி ஒரு அமீனாவை அனுப்பி மூர்த்திகளைப் பார்வையிட்டு அறிக்கை அனுப்ப உத்திர விட்டார். நாஜரோ ஒரு கிறிஸ்தவர். அவர் ஒரு முகம்மதிய அமீனாவை அனுப்பினார். அமீனா ஆலயம் சென்றவுடன் அவனை ஆலயத்துக்குள் எவரும் விடவில்லை. திரும்பி நாஜரிடம் முறையிட்டார். ஆலயத்துள் விட்டால் என்ன கெடுதி என்று கடிந்து பேசிவிட்டு அவனையே மறுபடியும் அனுப்பினார். முகம்மதியனோ உள்ளே செல்ல முடியவில்லை. ஆனால் திரும்பிப் போவதற்கும் இஷ்டம் இல்லை. இருதரப்பாரையும் சில கேள்விகளைக் கேட்டுவிட்டுத் தன் இந்து நண்பர்களை உள்ளே அனுப்பி விசாரித்துவிட்டு அறிக்கை எழுதி அனுப்பிவிட்டான். அறிக்கையோ தன் கைக்கு வந்த வருமானத்தைப் பொறுத்திருந்தது.

முகம்மதியனுக்கு நடந்த உபசரணை பெருமாளுக்கும் நடந்திராது. விக்கிரகங்களுக்கு யாதொரு மாறுதலும் நடைபெறவில்லை என்று உறுதிமொழியுடன் அறிக்கை இருந்தது. இதை அனுசரித்து வழக்குகளும் தள்ளுபடியாயின. மேல் மன்றங்களுக்கு அப்பீல்களும் நடந்தன. அமீனாவின்மீது குற்றங்கள் சாட்டப்பட்டன. ஆனால் ஒரு விதமான பயனும் ஏற்படவில்லை. ஐந்து வருடங்கள் வழக்குகள் நடந்தன. வேறு தருமகர்த்தாவும் வந்தார். சிறையிடப்பட்ட ஆழ்வாராதியர் செதுக்கப்பட்ட திரு நாமங்களுடன், பொறுமையுடன், 'என்று விடுதலை கிடைக்குமோ?' என்று கடுந்தவம் புரிந்துகொண்டிருக்கின்றனர்.

# 5

# திருமண் வழக்கு

ஆழ்வார்கள் ஒவ்வொரு திவ்ய தேசத்திற்கு எழுந்தருளியபோதும் அந்தந்த ஸ்தலத்திலே எழுந்தருளி யிருந்த பெருமாள் மீது அருமையான பாசுரங்களை அருளிச் செய்து வழிபட்டார்கள். அப்பாசுரங்களைப் பெருமாள் திரு முன்னர் இருந்துகொண்டுதான் பாடியிருக்கவேண்டும். ஆகவே அவ்வருமை யான திருப்பாடல்களைப் பெருமாளின் முன்னிலையிலேயே அன்பர்களும் பாடினார்கள். புறப்பாட்டின் போதும் தமிழ்ப் பிரபந்தம் பெருமாளின் முன்னிலையிலேயே பாடினார்கள். வேதம் பெருமாளை இன்னமும் அறியவில்லை என்பது ஒரு கோட்பாடு. ஆகவே அது பெருமாளைத் தேடிக்கொண்டே செல்கிறது என்பர். ஒருவேளை தமிழ்ப்பாடல் முன்னால் சொல்லப்பட்டு அது வழக்கமாகி விடவே, வடமொழியில் சொல்லுகிறவர்கள் முன்னால் சென்றால் எங்கே அடிதடி ஏற்படுமோ என்று அப்போதே அஞ்சி ஒரு சமரசத்திற்கு வந்தார்கள் போலும்! நாளா வட்டத்தில் வடமொழி வேதம் பெருமாளுக்குப் பின்னாலும் தென்மொழி வேதம் முன்னாலும் பாடும் வழக்கு நிரந்தரம் ஆகிவிட்டது. இதனைத் தற்குறிப்பு ஏற்ற அணி யாகத் தமிழ்ப் பெரும் புலவர்,

வேதத்தின் முன்செல்க ... ... ... ... ... ... ...

... ... ... ... ... ... எங்கள் குருகூர்ப்புனிதன்

பாதத்தின் முன்செல்லுமே தொல்லைமூலப் பரஞ்சுடரே?

என்றும் அருளிச் செய்தார். இவ்வாறு முன் காலத்திலிருந்தே வடமொழி தென்மொழி ஓதுதலைக் குறித்து வாதம் ஒருவாறு சமாதானப்பட்டிருக்க, அந்தப் போராட்டம் இன்னமும் அடிக்கடி கிளம்பிக்கொண்டு வருகிறது. ஒவ்வொரு தடவை பெருமாளின் எதிரே இருவரும் பாடும் போது வாய்ச்சண்டை ஏற்பட்டு நீதிமன்றமும் ஏறி விடுகிறது. தென்கலையார் தென்மொழி வேதத்தையும் வடகலையார் வடமொழி வேதத்தையும்

சொல்வதாகப் பாகப் பிரிவினை செய்துகொண்டதால் யாதொரு சண்டையும் ஏற்படாது. ஆனால் தென்கலையார் வடமொழியையும் வட கலையார் தென் மொழியையும் விரும்பி உரிமை கொண்டாடுவது உண்டு. இச்சண்டை பெரும்பாலும் ஆழ்வார், ஆச்சாரியார் சாத்துமுறைக் காலங்களில்தான் வரும். இச்சண்டை அடிக்கடி முற்றிப்போய் நீதிமன்றம் ஏறிப் பொருட் செலவு ஆவதுண்டு.

மேலும் புறப்பாட்டுக் காலங்களில் ஒரு கலையார் மற்றக் கலையாருக்கு இடம் கொடுக்காமல் தந்திரம் செய்வதுண்டு. கருட சேவையின்போது புறப்பாட்டின் தொடக்கத்தில் வடமொழி வேதம் முதலில் வாசிக்கப்படும். அப்போது வாத்தியம் நிறுத்தப்படும். ஆனால் தென்மொழி வேதம் தொடங்கியதும் வடகலைத் தருமகர்த்தர் வாத்தியம் வாசிக்க உத்தரவிடுவார். இதனால் தென்கலையாருக்குப் பெருத்த அவமானமும் அவதியும் ஏற்படும். ஒரு முறை ஒரு அதிகாரி இரண்டும் வாசிக்கும்போது வாத்தியம் வாசிக்கக் கூடாதென்று கட்டளையிட்டார். உடனே வந்தது பெருங்கோபம். பல தந்திகள், மனுக்கள், வக்கீல்கள் மூலம் பறந்தன. முடிவில் ஒன்றும் ஆகவில்லை. வாத்தியம் நிறுத்தப்பட்டது. இப்படிப்பட்ட விரோதப் பான்மை எவ்வளவு அச்சந்தர்ப்பதத்தில் இறங்கியது என்று சற்றுக் கவனியுங்கள்.

வடகலைக்கும் தென்கலைக்கும் ஏற்படும் சச்சரவுகள் எல்லாம் பெரும்பான்மை வெளி வேஷங்களால்தான். தத்துவ விஷயமாக வேறுபாடுகள் இருந்தபோதிலும் அவைகளைப் பொது மக்கள் அறியார்கள். திருமண் இடுவதிலும் தொடக்கத் துதி சொல்லுவதிலும் மிகுந்த பேதம் உண்டு. நீதி மன்றங்களில் வாதாடுவது இந்த இரண்டிலும் என்று சொல்லாம். தீர்த்தம் வழங்குவதில் யாருக்கு முதல் உரிமை என்ற விவகாரமும் உண்டு. தீர்த்தத்தைக் குறித்து மடாதிபதிகள் ஆயிரக்கணக்காகச் செலவு செய்வதில், இவர்கள் மடாதிபதிகளா, மடாதிபதிகளா என்பதே சந்தேகிக்க வேண்டிவரும். ஒரு கிறிஸ்தவ நீதிபதி இதனைக் கேட்டுவிட்டு, ''எங்கள் வீட்டுக்கு வாருங்கள்; சுத்தஜலம் நூறு காலன் தருகிறேன். ஏன் ஒரு கரண்டிக்கு வாதாடுகிறீர்கள்?'' என்று கேலி செய்தாராம். இதனைக் கேட்டும் அக்கட்சிக்காரர்கள் வெட்கப்பட வில்லையாம். ஸ்ரீ சைலேசமா, இராமானுஜமா, என்பவனவும் சச்சரவுக்கு ஏற்ற துதிமொழிகள், எதைச்சொன்னால் என்ன? புண்ணியம் எதனால் குறைந்துவிடும்? எல்லாவற்றிற்கும் நெஞ்சின் நிலைமையே காரணம் என்று யார் சொன்னாலும் செவிடன் காதில் ஊதின சங்குபோலாகும். பண்டைய

நூல்களில் காணும் நீதிகள் எல்லாம் இவர்கள்முன் வெறும் பதர்தான் !

இனி முக்கிய வேறுபாடு திருமண்ணில் என்க, பாதம் இடுவதா அல்லது பாதம் நீக்குவதா? இந்தப் பேதம் சுமார் 300 ஆண்டுகளாகத்தான் இருக்கிறது. பெருமாளுக்கு எதை இடுவது? பரிவார தேவர்களுக்கு எதை இடுவது? ஆலயப் பொருள்களுக்கு எதை இடுவது? என்பதுதான் முதல் கேள்வி. இதனைப்பற்றிய விவகாரம் எத்தனைப் பெரிய கச்சேரி ஏறினாலும் தீருகிறதில்லை. ஒரு தர்மகர்த்தர் வந்தால் எல்லாப் பொருள்களுக்கும் பாதம் ஏறிவிடும், மற்றொருவர் வந்தால் பாதம் மறைந்துவிடும். உடனே விவகாரம் தொடங்கும். முடிவில் பெரியமன்றம் ஏறினாலும் விவகாரம் முடிவடைகிறதில்லை. இவ்வித விவகாரங்களில் ஆயிரக் கணக்கான தொகை செலவாவதுடன் பல குடும்பங்களும் நசித்து விடும். இக்கட்சிப் போர்களுக்கென்றேசில வழக்கறிஞர்கள் ஏற்பட்டுத் தங்கள் வயிறுகளை வளர்த்துக் கொண்டும் பெருக்கிக் கொண்டும் இருக்கிறார்கள். ஒரு கிண்ணிக்கு நாமம் போட மறந்துவிட்டால் உடனே சென்னை வக்கீலுக்குச் செய்தி எட்டிவிடும். மறுநாளே தந்தி பறக்கும். பிராது எழுதி ஆகிவிடும். கச்சேரியிலும் பத்து எதிரிகளின் மீது வழக்கு தொடர்ந்து விடும். இவ்வித நியதி எத்தனை ஏளனத்திற்கு இடம் கொடுக்கிறது. பாருங்கள் ! ஓர் ஊர்க் கோயிலில் ஒரு ஐயங்கார் தம் மகனுக்கு நோய் சௌக்கியமானால் வெள்ளிக் கிண்ணி உபாயம் செய்வதாகப் பிரார்த்தித்துக் கொண்டார். வியாதியும் சௌக்கியமாயிற்று. ஒரு பெரிய கிண்ணி வார்க்கச் செய்தார். செலவு ரூ. 100 ஆயிற்று. அவர் வடகலையார் ஆனதினால் அதன்பேரில் வடகலை நாமம் செதுக்கச் செய்தார். ஒரு குறித்த சுபதினத்தில் பெருமாளுக்கு அபிஷேகம் பூசை முதலியவற்றைச் செய்வித்தார். கிண்ணியும் சுவாமிக்கு உபயமாகக் கொடுக்கப்பட்டது. தருமகர்த்தர் சொத்துச் சாப்தாவிலும் எழுதிக் கொண்டார். காரியம் முடிந்துவிட்டது என்று எண்ணினார் வடகலை ஐயங்கார். சிலநாள் கழித்து அதே ஐயங்கார் ஆலயத்திற்குத் தரிசனத்திற்குச் சென்றார். தாம் கொடுத்தகிண்ணியில் தீர்த்தம் கிடைக்கும் என்று எண்ணினார். அக்கிண்ணி வரவில்லை. பழையதும் உடைந்தது மான ஒரு கிண்ணிதான் வந்தது. பிராம்மணர் திகைத்துப் போய்விட்டார். கிண்ணியைப் பற்றி விசாரித்தார். அது பொக்கிஷச்சாலைக்குள் வைக்கப்பட்டது என்றறிந்தார். இரகசியம் வடகலை நாமம்தான். அர்ச்சகர் தென்கலை என்பது அறியவேண்டும். அவர் அக்கிண்ணியைத் தொடமாட்டேன் என்று சொல்லி விட்டார். வடகலை நாமத்தைத் தென்கலையாக மாற்றினால்

ஒழிய, தொடமுடியாது என்று சொல்லிவிட்டார். எவ்வித விவகாரமும் இதற்கு மேல் பலிக்கவில்லை.

உயிரில்லாத கிண்ணியே இப்பாடு பட்டால் உயிருள்ள ஒரு யானை என்ன பாடுபடும்? ஒரு தடவை ஒரு தனவந்தரான செட்டியார் ஆலயத்திற்கு ஒரு யானையைத் தானம் செய்தார். யானையோ மகத்தான மிருகம். அதனால் ஆலயம் அடையக்கூடிய பெருமையும் இலாபமும் அதிகம். அதனை யாவரே மறுப்பர்? தருமகர்த்தர்கள் மிகுந்த ஆர்வத்துடன் அதனை ஏற்றுக்கொண்டனர். செட்டியார் பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீ சேஷாச்சாரியாரின் பரமானந்த சிஷ்யர். தம் ஆசாரிய மூர்த்தியின் வாக்கை ஒரு காலமும் தடை செய்ய மாட்டார். யானையைத் தானம் செய்வதில் என்னென்ன சடங்குகள் செய்யவேண்டுமென்று கேட்டார். யானைக்குத் திருமண் இட்டுத்தான் அனுப்பவேண்டுமென்று ஆக்ஞாபித்தார் குரு. உடனே தென்கலைத் திருமண்பட்டை பட்டையாக இடப்பட்டது. யானையும் ஆலயத்திற்கு அனுப்பப்பட்டது. யானையை ஏற்றுக்கொள்வதாக இசைந்த தர்மகர்த்தருக்கு என்ன செய்வதென்று தோன்ற வில்லை. சில அன்பர்கள் தென்கலை நாமத்தைக் கண்டு அசூயைப்பட்டு அதனைத் திருப்பி விடும்படித் தூண்டினார்கள். சிலபேர் 'ரூ. 2000 பெறுமானது இதனை எவ்வாறு திருப்புவது? வலிய வந்த சீதேவியை உதைத்துத் தள்ளலாமா?'' என்றார்கள். இறுதியில் யானையைப் பெற்றுக்கொள்வது,பின்னால் நாமத்தைப் பற்றி யோசிக்கலாம் என்று முடிவு செய்தார்கள். அவ்வூர்த் தென்கலை வைணவர்களுக்கோ அளவற்ற சந்தோஷம், அந்நாள் ஒரு திருநாளாகக் கொண்டாடினார்கள். யானையைக் கூடத்தில் கட்டி இரண்டுமாதம் ஆயிற்று. ஒருநாள் மழையிலே யானை ஊர்க்கோலம் சென்றது. திருமண் சிறிது மங்கிற்று. அதனைக் கண்டு மாவுத்தன் யானை குளிக்கும் போதெல்லாம் திருமண்ணைச் சிறிது சிறிதாகத் தேய்த்தான். இது ஒரு வேளை தர்மகர்த்தர் தூண்டுதலின் பேரில் நடந்திருக்கும் என்று சிலர் வாதாடினர். ஆனால் மாவுத்தனோ, ''இல்லவே இல்லை. திருமண் நல்ல மண் அல்ல'' என்றான். பெருந்திருவிழா சமீபத்தது. எல்லா இடங்களும் புதுப்பிக்கப்பட்டன. திருநாமங்களும் சீர்திருத்தப்பட்டன. யானைக்கும் புது அலங்காரம் செய்யப்பட்டது. ஒருநாள் இரவு இரகசியமாக வடகலைத் திருமண் யானையுடல் முழுதும் தீட்டப்பட்டது. உற்சவத்தின்போது யானைமுதலில் வரவே தென்கலையார் பிரமித்து விட்டனர். இந்த அநீதிச் செயலை யார் செய்தனர் என்று கேட்கப்பட்டது. கிரிமினல் சிவில் இரு தரப்பிலும் விவகாரங்கள் தொடரப்பட்டன. வைசியச் செட்டியாரும் சாட்சி சொல்ல வந்தார். முடிவாக யானைக்குத்

தென்கலை திருநாமமே இடவேண்டுமென்று இறுதிக் கச்சேரியிலும தீர்ப்பு ஆயிற்று. இதற்குள்ளாக பத்து ஆண்டுகள் கழிந்தன ; 10,000 ரூபாயும் செலவாயிற்று. பல குடும்பங்களும் நசித்துப் போயின. தர்மகர்த்தாவும் மாறினார். ஆனால் 'கலை'யும் அழுக்காறும் மாறவில்லை. கோர்ட்டார் கொடுத்த தீர்ப்பை எவ்வாறு நிறைவேற்றுவது என்பது பெருங்கவலை ஆயிற்று. அது நிறைவேற்ற முடியாத தீர்ப்பு என்று வாதாடப்பட்டது. அந்த விவகாரமும் மூன்று கச்சேரிகள் ஏறியது. அதுவரை யானை வடகலையோடுதான் திகழ்ந்தது. அந்தப் பேதம், பாவம் அந்த யானை அறியுமோ? பேதம் எல்லாம் மக்களுக்கே என்றறிக. இறுதியில் வடகலைத் தருமகர்த்தர் யானையின் திருநாமத்தை மாற்றவேயில்லை. தென்கலையார் தீர்ப்பை நிறைவேற்றினார்கள். அமீனா பல தடவை சென்றும் யானையின் அருகில் செல்ல முடியவில்லை. செட்டியார் யானையைத் திருப்பித்தர வேண்டும் என்று விவகாரம் செய்தார் ஒரு தடவை செய்த தானம் பூர்த்தியானால் அதை ரத்துச் செய்யச் சட்டம் இல்லை என்று விவகாரம் தள்ளுபடி ஆயிற்று. இந்தத் தோல்வியைக் கேட்ட செட்டியார் உயிர் துறந்தார். தென்கலையாரோ விடாமல் வழக்காடினார்கள். சில ஆண்டுகளில் யானை இறந்ததே யொழியத் தென்கலை நாமத்தை அணியவில்லை. இதனோடு விவகாரம் முடிந்ததோ? கவனியுங்கள்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு இத் திவ்யதேசத்தில் யானை இல்லையே என்று கவனித்த ஒரு சிற்றரசர் அவ்வாலயத்திற்கு ஒரு யானையைத் தானமாக அனுப்பினார். ஆலயத்தின் வழக்கத்தை அறிந்தவர் அச்சிற்றரசர். தமக்கு இக்கலைகளில் நம்பிக்கை இல்லாதிருந்த போதிலும் விவகாரம் இல்லாதிருக்க வேண்டி யானைக்கு வடகலை இடும்படிச் சொல்லி அனுப்பினார். யானையும் ஊருக்குப்பத்துக்கல்லில் வந்தது. இதனை அறிந்தார்கள் தென்கலையார்கள். உடனே தாம் நீதிமன்றத்தில் பெற்ற தீர்ப்பை எடுத்துக் காட்டித் தென்கலைத் திருநாமம் இருந்தால்தான் ஊருக்குள் வரலாம், இல்லாவிடில் வரக்கூடாது என்றும், கலகம் நேரிடாதபடி 144 உத்தரவு போடும்படி மனுக் கொடுத்தார்கள். முதலில் 144 உத்தரவும் வந்தது. யானை பத்து மைலிலேயே ஒருமாதம் தங்க நேரிட்டது. அது பிரம்மோத்ஸவத்திற்கும் பயனில்லாமல் போய் விட்டது. தானம் தந்த சிற்றரசர் என்ன முயன்றும் காரியம் சித்திக்கவில்லை. யானையும் திண்டாடித் 'திரிசங்கு சுவர்க்க'த்தில் இருந்தது. செ. 144 விவகாரத்தில் இருதரப்பாரும் பெரிய வழக்கறிஞர்களை நியமித்தார்கள். ஆயிரக் கணக்கான ரூபாய்கள் செலவாயின. தென்கலையார் பட்சத்தில் உயர்தர நீதிமன்றத் தீர்ப்புக்

காட்டப்பட்டது. வடகலையார் தரப்பில், ''அத்தீர்ப்பு இப்போது செல்லாது. அது நிறைவேற்றக் கூடியதல்ல. கால அளவைக்குள் நிறைவேற்றப்படவில்லை. கால அளவையால் பாதிக்கப்படுகிறது. மேலும், தீர்ப்பு இறந்த யானையைக் குறித்துத்தான் கொடுக்கப்பட்டது. யானை இறந்தவுடன் அத்தீர்ப்பு ரத்தாகி விட்டது. இறந்த யானைக்குப் புதுயானை வாரிசு அல்ல. அதற்கு இது பிறக்கவில்லை. ஆகவே டிக்ரி பயனற்றுப் போய்விட்டது'' என்று வாதாடினார்கள். அதற்குத் தென்கலையாரே ''ஒரு யானைபோய் மற்றொன்று வந்தால் அது வாரிசு ஆகும். ஆகவே தீர்ப்புக் கட்டுப்படுத்தும்'' என்றனர். வடகலையாரோ, ''தீர்ப்பு ரத்து ஆனதுமாத்திரமன்றி புது யானையைத் தந்த சிற்றரசர் வடகலை நாமமே இடவேண்டும் என்று சொல்லித் தானம் செய்ததினால் அதுவே செல்லும்'' என்றனர். இத் தர்க்கம் முழுவதும் கேட்ட நீதிபதி, ''இரண்டு யானைகளும் வேறு. ஒன்றுக்கொன்று வாரிசு அல்ல. முதல் தீர்ப்பு இரண்டாவது யானையைக் கட்டுப்படுத்தாது. இரண்டாவது யானையைத் தந்த சிற்றரசரின் வேண்டுகோளையே எடுத்தாள வேண்டும்'' என்று சொல்லி 144-ஐத் தள்ளி விட்டார். தென்கலையார் வாதமோ 'இலவு காத்த கிளிபோல் ஆயிற்று'' யானையும் இரண்டுமாதம் தவம் புரிந்து விட்டுப் பெரிய வடகலை நாமத்துடன் ஊர்வலம் செய்துகொண்டு ஆலயத்திற்கு வந்தது. கலகம் எங்கு ஏற்படுமோ என்று பயந்து நகர அதிகாரிகள் போலீசு பந்தோபஸ்தோடு யனையை வரவேற்றார்கள். யானை ஆலயம் வந்து சேர்ந்தது. யானை ஆலயம் வருமட்டும் தருமகர்த்தருக்குக் கூண்டிற்குள் உயிரே இல்லை. வந்து சேர்ந்த பிறகுதான் வயிறார உண்டார். ஆனால் அவருக்கு இன்னமும் சந்தேகம் தான் : ''மேல் மன்றத்தில் என்ன மாறுதல் ஏற்படுமோ? அல்லது முந்தி வடகலையார் மாற்றினபடி தெரியாமல் திருமண்ணைத் தென்கலையார் மாற்றி விட்டால் என்ன செய்வது?'' என்பதாம்.

நண்பர்களே ! திருமண் சண்டைதான் சமயவழிபாடு என்று இப்போதும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். நெஞ்சாரவும் எண்ணுகிறார்கள். என்னே, மடமைத்தனம் ! இவர்கள் படித்தவர்களே. படித்தும் பயன் என்ன? இச்சமய வழிபாடு மெய்யான வழிபாடு ஆகுமா? இது ஆஸ்திகத்தின் பேரால் விளங்கும் உலகாயதமாகும். இதனை நமது மக்கள் அறிவார்களாக.

# 6

# திருமுழுக்குப் பிரபாவம்

சிற்றூர் உண்மையில் ஒரு சிறிய ஊர்தான். ஆனால் அதன் ஆலயமோ மிகப் பெரியது. அது ஒரு பாடல் பெற்ற ஸ்தலமாகவும் இருந்தது. ஆகவே ஆலயப் பணிவிடையாளர்களுக்குச் சொல்லவேண்டுமா? அர்ச்சகர், சாஸ்திரிகள் முதற்கொண்டு திருவலகுவரை சகல கோயிற் சிப்பந்திகளும், ஆலயத்தைச் சார்ந்து கொண்டு வாழ்ந்து வந்தார்கள். அவ்வூரில் ஆலயத்துக் கைங்கர்யம் இல்லாக் குடிகள் இல்லை என்றால் அது ஒரு குறை என்று யாரும் கருதமாட்டார்கள். பாடல் பெற்ற ஸ்தலமாகையால் நகரத்துச் செட்டியார்கள் திருப்பணி செய்ய முன் வந்தார்கள். பண்டைய உருவத்தையே மாற்றிப் பளபளப்பான கல் வேலை செய்தும் புது மாதிரி ஆலயம் ஆக்கிவிட்டனர். வைதீகர்களும், சுத்த சைவரும் அரசியற் சிற்பிகளும் என்ன கூக்குரலிட்டும் செவிடன் காதில் ஊதின சங்குபோலாயிற்று. பழைய கல்வெட்டுகள் எல்லாம் அநாகரிகம் என்று செதுக்கப்பட்டன. கருங் கண்ணாடிபோல் சுவர்கள் தீட்டப்பட்டன. அஸ்திவாரம் முதற்கொண்டு மாறிவிட்டன. ஆனால் இப்போதைய திருப்பணி ஆன ஆலயமோ மாம்பலத்துத் திருமாளிகைபோல் வெகு சுத்தமாகிவிட்டது. இத்தனை திருப்பணி செய்த செட்டியாருடைய பெயரையும் உருவத்தையும் அங்கு நிலைநிறுத்த முடியவில்லை. சிற்றூர்க் குடிகள் கேவலமானவர்களா? செட்டியார் பெயர் செதுக்கியக் கல்லை ஒரே இரவில் அழித்துவிட்டார்கள். அவரது உருவங் கொண்ட தூணில் மூக்கும் காதும் சிதைத்துவிட்டனர். பின் என்ன மீதியிருக்கும்? எல்லா அறிகுறிகளும் மாற்றப்பட்டன. இதுதான் செய்ந்நன்றிக்குத் தற்காலச் சமய அகராதியில் ஒரு உதாரணமாகும் என்னலாம்.

சிற்றூர்ச் சிவாலத்யற்குப் பண்டைய அரசர்கள் ஒரு கிராமத்தைத் தேவதானமாக விட்டிருந்தார்கள். இதில் வருடம் 8,000 ரூபாய் கிஸ்த்தி வரும். ஆனால் எந்த வருடத்திலும் 3000க்கு மேல் வசூல் ஆனதில்லை. இந்த வசூலுக்கும் 500 சில்லறைப் பிராதுகள் செய்ய வேண்டி வரும். அதிகமாக யாராவதொரு தருமகர்த்தர் முயன்றால்

அவர் மீது சாணி அபிஷேகமும் வீட்டின் மீது கல்லெறிப் பூசையும் சகஜம் ஆகும். பெரும்பான்மையான குடிகள் ஆலயச் சொத்துக்களையே மானியங்களாகக் கொண்டவர்கள். ஆனதினால் சுவாமிக்குக் கப்பம் செலுத்த வேண்டிய கடமை இல்லை என்பார்கள். கடுமையாக எந்தத் தருமகர்த்தர் கேட்டு விட்டாலும் அவருடைய கால் அந்த ஊர் எல்லைக்குள் வராமல் தடுத்து விடுவார்கள். அதுவும் மிஞ்சினால் அடுத்த முறை அவருடைய வேலையே போய்விடும். மற்றொரு ஆள் நியமிக்கப்பட்டு விடுவார். எவர் பணியார்களை வரி கேட்காமல், அவர்களிடம் யாதொரு வேலையும் வாங்காமல் தம் சொந்தப் பணத்திலிருந்து திருவிழா நடத்தி மற்ற வரும்படியிலிருந்து வேண்டியமட்டும் தன் கைப் பொறுப்பை மீட்டிக் கொள்வாரோ அந்தத் தருமகர்த்தாவே இரண்டாமுறை நியமிக்கப்படுவார். அப்படிப்பட்ட ஒரு தருமகர்த்தர் நடராஜப் பிள்ளை என்பவர். அவர் இரண்டு முறை தரும கர்த்தாவாக இருந்து சிற்றூர் அருமை பெருமைகள் முழுவதையும் அனுபவித்தவர். திருவிழாக்களில் மேளம், பொய்க்கால்குதிரை, வாண வேடிக்கை, நடனம் முதலியவைகளைக் கிரமமாக நடத்திவைத்துப் பெரும் புகழைச் சம்பாதித்துக் கொண்டார். சித்திரைத் திருவோணத்தின்போது நடராஜ அபிஷேகத்தைத் தம் சொந்தச்செலவி லேயே நடத்துவதாகச் சொல்லி, அக்கட்டளையத் தவறாது நடத்தி வருகிறார். தேவரடியார் தெரு மிகவும் பிரபலம் அடைந்தது. முன்னே அத்திருப்பணியார்கள் ஐந்து குடிகளாக இருந்தவர்கள்; இப்போதோ 50 குடிகளாகப் பெருகிவிட்டனர். அவர்கள் நடராஜப் பிள்ளையைப் புகழாத புகழ் இல்லை. இரண்டு முறை தருமகர்த்தர் வேலை சரிவரப் புகழ்உற நடாத்திய பிறகு கணக்கெடுத்ததில் ஆலயத்தின் வரவு செலவுத் திட்டத்தில் 25,000 ரூபாய் அதிகம் செலவும், தம் சொந்தப் பொறுப்பில் ஆஸ்திக்குமேல் 25,000 ரூபாய்அடைவும் இருந்தது என்றால், பிள்ளையவர்களுடைய ஆளுகையைக் குறித்துச் சொல்லவும் வேண்டுமா? அதிகார வர்க்கத்தினர் வேறொரு தர்மகர்த்தரை நியமித்தனர். பிள்ளைக்கோ பொறுக்கமுடியாத துக்கமும் கோபமும் வந்தன. இச் செய்ந்நன்றி கொன்ற மக்களை என்ன செய்யலாம் என்று தம் நண்பரிடம் ஆலோசித்தார். எதுவும் புரிய முடியவில்லை. பலவழி ஆலோசனை செய்தும், முடிவில் ஒன்றும் கைகூடவில்லை.

ஆனால் பிள்ளையவர்கள் தாம் கைக்கொண்ட சித்திரைத் திருவோண அபிஷேகத்தை மாத்திரம் நிறுத்தவில்லை. வருடா வருடம் 100 ரூபாய் அளவில் அதனைச் செய்து வைப்பார். அன்றைய நாள் அபிஷேகத்திற்கு வரும் அந்தணர்கள் அவரது

ஆட்சியைக் குறித்துத் திருப்புகழ் பாடி அவரது நெஞ்சைக் கலக்கி விடுவார்கள்.

ஒரு வருடம் சித்திரை மாசத்தில் திருவோண நட்சத்திரம் இருமுறை வந்தது ; 4-ந் தேதியிலும் 31-ந் தேதியிலும் வந்தது. சிற்றூர் ஆலயத்தில் இந்த நாள்தான் அபிடேகம் என்று முன்னமே குறிக்கப்படவில்லை. பஞ்சாங்கங்கள் பலவிதமாக இருந்தன. தமக்கு வேண்டிய சாஸ்திரி ஒருவரின் பேச்சைக் கேட்டு நடராஜப் பிள்ளை சித்திரை மீ 3-ந்தேதியிலேயே 50 ரூபாய் சாமான்களைத் தயார் படுத்திக் கோயிலுக்கு அனுப்பி வைத்தார். தற்கால தர்மகர்த்தர் மூன்று மைலுக்கப்பால் குடியிருந்தார். ஆலய மனேஜர் உடனே சொல்லி அனுப்பினார். அவருக்கோ படிப்பு சிறிது மட்டு, கமிட்டிக் காரியதரிசிக்குச் சொல்லி அனுப்பினார். அவர் பஞ்சாங்கங்களைப் புரட்டிப் பார்த்தும் ஒன்றும் புரியவில்லை. சிதம்பரத்திற்குத் தந்தி அடித்தார். அங்கிருந்து பதிலும் வந்தது. 31-ந் தேதிதான் சிதம்பரத்தில் அபிஷேகம் நடப்பதாகத் தெரிந்தது. உடனே தர்மகர்த்தர் ஆலய மானேஜருக்குத் தெரியப்படுத்தினார். அபிஷேகம் நிறுத்தப்பட்டது. நடராஜப் பிள்ளைக்கு வந்தது அடக்க முடியாத கோபம். சிற்றூர் அந்தண சிரேட்டர்கள் அதற்குத் தூபம் போட்டார்கள். ''உங்களுக்கு தருமகர்த்தா வேலை மறுபடியும் கொடுக்காத கமிட்டிக் காரியதரிசிதான் இந்த அக்கிரமச் செயலுக்குக் காரணம். 'குதிரை ஆளைக்கொன்றதுமல்லாமல் குழியையும் பறித்ததாம்' என்றபடி அவன் தங்கள்மீது பொறாமை கொண்டு அபிஷேகத்யையும் நிறுத்திவிட்டான். இதனைத் தெருவுக்கு இழுக்காமல் சும்மா விட்டுவிட்டால், 'மனுசன்' என்று ஏன் பெயர் எடுக்க வேண்டும்?'' என்று கோபத்தைக் கிளப்பி விட்டார்கள். உடனே வழக்கறிஞர் அபிப்பிராயம் கேட்கப்பட்டது. சட்ட நூல்கள் புரட்டப்பட்டன. சட்டப்படி நோட்டீசு விடப்பட்டது. வழக்கும் தொடரப்பட்டது. வேணுமென்றே அவமானப் படுத்துவதற்காகவும், கஷ்டத்தை உண்டு பண்ணுவதற்காகவும் முன்னாலே சதியாலோசனை செய்து சரியானபடி 4-ந் தேதியன்று அபிஷேக நாள் இருக்க அதைத் தள்ளி வைத்து 31-ந் தேதியன்று குறிப்பிட்டுச் சேகரித்து வைத்த சாமான்கள் அழுகிப்போக கஷ்டப்படுத்தி விட்டதற்காக வழக்கு தொடரப்பட்டது. கணக்குப்படி அபிஷேக சாமான்கள் 250 ரூபாய், அவமானப்படுத்தியதனால் மான நஷ்டம் 2000, ஆக 2,250 ரூபாய்க்கு நஷ்டஈடு கொடுக்கும்படி பிராது செய்து அதற்குக் கட்டணம் முழுதும் கட்டப்பட்டது. பெரிய வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட்டனர். வாதி நடராஜப் பிள்ளை ; பிரதிவாதிகள் 1. தர்மகர்த்தர், 2. கமிட்டிக் காரியதரிசி. இரண்டாவது பிரதிவாதி

தூண்டுதலின் பேரில் முதல் பிரதிவாதி தடுத்தபடியால் இருவரும் பிரதிவாதிகளாக வழக்கில் சேர்க்கப்பட்டார்கள். ஆலயத்தாரும் இரண்டு பிரதிவாதிகளும், இரண்டு வழக்கறிஞர்களை நியமித்தனர். வழக்கு வெகு நாள் தள்ளி வைக்கப்பட்டது. இரு புறங்களிலும் 50, 50 சாட்சிகளை அழைத்திருந்தார்கள். ஆகையால் நீதிபதிகள் வழக்கை எடுக்கச் சிறிது கூசினார்கள். ஒரு முறை வழக்கு வேறு நீதிமன்றத்திற்கும் மாற்றப்பட்டது. இரு திறத்தாருக்கும் அங்கே போய்வரச் செலவோ அபரிமிதம் ஆயிற்று. ஒவ்வொரு விசாரணைக்கும் 50 சாட்சிகளைக் கூட்டிக்கொண்டு 30 மைல் தூரத்திலுள்ள நீதிமன்றத்திற்குச் செல்வது என்றால் செலவு குறைவாகுமா? உபய கட்சிக்காரர்களுக்கும் நடந்து நடந்து கால் ஓய்ந்துவிட்டது. சலித்துப்போய் விட்டது. வழக்குத் தொடங்கி மூன்று வருடமாயிற்று. நீதிபதி இன்னமும் தள்ளி வைக்க முடியவில்லை. மேல் மன்றத்திற்குச் சமாதானம் கூறவேண்டுமல்லவா? இதற்குள் ஒரு விடா முண்டனான நீதிபதி வந்து சேர்ந்தார். ஒரு குறித்த நாளில் வழக்கு நடத்துவதாகச் சொல்லிவிட்டார். இருதரப்பாரும் தயாராகிவிட்டனர். சாட்சிகளுக்குச் சிற்றுண்டி தாம்பூலம், விருந்து இவைகளுக்கு அளவே இல்லை. நீதி மன்றத்தில் சிற்றூர்த் திருக்கோயில்-திருவிழாவே மாறி வந்து விட்டதுபோல், ஆர்ப்பாட்டம் இருந்தது. வழக்கு விசாரணையும் தொடங்கிற்று. மூன்று மாதம் நடந்தது 50 சாட்சிகள் இரு புறமுமாக விசாரிக்கப்பட்டனர். நாள் ஆக ஆக ஆர்வம் குறைந்தது.

## விசாரணையில் பல கேள்விகள் எழுப்பப்பட்டன.

(1) ஒரு மாதத்தில் இரண்டு நட்சத்திரங்கள் வந்தால் அவைகளில் எந்த நட்சத்திரத்தில் அபிஷேகம் செய்வது அதைப்பற்றி ஆகமங்கள் என்ன சொல்லுகின்றன? (2) அந்த விதியைத் தெரிந்தே பிரதிவாதிகள் மாற்றினார்களா? (3) அவ்வாறு மாற்றுவதற்குச் சதியாலோசனை நடந்ததா? (4) அச்சதி வாதியை அவமானப்படுத்துவதற்கா? (5) அதனால் வாதிக்கு நஷ்டம் ஏற்பட்டதா? (6) நஷ்டத்தின் மதிப்பு என்ன? (7) நஷ்டம் யார் கொடுக்க வேண்டியது? (8) இதனைத் தீர்ப்புச் சொல்வதற்கு நீதிபதிக்கு அதிகாரம் உண்டா? (9) வழக்குத் தொடுப்பதற்குச் சட்டப்படி அதிகாரம் வாங்கப்பட்டதா? (10) முடிவான தீர்ப்பு என்ன? இவை முதலான கேள்விகள் குறித்து, சிதம்பரம் முதலிய இடங்களில் கமிஷன் மூலமாகச் சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். பல ஆகமங்கள் தாக்கல் செய்யப்பட்டன. காமிகாகமமும் வைத்தியநாத தீட்சிதரும் அவைகளில் முக்கியமானவை. இரு கட்சியிலும் இரண்டு

ஏட்டுப் பிரதிகளைத் தாக்கல் செய்தனர். அவை வெகுதூரத் தலங்களிலுள்ள சிறந்த குருக்கள் அகங்களிலிருந்து எடுத்துக் கொண்டுவரப்பட்டன.

வாதி பக்கத்திற்குச்

சிவாச்சாரியார் விசாரிக்கப்பட்டார்.

**வாதி வக்கீல்:** சுவாமிகளே! தாங்கள் எந்த ஸ்தலம்? என்ன தொழில்?

**சாட்சி:** நான் இருப்பது பஞ்சபூத ஸ்தலமாகிய பிருதிவி க்ஷேத்திரம். நான் அந்த ஸ்தலத்தில் உத்தம குருக்கள்.

**வா.வ:** என்ன சமயப் பயிற்சி உண்டு?

**சா:** 4 வேதம், 6 சாஸ்திரம், 18 புராணம், இதிகாசம், ஆகமம், சமய நூல்கள் எல்லாம் வாசித்திருக்கிறேன்.

**வா.வ:** ஆலய பூஜாவிதிகள் பார்த்திருக்கிறீரா?

**சா:** ஆமாம், எனக்குக் கரதலாமலகம் போலத் தெரியும்.

**வா.வா:** ஒரு மாதத்தில் இரண்டு நட்சத்திரம் வந்தால் நடராஜ அபிஷேகம் எப்போது செய்வது?

**சா:** முதல் நாளில் தான் செய்ய வேண்டும்.

**வா.வ:** இதற்கு என்ன ஆதாரம்?

**சா:** காமிகாகமம்-இதோ இந்நூலில் நடராஜ அபிஷேக விதி என்ற பாகத்தில் சொல்லியிருக்கிறது.

(நூல் எடுத்துக்கொள்ளப்பட்டது-குறி இடப்பட்டது.)

**வா.வ:** அந்தப் பாகத்தை வாசியும்.

உடனே அந்த பாகங்களைச் சிவாசாரியார் வாசித்துத் தமிழில் பொருள் கூறினார். அதன் தாற்பரியம் என்னவெனில், ஒரு மாதத்தில் இரண்டு நட்சத்திரங்கள் வருமாயின் முந்திய நட்சத்திரமே சிரேஷ்டமானது, அதிலேதான் நடராஜ அபிஷேகம் செய்ய வேண்டும். தவறினால் பாவம் உண்டாகும் என்பது.

## குறுக்கு விசாரணை:

பிரதிவாதி வக்கீல்: சுவாமிகளே ! இந்நூல் யாரிடம் இருந்தது?

சா: என் கிருகத்தில்தான் இருப்பது-இது பரம்பரையாக எங்கள் குடும்பத்தில் இருப்பது.

பி.வ: இந்நூலை நன்றாக வாசித்திருக்கிறீரா?

சா: வாசித்திருப்பது மாத்திரம் அல்ல. நன்றாக மனப்பாடமும் வரும்; எனக்குச் சாகித்தியமும் வரும்.

பி.வ: சாகித்தியம் என்றால் என்ன?

சா: சமஸ்கிருதத்தில் நவீன சுலோகங்களை இயற்றக்கூடும். அத்தனை மட்டும் படித்திருக்கிறேன்.

பி.வ: தங்கள் படிப்பின் நுட்பத்தைக் கேட்டு மிகவும் சந்தோஷம். அப்படிப்பட்ட அர்ச்சகர்கள் இன்னும் பலபேர் இருந்தால் நமது ஆலயங்கள் சிறப்பு அடையும்.

நீதிபதி: ஐயா, இந்தப் பிரசங்கம் வேண்டாம், அவசியமான கேள்விகளை மாத்திரம் கேளும்.

பி.வ: மன்னிக்கவேண்டும், நான் சொல்லும் விஷயம் பின்னால் விளங்கும்.

நீதிபதி: சரி மேலே சொல்லுங்கள்.

பி.வ: இவ்வாகமம் யார் எழுதியது?

சா: பரமசிவனே மொழிந்தது.

பி.வ: அதைக் கேட்வில்லை. இதனைக் கைப்பிரதி செய் தவர் யார்?

சா: தெரியாது, இது மிகப் பழைய பிரதி.

பி.வ: எல்லாப்பாகமும் பழமையானதா?

சா: இது என்ன கேள்வி? முழுதும் பழமையானதுதான் யார் ஆகமத்தைத் தொட முடியும்?

(சிறிது மனக்கலக்கங் கொள்ளுகிறார்.)

பி.வ: சுவாமி! நடராஜ அபிஷேக விஷயம் எங்கே சொல்லப் பட்டிருக்கிறது.

சா: இவ்வாகமத்தில்தான் சொல்லப்பட்டிருக்கிறது.

பி.வ: அது சொல்லியிருக்கும் பாகத்தின் தலைப்பு என்ன?

சா: நடராஜ அபிஷேக விதி என்பது அதிகாரத்தின் தலைப்பு.

பி.வ: எத்தனை சுலோகங்கள்?

சா: பதின்மூன்று சுலோகங்கள்.

பி.வ: அதிகாரத்தின் இலக்கம் என்ன?

சா: நூலைத் திருப்புகிறார்; ஒன்றும் சொல்லவில்லை.

பி.வ: என்ன சுவாமி?

சா: இலக்கம் இல்லை.

பி.வ: இலக்கம் இல்லையா? ஏன் முன்னதிகாரம் இலக்கம் உண்டா?

(சாட்சி திருப்பிப் பார்க்கிறார்.)

சா: ஆம், 77-ஆம் அதிகாரம்.

பி.வ: பிந்திய அதிகார இலக்கம் என்ன?

சா: 78-ஆம் அதிகாரம்.

பி.வ: 77-ஆம் அதிகாரம் எங்கே முடிகிறது?

சா: 505-ஆம் பக்கத்தின் மேல் வரியில் முடிகிறது.

பி.வ: 78-ஆம் அதிகாரம் எங்கே தொடங்குகிறது?

ச: 506-ஆம் பக்கத்தில் தொடங்குகிறது.

பி.வ: பதின்மூன்று சுலோகங்களும் எங்கே எழுதப்பட்டுள்ளன?

சா: 505-ஆம் பக்கத்தில் இரண்டாம் வரியிலிருந்து அப்பக்கம் முழுதும் எழுதப்பட்டுள்ளன

பி.வ: நடராஜ அபிஷேக விதி என்ற 13 சுலோகங்களின் எழுத்துக்களும், 77,78 அதிகாரங்களின் எழுத்துக்களும் ஒரேமாதிரி இருக்கின்றனவா?

சா: ஏன் இல்லை?

பி.வ: பார்த்துச் சொல்லும்.

சா: எனக்குச் சிறிது சாலேசரம்.

பி.வ: கண்ணாடி கொடுக்கட்டுமா?

சா: இல்லை, பார்க்கிறேன்.

பி.வ: பார்த்துச் சொல்லும்.

சா: ஒரே மாதிரிதான் எனக்குத் தோன்றுகிறது.

(கண்ணைக் கசக்குகிறார்.)

பி.வ: இதனை நீதிபதியே கவனிக்க வேண்டும். சிறு குழந்தையும் இதனை வேறுபடுத்திச் சொல்லும்.

நீதி: அதனை வாதத்தில் வைத்துக் கொள்வோம். மேலே செல்லுக.

பி.வ: 77-ஆம் அதிகாரத்தின் தலைப்பு என்ன?

சா: கர்ப்பக் கிருகப் பரிமாணம்.

பி.வ: 78-ஆம் அதிகாரத்தின் தலைப்பு?

சா: விமான நிர்மாணம்.

பி.வ: இவைகளுக்கு இடையில் உள்ளது நடராஜ அபிஷேக விதியா? (சாட்சி மௌனம் சாதிக்கிறார்.)

பி.வ: சரி,இந்நூலுக்கு அட்டவணை உண்டா?

சா: (புரட்டிப் பார்த்து) இருக்கிறது.

பி.வ: 77, 78-ஆம அதிகாரங்களின் பெயர்களை வாசியும்?

சா: 77 கர்ப்பக் கிருக நியமனம். 78 விமான நிர்மாணம்.

பி.வ: இடையில் நடராஜ அபிஷேக விதி என்று இருக்கிறதா?

சா: இல்லை.

பி.வ: அபிஷேக விதிகளைக் கூறும் அதிகாரங்கள் எந்தக் காண்டத்தில் இருக்கின்றன?

சா: நான்காம் காண்டம்.

பி.வ: ஆலய நிர்மாண விதிகள் எங்கே இருக்கின்றன.

சா: இரண்டாம் காண்டம்.

பி.வ: இந்தக் காரணங்களினாலே நடராஜ அபிஷேக விதி என்பது பின்னாலே ஒருவரால் இடைச் செருகலாகச் சொருகி விடப்பட்டதல்லவா?

சா: மௌனம்.

பி.வ: சுவாமி! சாகித்தியத்தில் வல்லவரான நீரே இந்தப் பதின்மூன்று சுலோகங்களையும் இயற்றி 77ஆம் அதிகாரத்தின் பின்னே 78-ஆம் அதிகாரம் அடுத்த பக்கத்தில் தொடங்கியிருக்க, இடையில் இருந்த காலி இடத்தில் செருகிவிட்டீர் என்று கூறுகிறேன். இது உண்மை அல்லவா? சாட்சி வெலவெலத்துப் போனார். நாக்குத் தடுமாறி, ''இல்லவே இல்லை'' என்றார்.

இனிமேல் வழக்கைப் பற்றி அதிகம் கூறவேண்டியதில்லை. இடைச்செருகல் நிரூபிக்கப்பட்டதாய்க் கொள்ளப்பட்டது. வழக்குத் தள்ளிவிடப்பட்டது. பிரதிவாதிகளுக்குச் செலவுத்தொகை உத்தரவாயிற்று. இரு பக்கங்களிலும் ரூ.5000 விழுக்காடு செலவு ஆயிற்று. கோயில் பொக்கிஷம் காலியாயிற்று. நடராஜப் பிள்ளை கடனாளி ஆனார். வீடுவாசல் ஏலமாகிவிட்டது. நடராசனின் பாதமே கதி என்று எண்ணித் தாம் இயற்றிய அபராதங்கள் பிறரால் தூண்டப்பட்டு உண்டாயின என்று பிரார்த்தனையில் சொல்லிக் கொண்டு சிவனடியைச் சிந்தித்துக்கொண்டு நோய்வாய்ப்பட்டுக் கிடக்கிறார்.

# 7

## தேர்தல் - கூத்து

### (ஒரு நாடகம்)

**களம் 1** **தெரு - இரு ஆட்கள்**

**சுப்பையா:** முத்தையா, இங்கே என்ன கூட்டம்?

**முத்தையா:** என்ன சுப்பையா, உமக்குத் தெரியாதா-தேவஸ்தானக் கமிட்டித் தேர்தல். பல நாள்களாக நமது ஊரில் தமுக்கு அடிக்கிறார்களே.

**சு:** நான் சில நாள்களாக ஊரில் இல்லை. போட்டி பலமா? யார் யாருக்கு?

**மு:** போட்டிக்கு என்னக் குறைவு. இருவரும் கைதேர்ந்த ஆட்கள். அருணசல முதலியாரும் வேதாசலம் பிள்ளையும் போட்டி போடுகிறார்கள்.

**சு:** யாருக்கு ஆதரவு அதிகம்?

**மு:** சொல்லுவானேன்? அருணசல முதலியாருக்குத்தான். அவருடைய தம்பிமார் பையை அவிழ்த்துவிட்டார்கள். பணம் ஆற்று நீர் போல ஓடுகிறது. வேதாசல பிள்ளை சிறிது பிடித்தமானவர். ஆகவே செல்வாக்குக் குறைந்துவிட்டது. வெறும் குணம் இருந்து என்ன பலன்? தேர்தலில் தாராளமான மனசு அல்லவோ இருக்க வேண்டும்?

**சு:** அருணசல முதலியார் வாயாடுபவர் என்ற பிரசித்தம் உண்டே! அப்படியிருந்தும் பொதுமக்கள் வாக்குக் கொடுப்பார்களா?

**மு:** அதற்கு என்ன சந்தேகம்? பணப் பையை அவிழ்த்து விட்டால் யார்தான் இணங்கமாட்டார்கள்? இக்காலத்தில் நேர்மையை யார்தான் மதிக்கிறார்கள்.

சு: ஆகவே அவருடைய குணத்தைப் பொதுமக்கள் அறிவார்களா?

மு: சந்தேகமென்ன? வெள்ளைப் பிள்ளையார் கோவிலுக்காக ஊராரிடம் வாங்கின 10,000 ரூபாயும் எங்கே? கட்டடம் பார்த்தால் ரூ.3,000 மதிக்கக்கூடுமா? சாலைக்குமரர் கோவிலிலே கட்டளை நடத்துவதில் ரூ.5000 செலவு எழுதியிருக்கிறார். உண்மையில் ஆயிரம் செலவாகிறதா? தங்க மாரியம்மன் ஆலயத்தில் நெருப்பு மிதிக்க ரூ.2,000 செலவாகுமென்று நம்புகிறீரோ? எல்லாப் பணமும் எங்கே போயிற்று? பொதுமக்கள் அறியாரோ?இருந்தாலும் துட்டுக் கொடுத்தால் வாக்குக் கிடைக்கிறது. வெற்றி உள்ளங்கையிலேதான் !

சு: ஆலயத் தருமகர்த்தாவானால் எளிதில் கறக்கலாம். கமிட்டி மெம்பர் ஆனால் என்ன பயன்?

மு: அதுதான் சுலபம். பிறர் அறியாமலே பணம் தட்டலாம. ஒவ்வொரு தருமகர்த்தர் நியமனத்திற்கும் பலபேர் போட்டியிடுவார்கள். ஒவ்வொருவரும் பல நாள்களாக வீட்டிலே தொங்கிக்கொண்டிருப்பார்கள். இதிலே எவ்வளவு கௌரவம் ! ஒவ்வொருவருக்கும் ஆசைக் காட்டிப் பல காரியங்களை எளிதில் செய்து கொள்ளலாம். கடைசியில் ஒருவரிடம் அதிகப் பணம் பெற்று வேலையும் செய்து கொடுக்கலாம். வேலை ஆன பிறகும், பலவித நன்மை ஏற்படும். ஆள் வசதி எத்தனை அனுகூலம் பார் !

சு: கோயில் பணம் கையாடுவது எத்தனை சுலபம்? ஆனால், வேறொருவர் மூலமாக எதிர் பார்ப்பது கடினம் அல்லவா?

மு: கோயிலில் கையாடிக் கணக்குப் பரிசோதகரிடம் சிக்கிக் கொண்டால் பின்னர் கைக்கும் குட்டைதான் (விலங்கு). ஆனால், வேறொருவர் மூலமாகச் சகாயம் பெற்றால் யாருக்கும் பயப்பட வேண்டாம்.

சு: அருணுசல முதலியாருக்கு அதிகப் பணம் இல்லையே ! எவ்வாறு இத்தனை பணம் அவிழ்க்கிறார்?

மு: இது ஒரு வியாபாரந்தான். இப்போது தேர்தலில் ரூ.5,000 செலவு செய்தால் பின்னால் ரூ. 10,000 ஆக லாபம் பெறலாம்!

சு: அவருடைய தம்பிமார் இதற்கு உதவியாக இருக்கிறார்களா? அது ஆச்சரியமல்லவா?

மு: ஏன்? அவர்களும் உடந்தை என்றுதான் கேள்வி.

சு: எப்படி?

மு: அடுத்த திருச்சிவப் பேரூரில் தருமகர்த்தர் ஸ்தானம் காலி, அதனை அவர் தம்பிக்கு ஏற்பாடு செய்வார்கள் அதற்கு 500 ஏக்கர் நிலம் உண்டு. அவைகளை இரண்டாந் தம்பி குத்தகைக்குப் பெறுவார். இது வெற்றியானால், ரூ.5,000 க்கு ரூ.50,000 கிடைக்காதா? இதுதான் இரகசியம்.

சு: இப்போது அறிந்தேன். ஆனால் நாம் எடுத்த காரியம முழுதும் வெற்றி ஆகிறது. முடிவு காண்போம்.

**களம் 2** **கோயில்-இருவர்**

**அர்ச்சகர்:** பரிசாரகரே, சங்கதி கேட்டீர்களா? அருணசல முதலியார் கமிட்டி மெம்பர் ஆனதும் தம் தம்பிக்குத் தர்மகர்த்தர் வேலை செய்து கொடுத்து விட்டார்.

**பரிசாரகர்:** அப்படியா? அவர் குணம் எப்படி?

அர்: சொல்லவேண்டுமா? ஒவ்வொன்றிலும் தரகுதான். இனிமேல் நம் ஜபம் சாயாது.

பரி: என்ன, அப்படிச் சொல்லுகிறீர்?

அர்: படித்தரம் இனிமேல் கால் பங்குககுக் குறைந்து விடும். இத்தனை நாள் இருந்து வந்ததுபோல் இனி நம் குடும்பங்கள் க்ஷேமமாக இருக்க முடியாது.

பரி: அப்படியா ? என்ன செய்து விடுவார்?

அர்: அவரோ ஒரு சுக்கஞ் செட்டி. கடை வியாபாரம் நன்றாகத் தெரிந்தவர். கடை விலை அறிந்து சாமான்களை வாங்கி நமக்கு அளந்து கொடுப்பார். நாம் எப்படி மிச்சப்படுத்த முடியும்?

பரி: ஐயோ, நான் இனி என்ன செய்வேன்? என் மனைவிக்கு இரண்டத்தனை சாப்பாடு வேண்டும், போதாக் குறைக்கு 6 பெண்களுக்கு என்ன செய்வேன்? மூன்று பிள்ளை

ருதுவாகிவிட்டது. கலியாணம் செய்து வைக்கவேண்டும. வீட்டிலே நிர்ப்பந்தம் அதிகம். இதுவரை நன்றாய்ச் சாப்பிட்டு விட்டேன். மீதி சேர்த்து வைக்க இல்லை.

அர்: சேர்த்து வைப்பதா? தினமும் சாப்பாட்டுக்கும் கஷ்டமாகிவிடும்.

பரி: இனி குறைத்துவிட்டால் நாம் வேலை செய்ய மாட்டோம் என்போம். அப்போது என்ன செய்வார்? காந்திதான் வேலை நிறுத்தம் கற்றுக் கொடுத்துள்ளாரே.

அர்: காந்தி-தந்திரம் முதலியாரிடம் செல்லாது. நாம் இல்லையென்றால் 10 பேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு முறை வேலை போனால் பிறகு கிடைக்காது.

பரி: என்ன, வம்பாக இருக்கிறதே? வேறு பரிகாரமில்லையோ?

அர்: இல்லவே இல்லை. இந்த ஆசாமி நம்மை வருத்தி மிச்சப்படுத்துவார். ஆனால் அதனைக் கோவிலுக்குக் கொடுக்கமாட்டார். தாமே கறந்து கொள்வார்.

பரி: அதனைக் கண்டு பிடித்தால் அவரைப் பெரிய பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப முடியாதா?:

அர்: ஆமாம், அதுதான் சரியான வழி. அதற்காக நன்றாய் உஷாராக இருக்க வேண்டும். நமது கணக்கனைக்கைக் குள்ளே போட்டுக் கொள்ள வேண்டும். திருட்டைக் கண்டுபிடிக்க முயற்சி செய்ய வேண்டும். ஒரு தடவை கண்டுபிடித்து விட்டால் பின்னர் நாம் வென்றுவிடுவோம்.

பரி: சரி, அதுதான் நல்ல உபாயம்! கணக்குப் பிள்ளையை எப்படியாவது சரிப்படுத்திக் கொள்வோம். இத்தனை நாள் ஒரு உருண்டைச் சாதம்தான் தந்தோம். இனிமேல் இரண்டத்தனைத் தருவோம்.

அர்: நீர் சொல்லுவதுதான் சரி. அவனை எப்படியாவது சரிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பரி: கணக்கிலும் ஒன்றிரண்டு பிசகுகள் செய்யச் சொல்லிக் கையெழுத்து வாங்கிக்கொள்ளச் செய்ய வேண்டும்.

அர்: அவன் அதற்கு ஈடுபடுவானோ?

பரி: அதற்கென்ன, அம்மனுடைய நகை இரண்டையெடுத்துத் தற்கால நகையாகச் செய்து கணக்கனுக்குப் பரிசு தந்தால் வேண்டிய காரியம் நிறைவேறி விடுகிறது.

அர்: சரி, அதுவே சரி, வெகு ஜாக்கிரதையோடு முனனேற வேண்டும்.

## களம் 3 கோயில் பூங்காவனம்-இருவர்

**மெய்க்காவல்** : என்ன, அம்மா ! நந்தவனத்தில் என்ன செய்கிறாய்?

**திருவலகு**: தருமகர்த்தர் பெண்சாதிக்குப் பூ எடுக்கிறேன்.

**மெய்**: என்ன அநியாயம்! சுவாமிக்கு எடுக்கிற பூ மனிதருக்கா?

**திரு**: என்ன செய்வது? வயிற்றுப் பிழைப்புக்கு என்ன செய்வது? வேலை போய்விட்டால் என் கதி என்ன? அந்த அம்மா வெகு கோபக்காரி.

**மெய்**: அம்மாவும் அப்படியா? தருமகர்த்தாதான் கொடியவர் என்றிருந்தேன். அவளும் அப்படியா?

**திரு**: ஏன் அப்படிச் சொல்லுகிறீர்?

**மெய்**: நான் இன்னமும் சிக்கிக்கொள்ளாமல் தப்பி வருகிறேனம்மா? ஐயர்களும் கணக்கனும் அவர் வலையில் சிக்கிக்கொண்டு திண்டாடுகிறார்கள்.

**திரு**: என்ன, அப்படிப்பட்ட காரியம் நடந்தது?

**மெய்**: அர்ச்சகரும் பரிசாரகனும் சேர்ந்து அம்மன் நகைகளைத் திருடிப் புதியநகை ஆக்கிக் கணக்கனுக்குக் கொடுத்தார்களாம். கணக்கன் புது நகையைத் தன் பெண்சாதிக்குப் போட்டானாம். அதைத் தருமகர்த்தா கண்டுபிடித்து விட்டாராம்.

**திரு**: கண்டு பிடிக்கும்படியாக அந்தக் காரியத்தை அத்தனை வெளிப்படையாகவா செய்தார்கள்?

**மெய்**: செய்தது என்னவோ, இரகசியந்தான், ஆனால் தருமகர்த்தா கண்டுபிடித்து விட்டார். அவர் கெட்டிக்காரர்.

**திரு**: எவ்வாறு கண்டுபிடித்தார்?

மெய்: ஒருநாள் கணக்கன் பெண்சாதி தருமகர்த்தா பெண்சாதியைப் பேட்டி காணச் சென்றாள். கையில் சில அதிரசம் வடைகளை எடுத்துச் சென்றாள். அவைகளைக் கொடுக்கும் போது கையிலணிந்த புதுமாதிரி வளையல்களைத் தருமகர்த்தா மனைவி பார்த்துவிட்டாள். 'இதென்ன வெகு அழகாக இருக்கிறதே' யார் செய்தது? அந்தத் தட்டானை அனுப்பு. என்று கேட்டாள். கணக்கனுக்கு சமாசாரம் தெரிவிக் கப்பட்டது. தட்டான் வந்துவிட்டான். தருமகர்த்தா தட்டானை உளவு விசாரித்தார். கணக்கனுக்கு இந்த விலை பொருந்திய நகை கொடுப்பதற்குப் பணம் ஏது என்ற சந்தேகம் தருமகர்த்தாவுக்கு ஏற்பட்டது. அதிலும் தன் மனைவிக்கு இவ்வித நகையைக் காட்டிவிட்டாளே என்ற கோபம் அதிகம். அவளோ பிடித்த பிடி விடமாட்டாள். தன் கைப்பணம் போகுமே என்ற ஏக்கம் ! ஆகவே நகையினுடைய மர்மம் விசாரித்தார். கணக்கனுக்கோ சம்பளம் 8 ரூபாய். நகையோ 200 ரூபாய் பெறும். எவ்விதம் அது வந்தது என விசாரித்தார். தட்டானுக்கு அதேமாதிரி வேலை கொடுப்பதாகவும் ஆசை காட்டினார். மேலும் கோயில் நகைகளைப் பழுதுபார்க்கும் வேலையும் கொடுப்பதாகச் சொன்னார். உடனே தட்டான் உண்லமையைக் கூறிவிட்டான். அர்ச்சகனும் பரிசாரகனும் வந்து அம்மன் நகைகளைக் கொடுத்து வளையல் செய்த செய்தியைக் கூறிவிட்டான். இதனை முழுதும் அறிந்து கொண்டார் தருமகர்த்தர்.

திரு: ஆமாம், நகைகளைக் கணக்கனுக்கு ஏன் கொடுக்க வேண்டும் என்று தருமகர்த்தா எண்ணவில்லையோ?

மெய்: எண்ணுமலா இருப்பார்? உடனே கணக்கனைப் பிடித்துவந்து போலீசுக்கு ஒப்புவிப்பதாகப் பயமுறுத்தினான். கணக்கன் ஒரு பெரும் பயங்காளி. தன் உயிர் தப்பினால் போதுமென்று இருப்பவன். தருமகர்த்தாமீது பொய்க் கணக்கு எழுதிச் சிக்க வைக்க வேண்டுமென்று சொல்லி 'நகை தந்தார்கள்' என்று உண்மையைச் சொல்லி விட்டான்.

திரு : பிறகு என்ன செய்தார்?

மெய்: நடந்த விஷயங்களை எழுதிக் கொடுக்கும்படி வற்புறுத்திக்

கணக்கனிடம் ஒரு யாதாஸ்து வாங்கி வைத்துக்கொண்டார்.

திரு: அவனை வேலையிலிருந்து நீக்கவில்லையா?

மெய்: ஏன் நீக்க வேண்டும்? யாதாஸ்து இருக்கும் வரையில் அவனிடம் சகல வேலைகளையும் வாங்கிக்கொள்ளலாம் அல்லவா? தருமகர்த்தா இவர்கள் எல்லாரையும் ஒருங்கே விழுங்கிவிட மாட்டாரோ?

திரு: ஐயர்களை விட்டுவிட்டாரா?

மெய்: விடுவாரா? உடனே ஐயர்களை இழுத்துவந்து அந்த யாதாஸ்தைக் காட்டித் தட்டானையும் சொல்லச் செய்து போலீசு - பயத்தைக் காட்ட அவர்களும் குற்றத்தை ஒப்புக் கொண்டார்கள். அவர்களிடமும் ஒரு யாதாஸ்து வாங்கிக்கொண்டு களவு போன நகைக்கு வேறு நகை செய்து கொடுக்கச் சொல்லிப் பண்டாரத்தில் வைத்துக் கொண்டார்.

திரு: அவர்களையும் நீக்கவில்லையா?

மெய்: ஏன் நீக்குவார்? அவர்கள் குடுமி கையில் இருக்கும்போது அவர்களால் ஆகக்கூடிய காரியம் பல செய்துகொள்ளலாம் அல்லவா?

திரு: ஐயர்களுக்குத் திருப்பி நகை செய்ய பணம் ஏது?

மெய்: இம்மாதிரி முந்தி எத்தனை தடவை சுவாமி நகைகளைத் திருடி வைத்திருந்தார்களோ! களவாடிய பணம் கையில் இல்லாமலா போகும்?

## களம் 4 இரண்டு குடியானவர்கள் - தஞ்சை நிலம்

முதல் குடி: கோயில் நிலமெல்லாம் குத்தகையாகி விட்டதாமே!

இரண்டாம் குடி: ஆமாம், அப்படித்தான் பேசுகிறார்கள். இராமசாமிப் பிள்ளைக்கு இப்போது இல்லையாம் தருமகர்த்தாவின் தம்பிக்கு ஆய்விட்டதாம்.

மு: அப்படியானால் வந்தது ஆபத்து. இராமசாமிப்பிள்ளை வெகு நல்லவர். குடியானவர்களிடம் வெகு நாணயமாக நடந்துகொள்வார் நெருக்கடி வந்தால் தவணையும் கொடுப்பார். புது ஆளை மிகவும் கொடியவர் என்கிறார்கள், வாஸ்தவமோ?

இ: ஆமாம், அப்படித்தான் கேள்வி. இதற்குள்ளேயே குடியானவர்களிடம் முன்பணம் கேட்கிறார். இல்லாவிட்டால் வேறு ஆளை வைத்து விடுவாராம்.

மு: ஆள் வருவானா? நாம் காலை ஒடித்துவிடமாட்டோமா? பிறந்தது முதல் இருந்த நிலத்தை விட்டு விடுவோமா?

இ: என்ன செய்ய முடியும் இப்போது? கிராக்கி அதிகம். போலீசு கீலீசு கூட்டிக்கொண்டு வந்தால் என்ன செய்கிறது? கச்சேரி ஏறக் காசு இருக்கிறதா?

மு: பார்ப்போம் ஒருகை. நிலத்தை விட்டுப் போக மாட்டேன் என்று பிடிவாதம் செய்தால் என்ன செய்வான்? வழிக்கு வருகிறான். அவன் விதை, குடியானவர்களுக்கு முன்பணம் முதலியவை கொடுப்பது போய், நாமா முன்பணம் கொடுப்பது? என்ன விபரீதம் முடியவே முடியாது!

இ: அது சரி; மற்றொன்று கேள்வி பட்டாயா? குத்தகை ஒப்பந்தம் திருட்டுத்தனமாக நடந்த தாமே?

மு: எனக்குத் தெரியாது. என்ன திருட்டுத்தனம்?

இ: சட்டப்படி ஏலம் விட வேண்டுமாம். கணக்குப் பிள்ளையைச் சரிப்படுத்திக் கொண்டு ஏலம் விட்டதாய்க் கணக்கு எழுதி இரகசியமாக ஈன விலைக்குக் குத்தகைக் கொடுக்கப்பட்டதாம்.

மு: அப்படியானால் அது செல்லுமோ? முந்திய குத்தகைக்காரன் சும்மா விடுவானோ?

இ: விடத்தான் மாட்டான். ஆனால் ஆள் - சகாயம் வேண்டுமே! புது ஆளுக்குத் தருமகர்த்தா, கமிட்டி மெம்பர் இவர்கள் பலம் உண்டு.

மு: ஆனால், அவர்கள் எல்லாரும் அண்ணன் தம்பிகளாமே! அப்படியானால் அது செல்லாதாம்.

இ: மேலும் மிகக் குறைந்த தொகைக்குக் கொடுக்கப்பட்டதாம். ஆகவே அது செல்லாதாம்.

மு: இந்தக் குறைகள் எல்லாம் இருக்கும்போது குத்தகை எப்படிச் செல்லும்? நாம் எல்லாரும் கூடி, இராமசாமிப்பிள்ளைக்கு உதவி செய்ய வேண்டும்; நன்றி மறக்கலாகாது.

இ: சரி, அப்படியே செய்வோம்.

**களம் 5** **சுப்பையரும் முத்தையரும்**

சு: நாகப்ப முதலியார் குத்தகைச் சீட்டைப் பற்றி விசாரணை நடந்ததாமே, தெரியுமா?

மு: தெரியும், அது இரத்து செய்யப்பட்டது. நாம் முன்னமே சில நாள்களுக்கு முன் பேசினோமே, அப்படியே ஆயிற்று.

சு: எப்படி ரத்து ஆயிற்று?

மு: இரு பக்கமும் பெரும் வக்கீல்களை வைத்துக்கொண்டு வாதாடினார்கள். பல ஆதாராங்களும் காண்பிக்கப்பட்டன. வாதங்களும் பலமாகப் பேசப்பட்டன. சட்டமும் எடுத்துக் காட்டப்பட்டது. முடிவில் குத்தகை ரத்து ஆயிற்று.

சு: ஒரு தடவை ஊர்ச்சிதமானது ரத்து ஆகுமா?

மு: மோசடி என்று ருசுவானால் ரத்து ஆகாதா?

சு: எப்படி மோசடி என்று சொல்ல முடியும்?

மு: கமிட்டி மெம்பர், தருமகர்த்தா, குத்தகைதாரர் கூட பிறந்தவர்கள்.

சு: ஆனால் என்ன?

மு: குத்தகை பகிரங்க ஏலத்தில் விட வேண்டும்.

சு: அப்படி ரிகார்டு இருந்ததாமே?

மு: ஆமாம்; ஆனால் ஊரில் எவருக்கும் தெரியாது. தமுக்குக் காரன் கையெழுத்து பொய்க் கையெழுத்து. அவன் தமுக்கு அடிக்கவில்லை என்று சாட்சி. கோயில் முதலிய இடங்களில் விளம்பரம் ஒட்டப்படவில்லை; ஒட்டினது என்பது பொய். கணக்குப்பிள்ளை செலவெழுதினது சுத்தப் பொய். முந்திய குத்தகைதாரனுக்கு அறிக்கையே இல்லை. ஏலம் ஊரில் யாருக்கும் தெரியாது. இவைகளெல்லாம் ருசுவாகிவிட்டது.

சு: இவை போதுமா? குத்தகைத் தொகை குறைவில்லையே!

மு: ஏன் குறைவில்லை? 1,500 ஏக்கர் நிலம் 5,000 ரூபாய்க்குப் போயிருக்கிறது! ஊரில் யாரும் ரூ.50 ஆயிரத்துக்கு எடுக்கக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

சு: இனி யென்ன?

மு: குடியானவர் கூடி ஒரே கூட்டமாக வந்து குத்தகையை ரத்து செய்ய வேண்டுமென்று கூக்குரல் இட்டார்களாம்.

சு: மேலும் என்ன?

மு: கணக்குப் பிள்ளையும், அர்ச்சகனும், பரிசாரகனும் தர்மகர்த்தாவுக்கு எழுதிக்கொடுத்த யாதாஸ்துகள் எப்படியோ விசாரணைக் காலத்தில் வெளிவந்தன. அவை வந்தவுடன் நீதிபதியின் மனசு மாறிவிட்டது. யாதாஸ்துகளில் கண்ட பயமுறுத்தலினால்தான் கணக்குப்பிள்ளை மோசடியாகக் குத்தகை விட்டான் என்று தெளிவாயிற்று. தருமகர்த்தா சொற்படி எல்லாம் இரகசியமாக நிறைவேறிற்று என்று தெரிந்தது. ஆகவே நீதிபதி குத்தகையை ரத்துச் செய்து மறு குத்தகை விட உத்தரவிட்டார்.

மு: இனி, குத்தகைதாரன் என்ன செய்வான்?

சு: செலவான பணம் தொலைந்தது. விசாரணைச் செலவும் கொடுக்க நேரிட்டது. முந்தித் தேர்தலில் நடந்த செலவும் தலைக்கு வந்துவிட்டது. இந்த மூன்று புள்ளிகளும் பாதாளத்துக்கு இறங்கிவிட்டார்கள். இனி இவர்களுக்கு யாரும் ஒரு தம்பிடியும் கொடுக்க மாட்டார்கள்.

மு: தன் வினை தன்னைச் சுடும் அல்லவா?

சு: கோயில்-பணம் களவாட எண்ணினார்கள். தாமே கெட்டார்கள். ''ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்'' என்பது ருசுவாயிற்று.

# 8

## "இதுவோ ஜிமிக்கி!"

கோவிந்தபட்டர் ஒரு பழைய பேர்வழி. சிறு குழந்தை முதல் பெருமாள் கைங்கரியம் ஒன்றைத் தவிர வேறொன்றும் அறியார். பிறந்ததுமுதல் 60-ஆண்டுவரையில் ஆலய வழிபாடு ஒன்றிலே ஈடுபட்டு அவ்வூர் எல்லையும் கடந்து செல்லாத விரதம் கொண்டவர். ''படிப்பு என்னத்திற்கு, அனுபவம் இருந்தால் போதாதா?'' என்பார். பெருமாள் கைங்கரியம், ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு உபசரணை, இவ்விரண்டிலேயே முழுக் கவனம் செலுத்தி ஆலயத்திலிருந்து கிடைக்கும் ததியாராதனம் முதலிய உபயங்களிலிருந்தே 60 ஆண்டுகளும் கழித்து விட்டார். தங்கள் அகத்தில் அடுப்பங்கரையே இல்லை என்றும், தம் அம்மங்காருக்காக ஒரு பரிசாரகனை நியமிக்க வேண்டிய தொல்லையே ஏற்பட்டதில்லை என்றும் பெருமையுடன் பேசிக்கொள்வார். தமது அத்தியந்த அன்பர்கள் வந்துவிட்டால், 'தொண்டர்களுக்குள் பெருமாள் அடக்கம், ஆகையால் தொண்டுபுரியுங் கைங்கரியங்களுக்குத் தனியான மடைப்பள்ளி வேண்டியதில்லை, பெருமாள் மடைப்பள்ளியே தொண்டர்களுடைய மடைப்பள்ளி. என்றும், 'ஆதியிலேயே பெருமாள் திருவுள்ளம் அதுவாகக் கொண்டிருக்கிறார்' என்றும் வெகு அமைதியாக உரைப்பார். அன்பர்கள் ஏதாவது வாசிக்கச் சொன்னால் கண் சாலேசரம் என்று சொல்லித் தப்பிவிடுவார். ஆனால் ஒரு பாசுரம் அவருக்கு நன்றாகத் தெரியும். கோயில் வழிபாட்டுக்கு வரும் பக்த சிரோமணிகளுக்குப் பிரசாதம், தீர்த்தம் திருத்துழாய் வழங்கும்போது, 'ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி' என்று உரக்கச் சொல்லி ஓங்கி ஒரு அடி அடிப்பார். கேட்பவர்கள், 'இவருக்கு அத்யாபகம் முழுதும் வரும்' என்றே எண்ணினால் தப்பு உண்டோ? 'ஆனால் அப்பாசுரம் ஒன்றைத் தவிர்த்து வேறு தெரியுமோ?' என்று ஒருவரும் கேட்கத் துணியார். அவருடைய தொனியை ஒரு முறை கேட்டவர்கள் அக்கேள்வி கேட்கவும் துணிவார்களோ? அவர் செய்யும் உபசாரம் ஒன்றே போதும்;

பட்டருக்கு மாதம்தோறும் பக்தர் செலுத்தும் காணிக்கைகள் வேண்டியமட்டும் கிடைத்தன. அம்மங்கார் மனம் கோணாமல் கொரநாட்டுச்சேலை, வைரநகை முதலியவைகளை வாங்கிச் சமாதானப்படுத்தி வைக்கும் கைங்கரியத்தில் மிகச் சிறப்புடன் விளங்குவார். அந்த வகையிலே 60 ஆண்டுகள் கழிந்தும், வீட்டில் பெரும் பொருளோ ஐவேஜியோ பூமி காணியோ இருக்கவில்லை. ஆனால் வெளி மனிதர்களுக்குப் பட்டர் மிகுந்த பணக்காரர் என்ற ஒரு பேர் இருந்தது. இந்த வகையில் பட்டர் விளங்கி வந்தார். 'உடையது விளம்பேல்' என்ற ஔவைப் பிராட்டியார் வாக்கை அனுபவத்தில் கடைப்பிடித்தவர் இந்தப் பட்டாசாரியார். அந்தரங்க நிலை மௌனம் சாதித்தவரையில் உலகில் சீருடனும் சிறப்புடனும் விளங்கி ஓங்கும் என்று நன்றாக அறிந்தவர்.

இந்தப் பாவனை ஒரே மகனின் திருமணத்திற்கு அனுகூலமாக நின்றது. வயது அதிகரித்த பிறகு ஒரு திருக்குமாரன் அவருக்குத் தோன்றினான். என்ன காரணமோ தெரியவில்லை. எட்டேகால் லட்சணங்களிலே கால் பங்கும் குறையாமல் எல்லாம் படைத்தவன். தகப்பனுக்கே படிப்பு வரவில்லை என்றால் மகனுக்குச் சொல்ல வேண்டுமா? பாடசாலைக்கு அனுப்பியதில், அங்கு உபாத்தியாயருக்கும் அவனுக்கும் நடந்த யுத்தத்தில் உபாத்தியாயர் தோற்றுப்போக, படிப்புப் போதும் என்று தகப்பனார் அவனைத் தம் தொழிலுக்கு வைத்துக் கொண்டார். ஆனால் தகப்பனுக்குத் தெரிந்த அந்த ஒரு பாசுரமும் பையன் வைகுந்தநாதன் திருவாயிலே நுழையவில்லை. வயது பன்னிரண்டு ஆகிவிட்டது. ஆனால் பையனோ தினந்தோறும் வெண்பொங்கல், அக்காரவடிசில், திருக்கண்ணமுது, திருவடை, தேன்குழல், காஞ்சி இட்டலி, இவைகளெல்லாம் நன்றாகச் சீரணப்படுத்தி வந்ததினால் பதினாறு வயதுள்ளவனைப்போல ஆனான். ஆகவே திருமணம் ஏற்படுத்தும் கைங்கரியத்தில் பட்டாச்சாரியார் இறங்கினார். பட்டுச்சேலை, வைரக்கம்மல் இவைகளுக்கு மயங்காத பேர்வழியும் உண்டோ? பல காதங்களுக்கப்பால் வேறொரு கோயிலில் இருந்த ஒரு பட்டாச்சாரியார் தம் அருமைத் திருமகளைக் கன்னிகாதானம் செய்து கொடுக்க முன் வந்தார். பெண்ணோ கிளிபோல் இருப்பாள். படிப்பும் சங்கீதமும் உண்டு. புருஷன் எப்படி இருந்தாலும் என்ன? கண்ணன் கறுப்பாக இல்லையா? கறுப்பு என்றா சொல்லுகிறோம்? நீலமேக சியாமளன் என்று பெருமையுடன் சொல்லுகிறோம். 'இக்காலத்தில் பொருள் இருந்தால் போதாதா?' என்று மாமியார் கூறிவிட்டார். திருமணம் நடந்தது. சீதனமும் வந்தது. சாந்தி முகூர்த்தமும் ஆயிற்று. நாட்டுப்பெண்ணும் வீடு வந்து சேர்ந்தாள். வைகுந்தன்

கமலவல்லியைக் கண்டதுமுதல் ஒரே மோகத்தில் ஆழ்ந்துவிட்டான். 'பில்வமங்களன் சிந்தாமணியிடம் வைத்திருந்த காதல் பெரிதோ? வைகுந்தன் கமலவல்லியிடம் வைத்த காதல் பெரிதோ?' என்று கேட்டுவிட்டால் விடை சொல்லத் திண்டாடவேண்டியது தான். பல வண்ணங்கள் அமைந்த வனமல்லிகை மீது ஒரு வண்டு மொய்க்கிற முறையில் வைகுந்தன் இல்லற வாழ்க்கையை நடத்தினான். வனமல்லிகையில் அமர்ந்த தேனுக்கு இத்தனை மதுரமும் வசீகரமும் எப்படி ஏற்பட்டது? வைகுந்தத்தில் அமர்ந்த நாதனுக்கே திருமகள்பால் ஒப்புயர்வில்லா அன்பு ஏற்படும்போது நமது வைகுந்தத்திற்குக் கமலவல்லியிடம் ஏன் ஏற்படாது? வைகுந்தநாதனுக்குக் கமலத்தின் மனம் கோனாதபடி நடந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம், அதிகம். அவளுக்கோ புருஷனுடைய உருவமும் கோலமும் 'காரும்' 'ஆலமும்' அடைமொழிகளாகக் கூடியிருந்தாலும் என்ன? தனக்கு உண்பன, உடுப்பன, பூண்பன, பூசுவன நன்றாக அமைந்தால் போதும் என்றிருப்பாள். 'திருமால் முன் தோன்ற எண்ணும் சூடிக்கொடுத்த பாவையும் அவ்வாறு அலங்கரித்துக்கொண்டாளோ?' என்பது சந்தேகந்தான். இவ்வாறு த்ம்பதிகள் இருவரும் இன்ப சாகரத்தில் மூழ்கி இருந்தார்கள்.

காக்கைக்குத் தன்குஞ்சு பொன்குஞ்சன்றோ? அம்மங்கார் தன் அருமைத் திருமகனுக்கு வேண்டியவை வேண்டியாங்கு தருவாள். நாட்டுப்பெண்ணுக்குப் புது நாகரிக நகை வேண்டுமானால் வைகுந்தன் தன் தாயாரைக் கேட்க வேண்டியதுதான். உடனே அம்மங்கார் பட்டாச்சாரியரின் செவியில் ஏற்றிவிடுவார். அவரோ எங்கேயோ சென்று சாம தான பேத தண்டங்களைப் பிரயோகித்து அன்று மாலைக்குள்ளாக வேண்டிய பொருள்களைச் சமர்ப்பித்து விடுவார். ஆகவே, கமலவல்லியின் நாட்டத்தைத் தன் அருகிலிருந்து விலகிச் செல்லமுடியாமல் பாதுகாத்து வந்தான் வைகுந்தன். இப்படியிருக்க ஒரு அதிசய சம்பவம் ஏற்பட்டது. கமலவல்லி சில தடவைகளில் மாறுதல் வேண்டி ஆலயம் செல்வதுண்டு. ஒரு திருவிழாக் காலத்தில் அவள் ஆலய தரிசனத்திற்குச் சென்றிருந்தாள். அங்கு வெளியூரிலிருந்து பல நாகரிகப் பெண்களும் வந்திருந்தார்கள். அவர்களில் சிலபேர் புதுமாதிரி லோலாக்குகளையும், சில மெல்லிய ஜிமிக்கிகளையும் காதில் அணிந்திருந்தார்கள். ஜிமிக்கிகளைக் கண்டவுடன் அவைகளின்பேரில் கமலவல்லியின் நாட்டம் பாவிற்று. அவள் திருமாளிகைக்குத் திரும்பியவுடன் வைகுந்தன் வெகு ஆர்வத்துடன் அவளை எதிர்கொள்ளப் போனான். அவளோ அவனை ஏறிட்டுப் பார்க்காமல் திரஸ்கரித்துச் சிடுமூஞ்சியுடன்

உதறிச் சென்றாள். வைகுந்தனுக்குத் துக்கம் பொறுக்க முடியவில்லை. தன் அருமை நாயகியை யார் கெடுத்து விட்டாரோ என்று நடுநடுங்கி விட்டான். ஆலயத்திற்குச் செல்வதோ அவனுக்குப் பிடிக்கவில்லை. எந்தத் துஷ்டையோ அந்த அருமைக் கண்மணியின் மனத்தைப் பேதித்திருக்க வேண்டும் என்று அவன் எண்ணினான். உடனே அவ்வூடலைத் தணிக்க வேண்டிப் பலவித ஆலோசனைகளைச் செய்தான். கடைசியாக மிக்க விலைக் கொடுத்துத்தான் வாங்கி வைத்திருந்த ஒரு அழகிய லோலாக்கை அவள் திருமுன் காட்டினான். அவளோ ஒரே கோபத்துடன் சீறி அதனைத் தன் திருக்கையால் வீசித் தள்ளினாள். லோலாக்கு பட்ட பாட்டைச் சொல்லவேண்டுமா? அறுந்து முறிந்து சிதறிப் பதறி வெகு தூரத்தில் நிலத்தில் அலங்கோலமாகக் கிடந்தது. தசரதனிடம் இரண்டு வரம் கேட்க எண்ணி நிலத்தில் அழுதுஉழுது மருண்டு புரண்ட கைகேசியின் ஆபரணங்களும் இந்த கீர்த்தி பெறவில்லை! ஏழை நெஞ்சு படைத்த வைகுந்தன் என்ன செய்தான்? கமலத்தின் திருமலரடி தொழுது கண்ணீர் விடவும் தயாராக இருந்தான். அவனுடைய பரிதாப நிலையைக் கண்டு சிறிது கருணைகூர்ந்து கமலம் ஒருவாறு சினம் ஆறினாள். “உலகத்தில் உள்ள ஏழைப்பெண்களும் ஜிமிக்கி அணிந்து திருவிழாவிற்கு வருகிறார்கள். நான் மட்டும் என்ன பாவம் செய்தேன்? எங்கப்பன் என்னை ஒரு அறிவாளிக்குக் கொடுத்திருந்தால் இந்த அவமானம் எனக்கு வருமா?” என்று புலம்பினாள். “கண்மணி! நீ எப்போது ஜிமிக்கியைக் கேட்டாய்? நான் இல்லை என்றேனா? ஒரு வினாடியில் கொண்டு வருகிறேன்” என்று சொல்லிப் புறப்பட்டான் வைகுந்தன்.

உடனே செய்தி அம்மங்கார் செவி சேர்ந்தது. மறுவிநாடி பட்டாசாரியார் சந்நிதியை விட்டு அவசர அவசரமாகத் திருமாளிகை சேரவேண்டி வந்தது. ‘பெருமாள் கைங்கரியம் பெரிதா, அம்மங்கார் கைங்கரியம் பெரிதா?’ என்ற கேள்வி இங்கே எழும்பக் காரணம் இல்லை. ஆராதனை நடுவிலே செய்தி வரவும் அங்கேயே நிறுத்தி விட்டு ஓடி வந்தார் பட்டர். திருவள்ளுவர் சொல்லுக்கு மீறாத வாசுகிதேவி, கிணற்றின் மத்தியில் குடம் இருக்கவும் அவ்விதமே விட்டுக் கணவனிடம் வரவில்லையா? அம்மங்கார் அழைக்கவும் ஐயங்கார் வரமாட்டாரா? ஆராதனை நின்று விட்டால் என்ன குறைவு? பட்டர் திருமாளிகை சேர்ந்ததும் ஜிமிக்கி ஜதைக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டது. பட்டரும் திடுக்கிட்டுப் போனார். “என்ன சங்கடம்? நேற்றுதானே பெட்டியிலிருந்த பண முழுதும் கொடுத்து லோலாக்கு வாங்கிக் கொடுத்தேன்! இன்று ஜிமிக்கிக்கு எங்கே

போவது? எந்தக் கொழுத்த பெத்தி செட்டி இத்தனை நேரமான பிறகு கிடைப்பான்?'' என்று ஆலோசித்தார். என்றாலும் தன் கவலையை வெளியில் காட்டாதபடி, மறைத்துக்கொண்டு புன்முறுவலுடன். உடனே கொண்டு வருகிறேன். என்று சொல்லிப் புறப்பட்டார். ஆலயம் சென்றார் பட்டாசாரியார். அன்றைய புறப்பாடு முடிந்து பெருமாள் ஆலயம் சென்று அமரும் சமயம். பெருமாள் பிராட்டியார் திருவாபரணங்களைக் கழற்றிக் கருவூலத்திற்குச் சென்று வைக்கும் சமயம் வந்தது. பட்டரிடமும் ஒரு கருவூலச் சாவி உண்டு. அவரும் அங்கே செல்ல வேண்டியதல்லவா? ஜிமிக்கி என்றாளே, ஜிமிக்கி அம்மன் ஆபரணங்களில் ஒன்றல்லவா? அதைத் தெரியாமல் எடுத்துக் கொண்டு தம் தேவியிடம் சேர்த்துவிடலாம். இதுதான் சரியான ஆலோசனை, 'கஷ்ட காலத்தில் புத்தி தானே தோன்றும். என்று சிலர் சொல்வதில்லையா? அதுபோலச் சமயத்தில் பட்டருக்கு இந்த ஆலோசனை தோன்றிற்று. ஆனால் ஒரு பெருந்தடை உண்டு. கருவூலச் சாவி ஆறுபேரிடம் இருக்கும். அவ் ஆறுபேரும் ஒருங்கே இருந்து கருவூலக் கதவைத் திறக்கவும் மூடவும் வேண்டும். அவ் ஆறுபேர்களிலே இராமானுஜ பட்டர் ஒரு பெரும் பேர்வழி. அவர் பெருமாளிடம் ஆழ்ந்த பக்தி உடையவர். நகைகளை வெகு கூர்மையுடன் பார்த்துத்தான் வெளியே எடுத்தும் உள்ளே வைத்தும் தம் பணியை ஆற்றுவார். அவருக்கோ கருடனைப் போலக் கூர்மையான கண் உண்டு. அவரைத் தப்புவித்து எவ்வாறு ஜிமிக்கிகளை எடுத்துச் செல்வது என்ற விசாரம் ஏற்பட்டது பட்டருக்கு, ஆகவே ஒரு பெருத்த ஆலோசனை செய்தார். முடிவாக அலங்கார மண்டபத்தில் வைத்துள்ள வர்ணப்பாவைப் பொம்மைகள் அணிந்திருக்கும் கிலிட்டு ஜிமிக்கிகளைப் பிடுங்கி நல்ல ஜிமிக்கிகளுக்காக மாறுபாடு செய்யலாம் என்று அந்த அனுபவசாலியான பட்டருக்குத் தோன்றிற்று. உடனே காரியத்தில் இறங்கினார். நல்ல வேளையாக அலங்கார மண்டபத்தில் யாரும் இருக்கவில்லை. பொம்மைகளின் ஜிமிக்கிகளை மெல்ல அறுத்து எடுத்துக் கொண்டார். தெற்கறைக்கு வந்தார். மற்ற ஐந்து பட்டர்களும் வந்தார்கள். நகைகளைக் கறுப்பு விரிப்பின் மீது வைத்தார்கள். இராமானுஜ பட்டர் அவைகளைச் சோதித்துச் சரியாக இருப்பதாய்ச் சொல்லிவிட்டார். கோவிந்த பட்டர் அவைகளை எண்ணுவதைப் போல் பாசாங்கு செய்தார். நல்ல வேளையாக விளக்கு அப்போது சிறிது மங்கிற்று. சமயம் பார்த்துப் போலி ஜிமிக்கிகளைப் பரப்பின்மீது வைத்துவிட்டு நல்ல ஜிமிக்கிகளை எடுத்துத் தம் மடியில் சொருகிக் கொண்டார். காரியம் வெற்றியாக முடிந்தது. மிகுந்த

மகிழ்ச்சியோடு வெளிவந்தார் பட்டர். திருமாளிகை சென்றதும் அம்மங்காரிடம் ஜிமிக்கிகளை முடித்த ஒரு முடிச்சைத் தந்தார்.

அம்மங்காரும் திருமகனாரிடம் சேர்ப்பித்தாள். வைகுந்தனுக்கோ அளவில்லாத கொண்டாட்டம். கமலவல்லியை அழியாத வலையில் பிடித்துவிட்டோம் என்று குதூகலத்துடன் வேகமாகச் சென்றான். சயனகிருகத்தில் கமலவல்லி கணவன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். காயோ, பழமோ? என்று விளித்தாள். 'வைகுந்தன் மனது வைத்தால் காயாகுமா? காயாகியதும் பழமாகி விடாதா?' என்று சொல்லி ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். இறுதியில் ஜிமிக்கிப் பொட்டணத்தை அவள் திருக்கையில் சமர்ப்பித்தான். உடனே மிகுந்த ஆர்வத்துடன் கமலம் அப்பொட்டணத்தை அவிழ்த்து நகைகளை நோக்கினாள். முகம் விகாரப் பட்டது. ''கர்நாடகப் பேர்வழிகள்! நாகரிகம் அறியாக் குருட்டு மனிதர்கள்! ஏன் இந்த ஜன்மம் எடுத்தீர்களோ? பெண்கள் அணியும் நகைகளையும் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையா நீங்கள் ? என்னை என்ன, பட்டிக் காட்டுப் பெண் என்றா நினைத்தீர்கள்?'' என்று கர்ஜித்து விட்டு ஜிமிக்கிகளைச் சுவரின்மீது எறிந்தாள். நாச்சியாரின் திருவாபரணத்திலிருந்து பல கெம்புகள் சிதறி விழுந்தன. என்ன பாவம்! நாச்சியாருக்கு உபயமாகத் தந்த பக்தர்களின் மனம் இதைக் கேட்டால் என்ன ஆகுமோ அறியோம்!

வைகுந்தனுக்கு இந்த விபரீதச் செய்கையின் பொருள் விளங்கவில்லை. தன் காதலியின் திருக்கரம் பிடித்துக் கெஞ்சினான். இறுதியில் சிறிது கோபம் தணிந்து அவனுக்கு உண்மை சொன்னாள். தற்கால ஜிமிக்கி மெல்லிய தாய்ச் சிறிதாக இருக்க வேண்டும். அது தங்கச் சங்கிலியில் பிணை பட்டிருக்க வேண்டும். அழகாகத் தொங்க வேண்டும். பழையகாலத்து நாயக்க மன்னரின் ஜிமிக்கி நாச்சியாருக்கு உதவுமே ஒழியத் தற்காலப் பெண்களுக்கு உதவாது என்று அவனுக்கு அறிவிக்கப்பட்டது. மிகுந்த வியாகுலத்துடன் வைகுந்தன் விழுந்து சிதறின ஜிமிக்கிகளை எடுத்துக் கொண்டு அம்மங்காரிடம் சமர்ப்பித்தான். பட்டரும் அறிந்தார். தற்கால நாகரிகம் அறியாத பட்டருக்கு இந்த விபரீதச் செயலின் பொருள் இன்னும் விளங்கவில்லை. நாச்சியாரின் திருவாபரணத்தைச் சிதைத்தினால் ஏற்படும் பாவம் நம் குடும்பத்தை நசுக்கிவிடுமே என்று நடுங்கத் தொடங்கினார்.

238860
MADURAI ... UNIVERSITY LIBRARY
MADURAI

# 9

# தபோவனத்து ஞானயோகம்

சுருப்பட்டியூர் ஒரு திவ்ய தேசம். மூலஸ்தானத்தில் பெருமாள் நின்ற கோலத்திலே காட்சி அருளுவார். விமானத்தில் முதல் தளத்தில் கிடந்த கோலத்திலும், இரண்டாம் தளத்தில் இருந்த கோலத்திலும் காட்சி அருளுகிறார். இம்மூன்று திவ்ய கோலங்களையும் கண்ணாரக் காணப் பரமபக்தர்கள் அனந்த கோடிகள் வருவதுண்டு. திருவிழாக் காலங்களிலோ வைகுந்தமே தோற்றுப்போய் நாணும்படியாகப் பரம பாகவதர்கள் நித்திய சூரிகளைப்போல திகழ்வார்கள். பாகவத கோஷ்டிகளுக்குத் திருவாராதனை செய்யும் கைங்கரிய புருஷர்கள் அபரிமிதமாக வருவார்கள். ததியாராதனை ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு என்றே தனித் திருமாளிகைகளில் ஏற்பட்டன. சென்னை நகர் வைசிய சிரோமணிகளின் 'சாரிடி' (Charity) களால் இந்தத் திவ்ய ஷேத்திரம் வெகுவாய், ஆதரிக்கப்பட்டது. ஆலயத்துப் பல பாகங்களும் புனருத்தாரணம் செய்யப்பட்டன. திருக்கோபுரம், திருவுண்ணுழிகை, விமானம், திருக்குளம், முதலியவை எல்லாம் புதுப்பிக்கப்பட்டன. புதிய கண்ணுடி அறை உலகத்திலே இல்லாத முறையில் அலங்கரிக்கப்பட்டது. புதுச்சேரிக் கண்ணுடிப் பங்களாவும் திருவரங்கம் கண்ணுடி மாளிகையும் இதற்குத் தோற்றுப்போகும். தனபாலுச் செட்டியார் திருவுள்ளம் வைத்தால் அதன் பெருமைக்கு அளவு உண்டோ? காசை நீர்போல எண்ணித் திருப்பணியில் கரைத்துவிட்டார். 'பரமபதத்திலிருந்தே இத் திவ்ய கோலம் வந்ததோ?' என்று எண்ணும்படி, ஆலயத் தோற்றத்தை மாற்றிவிட்டார். இத்திவ்ய திருப்பணிகளைச் செய்த செட்டியார் பட்சவாதத்தில் உளைத்து வைகுந்த யாத்தரை செய்த கதையும், அவர் திருக்குமாரன் மிரியாலு செட்டியார் இன்சால்வெண்ட் மனு தாக்கல் செய்த கதையும் இங்கு விவரிப்பது தகுதியல்ல.

இத்தனை சிறப்புற்ற திவ்ய தேசத்தின் பெருமை இப்போது ஆங்கில ஆளுகையில் ஏற்பட்டது என்றுதான் நினைக்கின்றீர்களோ? இல்லவே இல்லை. சோழ பாண்டிய கருநாடகத்தார் காலத்திலேயே

இதன் பெருமை மிகப் பிரக்யாதியடைந்திருக்கிறது. இந்த ஆலயத்து மதில்சுவர்களில் காணும் கல்வெட்டு எழுத்துக்களே இதற்குச் சான்றுகளாகும்.

சோழர்கள் திருப்பல்லாண்டு ஓதக் கொடுத்த மானியக் கிராமங்களுக்கும், பாண்டியர் திருக்கோபுரம் கட்டக் கொடுத்த கிராமங்களுக்கும், கருநாடக மன்னர் (விஜய நகரத்தார்) திருவிழா, தீபாராதனை இவைகளை அரசர்களின் திருநாள்களின்போது நிரந்தரமாகச் சந்திரசூரியர் இருக்கு மட்டும் நடத்தும்படி 'ஸ்ரீ வைணவ ரட்சையோடு எழுதி வைத்த மானிய பூமிகளுக்கும் அளவில்லை' ஆனால் அக்கிர்மாங்களின் பெயர்களை அக்கற்களில் காண்கிறோமே ஒழிய, தற்காலச் சொத்து அட்டவணையில் காண்கிறோம் இல்லை. ஒரு தடவை ஒரு எழுத்துப் பரிசோதகர் எடுத்துக் காட்டியதின்பேரில் ஒரு வீர வைஷ்ணவத் தருமகர்த்தர் அவைகளைப்பற்றி விசாரிக்கத் தொடங்கினார். ஒன்றிரண்டு குறிப்புகள் கிடைத்தன. ஒரு நிலம் அவ்வூர்ப் பெரிய தாசியின்பேராலும், மற்றொன்று அவ்வூர்ப் பிரபல வழக்கறிஞர் பேராலும், மற்றொன்று ஒரு ஜமீன்தார் பேராலும் இருக்கக் கண்டு, அம் முயற்சியைக் கைவிட்டார். இப்பழங்கதை நமக்கு என்னத்திற்கு? தற்காலச் சொத்து விவரத்தைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். ஆலயத்திற்குச் சேர்ந்த பல சொத்துக்களிலும் குடிவாரம் கைவிட்டு விலகி விட்டது. தலைமுறை தலைமுறையாகப் பலர் அதனை விற்றும் ஒற்றி வைத்தும் அனுபவித்து வருகிறார்கள். என்ன முயன்றாலும் தற்காலச் சட்டப்படி அவைகளை மீட்டவே முடியாது. மேல்வாரத்தின் வருமானத்தைக் கவனித்தால் 100-க்குப் பத்துத்தான் பெருமாளுக்குக் கிடைக்கும். ஆகவே பெருமாளிடம் பங்குபோடும் பேர்வழிகள் அதிகமாகிவிட்டனர். 'சிவன் கோயில் சொத்துத்தான் தூசியும் தொடக்கூடாது. பெருமாள் கோயில் சொத்து பரமபக்தர்களுடையது தானே!' என்று சமாதானம் சொல்லிச் சாப்பிடுகிற பக்தர்கள் ஆரயிரம்போர் உண்டு. முதல் தீர்த்தம், சடாரி இவைகளுக்காகச் சண்டையிட்டுப் பெருமாள் பணத்தைச் செலவிடும் பேர்கள் இத்தனை பக்தர்கள் அல்ல, பெருமாளுடைய நிலங்களையே் கபளீகரம் செய்யும் பரம வைஷ்ணவர்களே பரமபக்தர்கள் எனல் வேண்டும். இவ்விதமாகப் பெருமாள் தம் பரமானந்த சிஷ்யர்களைச் சிஷ்ட பரிபாலனம் செய்து கொண்டு நின்றும் கிடந்தும் கருணை புரிந்து வருகிறார்.

திவ்வியத் திருப்பட்டியூரில், வருடந்தோறும் ஒரே விதமான திருவிழாக்கள் முதலியவை நடைபெற்றாலும், அங்கே குடியிருக்கும்

நித்திய சூரிகளுக்கு வாழ்க்கையில் சலிப்பு ஏற்படுவதில்லை. ததியோதனம், புளியோதனம், அக்காரவடிசில், திருக்கண்ணமுது செவ்வையாகப் பெருமாள் அருள் கூர்ந்தளிக்கும்போது, வேறுவித மாறுதலுக்கும் புரட்சிக்கும் அவ்வூரில் ஆஸ்பதமே இல்லை. மக்கள் பரமதிருப்தியும் சந்துஷ்டியும் அடைந்து தத்துவ ஞானிகளாக விளங்கினார்கள். அமைதியான தடாகத்தில் ஒருகல் விழுந்ததுபோல் இச் சாதுவான ஊரில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. வட நாட்டிலே அயரத நிலையத்தில் திருத்தொண்டு புரிந்து கொண்டிருந்த ஒரு பரமவைணவர் தம் வேலையைத் திருப்திகரமாக நிறைவேற்றி விட்டு ஓய்வு பெற்றார். நிலையத்தார் தமக்குச் செய்தத் திருத்தொண்டிற்கு நன்றி பாராட்டு தற்காக இலவசச் சுற்றுப் பிராயணச் சீட்டு அளிப்பதுண்டு. அவ்விதச் சீட்டு ஒன்றைப் பெற்றுக் கொண்டு நமது வைணவ சிகாமணி வடநாட்டுத் திவ்ய தேசயாத்திரை புரியலானார். நைமிசாரணியம், அயோத்தி, திருப்பிரிதி, பதரிகாச்ரமம், சாளக்கிராமம், கண்டம் எனும் கடிநகர். இவைகளை எல்லாம் தரிசித்துவிட்டு உத்தர மதுரையின் பாங்கர் பிருந்தாவனத்தை அடைந்து கண்ணனுடைய 'லீலைகளைக் கண்டு மகிழ்ந்தார்' அங்கு இக்காலத்திலும் கண்ணன் ஆடுவதைப் போல யாதவர்கள் நடித்துக் காட்டி வருவதைக் கண்டு ஆனந்த பரவச மடைந்தார். 'தென்னாட்டில் இவ்வித 'லீலைகளை மக்கள் செய்வதில்லையே' தம் பிறவியை வீணுக்குகிறார்களே !' என்ற கருணை இவர் நெஞ்சில் புகுந்தது. உடனே தென்னாட்டிற்குச் சென்று ஒரு தகுந்த திவ்யதேசத்தில் எழுந்தருளி, ஒரு அழகிய தபோவனம் ஏற்படுத்தி அங்கு மக்களை ஈடேற்றச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தார். பிராயணச் சீட்டில் மூன்றுமாத கால அளவையும் நெருங்கிற்று. தென்னாடு புகுந்தார். தம் பிறந்தகத்திற்கு அருகிலிருக்கும் திருப்பட்டியூர் சேர்ந்தார். தபோவனத்திற்கு அனுகூலமான இடத்தைத் தேடினார். தென்னை பலா, பனை, மா முதலிய தருக்கள் அடங்கிய ஒரு பொழிலைக் கண்டுபிடித்தார். அது 25 காணி நிலம் வாய்ந்தது. அது பெருமாளுக்குச் சேர்ந்தது என அறிந்தார். உடனே ஆலய தர்மகர்த்தர்களை அனுசரித்து அவர்களுக்குப் பல தத்துவ போதனை செய்து அதன் குடிவாரத்தை இலவசத்தில் பெற்றுக்கொண்டார். இச் செய்தி பொதுமக்களுக்கு எப்படித் தெரியும்? தெரிந்தாலும் என்ன? ஒரு பரமவைணவர் ஒரு தபோவனத்தை ஆரம்பித்தார் என்றால், பட்டியூருக்கு அதைவிட மேன்மை என்ன உண்டு.

உடனே தபோவனத்தை ஆசிரயிக்கப் பல தனவந்தர்கள் வந்தார்கள். சோலையின் நடுவில் அழகான ஆசிரமம் எழும்பிற்று. தபோவனத்திற்கு ஸம்புரோட்சணமும் நடந்தது. அத்தபோவனத்திற்கு

'ஞானயோக தபோவனம்' எனத் திருநாமம் சாத்தப்பட்டது. ஆசாரியார் வானப்பிரஸ்தாசிரமத்தில் அமர்ந்தனர். ஞானயோகம் பெற பால சீடர்கள் சேர்ந்தார்கள். அவர்களில் மங்கையர் பலர் என்றால் வியப்பு வேண்டாம். திருப்பட்டியூர்ச் சாது ஜனங்கள் இதுவரை அறியாத ஆனந்தத்தில் அமர்ந்தார்கள். புது முறை ஒன்று புகுந்துவந்த போதிலும் தனவந்தர்களின் மங்கையரின் ஒத்துழைப்பைக் கண்ட சாதுக்கள் என்ன செய்ய முடியும்? தம்மை அறியாமலே தாமும் அதில் கலந்து கொண்டனர். சில மாதங்கள் இவ்விதம் சென்றன. தித்திப்பை எப்போதும் உண்டு கொண்டு வந்தால் அது தெவிட்டாதோ? சில மக்கள் ஒருவித அருவருப்பும் கொள்ளத் தொடங்கினர். ஆனால் தபோவனத்து ஆசிரியருக்குப் பலவிதங்களிலும் ஆதரவு வந்தது. மண், பெண், பொன் ஆகிய மூவகையிலும் பெருக்கெடுத்தது. அபிநவ பிருந்தாவனம் தென்னாட்டில் முளைத்துத் திகழ்ந்தது. ஒருநாள் அவ்வழகிய நீர்க்குமிழி வெடித்தது. அதைச் சிறிது விவரிப்போம்.

நீதிபதி திருவரங்காச்சாரியாருடைய திருக்குமாரத்தி இத்தபோவனத்தில் ஒரு தபசியாக அமர்ந்தாள். அந்த நங்கை ஆங்கிலமும் தமிழும் நன்றாகக் கற்றவள். வைணவ சமயத்தில் ஈடுபட்டவள். ஆழ்வார்களுடைய பக்தியில் பரவசப்பட்டவள். 'இரண்டாவது ஆண்டாள்' என்றே சொல்ல வேண்டும். தபோவனத்தில் சிஷ்யையாகி அங்கே போய்க்கொண்டிருந்தவள். நாளாவட்டத்தில் அங்கேயே நிரந்தரவாசியாகி விட்டாள். ஆசாரியரிடம் பரமானந்த சிஷ்யை ஆகி என்றும் பிரியாத நிலையினள் ஆனாள்.

ஒருநாள் அம்மங்கை தன் தாயாரிடம் வந்தாள். தாய்க்கு உண்மை தெரிந்தது. திருமணம் ஆகாததற்கு முந்தியே திருவயிறு வாய்த்து விட்டாள். என்ன செய்வது? இரகசியமாக நீதிபதியிடம் சொல்லி அன்றே அம்மங்கை சென்னைக்கு அனுப்பப்பட்டாள். இரகசியம் வெளிவராதபடி பலவித உபாயங்களும் தேடப்பட்டன. இருந்தாலும் உலை வாயை மூடினாலும் ஊர் வாயை மூடமுடியுமா? 'மங்கை ஏன் தபோவனத்திற்கு வருவதில்லை?' என்ற கேள்வி புறப்பட்டு அதற்குப் பலவிதமான விடைகளும் தோன்றி நாடு முழுவதும் பறந்தன. ஒன்றுக்குப் பத்தாக செய்திகள் பறக்கவே நீதிபதியின் மானம் போகத் தொடங்கியது. நீதிபதி வெகு கெட்டிக்காரர். உடனே போலீசு அதிகாரிக்குத் தெரியப்படுத்தித் தபோவனத்து ஆசாரியாரை இரகசியமாக நாடு கடத்திவிட்டார். ஆசாரியார் மறையவே சீடர்களும் சிஷ்யைகளும் அகன்றனர். தபோவனம் வெறும்

தோப்பாகி விட்டது. சில நாட்களில் அவ்வனத்தின் பழைய நாடகத்தைப் பற்றிக் கூறும்போது ஞானயோக தபோவனம் என்பதற்கு மாறாக 'கானபோக தமோ மடம்' எனச் சொல்லவும் தொடங்கினர். பூனை இல்லாத போது எலிகள் கொண்டாட்டத்திற்கு அளவு என்ன?

தபோவனத்து ஆசாரியார் விலகி ஓடிவிடவே, தபோவனம் கிளி பறந்துவிட்ட கூண்டு போல் ஆயிற்று. பாதுகாப்பார் இன்றி அலங்கோலம் அடைந்தது. ஆசாரியார் இருந்த வரைக்கும் ஆலயத்திற்கு மேல்வாரம் கட்டி வந்தார். அவர் போனபிறகு மேல்வாரம் பாக்கி நின்றது. அதனைக் கொடுப்பார் இன்றி ஆலயக் கணக்கில் பாக்கி இருந்த செய்தி தருமகர்த்தருக்குத் தெரிந்தது. தபோவனத்திலோ ஆசாரியர் விலை பொருந்திய கட்டடங்களைக் கட்டி வைத்திருந்தார். குடி வாரத்தின் மதிப்போ மிக அதிகமாக இருந்தது. ஆகவே இரகசியமாகச் சொத்தை ஏலத்தில் விட்டு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தருமகர்த்தர் எண்ணினார். மேல்வாரப் பாக்கிக்காக ஏல நடவடிக்கை நடத்தத் தொடங்கினார். ஒருவருக்கும் தெரியாமல் இரகசியமாக இஸ்தியாரை ஒட்டி ஏலத்திற்கு நாள் குறிப்பிட்டார். ஏலத் தேதியன்று 5 ரூபாய் அதிகக் கேள்வி கேட்டுத் தம் தம்பி மகன் பேருக்கு ஏலம் எடுத்துப் பத்திரம் எழுதி வைத்துக் கொண்டார். பிறகு ஆலயத் தருமகர்த்தர் சொத்தைத் தம் கை வசப்படுத்திக்கொண்டு, அதன் பலனை அனுபவித்து வந்தார். பொது மக்களுக்கு இதன் இரகசியம் தெரியாது. மேல் அதிகாரிகளுக்கும் தெரியாது. எல்லோரும் தருமகர்த்தர் ஆலயத்தின் பொருட்டுத்தான் சொத்தை ஆட்சி செய்து வருகிறார் என்று எண்ணினார்கள். ஆனால் உண்மையில் தருமகர்த்தர் தம் சொந்த அனுபவத்தில் சொத்தை வைத்திருந்தார்.

பெருமாள் இதைக் கவனிக்கிறாரா? திருப்பாற்கடலிலேயே அறிதுயில் கொண்ட திருமாலுக்கு உலகச் சொத்துக்களில் என்ன அக்கரை? அவரது சொத்துக்கள் ஆற்று நீராய் ஓடிவிடுகின்றன. வருகிறவர்கள் போகிறவர்கள் 'அப்பா குடி' 'அம்மா குடி' என்று வயிறாரப் பருகவேண்டியது தான் உலக இயற்கையாம். நமது தருமகர்த்தரும் தம் கடமையைத் திரணமாக எண்ணித் தபோவனத்தைக் கைப்பற்றிப் பல ஆண்டுகள் அனுபவித்தார்.

அவர் பரிபாலன காலம் முடிந்து வேறு தருமகர்த்தர் ஆட்சிக்கு வந்தார். சொத்துக்களின் அட்டவணையைப் பரிசோதித்ததில், தபோவனம் இருக்கவில்லை, இதை ஆராய்ச்சி செய்யவே புதுத் தருமகர்த்தருக்கு உண்மை தெரிந்தது. ஒரு சிறிது கடமை செலுத்தும்

கொள்கை கொண்டவர். ஆனதினால் புதுத் தருமகர்த்தர் பழைய தருமகர்த்தர் மீது வழக்குத் தொடங்கினார். 'ஏல நடவடிக்கைகள் சரியாக இருந்தன; ஆகவே வழக்குச் செல்லாது' என்று நீதிமன்றத்தில் தள்ளிவிட்டனர்.

புதுத் தருமகர்த்தர் இத்தோல்விக்குப் பயந்தவர் அல்லர். உடனே தபோவனத்து ஆசிரியர் மூலம் வழக்குத் தொடர முயன்றார். ஆனால் அவ்வாசிரியர் அதற்குள் மேல்நாட்டிற்குப் பயணமாகியிருந்தார். ஆகவே அவருடைய சீடர்களைப் பிடித்து வழக்குத் தொடர்ந்தனர். சீடர்களைப் பிடிப்பதே சிரமமாகிவிட்டது. ஒருவர் கிடைத்தார். அவரும் வெகு கிராக்கியுடன் பெயர் தந்தார். ஆனால் சீடர் சபை அரசியலாரால் பதிவு செய்யப்படாத முறையில் ஒருவித பாத்தியமும் உரிமையும் பெறாது என்ற காரணத்தினால் வழக்கு மறுபடியும் தள்ளுபடியாயிற்று. புதுத் தருமகர்த்தர் தம் சொந்தப் பொறுப்பில் எத்தனை தூரம்தான் வழக்காட முடியும்? தாம் தருமகர்த்தராக இருந்த காலம் முழுவதும் வழக்காடிச் சலித்துவிட்டார். வேறு ஒருவர் தருமகர்த்தர் ஆனார். அவருக்கு இம்முயற்சியில் சிரத்தை இருக்கவில்லை. ஆறின கஞ்சி பழங் கஞ்சியாகி விட்டது. பெருமாளுக்குச் சொத்தோ போய்விட்டது. ஆனால் யாருக்கு விசாரம்? பெருமாளுக்கு இல்லை! மக்களிலும் அதைப்பற்றிச் சிந்திப்பார் இல்லை. நன்றாய்ச் சாப்பிட்ட தருமகர்த்தரும் சுகமாகத்தான் இருக்கிறாராம்.

''தெய்வமில்லை என்பார்க்குத் தெய்வமேயில்லை'' என்பது உண்மையாகி விட்டதல்லவா?

# 10

## திருநீற்றிலும் முயற்சி

சுப்பராயக் குருக்கள் பொதுவாக நல்லவர்தான். எப்பேர்ப்பட்டவர் மீதும் ஒருவித அழுக்காறும் கொண்டவர் அல்லர். ஆனால், தாமும் தம் குடும்பமும் நன்றாக வாழ வேண்டுமென்பது இவர் இச்சை. இதனால் ஏனையோர் வாழக் கூடாது என்ற எண்ணம் இவருக்கு இருக்குமோ என்றால் இல்லவே இல்லை. ''ஒவ்வொருவரும் உலகத்தில் சுகமாக இருக்க வேண்டும் என்று தினந்தோறும் கடவுள் முன்பாகச் சொல்லுகிறோம். ஆகவே அவர்கள் சுகமாக இருக்கவே உரிமை கொண்டுள்ளார்கள். அப்படியிருக்க ஒருவர் சுகமாயிருக்கக் கூடாது என்று நாம் சொல்ல முடியுமா? அது மிகத்தப்பு'' என்று தம் கொள்கையை வந்தவர்களுக் கெல்லாம் எடுத்துச் சொல்லுவார்.

சுகமாக வாழ்வதென்றால் ஒரு குடும்பத்திற்கு வேண்டிய மட்டும் பொருள் இருக்க வேண்டும் என்பது இவர் கருத்து. தமக்கு அப்படிப்பட்ட நிலைமை வரவில்லையே என்ற விசாரம் இவர் நெஞ்சில் குடிகொண்டிருந்தது. தம் மனைவியும் மக்களும் நன்றாக உண்பன, உடுப்பன, பூண்பன, பூசுவன கொண்டிருக்க வேண்டும். தமக்கு யாதொரு வகையிலும் குறைவில்லாதிருக்க வேண்டும், 'ஸர்வே ஜநா ஸுகிநோ பவந்து' என்று தினந்தோறும் மற்றவர்களுக்கு இதத்தைத் தேடப் பிரார்த்தனை செய்த நமக்கேன் அது இருக்கப்படாது?'' என்று தான் எண்ணுவார். ஊரார், பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும். என்று யாராவது எடுத்துக் காட்டினால், ''ஊரார் பிள்ளையை எடுத்து வளர்த்து வரும் பணக்காரத் தத்துப் பிதாக்களின் திண்டாட்டம் உமக்கென்ன தெரியும்?'' என்று திருஷ்டாந்தத்தினால் ஒரு போடு போடுவார்.

குருக்களுக்குத் தங்கள் ஊர்க் கோயிலிலேயே அர்ச்சகத் தொழிலில் பரம்பரைப் பாத்தியம் உண்டு. அதிலும் ஒன்பதில் ஒருபங்கு முறைப் பாத்தியம் தான் உண்டு. இம்முறைக்காக வேறு

எங்கும் செல்லாமல் வருடம் முழுவதும் காத்துக்கொண்டேயிருக்க வேண்டும். முறை வரும் சமயத்தில் இல்லாவிட்டால் எங்கே பாத்தியம் போய்விடுகிறதோ என்று பயந்து வீட்டை விட்டு அகலமாட்டார். தம் முறையில் பிரமோத்ஸவம் வந்துவிட்டால் ஒரே கொள்ளை தான் என்று அதனையே எதிர்பார்த்துக் கொண்டேயிருப்பார். அது வரப் பல வருடங்கள் செல்லும். ஒருதடவை அம்முறை வந்தது. ஆனால் அந்த ஆண்டில் சுற்றுப் பக்கங்களில் தொத்து வியாதி கண்டது, சர்க்கார் திருவிழாவிற்குத் தடை உத்தரவு போட்டு விட்டார்கள். உத்ஸவத்திற்குக் கூட்டம் இல்லை. குருக்களுக்கு வரும்படியுமில்லை. தலைவிதி என்று நொந்துக்கொண்டார். எல்லாம் இலவு காத்த கிளிபோல் ஆயிற்று. பாவம்! குருக்கள் என்ன செய்வார்? தம் கொள்கையைக் கைப்பிடித்துக்கொள்ள வேறு முயற்சிகளில் புக எண்ணினார்.

இவருக்குத் தாம் வாழும் ஒரு புராதன ஓட்டு வீடு உண்டு. அதனை எந்த நூற்றாண்டில் எந்த மகான் கட்டித் தந்தாரோ, தெரியவில்லை . மூங்கில்கள் இற்றுப்போய் அடிக்கடி 'மகரந்தப் பொடி'களைச் சிந்திக் கொண்டிருக்கும். வண்டுகள் ரீங்காரம் செய்து கொண்டு அம்மூங்கில் துவாரங்களில் பரம்பரையாக வாழ்ந்து வரும். அப்பரம்பரை நமது குருக்களின் பரம்பரைக்குச் சிறிதும் கால அளவையில் குறையாது. ஓடுகளைச் செய்த குயவன் பரம்பரையும் இன்னமும் அவ்வூரில் இருக்கிறதென்று பெருமையுடன் பேசுவார். அதனை ஆமோதித்து அவ்வூர்ப் பெரிய குயவன், 95 வயது முதிர்ந்த சுப்ப வேளான், தன் பாட்டனுடைய பாட்டன்தான் அவ்வோடுகளை வனைந்தவன் என்று சொல்லி ஆண்டுக்கு ஒருமுறை தேங்காய், பழம், பூமாலை முதலிய வரிசை மரியாதைகளைக் குருக்களிடம் வாங்கிச் செல்வான். ஆனால் ஒரு பழைய ஓடு உடைந்து போனால் ஒரு புது ஓடு வெறுமனே தரவே மாட்டான்.

வீட்டிலே குருக்களுடன் போட்டிபோட மற்றத் தேவதைகள் உடன் வருவார்கள் என்றால் அதன் மகி[illegible] என்ன என்று சொல்ல வேண்டும்? பகல் வேளையில் கதிரவனும், இரவில் சில நாள்களில் திங்களும், மழைக்காலத்தில் வருண பகவானும் அதிதிகளாக வந்து சில தடவைகளில் நிரந்தரமாக இருக்கவும் முயலுவார்கள். ஓடுகளில் காணும் ஜன்னல்களின் வழியாக இருபத்தேழு நட்சத்திரங்களும் சிலதடவை கிரகங்களும் எட்டிப் பார்க்கும் என்றால், ''சின்னச் சின்ன தாரகையாய்!'' என்ற மின்னும் தாரகைப் பாடலை ஆங்கிலத்தில் இயற்றிய கவிஞரும் ''என் திரைக்குள் நுழைந்திடுவாய். என்று சொன்னபோது இந்த வீட்டினுடைய பிரபாவத்தைக் கண்டு தான்

பாடினாரோ என்று ஐயங்கொள்ள வேண்டி வரும் எனலாமோ? இனிமேல் அடுப்பு, அடுக்களை, புறக்கடை, கிணறு, தாழ்வாரம், முற்றம் இவைகளை வருணிக்க வேண்டிய தில்லை எனலாம். அவைகளும் இத்தன்மைக்கு குறைந்த மகிமை கொண்டவை யல்ல என்று மாத்திரம் சொல்லி, சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல், விரித்தால் பெருகும்; முதலிய அழகுகள் உத்திகள் ஆகிய கோட்பாடுகளுடன் இதனை நிறுத்திக் கொள்வோம்.

சுப்பராயக் குருக்கள் தம் கைக்கு வரும் துட்டுகளுக்கு ஏற்றபடி மந்திரம் சொல்லுவார். ஒரு பணக்காரக் காரைக்குடிச் செட்டியார் வந்தபோது இவர் சொன்ன அர்ச்சனை எப்போது முடியுமோ என்று தீபாராதனை மட்டும் செய்யவந்த பேர்கள் ஏங்கிக்கொண்டி ருந்தார்கள். ஆனால், ஒரு நாள் ஒரு ஏழை லெளகீகப் பிராமணர் வந்தார். அவருக்காகச் செய்த அஷ்டோத்தர சத அர்ச்சனையில் 28 பெயர்களில் அர்ச்சனையைப் பூர்த்திசெய்து கற்பூரம் பற்ற வைக்கத் தொடங்கினார். ஏழைப் பிராமணர் ''சுவாமின்னு! எத்தனை நாமங்களை உச்சரித்தீர்கள்? 108 -ம் இவ்வளவில் சொல்லி விட்டீர்களா? என்று பரிதாபமாய்க் கேட்டார். ''ஏங்காணும், நீர் அஷ்டோத்தரம் என்றால் அர்த்தம் தெரியுமா?'' என்று உரக்கக் கூவினார். ''என்ன சுவாமி, உங்கள் தாற்பரியம் என்ன?'' என்று மெதுவாய்க் கேட்டார் அவர். ''அஷ்டம் என்றால் எட்டு ; உத்தரம் என்றால் பின்னால், ஆகவே அஷ்டோத்தரம் என்ற பதங் களுக்கு, பின்னால் எட்டுக் கொண்டது என்பது அர்த்தம். ஆகவே அது 18, 28, 38 என்ற எதுவும் இருக்கலாம் அல்லவா? நீர் தருகிற இரண்டணுத் துட்டுக்கு 28 போதாதா? நான்கு பெயர்களை அதிகமாகவே உச்சரித்துவிட்டேன்!'' என்று விடையளித்தார். லெளகீகப் பிராமணர் மறுமொழி கூறாமல் விபூதி பெற்றுக் கொண்டு போனார். இவ்விதம் சமயத்துக்கு ஏற்றபடி, சாதுரியமாகவும் பேசவல்லவர் நமது குருக்கள். ஆனால் இந்தத் திருட்டுத்தனம் எத்தனை நாட்களுக்குச் செல்லும்? ஆலய கைங்கரியத்திலிருந்து வரக்கூடிய வரும்படி நாளுக்கு நாள் குறைந்தது. குடும்பமோ பெருகிற்று. 'ஆனமுதலில் அதிகம்செல' வானால் 'மானம் அழியும்' தருணம் சமீபித்தது.

''சென்னிமலை முத்துச்சுவாமிக் குருக்கள் வெகு நிம்மதியாக வாழ்கின்றார் என்று சொல்லுகிறார்களே. அவர் தான் எவ்விதம் வாழ முடியும்? அதனை அறியவேண்டும்'' என்று வெகு ஆவல் கொண்டார் நமது குருக்கள். இவர் ஒரு நாள் சென்னிமலைக்குச் சென்று அவருடைய ஜீவன உபாயத்தை அறிய வேண்டும் என்று

முடிவு செய்து கொண்டார். தம் மனைவியிடம் கட்டுச்சாதம் கட்டச்சொல்லி அதனை எடுத்துக் கொண்டு சென்னிமலைக்குப் புறப்பட்டார். பல் நாட்கள் நடந்து சென்னிமலைக்குச் சென்று முத்து சுவாமிக் குருக்களைக் கண்டார். அக்குருக்களோ தம் இனத்தைக் கண்டு வெகு ஆவலுடன் வரவேற்று, ''சுவாமி! வெகுதூரம் புறப்பட்டு வந்திருக்கிறீர்கள். அங்கே காலட்சேபம் சரியாக நடக்கிறதா?'' என்று கேட்டார்.

''அதைப்பற்றிச் சொல்வானேன்? சிறிய கோயில், யாத்திரிகர்கள் மிகக்குறைவு, குடும்பங்கள் குசேல வம்சத்தினர். திருவிழாவிற்கே ஆஸ்பதம் ஏற்படுவதில்லை. போதாக்குறைக்கு அடியேன் முறையில் அதிகாரிகள் 144 போட்டு வயிற்றில் அடித்து விட்டார்கள். உஞ்ச விருத்தி எங்கள் குடும்பத்தில் கிடையாது. மானம் இருக்கிறதல்லவா? ஈசுவரன் கருணை இந்த நிலையில் இருக்கிறது!'' என்றார் இவர்.

''தங்கள் கோயில் ஒரு நல்ல இடம் என்று கேள்விப்பட்டேன்!''

''அது முன்காலத்தில் குடியானவர்கள் நன்றாய் இருந்தார்கள். பம்பல் காலத்தில் ஏராளமான தானியம் கிடைக்கும். ஒரு வருஷத்திற்கு அதுவே போதும். ஆனால் இப்போதோ மழைமாரி சரியாகப் பெய்வதே இல்லை. அவர்கள்தான் என்ன செய்வார்கள்? குடிகள் ஷேமம் இல்லையெனில் குருக்களுக்கு எங்கே? காலம் கெட்டுப்போச்சு!''

''சுவாமி! எங்குமே அப்படித்தான் சென்னிமலை தான் எப்படி என்கிறீர்கள்? அருச்சனைக் காசே இல்லை. உண்டியல் நிரம்புவதே கிடையாது. போதாக்குறைக்கு 25 பங்கு. ஆகவே எங்கள் பங்குக்கு என்ன வரும்?''

''என்ன இப்படிச் சொல்லுகிறீர்கள்? தங்கள் பெயர் நாடு முழுவதும் அடிபடுகிறதே, எத்தனை பேருக்கு அர்ச்சனை விபூதி தருவதாகச் சொல்லுகிறார்கள்! சுவாமிகள் சும்மா விபூதி தருவீர்களா?''

''என்னமோ, உஞ்ச விருத்திதான். இதில் என்ன கெளரவம்? முக்காணிகளும், தீட்சிதர்களும் போலவா நாம் இருக்கிறோம்?''

''முக்காணிகளும் தீட்சிதர்களும் என்ன செய்கிறார்கள்? அவர்கள் யோகஷேமம் எனக்குத் தெரியாது, சற்று கூறுங்கள்'' என்று ஆவலுடன் கேட்டார்.

முககாணிகள் திருச்செந்தூரிலிருக்கும் ஒரு வகையான பிராமணக் குடிகள். சண்முகக் கடவுளைத் தரிசிக்க வரும் யாத்திரிகர்களை வரவேற்றுச் சகல மரியாதைகளும் செய்து சுவாமி தரிசனம் செய்துவித்துப் பின் வேண்டிய மட்டும் காணிக்கை பெறுவார்கள். விபூதிப் பிரசாதம் தபாலில் அனுப்புவார்கள். சிஷ்யர்கள் நேரில் வந்தாலோ கொள்ளைதான்!''

''தீட்சிதர்களோ?''

''தீட்சிதர்களோ சிதம்பரத்தில் இருப்பவர்கள், தில்லை மூவாயிரவர்கள் என்று சொல்லிக் கொண்டு பல மான யாத்திரிகர்களைக் கைக்குள் போட்டுக் கொண்டு இட வசதி முதலியவைகளைத் தந்து வேண்டிய மட்டும் பணம் சம்பாதிக்கிறார்கள். சிலர் இலட்சாதிபதிகளாகி விட்டார்கள். அவர்களும் விபூதி அனுப்புவதுண்டு. திருவாதிரை ஆனித் திருமஞ்சனம் வந்து விட்டாலோ, கொள்ளை தான்''

''நமக்குத் தரிசனமோ மஞ்சனமோ வருவது கிடையாது. ஆகவே எவ்வித காலட்சேபம் செய்ய முடியும்?''

''நானும் அதுதான் நினைத்தேன். கடைசியில் விபூதிப் பிரசாதத்தைத்தான் கிடைப் பிடித்தேன். இப்போது ஜீவனம் ஒருவாறு தேவலை.''

''அது எப்படிச் செய்வது? அண்ணு!''

''வெகு சுலபம். ஒருதரம் அர்ச்சனை செய்வது ; அவ்விபூதியை ஒரு மணங்கு விபூதியுடன் கலப்பது; அச்சடித்த தாளோடு ஒரு உறையுள் வைத்துத் தபாலில் ஆசாமிகளுக்கு அனுப்புவது-இதுதான்''

''மிகவும் சுலபாய் இருக்கிறதே! எத்தனை தருவார்கள்?''

''வருஷத்திற்கு ரூ.3-8-0 வாங்குகிறது. அணு 0-8-0 தபால் போனால் ரூ. 3 லாபம்'' என்றார்.

இவ்விதம் வெகு நேரம் பேசிவிட்டு வெகு சந்தோஷமாக விடைபெற்றுச் சென்றார் சுப்பராயக் குருக்கள். மாதிரியாக ஒரு விபூதிப் பொட்டணமும் அச்சடித்த துண்டுக் காகிதமும் பெற்றுக் கொண்டு புதையல் எடுத்த ஒரு ஏழை மகனைப்போல் மிகுந்த ஆனந்தத்துடன் ஊர் போய்ச் சேர்ந்தார்.

அன்று முதல் இப்புது முயற்சியில் இறங்கினார். அடியில் கண்டபடி ஒரு சீட்டு அச்சு அடித்தார்.

## சிவமயம்

**பிரம்மஸ்ரீ சுப்பராயக் குருக்கள்** **கள்ளிக்குடி**

தேதி............

பரம ஆஸ்திகரும் எமது பரமானந்த சிஷ்யருமான

ஸ்ரீமான்------------------------------------அவர்களுக்கு

உபய குசலோபரி ஆசீர்வாதம்

நாளது கிருத்திகையின்போது பார்வதி ஸமேத சிவ பெருமான் திவ்ய திருவடிக் கமலங்களுக்கு அருச்சித்துத் தங்கள் ஷேமத்தைக் கோரி அருச்சனை புரிந்து திருப்பிரஸாதமாகிய விபூதியை அனுப்பித் துள்ளேன். பெற்றுக் கொண்டு சுகத்திலிருக்கவும்.

வருஷக் காணிக்கை ரூ.3-8-0

**விதேயன்**

**சுப்பராயக் குருக்கள்**

ஆயிரம் உறைகள், சீட்டுகள், விபூதிப் பொட்டணங்கள் முதலியவைகள் தயாராகிவிட்டன. முதல் தபாலில் தெரிந்த அக்கம்பக்கத்துக் குடியானவர்களுக்குத் தபால் மூலம் அனுப்பினார். குடியானவர்கள் சுவாமி பிரஸாதம் என்று மிகுந்த பயபக்தியுடன் பெற்றுக்கொண்டார்கள். யுத்தம் ஆரம்பித்தவுடனே 1/2 அணா தபால் ஒரு அணா ஆயிற்று. செலவு இரட்டித்தது, ஆனால் பக்த கோடிகள் காணிக்கைகள் அனுப்புவது கிடையாது. குருக்கள் என்ன செய்வார்? தாமே நேரில் சென்று காணிக்கை கேட்க ஆரம்பித்தார். ஒன்றிருவரே கொடுத்தார்கள். ஏனையோர் தவணை சொன்னார்கள். பணம் கேட்டதை எண்ணிச் சிலர் வெலவெலத்துப் போனார்கள்.

''ஐயரே! உம்மை யார் அனுப்பச் சொன்னது? இனி நிறுத்திவிடுங்கள்'' என்று வெடுக்கெனத் தாட்சண்யம் இன்றியும் சிலர் சொன்னார்கள். பணம் இல்லாத காலத்தில் என்ன செய்வார்கள்? முடிவில் வி.பி. வாபசு ஆகிவிட்டது. உள்ளதும் போய்விட்டது. என்ன செய்வார்? பாவம்! இந்தப் புது முயற்சியில் கையிலிருந்து நூற்றுக்கணக்காகச் செலவாகிவிட்டது. கடனும் ஏற்பட்டது. ''என்ன, கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதே!'' என்று பிரலாபித்தார் குருக்கள். இருந்த ஒரு வீடும் தாவர சொத்தாக இருந்தது சங்கமச் சொத்தாகி விட்டது! 'புது வியாபாரத்தில் இறங்கினது போதும்' என்று சொல்லிச் சாய்ந்தார் குருக்கள் திண்ணையின்மீது.

# 11

## மூர்த்திகளின் ஏற்றுமதி

டாக்டர் சதாசிவம் M. A., Ph., D. I., C. S., ஆங்கில படிப்பை முடித்துக் கொண்டு தம் சுயநாடு திரும்பினார். ''இந்தியச் சிற்பக் கலையில் தென்னாட்டு வெண்கலப் பதுமைகள்'' என்ற கட்டுரை எழுதி டாக்டர் பட்டம் பெற்றவர். தம் நாட்டிற்கு வருவதற்கு முன் ஐரோப்பாக் கண்டத்தில் சுற்றுப் பிராயணம் செய்து தம் அறிவை அதிகப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது அவரது அவா. பிரெஞ்சுத் தலைநகர் பரி(பாரிஸ்)யில் சிறந்த காட்சிச் சாலை இருக்கிறதென்றும், அதில் அருமையான பதுமைகள் உண்டு என்றும் கேள்விப்பட்டிருந்தார். அக்காட்சிச் சாலையைக் கண்டுவிட்டே போகவேண்டும் என்று உறுதி செய்து கொண்டு பரியில் இறங்கினார். ஒரு உணவு விடுதியில் தங்கிக் காட்சிச்சாலையுள் சென்றார். அங்கே வைத்திருந்த அழகான இந்தியப் பதுமைகளை யெல்லாம் கூர்மையாகப் பார்த்துச் சென்றார். ''இத்தனை அருமையான விலை மிகுந்த பொருள்களை இந்தியர்கள் ஏன் பிரெஞ்சுக்காரர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள்? இவைகளின் அருமைகளை நம் இனத்தார் அறிந்திருந்தால் இவ்வாறு வேறு நாட்டாருக்கு அனுப்பியிருப்பார்களா என்று எண்ணி எண்ணிப் பரிதவித்தார். சில விக்கிரகங்களைக் கண்டவுடன், ''இத்தனை அதிசயமான பொருள்களை எவ்வாறு மனம் துணிந்து கொடுத்தனர்?'' என்று தயங்கினார். அங்கு ஒரு அருமையான நடராஜ விக்கிரகம் தோன்றிற்று. அதைக் கண்டவுடன் வயிறு எரிந்தது, இரத்தம் கொதித்தது. ''விலை மதிப்பற்ற இப்பொக்கிஷப் பொருளை எந்தத் துணிவுடன் யார் வெளியேற்றினாரோ?'' என்று பல்லைக் கடித்தார். ''அப்பாவியைக் கண்டால் குத்திக் கொன்று விடுவேன்!'' என்று குதித்தார். ''சிற்பத்தின் அருமைகள் போனால் போகட்டும், இவ்வழகிய மூர்த்தியிடம் பக்தியும் இல்லையோ நம் இனத்தார்க்கு?'' என்று வெகுண்டார். ''நமது நாட்டில் பூஜை செய்து வழிபடுவோமே, இங்கேயோ ஒரு சொட்டு நீரும் ஒரு சிறு பூவும்கூடக் காணாமல் ஆராதனையில் நம்பிக்கை அற்றவரால் இம்மூர்த்தி சிறைப்படுத்தப்பட்டுக்

கிடக்கிறதே!'' என்று வருந்தினார். அம்மூர்த்தியின் அழகில் சிறிதுநேரம் ஈடுபட்டுக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டேயிருந்தார். சதாசிவம் இத்தனை ஆர்வத்துடன் நடராஜ விக்கிரகத்தைப் பார்ப்பதைக் கண்ட காட்சிச்சாலைச் சேவகன் இவரை விளித்து, ''ஐயா, உமக்குச் சிற்பத்தில் விஷேச நாட்டம்போல் இருக்கிறது. இவ்வுருவம் மிகச் சிறந்தது இதனைக் காட்சிச்சாலை அதிபர் ஒரு அதிசயப் பொருள் வர்த்தகரிடம் 1,000 ரூபாய்க்குப் பத்து நாட்களுக்கு முந்தித்தான் வாங்கினார்'' என்றான். அதைக் கேட்டவுடன் ஆச்சரியப்பட்டு, ''இதில் என்ன விஷேசம் அவர் கண்டார்?'' என்று கேட்டார். சேவகன் இது நாலாவது குலோத்துங்கச் சோழன் காலத்தது என்றும், அவ்வுருவின் பீடத்தில் வருடமும் இடமும் எழுதி இருக்கிறதென்றும் சொன்னான். சதாசிவத்தின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. உடனே பீடத்தை உற்றுநோக்கினார். ''சகம் 1214''. என்றும் ''சோழ மண்டலத்து மருகல் நாட்டு மருகல்'' என்றும் செதுக்கப்பட்டிருக்கிறது. உடனே ஆனந்தத்தினால் குதித்தார். ''இது என் ஊர்க் கோவில் நடராஜா'' என்று கூவிக் குதித்தார். மறு வினாடியே ஆனந்தம் போய்த் துக்கம் வந்தது. ''எங்கள் குடும்பத்தார் வழிபட்டுத் துதி செய்த நடராஜாவா இப்போது இங்கே கிடக்கிறது? அது ஏன் தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டது?'' என்று கதறினார். மறு நிமிடம் கோபம் வந்தது. ''என் பெற்றோர் துதித்த இம்மூர்த்தியை எந்தத் துஷ்டப் பயல் இந்நீசருக்கு விற்றுவிட்டான்!'' என்று பல்லைக் கடித்தார். இதன் உண்மைச் சரிதம் அறியவேண்டும் என்ற ஆசை தோன்றியது. அது ஆழமாக அவர் நெஞ்சிடை பதிந்தது.

''சேவகரே! இந்தப் பதுமையை உங்கள் தலைவர் யாரிடம் வாங்கினார்?'' என்று வினயமாகக் கேட்டார். அவன் உடனே கையேட்டைப் பார்த்து 'இது மான்ஷியர் புஸ்ஸி என்ற அதிசயப் பொருள் வர்த்தகரிடம் வாங்கப்பட்டது. இதனை அமேரிக்கர் 5,000 ரூபாய் கொடுத்து வாங்கத் தயாராக இருக்கிறார்கள்' என்றும், 'தலைவர் அதை வெளியேற விடமாட்டார்' என்றும், இது ஒரு பெரிய பொக்கிஷமாக ஆராய்ச்சியாளர்களால் கருதப்பட்டு வருகிறது. என்றும் பிரசங்கம் செய்யத் தொடங்கினான். சதாசிவம் அவ்வர்த்தகரை காண வேண்டும் என்று நிச்சயித்துக் கொண்டு பித்துப் பிடித்தவன் போல் உணவும் அருந்தாமல் அவர்த்தகர் வீட்டைத் தேடிக்கொண்டு சென்று அவனைக் கண்டு பிடித்தார். அவர் சென்ற வேளையில் புஸ்ஸியே இருந்தான்.

''ஐயா, தாங்கள் அருமையான இந்தியப் பதுமைகளை வைத்திருக்கிறீர்களாமே, பார்க்கலாமா?'' என்று கேட்டார்.

''ஆமாம், நீங்கள் இந்தியர் போலத் தோன்றுகிறது. இந்தியாவில் இல்லாத அற்புத விக்கிரகங்கள் இங்கே என்ன இருக்கும்?'' என்று கண் சிமிட்டிச் சொன்னான்.

''ஐயா, இந்தியாவில் அற்புதப் பொருள்கள் இருந்தது உண்மை. அவை இந்திய மக்களுக்குப் பயன்படுவதாகத் தெரியவில்லை. பொதுமக்கள் பார்வைக்கும் அவை கிடைப்பது அரிது, இருட்டு அறைகளிலும் மண்டபங்களிலும் சேமித்து வைத்திருப்பதனால் அவைகளின் அருமை எப்படி அறிய முடியும்? மேலும், அருமையான பொருள்கள் எல்லாம் வெளிநாடு சென்றதாகக் கேள்வி.''

''ஆமாம், பெருமை தெரியாத ஆட்களுக்குப் பெருமை பொருந்திய பொருள் என்னத்திற்கு? பன்றியின் முன் கிடக்கும் முத்துமாலை.....'' என்றான். இதனைக் கேட்ட சதாசிவம் முகம் கோபத்தால் சிவந்தது, உதடு துடித்தது. ஆனால் அதனை மறைத்துக்கொண்டார்.

''இன்று கண்காட்சிச் சாலையில் ஒரு நடராஜ விக்கிரகத்தைக் கண்டேன். அதனைத் தாங்கள் விற்றதாகச் சொன்னார்கள். அறிய வந்தேன்.''

''ஆமாம், அது ஒரு அருமையான பொருள். அதற்குக் கிராக்கி அதிகம். அவசரத்தினால் குறைவான விலைக்கு விற்றுவிட்டேன். இப்போது அதற்கு ஐந்து மடங்கு விலை கிடைக்கும்.''

''அதைப்போலப் பிற பொருள் இருந்தால் பார்க்க வேண்டும், என்ற ஆசை எனக்கு உண்டு.''

''நீங்கள் என்ன வாங்கவா போகிறீர்கள்? இந்தியர்கள் விற்பார்களே ஒழிய வாங்கமாட்டார்கள்!''

இதைக் கேட்ட சதாசிவத்திற்கு உள்ளம் புழுங்கியது.

''நான் படியாத இந்தியன் அல்ல; சிற்பக் கலையில் டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறேன்.''

''எங்கே பெற்றீர்கள்?''

''லண்டன் பல்கலைக் கழகத்தில்.''

''தாங்கள் டாக்டர் சதாசிவமோ?''

''ஆம், அப்பெயர் எப்படித் தெரிந்தது?''

''நான் ஊகித்தேன். சமீபத்தில் இந்தியச் சிற்பத்தில் தேர்ச்சிபெற்று வெண்கலச் சிலைகளைப் பற்றிய ஒரு அருமையான கட்டுரை எழுதிய இந்தியர் சதாசிவம் என்று அறிவேன். உம்முடைய கட்டுரையையும் வாசித்துள்ளேன். அதில் சில ஐயங்களும் எனக்கு உண்டு. அவைகளைப் பற்றிச் சாவதானமாக உங்களுக்கு எழுதி அனுப்புகிறேன்''.

இதைக் கேட்டதும் சதாசிவம் 'இவனிடத்தில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்' என்று எண்ணினார்.

''தாங்கள் காட்சிச் சாலைக்குத் தந்திருக்கும் விக்கிரகத்தைப் போன்ற மற்ற விக்கிரகங்கள் தங்களிடம் இருக்கின்றனவோ?''

''ஆம், அதற்குச் சேர்ந்த சந்திரசேகர மூர்த்தியும் பிட்சாடன மூர்த்தியும் என்னிடம் இருக்கின்றன. அவைகளை அமெரிக்கா ஹார்வர்டு காட்சிச் சாலைக்குப் பேசிக் கொண்டிருக்கிறேன்.''

''அவைகளைப் பார்க்கலாமா?''

''தங்களைப் போன்ற அறிவாளிகள் பார்த்தால் மிகுந்த ஆனந்தம் எனக்கு ஏற்படும். வாருங்கள் உள்ளே. இதோ இந்தப் பீடத்தின் மேல் அவை இருக்கின்றன.''

''என்ன அழகான மூர்த்திகள்!'' என்று எண்ணிப் பெருமூச்சு விட்டார் சதாசிவம். பிறகு விக்கிரகங்களின் ஒவ்வொரு பாகத்தையும் உற்றுநோக்கினார். பீடத்தில் ''மருகல் நாட்டு மருகல்'' என்று செதுக்கப்பட்டிருந்தது.

''அடடா! இவையும் எங்கள் ஊர்த் தெய்வங்களா? ஐயோ பாவமே! இந்த நாஸ்திகனிடமா இவை சேர்ந்து விட்டன? இவன் எத்தனை அறிவு படைத்தவனாயினும் இப்புண்ணிய மூர்த்திகளை வாணிபப் பொருள்களாக்கிப் பண்டமாறுதல் செய்கிறானே!'' என்று மனத்தில் எண்ணி வருந்தினார்.

''ஐயா, இந்த விக்கிரகங்களை எவ்விதமாகச் சம்பாதித்தீர்? எந்த ஊரிலிருந்து கிடைத்தன?''

''டாக்டர்! உங்களுக்குத் தெரியாததல்ல. உங்கள் நாட்டில் 'ரிஷிமூலம் கேட்க வேண்டாம்' நதிமூலம் அறிய வேண்டாம்! என்ற

ஒரு பழமொழி உண்டல்லவா? ஆகவே இதனைக் கேட்பது உமக்கு அழகல்ல.''

சதாசிவம் திடுக்கிட்டுப் போனார். ''இந்தியரின் பழக்க வழக்கங்களை எத்தனை நுட்பமாக இவன் அறிந்திருக்கிறான்'' என்று எண்ணி, ''ஐயா, நீங்கள் இந்தியரின் பழமொழிகளை யும் செவ்வையாக அறிந்திருக்கிறீர்கள். இந்தியாவில் வேலையில் இருந்தீரா?'' என்று கேட்டார்.

''ஆமாம்; முப்பது ஆண்டுகள் இந்தியச் சுங்கத் தொழிலில் (Excise) இருந்து உபகாரச் சம்பளம் பெற்று வருகிறேன். அப்போது எனக்குச் சிற்பக் கலையை உணர்வது ஒரு ஆசைப் பணியாக (Hobby) இருந்தது. அதை ஒட்டித்தான் விக்கிரகங்களைச் சேகரித்தேன். வெகு பணம் கொடுத்து வாங்கினேன். இவைகளின் அருமையை அறியும் கற்றோர்களுக்கும், கற்பிக்கும் நிலையங்களுக்குமே யன்றி, பிறருக்கு விற்பனை செய்வது கிடையாது?'

'எண்ணம் சரிதான், உண்மை எதுவோ?' என்று எண்ணினார் சதாசிவம்.

''தங்களை வற்புறுதத்திக் கேட்பது தவறு. இதுவரையில் எனக்குப் பல அருமையான சங்கதிகளைக் கூறி மகிழ்வித்ததற்காக நான் மிகுந்த நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்'' என்று கூறிவிட்டு விடைபெற்றுச் சென்றார்.

சதாசிவம் உடனே இரயிலடிக்குச் செல்லவில்லை. விடுதியில் உணவு அருந்திவிட்டு ஆங்கில ஸ்தானதிபதி (பிரிட்டிஷ் கான்ஸல்) நிலையத்திற்கு சென்றார். தம் முகவரிச் சீட்டை அனுப்பியதும் ஸ்தானதிபதி வெகு மரியாதையுடன் இவரை வரவேற்றார். பி. எச். டி: க்கும் ஐ. ஸி. எஸ். ஸுக்கும் அத்தனை மதிப்பு உண்டு.

''ஐயா, மான்ஷியர் புஸ்ஸி என்பவரைத் தெரியுமா?''

''ஆம், நன்றாகத் தெரியும். அவைவரைப்பற்றி என்ன தெரியவேண்டும்?''

''அவரை இப்போதுதான் சந்தித்தேன். அவரிடம் அருமையான இந்திய விக்கிரகங்கள் இருக்கின்றன. அவை எப்படி வந்தன?''

''அவர் ஒரு அதிசயப் பொருள் - வர்த்தகர், ஜாதி - யூதர். ஆங்கிலமும் பிரெஞ்சும் தெரியும். முந்தி இந்தியாவிலே சுங்க இலாகவில் இருந்தார். அப்போது சிற்பம் கற்றுக்கொண்டாராம்.

ஓய்வு எடுத்துக்கொண்டதும் இந்த வர்த்தகம் செய்துவருகிறார். ஆனால் அவருடைய அந்தரங்க நிலைமை அறியக்கூடவில்லை. லட்சக் கணக்கான விலையுயர்ந்த பொருள்களைச் சம்பாதித்திருக் கிறாராம். 'எவ்வாறு?' என்று இரகசியப் போலீசும் கண்டுபிடிக்க முடியவில்லை. பல 'கோட்சொல்லி' - கதைகள் உண்டு. இருந்தாலும் அவைகளுக்குச் சாட்சியம் கிடைக்கவில்லை. அவரைப்பற்றி ஏதாவது ஒரு குறித்த சங்கதி இருக்கும் பட்சத்தில் தெரியபடுத்தினால் விசாரிக்கிறேன்.''

''அவரிடம் 'மருகல் நாட்டு மருகல்' - சிலைகள் இருக்கின்றன. எவ்வாறு வந்தன அறிய ஆவல்கொண்டிருக்கிறேன்.''

''ஒரு நடராஜாவைக் கண்காட்சியில் விலைக்கு வாங்குகையில் இத்தகவல் விசாரிக்க வேண்டி வந்தது. துப்புக் கிடைக்கவில்லை. அவருக்குப் புதுச்சேரியில் ஒரு தரகர் இருக்கிறாராம். அவர் மூலமாகத்தான் கிடைத்ததாம்.''

இதற்கு மேல் சங்கதி ஒன்றும் தெரியவில்லை. சதாசிவம் தலை இறங்கவிட்டுக் கொண்டு இரயிலடிக்குப் புறப்பட்டு இந்தியாவிற்குக் கப்பல் ஏறினார்.

மருகல் நாட்டு மருகலில் சிவாலயத்தில் சதாசிவம் ஐ.ஸி.எஸ். ஸுக்கும் வெகு மரியாதையுடன் உபசரிப்பு நடந்தது. அபிஷேகம் அஷ்டோத்தர அருச்சனை, தீபாராதனை, பரிவட்டம், மாலை முதலிய மரியாதைகள் வரிசையாக நடந்தன. இவைகளில் சதாசிவத்தின் மனம் செல்லவில்லை.

''குருக்களே! உத்ஸவ மூர்த்திகள் எங்கே? தீபாரதனை செய்யும். என்று ஆத்திரத்துடன் சொன்னார். இருட்டு மண்டபத்தில் ஒரு மூலையில் சின்னஞ்சிறு உற்சவர்கள் கற்பூர வெளிச்சத்தில் தோன்றினார்கள். ''குருக்களே! நான் பாடசாலையில் வாசிக்கும்போதே, பெரிய ஆகிருதிகளாக இருந்தன. இவைகள் வேறோ !'' என்றார் சதாசிவம்.

''ஆமாம் ; முன்னிருந்த பெரிய விக்கிரங்கள் களவு போயின. இவை புதியவை. தருமகர்த்தா யாசகம் எடுத்துச் செய்து வைத்தார்.''

''எப்போது, யார் காலத்தில் களவு போயின?''

''தாங்கள் வெளிநாட்டில் இருந்தபோது தங்கள் தகப்பனார் சிதம்பரமையர் தருமகர்த்தாவாக இருந்தார். என் தகப்பனார் ஐயாசாமிக் குருக்கள் முறை அர்ச்சகராக இருந்தார். அப்போது களவு

போயிற்று. உடனே ஸ்ரீமான் ஐயர் புது விக்கிரகங்களைச் செய்து புண்ணியம் சம்பாதித்துக் கொண்டார். திருடர் புகுந்த தீட்டைப் போக்க ஸம்ப்ரோட்சணமும் செய்தார்.''

''இந்த ஊர் பந்தோபஸ்த்தான ஊராயிற்றே, எப்படிக் களவு போயிற்று?''

''ஆருத்திரா தரிசனத்தில் சுவாமி ஊர்ப் புறப்பாடு ஆனபிறகு எல்லா ஊழியர்களும் களைத்துப் போய் வீடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். அன்று இரவு சில பிரான்மலைக் கள்ளர்கள் கன்னக்கோலிட்டு ஆலயத்துள் சென்று நடராஜா முதலிய பழைய விக்கிரகங்களைக் கொள்ளை கொண்டு சென்றார்கள். ஆனால் நகைகளை எடுத்துச் செல்லவில்லை. சுவாமியினுடைய மகிமை என்ன! போலீசார் என்ன பிரம்மப் பிரயத்தனப்பட்டும் துப்புக் கிடைக்கவில்லை. மூன்று கள்ளர்களை அடித்தும் பார்த்தார்கள். அவர்கள் பழைய பேர்வழிகளானதினால் சிறை சென்றார்கள். உண்மையும் தெரியவில்லை. ஈசன் செயல்'' என்று சொல்லி முடித்தார் குருக்கள்.

''ஐயோ, என் தகப்பனார் காலத்திலா போயிற்று? என்ன அபக்கியாதி! இங்கே இதை விசாரித்தால் அவமானம்'' என்று எண்ணி மௌனமாக இருந்துவிட்டார் சதாசிவம்.

ஆனால், நெஞ்சு சும்மா இருக்குமா? உடனே போலீசு இல்ாகாவில் இரகசியமாக விசாரித்தார்.

''ஊரார், பிரான்மலைக் கள்ளர் வேலை என்று தான் சொல்லுகிறார்கள். சிதம்பரமையர் வாக்கு மூலமும் அதுவே. அர்ச்சகரும் அதுவே சாதித்தார். உட்கதவின் பூட்டு நெம்பிப் பிடுங்கப்பட்டிருந்தது. இதைச் செய்யப் பத்து ஆள் வேண்டும். ஆலய அதிகாரிகள் உடந்தை இல்லாதிருந்தால் இக் காரியம் நடந்திருக்குமா? யாதொரு சந்தடியும் இல்லாமல் இப்பெரிய சம்பவம் அக்கிரகாரத்தில் மாத்திரம் எவ்வாறு நடந்தது? மேலும் கள்ளர்கள் ரூ. 1,000 நகைகளை அங்கேயே போட்டு விட்டு விக்கிரகங்களை எடுத்துக் கொண்டு போவார்களா? அவைகளோ மிகப் பளுவு ; ஒரு இரவில் எப்படி நாடு கடத்தினார்கள்?'' என்று போலீசு அதிகாரியின் தினசரியில் குறிக்கப்பட்டிருந்தது. என்ன சங்கதியோ தெரியவில்லை. இறுதியில் கேசு கண்டுபிடிக்க முடியவில்லை என்று முற்றுப்புள்ளி போடப்பட்டிருந்தது.

''சதாசிவத்தின் நெஞ்சு தடுமாறியது. கொதிப்பு அடங்கவில்லை. தம் குடும்பத்திற்கன்றோ அவமானம்? கிணறு வெட்டிப்பூதம்

புறப்பட்டதுபோல் ஆயிற்று. பரிக்காட்சிக்கு ஏன் சென்றோம்? முடிவில் என்ன பயனில்லாத சங்கடம் ஏற்பட்டது'' என்று எண்ணி வெகு கவலையுடன் வீடு சேர்ந்தார்.

வீடோ பிதிரார்ச்சித வீடு. தற்கால ஐ. ஸி. எஸ். ஆபீஸர் குடியிருக்க யோக்கியதை இல்லை. இப்பொழுது தலைமை நகரத்தில் ஒரு பங்களாவில் இருக்கிறார். ஏன் புராதன வீட்டுக்குச் சென்றார்? விதியும் ஆர்வமும் இழுத்தன என்றால் சரியா?

இந்தியாவில் இல்லாத சமயத்தில் பெற்றோர்கள் இந்நிலவுலக வாழ்வைத் துறந்தார்கள். இறுதியாக அவர்கள் முகம் பார்க்கவும் இவர் கொடுத்து வைக்கவில்லை. வீட்டைக் கண்டதும் பெற்றோரை எண்ணிக் கண்ணீர் விட்டார். சேவகன் வந்தான். சட்டென்று கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்.

பகல் போஜனம் ஆனவுடன் தம் தகப்பனார் வைத்திருந்த புஸ்தகப் பெட்டியை எடுத்துத் திறந்து ஒவ்வொரு நூலாக எடுத்துத் தம் தகப்பனாரை நினைத்துக் கொண்டார். பகவத்கீதை கைக்கு அகப்பட்டது. அந்நூலைத் தகப்பனார் தினந்தோறும் பாராயணம் செய்வதுண்டு. ஒரு பக்கத்தில் படித்த குறிப்புக்காக ஒரு கடிதம் வைக்கப் பட்டிருந்தது போல் காணப்பட்டது. சதாசிவம் எடுத்துப் பார்த்தார். அதில் என்னவோ எழுதியிருந்தது. வாசித்தார், திடுக்கிட்டார்! என்ன அப்படிப்பட்ட செய்தி?

''அன்புள்ள சிதம்பரமையருக்கு, எவருக்கும் தெரியாமல் வெகு எச்சரிக்கையுடன் திருவாதிரையின் போது விக்கிரகங்களை வெளிப்படுத்தியது போற்றத்தக்கது. அர்ச்சகனை நம்பலாம் என்று இருக்கிறேன்; அதிகப் பணம் கொடுத்தால் வெளியில் சொல்லமாட்டான். பிரான் மலைக்கள்ளர் ஏற்பாடு என்று போலீசுக் காரர் எவ்விதம் நம்பினார்களோ? அக்கிரகாரத்தில் நடுவில் பூட்டை உடைத்துப் புக முடியுமோ என்று அவர்கள் சந்தேகிக்க வில்லைபோலும்! விக்கிரகங்கள் அருமையானவை, பரிந்துரைக்கு வெகு ஆனந்தம். ரூ. 250 அனுப்பி இருக்கிறேன். உமக்கு ரூபாய் 100, அர்ச்சகருக்கு ரூபாய் 50, அனுப்பிய கூலிக்கு ரூபாய் 100 வைத்துக் கொள்ளவும். இது இரண்டாம் பேருக்குத் தெரியக்கூடாது. இரகசியம்?

# 12

## பேயோ பிசாசோ

திருக்குண வீனம் ஒரு பெயர் பெற்ற புனிதத்தலம். பொன்னியாற்றின் வடகரையில் மனோரம்மியமான பொழில்களின் இடையே அமைந்திருக்கும் சிறப்பைப் பெற்றது. திருக்கோயில் மிகப் பெரியது. அதன் நாற்புறத்துத் திருக் கோபுரங்களோ பல காதங்களுக் கப்பாலும் விண்ணை அளாவிக் கொண்டு நிற்கும் காட்சியைத்தருவன, மதில்கள் உண்மையிலேயே எவராலும் தாண்ட முடியாதபடி மிக உயர்ந்து நிற்கும். ஆனால் நாளளவு மீற மீற ''நெட்டிருப்புப் பாறைக்கு நெக்கு விடாப் பாறை பசுமரத்தின் வேருக்கு நெக்குவிடும்'' என்ற மூதாட்டியின்சொற்களை நிரூபிக்க தழைதழைத்த பல அழகிய இலைகளை விட்ட ஆலஞ் செடிகள் அம்மதில்களை அழகு படுத்தி நின்றன. நாற்புறங்களிலும் தேரோடும் வீதிகள் மிக விசாலமாகவும் ஒரு பக்கத்தில் நெடுகப் பல வழிபடுவோர் தங்கும் விடுதிகளை வைத்துக் கொண்டு விளங்கினாலும், கோயிலுக்கு வரும் நன் மக்களின் நன்மையைக் கருதி, காய் , பழம் , கர்ப்பூரக் கடைகள் அத்தெருக்களின் ஒரு பகுதியை அடைத்துக் கொண்டு விளங்குவன. அவை போலவே கோபுரவாயிலும் இறைவனுக்கு நல்ல சேவை செய்யும் பொருட்டும் பலசரக்குக் கடைகளை அமைத்துக் கொண்டு சீர் பெற்றுள்ளன. ஏனெனில் இறைவனை வழிபடும் பெருமக்களுக்கு வணக்கப் பொருள்கள் ஒரு சிறிது ஆயாசமும் இன்றிக் கிடைக்க வேண்டாமா? கோயில் அதிகாரிகள் இவ்வாறு கடைகள் ஏற்படுத்துவதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். போலி நகைக்கடைகளுக்கு வெகு எளிதில் அனுமதி தருவார்கள். கோயிலில் கடை கட்டப்பணம் இருந்தாலும் கடைக்காரன் முன்பணம் போட்டுச் சலீசான வட்டிக்கு அவனே கட்டிக்கொண்டு நிரந்தரமாக இருக்கவும் உடன்படிக்கை எழுதிக்கொடுத்து விடுவார்கள். ஏனெனில், இறைவணக்கத்திற்கு அவர்கள் ஒரு பகுதி தருகிறார்கள் அல்லவா? அக் கடைக்காரர்கள் எச்சமயத்தினர்கள் ஆனாலும் என்ன? அவன் கோயில் வழிபாட்டை அக் கடையிலிருந்து கொண்டு இகழ்ந்தாலும் என்ன? அவனுடைய பணத்தில் ஒரு பகுதி அதிகாரிகளுக்கு ஏறினால் போதும், அல்லது

அதிகாரிகளின் மனைவி மக்கள் கை; கால் களை அவன் கடைநகைகள் அலங்காரப் படுத்தினால் போதும், அனுமதி உடனே தரப்படும். ஊரார் கரடியாய்க் கத்தி ஆட்சேபித்து மனுக்கள் போட்டாலும் அதிகாரி செய்ததே சரியென்று மேல் அதிகாரி அதனை ஊர்ச்சிதப்படுத்தி விடுவான். இவ்விதக் கூற்றில் நமது குண வீனப் பெருங்கோயில் சிறந்து விளங்கியது. ஆகவே இதன் பெருமை உலகம் முழுவதும் பரவி இருக்கிறது எனலாம். வைதீகர்களும், குருக்கள்மாரும் அதிகாரிகள் முதலிய சிப்பந்திகளும் இத்திருக்கோயிலால் மிகுந்த சம்பத்துடன் காலம் கழித்து வருகிறார்கள்.

ஒவ்வொரு கோயிலுக்கும் ஒவ்வொரு சிறப்பு உண்டல்லவா? இந்த குணவீன கோயிலுக்கோ ஒரு ஒப்புயர்வற்ற சிறப்பு ஒன்று உண்டு. இக் கோயிலில் முதற் பிரகாரத்தில் அம்மன் சந்நிதிக்குப் பின்புறத்தில் ஒரு அற்புத மான யந்திரச் சிலைப்பலகை ஒன்று உண்டு. பண்டைக் காலத்தில் ஒரு சிறந்த முனிவர் இந்தத் தலத்தைத் தரிசித்தபோது இந்த யந்திரத்தை ஒரு சிலையில் பொறித்து இந்த இடத்தில் தாபித்துவிட்டுச் சென்றாராம். அந்த யந்திரத்தின் சக்தி அளவிட முடியாதது. பேய்ப்பிடித்த மக்கள் யார் இதன் அருகில் வந்தாலும் அப்பேய் அலறிக்கொண்டு நடுங்கி உரத்த ஒலி செய்து கொண்டு ஓடிவிடுமாம். இச் செய்தி உலகப் பிரசித்திப் பெற்றது. நமது நாட்டில் பெண் பிள்ளைக்குப் பேய் பிடிப்பது சகஜமல்லவா? ஆகவே பேய் பிடித்த பெண்கள் இந்தத் தலத்திற்கு மிகுதியாகக் கொண்டு வரப்படுவார்கள். அவர்கள் இந்த யந்திரத்திற்கு அருகில் கொண்டு வரும்போதே அப்பெண் கதறுவதைக் கண்டால் எந்த அநாகரிக நாத்திகனும் நடுநடுங்கி ஆத்திகன் ஆகிவிடுவான் என்பது பொது மக்களுடைய நம்பிக்கை.

நாட்டில் பேய் பிடிப்பது அதிகமாக ஆக அப்பேய்களை ஓட்டிவிடும் தொழிலும் சிறப்பு அடையும் அல்லவா? மந்திரவாதிகளும், அவர்களை அண்டிப் பிழைக்கும் பரிவாரங்களும் பெருகின. பேய் ஓட்டுவதற்கு ஒரு மந்திரவாதி, உடுக்கு அடிக்கிறவன் ஒருவன், பூசை போடுகிறவன் ஒருவன், ஒரு உதவி ஆள் இவர்கள் அவசியமாக இருக்க வேண்டும். மந்திரவாதி கையில் ஒரு மந்திரக்கோலும் ஒரு கசையடியும் இன்றியமையாத பொருள்கள். உடுக்கு அடிக்கிறவன் நல்ல க்வன சக்தியுள்ளவன். ஒப்பாரிபோல அழகாக அம்மானை பாடக்கூடியவன். தெளிவான தமிழிலே நன்றாக உரத்த குரலில் உடுக்கையைத் தாளத்திற்கு இசையப்பாடுபவன். இந்த இசை சாதாரணமாக எந்தக் கல்

நெஞ்சையும் கலக்கிவிடும். சொற்கள் நிரமப மனவெழுச்சி தரக்கூடியவாறு அமைந்திருக்கும். தலை முறை தலைமுறையாக வந்த பாடல்கள் மிகவும் அஞ்சாநெஞ்சமுள்ள ஆண் மக்களையே மிரட்டி அடிக்கும். அப்பாடல்கள் ஏழைப் பெண்களை நோய்வாய்ப்பட்டுக் கொடிய உறவினர்கள் நடுவில் வையப்படும் நிலையில் அவதிப்படும் காலத்தில் எத்தனை சுலபத்தில் கலங்கிச் சோர்வடையச் செய்யும் என்று கூறவும் வேண்டுமா? இந்த நிலையில் இக்குணவீனக் கோயிலில் பல மந்திரவாதிகள் தோன்றியிருந்தார்கள். யாத்திரையாக வரும் பெண்களுக்கும் வேண்டுதலைக்காக வரும் மங்கையர்களுக்கும் இவர்கள் பெரும் சேவை செய்யக் காத்துக் கொண்டிருப்பார்கள். பலகுடும்பங்கள் இத் தொழிலில் ஈடுபட்டு சமூக சேவையைச் சமயச்சார்பில் செய்துவருவதே இந்தத் தலத்தின் பெருஞ் சிறப்பு. இது தமிழ்நாடு முழுவதும் அறிந்ததே.

கொடுவாயிலிலே ஒரு பண்டைக் குடும்பம் பரம்பரையாக மிகுந்த செல்வாக்கோடு தழைத்துக்கொண்டு வருகிறது. அதன் தலைவர் முருகப்பா நல்ல பேரும் புகழும் பெற்றவர். அவருடைய மனைவியார் தங்கம்மாளும் மிகச் சிறந்த குணவதி. பண்டை ஆசாரங்களை வெகு நன்றாக அறிந்தவர்கள். அவைகளைப் போற்றுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்கள். அக்குடும்பத்தை ஒட்டி நூற்றுக்கணக்கான ஏழைக்குடியானவர்கள் பிழைத்து வந்தார்கள். அனைவரும் முருகப்பர் என்றால் உயிர்விடவும் தயாராக இருப்பார்கள். இத்தம்பதிகளுக்கு வெகுநாள் பிள்ளை இல்லாதிருந்து மிகுந்த பிரார்த்தனைகள் செய்ததின் பேரில் அருமையாக ஒரு பிள்ளை பிறந்தான். அவனை வெகு அன்போடு சீராட்டிப் பாராட்டி வந்தார்கள். பிள்ளையும், பெற்றோர்களைப் போலவே பண்டை ஆசாரங்களில் நம்பிக்கை வைத்திருந்தான். ஏதோ ஒரு வகையில்தான் படிப்பு ஏறிற்று. பணக்காரவீட்டுச் செல்வப் பிள்ளைக்குப் படிப்பு ஏறுமா? கந்தப்பனுக்கு வயது ஆனதும் திருமணத்திற்கு ஆயத்தம் செய்தார்கள். பல செல்வர்கள் தங்கள் தங்கள் பெண்களை அழைத்து வந்தும் காட்டினார்கள். இறுதியில் சாதகம் பார்த்துப் பொருத்தம் கணித்து அடுத்த ஊர் மிராசுதார் வேலாயுதத்தின் திருமகள் புனிதவதியை மணப்பெண்ணாகத் தெரிந்தெடுத்தார்கள். புனிதவதி ஆங்கிலமும் தமிழும் நன்றாக வாசித்தவள். அவள் பெற்றோர்களும் கல்வி கற்றவர்களே. மணமகனுக்குக் கல்வி குறைந்திருந்த போதிலும் குணம் சிறந்திருந்ததை முன்னிட்டு சம்பந்தம் செய்ய முன் வந்தார்கள். நல்ல நாளில் கல்யாணமும் வெகு ஆடம்பரத்துடன் நடந்தது. சிலநாளில்

சாந்தி முகூர்த்தமும் நடைபெற்று மணப்பெண் கணவன் வீடு வந்து சேர்ந்தாள். மணமக்களும் அன்யோன்யமாக இல்லறத்தை நடத்தத் தொடங்கினார்கள்.

புனிதவதி இளவயதிலேயே ஆங்கிலமும் தமிழும் கற்றபடியாலும் கல்வி கற்பதிலே நாள் முழுவதும் கழித்து வந்ததினாலும் உடல் மிகவும் மெலிந்திருந்தது. பழைய காலத்துப் பெண்கள் படிப்புச் சூடு இவ்வாறு உடலைக் கரைத்து விட்டது என்பார்கள். தற்காலக் கல்லூரிப் பெண்போல அவள் உடல் செழிப்பின்றி யிருந்தது. ஆனால் கந்தப்பனுடைய உடலோ மிகுந்த வலிவோடு இருந்தது. ஆளும் வளவள வென்று வளர்ந்திருந்தான். புனிதவதியோ மிகவும் இளைத்து குழந்தைப்போலவே இருந்தாள். இந்த நிலைமையில் இல்லறம் நடத்தினால் எவ்வாறு இன்பவாழ்வு இருக்கும்.

புனிதவதிக்கோ நாளுக்கு நாள் பலவீனம் அதிகரித்தது. நோய்வாய்ப்பட்டவள் போல் காணப்பட்டாள். திருமணம் ஆகி இரண்டு மூன்று ஆண்டுகள் ஆயின. குழந்தை ஒன்றும் பிறக்கவில்லை. கந்தப்பனுக்கும் பெற்றோர்களுக்கும் கவலை பிறந்தது. மருத்துவர்களை அழைத்துக் காட்டினார்கள். உடலில் யாதொரு நோயும் இருந்ததாகத் தெரியவில்லை என்றார்கள். சோதிடர்களைக் கேட்டார்கள். அவர்களாலும் ஒன்றும் சொல்லமுடியவில்லை. அக்கம் பக்கத்து உறவினர்கள் வந்தார்கள். ஒரு கிழவி இது காற்றினுடைய செயல். குணவீனத்திற்குச் சென்றால் சுகமாகும். என்று சொன்னாள். அதையே வற்புறுத்திப் பல கிழவிகளும் கூறினார்கள். அந்த முறையைப் பார்க்கலாம் என்று பெற்றோர்கள் முடிவு செய்தார்கள்.

புனிதவதி நன்றாகப் படித்தவள். தற்காலக் கலையியல் அறிந்தவள். பேய், பிசாசு இவைகளில் அவளுக்கு ஒரு சிறிதும் நம்பிக்கை இல்லை. இருந்தாலும் நல்ல குணமுள்ளவள். கணவனும், மாமனாரும், மாமியாரும் கோயிலுக்குச் செல்வதாக முடிவு செய்ததை அவள் ஆட்சேபிக்கவில்லை. அவர்கள் விருப்பப்படி உடன் சென்றாள். குணவீனம் அடைந்ததும் நல்ல விடுதியில் தங்கியிருந்தார்கள். அன்று ஆற்றில் நீராடிவிட்டு கோயிலுக்குச் சென்று வழிபட்டார்கள். திருக்கோயிலில் வலம் போகும்போது அம்மன் சந்நிதிக்குப் பின்னால் இயந்திரத்தின் முன்னிலையில் பல பெண்கள் தலை விரித்துக் கொண்டு பேயாடுதலைக் கண்டார்கள். புனிதவதி அப்பேதைப் பெண்களைக் கண்டு விட்டு இப்படியும் உலகம் இருக்குமோ என்று பரிதாபப்பட்டாள். ஆனால் அவளுக்கோ எவ்வித உணர்ச்சியும் தோன்றவில்லை. அன்று வீடு திரும்பி

விட்டார்கள். இரவில் உணவு அருந்திய பின்னர் இரண்டு மூன்று பேர் முருகப்பரைக் காணவந்தார்கள். வெகுநேரம் பேசிவிட்டு வீடுதிரும்பினார்கள்.

புனிதவதிக்கும் பேய் பிடித்திருக்கிறதென்றும் அதனால்தான் உடல் மெலிவடைந்திருப்பதாகவும் அப்பேயைத் துறத்தி விடும் வரையில் குழந்தை உண்டாகாது என்றும் அதற்காகப் பூசை போடவேண்டும் என்றும் போட்டவுடன் பேய் ஆடும் என்றும் யந்திரத்தின் சக்தியால் அது ஓடிப்போய் விடும் என்றும் சொல்ல உருவேற்றி விட்டார்கள். கந்தப்பனும் பெற்றோர்களும் அதனை நம்பினார்கள். உடனே பூசைக்கு வேண்டிய செலவுக்கு ஒன்றுக்குப் பத்தாகக் கறந்துகொண்டு அந்த மந்திரவாதிகள் சென்றார்கள்.

மறுநாள் பூசை போடப்பட்டது. ''பூசையில் மந்திரித்த திருநீறு கொண்டுவரப்பட்டது. புத்திசாலியாகிய புனிதவதி அதை மறுப்பதில் பயனில்லை என்று சொல்லி அதனை அணிந்துகொண்டாள். அன்று மாலை எல்லாரும் ஆலயத்திற்குச் சென்றார்கள். புனிதவதி என்ன நடக்கப்போகிறது என்று வியப்புடன் பார்த்துக்கொண்டு சென்றாள். யந்திரத்தின் முன்னால் சில பெண்கள் தலைவிரித்துக்கொண்டு அலங்கோலமாக ஆடிக்கொண்டிருந்தார்கள். மந்திரவாதி சிலரைக் கசையால் அடித்தான். அதனைப் பார்த்த புனிதவதி நெஞ்சழிந்தாள். தன் சகோதரிகள் இவ்விதமாக நடத்தப்படுகிறார்களே என்று பரிதவித்தாள். அவ்வடிகள் அவர்களுக்குப் படுவதில்லை. பேய்களுக்குத் தான் படும் என்று அங்கு பேசிக்கொண்டார்கள். ஆனால் அதை அவள் நம்பவில்லை. சில பெண்கள் நான் போகிறேன், போகிறேன்'' என்று கத்தினார்கள். சிலர் கற்களைத் தூக்கிக் கொண்டு வெளியே ஓடினார்கள். அருகிலே முருகப்பர் முதலியோர் உட்கார்ந்தார்கள். புனிதவதியையும் யந்திரத்தின் முன்னால் உட்காரவைத்தார்கள். அவளுக்கோ யாதொரு உணர்ச்சியும் வரவில்லை. இந்தச் சடங்கு எல்லாம் வெறும் நாடகம் என்று எண்ணி மனதிற்குள் புன்னகை செய்து கொண்டிருந்தாள். பூசாரியும் மந்திரவாதியும் என்னென்னமோ மந்திரங்களை உச்சரித்தார்கள். ஒன்றும் ஆகவில்லை. முதல் நாள் அவர்கள் அடிக்கத் துணியவில்லை. இறுதியில் இந்தப் பேய் மிகவும் பலமான பேய், அதற்கு வேறு மந்திரப்பூசை போடவேண்டும் என்று மறுநாள் வரச்சொன்னார்கள் குடும்பத்தார் விடுதிக்குத் திரும்பிவிட்டார்கள்.

அடுத்தநாள் கோயிலுக்கு அபிஷேகாதிகள் வெகுமும்முரமாகச் செய்யப்பட்டன. மந்திவாதிக்கும் இரண்டு மடங்கு சாமான்களும் பணமும் கொடுக்கப்பட்டன. அன்றும் பூசை நடந்தது. யாதொன்றும்

பலிக்கவில்லை. புனிதவதிக்குப் படிப்பினைத் தரவோ வேறு எந்த காரணத்திலோ மற்ற பெண்களுக்குப் பொறுக்க முடியாத கசையடி விழுந்தது. அவர்கள் அழுகை பேய்களின் அழுகையாகச் சொல்லப்பட்டது.

மறுநாள் மந்திரவாதியின் மனைவி புனிதவதியினிடம் வந்தாள். வெகுதூரம் போதனை செய்தாள். புனிதவதி எதற்கும் இசையவில்லை. அன்றிரவு நடந்த பூசையில் மந்திரவாதி புனிதவதியை ஒருஅடி அடித்துவிட்டான். இவள் அடி பொறுக்க முடியாமல் வீரிட்டாள். கந்தப்பனுக்கோ இதைச் சகிக்கமுடியவில்லை. பெற்றோர்கள் என்ன செய்வார்களோ என்று அஞ்சி வெளியே சென்றுவிட்டான். பேய் போனாலும் சரி, போகாவிட்டாலும் சரி, இந்த அநீதி வேண்டாம், ஊருக்குத் திரும்பிவிடலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தான்.

மந்திரவாதியும் பூசாரியும் பார்த்தார்கள். இவர்களிடம் தங்கள் ஜபம் சாயாது என்று எண்ணி வேறொரு தந்திரம் செய்யத் தொடங்கினார்கள். மறுநாள் அவன் மனைவி தனியாகப் புனிதவதியிடம் வந்து வெகு நேரம் உபதேசித்தாள். இனிமேல் கசையடி அதிகமாகும். அதை வராமல் காப்பதே நல்லது பேய் ஆடுகிறவள் போல் பாசாங்கு செய். மந்திரவாதி ஒரு போலிக் கல்லைக் கொடுப்பான். அதை எடுத்துக் கொண்டுபோய் கோயிலுக்கு வெளியே எறிந்து விடு. பேய் போனதாக சொல்லி விடுகிறோம். இல்லாவிட்டால் உன் மாமியார் ஒத்துக் கொள்ள மாட்டாள். நீயும் கசையடிக்குத் தப்ப முடியாது. உன் கணவன் பேசினாலும் அது செல்லாது என்றாள்.

புனிதவதி இதனை ஆலோசித்தாள். வெகு புத்திசாலியாதலால் இந்த அறிவில்லாத மூடபக்தியுள்ளவர்களிடம் தப்பி விடுவதற்கு இதுமுறை என்று சொல்லி ஒத்துக் கொண்டாள். மறுநாள் இரவில் மனைவி கூறினபடியே நடந்தது. புனிதவதியும் செய்தாள். கல் எறியப்பட்டது. பேய் போய்விட்டது என்று வெற்றிப் பறை அடிக்கப்பட்டது. குடும்பம் நம்பிற்று. பார்த்த மக்கள் நம்பினார்கள். மந்திரவாதிக்குப் பெரும் தொகை கிடைத்தது. ஆனால் உண்மை புனிதவதிக்கும் மந்திரவாதி, அவள் மனைவி இவர்களுக்கே தெரியும்.

அடுத்த நாளே குடும்பம் கொடுவாயிலுக்குச் சென்றது. மகிழ்ச்சியினாலே விருந்தும் வைக்கப்பட்டது. புனிதவதிக்கும் மகிழ்ச்சிதான். தன் கணவனிடம் சொல்லித் தன் தாயார்வீடு சென்றாள். கந்தப்பனும் அங்கே சில நாள் வசித்தான். ஒரு ஆங்கில மருத்துவனிடம் அவள் கையைககாட்டி சில நல்ல மருந்துகள்

உண்டாள். இருவரும் சில ஊர்களுக்கும் யாத்திரைசென்று மன நிம்மதியோடு சுற்றினார்கள். உடலும் தேறிற்று. சில நாளில் ஊர் திரும்பினார்கள். கரு வாய்த்தாள். நல்ல ஆண்மகவைப் பெற்றாள். குடும்பம் மகிழ்ச்சி அடைந்தது.

முதியோர் கோயிலில் பிசாசுபோயிற்று என்று நம்பினார்கள். ஆனால் உண்மை புனிதவதிக்குத்தான் தெரியும். இவ்வித மோசடி வியாபாரமும் நடக்கிறது. மக்களும் நம்புகிறார்கள் அல்லவா என்று அவள் எண்ணிச் சில நாள் நொந்து கொள்வாள்.

# 13

# விடா முண்டன்

என் வீட்டின் வெளித்தாழ்வாரத்தில் ஒரு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தேன். சிறிது நேரத்தில் தெருவின் வழியாகச் சென்று கொண்டிருந்த ஒரு பெரியவர் என்னைப்பார்த்து விட்டார். அவருடைய முகம் ஏதோ முன் பார்த்தது போலத் தெரிந்தது. ஆனால் அவர் இன்னார் என்று எனக்கு ஞாபகம் வரவில்லை. சென்று கொண்டிருந்தவர் வீட்டு வாயிலில் தொங்கிக்கொண்டிருந்த பெயர்ப் பலகையைக் கண்டார். உடனே என்னிடம் வந்தார். நானோ எனக்குத் தெரியாமலே வணக்கம் செய்தேன். அவரும் பிரதி வணக்கம் செய்துவிட்டு என்னை நோக்கிப் பேசத்தொடங்கினார்.

''சுவாமி, என்னை அடையாளம் தெரியவில்லையா?'' என்றார். நானோ என் தலையைச் சொரிந்தும் பார்த்தேன் ஒன்றும் தெரியவில்லை.

''மன்னிக்க வேண்டும், ஞாபகத்திற்கு வரவில்லை. தாங்கள் யாரோ? பிசகாக எண்ணிக் கொள்ள வேண்டாம்.''

''சுவாமி, பல ஆண்டுகளாக நாம் இருவரும் ஒரு வகுப்பில் வாசித்தோம். நான் தான் நடராசன். 1910ல் இரண்டாம் வகுப்பில் படித்தோம். அப்போது ஒருநாள் சுந்தரம்ஐயர் நீங்கள் ஒரு கேள்விக்கு விடை கூறாததனால் உங்களை அடிக்க வந்தார். நான் மெதுவாய் உங்கள் காதில் விடை ஊதி விட்டேன். நீங்கள் சொல்லித் தப்பித்துக் கொண்டீர்கள்.''

நான் எப்போதும் நல்ல ஞாபசக்தி உடையவன் என்று என்னையே புகழ்ந்து கொண்டிருப்பதுண்டு. சிறு சிறு சம்பவங்களையும நான் எளிதில் மறக்க மாட்டேன். ஆனால் இதுவோ ஞாபகம் இல்லை.

''சுவாமி! ஞாபகம் இல்லை, ஒரு வேளை இருக்கலாம்''

''மற்றொன்று சொல்லுகிறேன். 1914-ம் ஆண்டில் நான்காம் வகுப்பில் வாசித்தபோது உங்களை வாத்தியார் பெஞ்சியில்

நிற்கச்சொன்னார். நான் அவர்களிடம் மன்றாடி பெரிய மனிதர்கள் வீட்டுப்பிள்ளைகளைப் பெஞ்சியில் ஏற்றுதல் தப்பு என்று கெஞ்ச அவரும் ஒத்துக்கொண்டார்.''

''சுவாமி, எனக்கென்னமோ இவைகள் ஞாபகமே இல்லை. நான் 1910-இல் 2-ம் வகுப்பும் 1914-இல் நான்காம் வகுப்பில் வாசித்ததில்லை. ஒரு வகுப்பிலும் தேராதிருந்த தில்லை. அந்த ஆண்டுகளும் சரியல்ல, உபாத்தியார் பெயரும் சரியல்ல.

''அப்படியா, நான் ஆளை பிசகாக நினைத்தேன். பொதுவாக அவ்விதம் செய்ததில்லை. உங்களை நன்றாக அறிவேன். நீங்கள் இத்தனை சுலபத்தில் என்னை மறக்க முடியாது'' என்று தீனக்குரலில் பேசினார்.

''சுவாமி, ஏதோ இருக்கலாம். மன்னிக்க வேண்டும் வந்த காரியம் யாதோ?''

நான் நல்ல உத்தியோகத்தில் இருந்தேன். ஏதோ ஒரு சனீச்சுவரன் வந்தான். பொல்லாத காலம் வேறொருவர் செய்த பிசகுக்காக நான் தண்டனை அடைந்தேன். இப்போது வேலையில்லாமல் இருக்கிறேன்.

''பிறகு?''

''வேறொன்றும் இல்லை. இன்று என் தகப்பனார் திதிநாள். என் சுற்றத்தார்களை எல்லாம் எண்ணிப் பார்த்தேன். கால் எடுத்துவைக்க வெட்கமாயிருக்கிறது. உங்கள் ஞாபகம் வந்தது. நல்ல நிலைமையில் இருக்கின்றீர்கள். நண்பர்களைப் போல் வேறு எவர் உதவுவார்கள். இன்று சடங்கினை நிறைவேற்றிக் கொடுத்தால் புண்ணியம் உங்களுடையதே'' என்றார்.

இக்கதையைக் கேட்டதும் நான் என்ன செய்வேன். வந்தவர் அன்னியனாக இருந்தாலும் பிதிர்காரியத்தை நிறைவேற்றிக் கொடுப்பது புண்ணியம் தானே என்று எண்ணி வீட்டுக்குள்ளே சென்று ஐந்துரூபாய் எடுத்துக் கொடுத்தேன். என்னை வணங்கி நன்றி செலுத்திவிட்டுச் சென்றார்.

மூன்றுமாதம் கழிந்தது. மறயறாரு நாள் என் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அவரே திரும்பவும் அதே வழியில் சென்று கொண்டிருந்தார். என்னைப் பார்த்துத் திண்ணைக்கு வந்தார் எதிரே ஒரு நாற்காலியில் அமர்ந்தார்.

''சுவாமி, உங்களைப் பார்க்கக் கொடுத்து வைத்தேன். வெகு நாளாகப் பார்க்கவில்லை நாம் இருவரும் ஒரு ஆபீசில் வேலைசெய்தோமே. ஞாபகம் இல்லைபோல் இருக்கிறது'' என்றார்.

''எந்த வருஷத்தில் சுவாமி?'' என்று கேட்டேன்.

''1925-ல் யோசித்துப் பாருங்கள். நமது தலைவர் உம்முடைய பிரதியில் ஒரு பிசகு இருப்பதாகக் கண்டித்ததில் நான் உங்களுக்கு உதவிக்கு வந்து அவர் பிசகு அல்ல என்னுடையது என்று சொல்லி உம்மைத் தப்புவிக்கவில்லையா'' என்றார்.

என்னை எப்போதும் பிசகு செய்பவனாகவும் இவர் என்னைத் தப்புவிக்கிற உதவியாளாகவுமே கதை கட்டுகிறார் என்று எண்ணினேன்.

''சுவாமி, ஞாபகம் இல்லை, எநத ஆபீசு, தலைவர் பெயர் என்ன என்று கேட்டேன்.''

''அதுதான் ஞாபகம் இல்லை. யோசதது்ப் பார்த்தேன். வரமாட்டேன் என்கிறது. எனக்குச் சிறிது ஞாபகப் பிசகு வருகிறதுதான். வெகுநாள் ஆயிற்றல்லவோ?''

சரி இவ்வளவு தான் இவருடைய ஜம்பம் என்று எண்ணினேன். ஆனால் ஒன்று தெரிந்தது. தன் பேரில் பிசகு எப்போதும் வருவதில்லை. பிறர் பேரில் பிசகும் காட்டி அதற்குத் தன்னை பரோபகாரச்சீலனுமாகச் செய்து கொள்ளுகிறாரே என்று எண்ணி, இப்படிப்பட்டவரை எதிர்த்துப் பேசிப் பயனில்லை என்று வாளாவிருந்தேன். ஆனால் அவரோ விட்டவரல்ல.

''சுவாமி என் ஞாபகமறதியை மன்னிப்பீர்கள், நான் இப்போது கெட்டுவிட்டேன். பொல்லாத வேளை எனக்கு வந்தது. என் வேலை போய்விட்டது. இப்போது எங்கு பார்த்தாலும் வேலையில்லாத் திண்டாட்டம் அல்லவா? அது எனக்கும் ஏற்பட்டிருக்கிறது. யாரிடம் சொல்வது கடவுள் சோதிக்கிறார்.''

''சரி, தங்கள் கதையை கேட்க விசனமாகத் தான் இருக்கிறது. உண்மை சொல்லி விட்டால் காரியம் சித்திக்குமோ.''

''என்ன சொல்லட்டும், இன்றைக்கு என் தாயார் திதி அதை எப்படி நடத்தாமல் இருப்பது. ஏதோ ஒன்றுக்குப் பாதியாவது செலவு செய்து நடத்தலாம் என்று இருக்கிறேன். உறவினர் பக்கம் செல்வதோ முடியாத காரியம் தங்களைப் போன்ற பழைய நண்பர்களே ஆகச்

கூடியவர்கள். 'உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டாம்' என்று கம்பர் சொல்ல வில்லையா. என்றார்.

ஏது இவர் தமிழையும் மறக்கவில்லை போல் இருக்கிறது. இருந்தாலும் ஔவையாருக்கும் கம்பருக்கும் பேதம் தெரியாத ஆசாமி என்று நினைத்தேன்.

''சுவாமி, மேற்கோளும் கீழ்க்கோளும் வேண்டாம். சங்கதி சொல்லும்'' என்றேன்.

''ஏதோ காரியம் நடத்தி வைத்தால் போதும். இந்தப் பணம் கொண்டு போய் தான் அரிசி பருப்பு முதல் வாங்கிக் கொண்டுத் திதி செய்ய வேண்டும்'' என்று அழாத அழுகையில் பேசினார்.

பஞ்சதந்திரத்து நீள்செவியன் போல நானும் நடந்து கொண்டேன்; அவருடைய நிலைமை என் மனம் உருகினது. உடனே வீட்டிற்குள் சென்று ஐந்து ரூபாய் கொண்டு வந்து கொடுத்தேன். வந்தனம் சொல்லிவிட்டுப் பணத்தைப் பெற்றுக்கொண்டு சென்றான்.

மீண்டும் மூன்று மாதங்கள் கழிந்தன. ஒரு நாள் என் அறையில் உட்கார்ந்து கொண்டு தமிழ் நூல் வாசித்துக்கொண்டிருந்தேன். யாரோ வந்து கதவு தட்டும் சத்தம் கேட்டது. ஆள்காரி கதவு திறந்தாள். முன் என்னிடம் திதிக்காக இரு முறை பணம் பெற்ற அதே ஆசாமி வந்தார். வணக்கம் செய்து எதிரே உட்கார்ந்தார்.

''சுவாமி, என்ன விசேஷம்'' என்றேன்.

''பார்த்து வெகு நாள் ஆயிற்று. பார்த்துவிட்டுச் செல்லலாம் என்று வந்தேன்'' என்றார்.

இந்தத் தடவை என்ன புதிதாகக் கதை கட்டப்போகிறார் என்று வியந்தேன். ஆனால் கயிறு திரிப்பதில் இவர் கெட்டிக்காரர் என்று எண்ணினேன். புதுக்கதை ஒன்றும் கட்டாமலே ''சுவாமி தங்களிடம் தான் வந்தேன். இன்று ஒரு திதி என்ன செய்யட்டும். என் மூத்த மனைவிக்கு இன்றுதான் சிராத்தம். உமக்குப் புண்ணியம்'' என்றார்.

புதுக்கதை இல்லாவிட்டாலும் திதி என்பது போக வில்லை. தகப்பனார், தாயார் இப்போது மனைவி இன்னும் எத்தனை திதிகள் இவருக்கு உண்டோ என்று பயந்தேன்.

என்ன செய்வது! இல்லை என்று சொல்ல மனம் வரவில்லை. மூன்று ரூபாய் கொடுத்து அனுப்பினேன்.

இரண்டு மாதம் சென்றது. நான் பட்ட வியப்புக்கு அளவேயில்லை. மீண்டும் அதே ஆள் என் முன் தோன்றினார். இந்தத் தடவையும் யாதொரு கதையும் அளக்கவில்லை. சட்டியில் இருந்தால் தானே அகப்பைக்கு வரும்.

''சுவாமி, மன்னிக்க வேண்டும். என்னை இந்த சங்கடத்திலிருந்து எப்படியாவது தப்புவிக்க வேண்டும்'' என்று தீனக் குரலில் சொன்னார்.

''என்ன சுவாமி, அப்படிப்பட்ட சங்கடம் வந்தது'' என்று கேட்டேன்.

''காலம் கெட்டுவிட்டது. ஒரு காசுக்கும் வழியில்லை. இன்றைக்கு என் தகப்பனார் திதி. தாங்கள் தான் கெதி'' என்றார்.

மறுபடியும் திதிக் கதைதான். ஆனாலும் எட்டு மாதத்திற்குள் எவ்விதம் தகப்பனார் திதி வரும் என்று எண்ணினேன்.

''சுவாமி, எங்கள் குடும்பங்களில் எல்லாம் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒரு முறை தான் திதி வருகிறது. உங்களுக்கு எட்டு மாதங்களில் வருகிறதாகத் தோன்றுகிறதே'' என்றேன்.

''அப்படியல்ல, சுவாமி, என் தகப்பனார் இறந்தது ஆனி மாதம் திரிதியை அன்று. இன்றைக்கு ஆனி திரிதியை அல்லவா? ஆகவே திதி வராதா என்று வற்புறுத்தினார்.

எனக்கோ ஆத்திரம் பொங்கியது. எவ்வளவு நாள் இவர் இப்படி வஞ்சித்துப் பிழைக்க முடியும். இவருக்குப் புத்தி புகட்ட வேண்டும் என்று நினைத்து விர்ரென்று எழுந்து வீட்டுக்குள் சென்று கணக்குப் புத்தகத்தை எடுத்து வந்தேன்.

''சுவாமி, கணக்குப் பார்த்துச் சொல்லுகிறேன். இன்றைக்கு 8 மாதங்களுக்கு முந்தி 5 ரூபாய் நன்கொடை பெற்றிருக்கிறீர்கள். கார்த்திகை மாதத்தில் 5 ரூபாய் செலவு எழுதியிருக்கிறது'' என்றேன்.

''ஒருவேளை வேறொருவர் ஏழை என்னைப் போன்றவர் பெற்றிருக்கக்கூடாதா?'' என்று மீண்டும் கேட்டார்.

''சுவாமி, அப்படியல்ல, நேரிலே பாருங்கள் சுப்பையர் தகப்பனார் திதிக்குக் கொடுத்தது ரூ.5 என்று எழுதியிருக்கிற தல்லவா? நீங்கள் தானே உமது பெயர் சுப்பையர் என்று சொன்னீர்கள் அல்லவா'' என்றேன்.

இதைப்பார்த்த பிறகு சுப்பையர் ஒன்றும் பேசவில்லை மௌனமாகி விட்டார். வெலவெலத்துப் போனார். இவர் கணக்கும் எழுதிவைப்பார். அதில் தன் பெயரும் இருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை.

ஆனால், அவர் விட்டுப் போகவில்லை. சிறிது நேரம் உட்கார்ந்துக் கொண்டே யிருந்தார். என்ன விடாமுண்டன் போல இருக்கிறாரே என்று நினைத்தேன். சிறிது நேரம் பொறுத்து பச்சாத்தாபத்துடன்,

''சுவாமி, என்னை மன்னியுங்கள். நான் செய்தது தப்புத்தான். ஒப்புக்கொள்கிறேன். வறுமைக் காரணத்தால் செய்தேன். அதற்குநானா பொறுப்பு. அவனை, என்னை உண்டாக்கினவனைக் கேட்க வேண்டும். இன்று வீட்டில் சாப்பாட்டிற்கே வழியில்லை. என் மனைவி பிள்ளைகள் சாகிறார்கள். எப்படியாவது ஏதாவது கொடுத்துத் தான் தீரவேண்டும்'' என்று மன்றாடினார்.

மனம் இரங்கிற்று. ஒரு ரூபாய் கொடுத்தேன். ''இனி மேல் என்னிடம் வரவேண்டாம். இந்தப் பொய் எனக்குப் பிடிக்கவில்லை. இனியாவது மனசாட்சிக்கு விரோதமாய் நடந்து கொள்ள வேண்டாம்'' என்று சொன்னேன்.

பிறகு ஊரில் விசாரித்தேன். அவர் பெயர் சுப்பையர் என்பதும் பொய். என்னைப் போல் திதி என்று நம்பி கொடுத்த புண்ணியவான்கள் பல பேர். ஆனால் ஒருவரும் இரண்டு தடவைக்கு மேல் ஏமாந்ததில்லை. நான் தான் நான்கு தடவை ஏமாந்தேன். அவர் திரும்பி என்னிடம் வரவில்லை. வந்தால் ஒரு காசும் கிடைக்காது என்று அறிவார்.

படிப்பவரே, இவரை நீங்கள் கண்டதில்லையா? காண்டிருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். காணு விட்டால் உமது துரதிட்டம்தான். இப்படிப்பட்ட சுப்பையர்கள் நாட்டில் பலபேர் இருக்கிறார்கள். இவர்கள் தொலைந்தால் ஒழிய நாட்டிற்கு மதிப்பு வராது.

# 14

# செடில் ராட்டினம்

முத்துச்சாமி மிகவும் செல்வமாக வளர்ந்தவன். அவனுடைய குடும்பம்தான் அவ்வூரிலேயே பெரிய பண்ணை, பண்ணையார் என்று ஊரார் குறிப்பிடுவார்களே ஒழிய பெயர் சொல்லிக் கூறவே மாட்டார்கள். நல்ல வாலிப தருணம், பனைமரம் போல் வளர்ந்திருந்தார். கை கால்கள் தேங்காய் போலத் திரண்டுருண்ட தசைகளைக் கொண்டவை. மீசை இப்போதுதான் முளைக்கத் தொடங்கியது. சிறிது மாநிறம். அவன் குலத்திலேயே அவன்தான் மிக்க அழுகுவாய்ந்தவன் என்று கூறலாம். பண்ணை வீட்டை அரண்மனை என்றே ஊரார் கூறுவதுண்டு. அதற்கு ஏற்றபடி வெகு பெரிதாகவும் உறுதியாகவும் கட்டப்பட்டிருந்தது. அத்தனைப் பெரிய வீட்டில் இவனும் இவனுடைய தாயாருமே குடியிருந்தார்கள். தாயாரோ முத்துச்சாமியை ஒருகணமும் விட்டுப் பிரிந்திருக்க இசையாள். மகனுக்கு என்ன விபத்து ஏற்பட்டு விடுமோ என்று கண்ணும் கருத்துமாக இருப்பாள்.

''அம்மா நம்ம மலையிலே தேரோட்டமாமே, போகலாமா?.'' என்றான் முத்துச்சாமி.

''குழந்தே, சாப்பிட்டுப் படுத்துத் தூங்கேன். தேரோட்டம் பாத்ததில்லையா என்ன'' என்றாள் தாயார்.

''அல்ல, அம்மா, இந்த ஆண்டிலே புது பண்டார சன்னிதி என்னென்னமோ வேடிக்கைகளை வைத்திருக்கிறராம். பொய்க்கால் குதிரை, நையாண்டிமேளம், தஞ்சை நாதசுரம், வாணவேடிக்கை எல்லாம் உண்டாம்' நான் கண்டிப்பாய்ப் போகவேணும்.

''பையா, இவையெல்லாம் பார்த்திருக்கிறாயே, வேண்டாம். இப்போது எனக்கென்னமோ மனசு வரவில்லை. அடுத்த விழாவிற்குப் போவோம்'' என்று மறுத்தாள்.

''கூடவே கூடாது. போய்த்தான் தீரவேண்டும்'' என்று மன்றாடினான் முத்துச்சாமி. ''சரி அப்படியானால் கூட்டிச்

செல்லுகிறேன். சிற்றுண்டி சாப்பிடு'' என்று சொல்லிச் சிற்றுண்டியை ஒரு தட்டில் வைத்துவிட்டு ஆள்காரனை அழைத்து வண்டியைப் பூட்டச்சொன்னாள். அவள் அவனைத் தனியே அனுப்ப விரும்பவில்லை.

இரட்டைமாட்டுவண்டி வெகு சொகுசாகச் செய்யப்பட்ட வண்டி, இரண்டு காளைகள் பூட்டப்பட்டு சலங்கைகள் ஒரு பர்லாங்கு தூரம் கேட்க விசைவண்டிபோல ஓடிற்று. வழிபோக்கர்களுக்கெல்லாம் இது பண்ணையார் வண்டி என்று தெரியும். பயபக்தியுடன் ஒதுங்கிச் சென்றார்கள். வெகுவிரைவில் மலையடிவாரத்தில் கோயில் வாயிலண்டை பண்ணையார் விடுதியின் முன்னர் நின்றது. முத்துச்சாமியும் தாயாரும் விடுதிக்குள்ளே சென்று ஒரு அறையில் அமர்ந்தார்கள். ஆலய மணியக்காரனுக்குப் பண்ணையார் வந்த செய்தி உடனே எட்டியது. வந்து பேட்டி கண்டுவிட்டு ஆலய பிரசாதம் குருக்கள் மூலமாக இருவருக்கும் சமர்ப்பித்துவிட்டுச் சுவாமி தேரோட்டத்திற்கு முந்தி சதுர்க்கச்சேரி நடக்கிறதென்று சொல்லி அதற்கு வரும்படி அழைத்து விட்டுச் சென்றான். பண்ணையார் குடும்பத்திற்கு ஆலயத்தில் காவல் மிராசு பாத்தியம் பரம்பரையாக உண்டு. அதற்காகப் பண்டை அரசர் காலம் முதல் பல நிலங்கள் மானியமாக விட்டிருந்தார்கள். பண்ணையார் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் சுற்றுப்பக்கத்துக் குடிகள் பயபக்தியுடன் வணங்கிவிட்டுச் சென்றுவிடுவார்கள்.

சதுர்க்கச்சேரி நடப்பதற்கு முந்தி மணியக்காரன் மறுமுறை ஆள் அனுப்பினான். வந்த அலுப்பினால் தாயார் இளைப்பாறிக் கொண்டிருந்தாள். முத்துச்சாமி ஆலயத்துள் அலங்கார மண்டபத்தில் கூட்டிச் செல்லப்பட்டான். கூட்டமோ சொல்லி முடியாது. புதிதாக ஒரு இளந்தாசி அன்று நடனம் செய்கிறாள் என்றால் யார்தான் வரமாட்டார்கள். சரியாக எட்டு மணிக்கு நடனம் தொடங்கியது. அலங்காரமண்டபம் வெகு விமர்சையாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. சுவாமியும் சகல நகைகளும் பூட்டப்பட்டு பரிபூரண சாந்நித்தியம் பெற்றிருந்தார். ஒருபுறம் பண்டார சன்னிதி சர்வாலங்கார பூஷிதராக வீற்றிருந்தார். தங்கத்தில் வைரங்கள் இழைத்த உருத்திராட்சமாலைகள், கைவிரல் நிறைய வைரமோதிரங்கள், வடிந்தகாதில் வைர மகாகுண்டலங்கள், தலையில் தங்கச்சரிகை தலைப்பாகை, இடையில் காவிப்பட்டு அம்பரம், இந்த ஒப்பற்ற சீரில் கம்பீரமாக வீற்றிருந்தார். சுற்றிலும் பெரிய பெரிய மிராசுதாரர்கள் தங்கள் தங்கள் மனதுக்கேற்றபடி நல்லுடைகள் சிறந்து காட்ட வீற்றிருந்தார்கள். முத்துச்சாமி சென்றவுடனே பண்டாரசன்னிதியைக்

கண்டு வணங்கினான். அவரும் வெகு கம்பீரமுடன் தங்கக்கிண்ணத்திலிருந்து ஒரு சிட்டிகை திருநீறு எடுத்து வழங்கினார். முத்துச்சாமியும் அதனை ஏந்தி நெற்றியில் இட்டுக்கொண்டு தனக்கென்று ஒதுக்கிவைத்திருந்த இடத்தில் அமர்ந்தான். பண்டார சன்னிதி சைகை செய்தார். அருச்சகர் தீபாராதனை செய்து திருநீறு வழங்கினார். முன்வரிசையில் அது வழங்கப்பட்டது. எல்லாரும் அமர்ந்தார்கள். மற்றொரு சைகை செய்தார். ஒரு அழகிய யுவதி சகல அணிகளையும் தற்கால ரீதியில் அணிந்துகொண்டு சன்னிதானத்தில் தோன்றினாள். பண்டார சன்னிதிக்கு ஒரு கும்பிடு போட்டு மற்றவர்களைப் பார்த்து மற்றொரு கும்பிடு போட்டு பரதநாட்டியம் ஆடத்தொடங்கினாள்.

முத்துச்சாமியோ இவ்வளவு அழகுள்ள பெண்ணை இதற்கு முந்தி கண்டதே இல்லை. அழகைக் காட்டிலும் அவளுடைய நாட்டியச்சிறப்பு மிகவும் அவன் மனதிலே பட்டது. நாட்டியம் மாத்திரம் அன்று. அவளுடைய பாட்டும் கண்டத் தொனியும் அவனை வசீகரித்தன. பூம்புகார் பட்டினத்து வணிகச்சீமானை எந்த முறையில் மாதவியின் நடனம் இழுத்ததோ அதைவிடப் பதின்மடங்கு நமது முத்துச்சாமியை இந்த இளந்தாசி இழுத்தாள். ஒரு மணி நேரமும் ஒரு நிமிஷம்போல் பறந்தோடியது. தான் எந்த உலகத்தில் இருக்கிறோமோ என்று அவன் கனவு கண்டு கொண்டிருந்தான். பண்டாரச்சன்னிதி சைகை செய்தான். தாசி எதிரே நின்று வணங்கினாள். அவள் கையில் ஒரு பொன் மோஹராவைத் தந்தார். அதைப் பெற்றுக்கொண்டு மீண்டும் வணங்கிச் சென்றாள். ஏனையோரும் பரிசுகள் வழங்கினார்கள். முத்துச்சாமிக்கு ஒன்றும் தோன்றவில்லை. உடனே தன் கையில் அணிந்திருந்த ரூ. 10000 பெறுமான வைர மோதிரத்தை எடுத்துக்கொடுத்தான். அவளோ அதைப் பெற்றுக்கொண்டு ஒரு புன்சிரிப்பு சிரித்துவிட்டுச் சென்றாள். முத்துச்சாமிக்கு தேவேந்திர போகம் கிடைத்தாற்போல எண்ணினான். நடனம் முடிந்தது. சுவாமி தெருவில் பவனிக்கு எழுந்தருளினார். எல்லாரும் கலைந்தனர். பண்டாரசன்னிதியிடம் விடைபெற்றுச் சென்றதும் முத்துச்சாமி அறியவில்லை. நேராக விடுதி சேர்ந்தான். தாயார் உறங்கிக்கொண்டிருந்தாள். ஒன்றும் பேசாமல் சித்தப் பிரமை கொண்டவன்போல படுக்கையில் படுத்துக் கொண்டான். வெளியே நடக்கும் ஆர்ப்பாட்டங்கள் கூத்துகள், பொய்க்கால், நையாண்டி முதலிய எந்த வேடிக்கையும் இவன் நினைவிற்கு வரவே இல்லை. தூக்கமின்றி இரவு முழுவதும் நடனக்காட்சியையே சிந்தித்துக்கொண்டு கிடந்தான்.

காலையில் தன் அந்தரங்க நண்பன் குப்புசாமியின் மூலம் இத்தாசியின் விவரங்களை விசாரித்தான். இவள் இந்த ஆலயத்திற்கே பரம்பரையாகச் சேர்ந்தவள் என்றும் இது வரை நடனம் கற்றுவந்தாள் என்றும், அன்றுதான் அரங்கேற்றப்பட்டவள் என்றும் தெரிந்தது. அவளை அடைய வேண்டும் என்ற பெரும் பித்துக்கொண்டான். ஆனால் எத்தனை திரவியம் கொட்டினாலும் அவள் தற்போது கிடையாள் என்று தெரிந்தது. அடுத்த கார்த்திகையில் ஆலயத்தில் நடைபெறும் திருவிழாவில் அவளுக்கு ஒரு பிரார்த்தனை உண்டென்றும் அது நிறைவேறினால்தான் அவள் தாசித்தொழில் செய்யமுடியும் என்றும் தெரிந்தது. இதனைக் கேட்டவுடன் முத்துச்சாமியின் நெஞ்சு அழிந்தது. உணவு முதலியவைகளையும் வெறுக்கத் தொடங்கினான். திருவிழா முடிந்ததும் தன் தாயுடன் ஊர்ப்போய்ச் சேர்ந்தான். நாளுக்கு நாள் இளைக்கவும் தொடங்கினான். தன் தாயுடன் சொல்லவும் அஞ்சினான். இதுவரை எந்தப் பொருளை இச்சித்தாலும் அவள் இல்லை என மாட்டாள். அவள் குணமோ மிகவும் புனிதமானது. குலஅறங்களைப் போற்றி வந்தவள். இந்தச் சொல்லை எவ்வாறு உரைப்பது என்று எண்ணி அவன் சொல்லவே இல்லை. நண்பர் மூலமாக எத்தனை முயன்றும் எதுவும் ஆகவில்லை. இறுதியில் பண்டாரசன்னிதியைக் கண்டு தன் அவாவை நிறைவேற்றிக் கொள்வதென்று நினைத்தான்.

ஒருநாள் பண்டாரசன்னிதி இருக்கும் மயிலுருவக் குன்றுக்குச் சென்றான். முன்னமே தெரிவித்திருந்ததனால் பண்டாரசன்னிதியின் பேட்டி எளிதல் கிடைத்தது. வழக்கப்படி, செலுத்தவேண்டிய காணிக்கைகளைச் செலுத்திப் பண்டாரசன்னிதியின் முன்னிலையில் அமர்ந்தான். உடல் நலம் முதலிய தொடக்கப் பேச்சுகள் எல்லாம் முடிந்த பிறகு சென்ற செய்தி பேசப்பட்டது.

சென்ற திருவிழாவிலே தேரோட்டத்தின்போது அத்தனை சிறந்த நடனத்தை ஏற்படுத்தியதைப் பற்றி பொதுமக்கள் சுவாமிகளை மிகப் போற்றுகிறார்கள் என்றான் முத்துச்சாமி.

''மிகச் சிறிய வயதாயிருந்தும் நாட்டியக்கலையின் நுட்பங்களை அறிந்து அதற்கு ஏற்ற பரிசு அளித்து உயர்ந்த குலதின் குணத்தையும் சிறந்த அறிவுத்தன்மையையும் வெளிப்படுத்தியது'' என்றார் பண்டாரசன்னிதி.

''அத்தனை சிறந்த நடனக்கலையாளை எந்த உலகத்தில் சுவாமிகள் கண்டுபிடித்ததோ?''

'அவள் பிறநாட்டாள் அல்லள். இதே ஆலயத்தில் திருத்தொண்டு புரியும் பரம்பரைக் குலத்தைச் சேர்ந்தவள். அவள் தாய் மிகப் பாண்டித்தியம் பெற்றவள். தன் மகள் புகழ்பெற வேண்டும் என்ற கருத்துடன் சிறந்த வித்துவான்களைக் கொண்டு கற்பித்தாள்.

''அப்படி ஆயின் இந்த மலர் ஏன் மோப்பார் இன்றி வாடவேண்டுமோ?''

''அதற்கு ஒரு பிரார்த்தனை உண்டு. அதுவும் உங்கள் குடும்பத்தை ஒட்டிய சரிதமே. ஆகவே அதை நீங்கள் கேட்க வேண்டியதுதான்...

''அப்படியாயின் அந்தப் பண்டைய மர்மத்தை வெளியிட்டால் மிகுந்த நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்'' என்று விநயமாகவும் ஆர்வத்தோடும் கூறினான்.

''உங்களைப் போன்ற அறிஞர்களுக்குக் கூறாமல் வேறு யாருக்குரைப்பது'' என்று பீடிகை போட்டு அடியிற்கண்ட கதையை கூறினார்.

இந்த ஆலயத்தில் அம்மைத்திருவிழா கார்த்திகைத் திங்களில் நடப்பதுண்டு. அப்போது செடில் ராட்டினம் என்ற அற்புதச் செய்கை நடைபெற்று வந்தது. அது நடந்தால் அம்மை களிப்புற்று நாட்டில் செம்மை விளைவிப்பாள். இராட்டினத்தில் சுற்றுவது மிகவும் கடுமையான தவம். அதற்கென்று தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு இளையதாசி ஓர் ஆண்டு முழுதும் போகம் கொள்ளாது திருவிழாவிற்கு ஒரு வாரத்தின் முன்னிருந்தே உபவாசம் இருக்க வேண்டும். திருவிழா நாளின்போது மிகப்புனிதத்தோடு திருமஞ்சனம் ஆடி சர்வாலங்கிருத பூஷிதள் ஆகி ஆலயத்திற்கு வரவேண்டும். அப்போது அம்மன் திருவுலாப் போந்து, நடுமலையில் உள்ள திருவோலக்க மண்டபத்தில் வீற்றிருப்பாள். முன்னால் 15 அடிக்கு செடில் ராட்டினம் ஒரு பலகைக் கல்லில் இணைக்கப்பட்டிருக்கும். அது பரவலாகவும், சுற்றும்; மேலும் கீழும் சுற்றும். அதில் அம்மங்கையைக் கட்டிவிடுவார்கள். பிறகு இருபுறங்களிலும் விரைவாகச் சுற்றுவார்கள். இவ்வாறு மூன்று முறை சுற்றி சுற்றினதே அவள் உரு அம்மன் முன்னிலையில் நிற்கும். அப்போது அம்மன் அருள்வரும். அர்ச்சகர் மூலமாகத் தக்க பரிசு அப்பெண்ணுக்குக் கொடுக்கப்படும். இத்திருவிழா உலகில் வேறு எங்கும் கிடையாது. இந்தப் பாடல் பெற்ற புனிதத் தலத்தில்தான் பண்டைக்காலம் முதல் நடைபெறுகிறது.

இப்படியிருக்கப் பதினைந்து ஆண்டுகளுக்குமுன் இந்தப் பெண்ணின் சிறிய தாயார் இந்த அருந்தவத்திற்குத் தெரிந்தெடுக்கப்பட்டாள். அவளும் நடனத்தில் மிகத் தேர்ந்தவள், ஓர் ஆண்டு முழுதும் அம்மன் சன்னிதியில் தனித்து நடனம் புரிந்துவந்தாள். அந்தக் காலத்தில் நடவடிக்கை பரிசுத்தமாக இருக்கவேண்டும். ஆனால் ஒரு தடவை தவறி விட்டாள். அதற்கு உன் தகப்பனாரே காரணம்.

"ஆ, அப்படியா என்ன நடந்தது?"

உன் தகப்பனார் கந்தசாமிக் களத்துவென்றார் மிகப் பழைய குடும்பத்தைச் சேர்ந்த செல்வச்சீமான். உங்கள் குலம் முன்காலத்தில் மன்னர் பிரானுக்குத் தொண்டுபுரிந்து பெரும் போர்களில் வெற்றி அடைந்ததினாலே களத்து வென்றார் என்ற விருது பெற்றிருந்தது. கந்தசாமி நற்குணம் பெற்ற சீமான். ஆனால் பெண்கள் விஷயத்தில் சிறிது சபலம் என்று பின்னால் அறிந்தேன். 15 ஆண்டுகளுக்குமுன் அந்தத் தாசியுடன் போக்குவரத்து வைத்திருக்கலாம். இராட்டினத் திருச்சேவைக்கு தெரிந்தெடுக்கப்பட்டதும் அவர் விலகி இருக்கவேண்டும். ஒருநாள் இரவு அம்மன் சன்னிதியில் ஆடிப்பாடி விட்டு வீடு திரும்பும்போது அவர் அவள்மீது மோகப்பட்டு ஒரு மோதிரத்தை அவள் விரலில் நழுவவிட்டார். அன்றிரவு எவரும் அறியாமல் அவளைத் தொட்டுவிட்டார். அச்செய்தி எவருக்கும் தெரியவில்லை. அடுத்து கார்த்திகைத் திருநாள் வந்தது. இராட்டினச் சேவை தயாராயிற்று, அந்த நாளில் இருந்த பண்டாரசன்னிதியும் எழுந்தருளியிருந்தார்கள். எல்லாம் சரியாக நடந்ததாக வெளியிடப்பட்டது. பெருத்த வாத்தியக் கோஷங்களுக்கு இடையில் அவளை இராட்டினத்தில் இணைத்துச் சுற்றினார்கள். இராட்டினமும் வெகு விரைவாகச் சுற்றியது. பல்லாயிர மக்களும் 'அர அர' என்று ஒலித்தார்கள். மூன்றாம் சுற்றின்போது வெடி விழுந்தாற்போல ஒரு ஒலி ஏற்பட்டது. அவளைப் பிணைத்திருந்த கட்டு முறிந்து போய் அவள் உடல் ஐம்பது கஜ தூரத்தில் போய் விழுந்தது. அத்தனை அழகாக இருந்த உடல் நசுக்கிய பூச்சிபோல் ஒரு குவியல் ஆயிற்று. ஆலயம் முழுதும் ஒரே இரைச்சல், திருவிழா நின்றது. என்ன விபரீதம் ஏற்படுமோ என்று மக்கள் பயந்து ஓடிவிட்டார்கள். அதிகாரிகள் வந்து விசாரித்தார்கள். ஆலயத்திற்கும் மடத்திற்கும் பெரும் செலவு ஏற்பட்டது. தற்காலிகமாக தெய்வாதீனம் என்று தீர்ப்பு சொல்லப்பட்டது.

"வேறு என்ன நடந்தது."

பொறுத்துக்கொள்ளுங்கள்; ஊரில் எங்கும் ஒரே பீதி. அடுத்த நாளே விஷசுரம் ஒன்று நாட்டில் புகுந்தது. அம்மன் சினம் சும்மா விடுமா? பலபேர் இறந்தார்கள். அதிலே முதலில் நோய் வாய்ப்பட்டு உயிர் துறந்தவர் உங்கள் தகப்பனார். அவர் காலம் அடைந்ததைக் குறித்து ஊரார் வியந்தார்கள். ஆனால் இந்த குட்டு மடத்திற்கு மாத்திரம் தெரியும். பிறருக்குத் தெரியாது. அந்த உதவி உங்கள் குடும்பத்திற்கு நாங்கள் செய்தோம்.

''மிகுந்த நன்றி உங்களுக்கு உரித்தாகும்.''

அப்போது நீ சிறு குழந்தை உன் தாயார் சிறந்த உத்தமி. பிரான் மலைக்கள்ளரில் உங்கள் குடும்பம் போன்ற உத்தமக்குடும்பம் எதுவும் இல்லை. அதிகாரிகள் உடனே இந்த இராட்டினச் சேவையை நிறுத்திவிட்டார்கள். சென்ற பதினைந்து ஆண்டுகளாக இல்லை.

பண்டாரசன்னிதி நினைத்துவிட்டால் எதுதான் முடியாது. செடில் ராட்டினம் நடத்தும்படி உத்தரவு கிடைத்து விட்டது. ஆனால் ஒன்றிரண்டு நிபந்தனைகள் போட்டிருந்தார்கள். இராட்டினம் பழுதின்றி இருக்கவேண்டும். அபாயமானால் பண்டாரசன்னி ஜவாப்தாரியாக இருக்க வேண்டும் என்பதே. உடனே பண்டாரசன்னிதிகள் கெட்டியாக ஒரு புது யந்திரம் செய்வித்தார். பிணைப்பு எஃகினால் செய்யப்பட்டது. முன் ஜாக்கிரதையாக அதிகாரிகளை அழைத்து இராட்டினத்தைப் பார்வையிடச் செய்தார். இந்தத் தந்திரம் யாருக்கு வரும். அதிகாரிகளும் இராட்டினம் பழுது இல்லை என்று உத்தரவாதம் கொடுத்தார்கள். பதினைந்து ஆண்டுகளாக நடைபெறாத இராட்டின சேவை இப்போது நடைபெறுகிறதென்றும் அதில் ஏறுபவள் ஒரு சிறந்த நாட்டியக்காரி என்றும் நாடெங்கும் பரவிவிட்டது. இதைப் பரவிவிடக் கம்பியில்லாத்தந்தி வேண்டியதில்லை. தானே மனோவேகத்தில் பரவிவிடும் அல்லவா?

கார்த்திகைத் திருநாள் வந்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து கூடினார்கள். பறம்புமலை ஒரு பெரிய நகரமாக விளங்கியது. காடுகள் எங்கும் கூடாராங்களும் குடிசைகளும் சந்தைகளும் கட்டிவிட்டனர். சகல விளையாட்டுப் பொருள்களும் உணவுப் பொருள்களும் குவிந்து விட்டன. வினோதங்கொண்ட நகைகளுக்குச் சொல்லவும் வேண்டுமோ? சமயப் பிரசாரங்களும் இடையிடையே நடந்தன. அதிகாரிகள் திருட்டு, நோய் முதலியவை பரவாமல் இருக்க வேண்டிய எச்சரிக்கைகள் செய்தார்கள். அந்த வட்டத்துப்

பெரிய அதிகாரியும் தன் தாயார் பாரியாள் முதலியவர்களுடன் தன் விடுதியில் ஒரு வாரத்திற்கு முந்தியே தங்கி இருந்தார்.

உற்சவமோ பத்துநாள் நடந்தது. பண்டாரசன்னிதி நேரில் வந்து நடத்தினார். தமிழ்நாட்டுத் துறவிகள் நூற்றுக்கணக்காக வந்திருந்தார்கள். அவர்களுக்கு எல்லாம் வேண்டிய வசதிகள் செய்யப்பட்டன. செடில் ராட்டினச் சேவை வந்தது. அதற்கு முந்தி ஒரு வாரமாகவே நடனமாது உபவசாம் ஏற்றுக்கொண்டு வெகு சாந்தத்துடன் இருந்தாள். இளவயது கடவுள் நம்பிக்கை மிகுதி, பிரார்த்தனையை நிறைவேற்றவேண்டும் என்ற உறுதி, இன்னமும் பாவ உலகிற்கு மனம் செல்லவில்லை. ஆகவே அந்த ஏழு நாளும் கடவுளைத் தொழுதவண்ணமாகவே இருந்தாள். அன்று மாலை 4 மணிக்குத் தேவி திருவுலா தொடங்கியது. ஊர்வலம் வந்து மலைமேல் நடுமண்டபத்தில் 6 மணிக்கு அம்மன் எழுந்தருளப்பட்டாள். இராட்டினம் செவ்வையாக அமைக்கப்பட்டது. உயர்ந்த ஆசனங்களில் பண்டாரசன்னிதி அதிகாரிகள் முதலியோர்கள் இருந்தார்கள். மிராசுதாரனாகையால் முத்துச்சாமிக்கு ஓர் ஆசனம் அமைக்கப்பட்டது. அருகிலே தாயாரும் இருந்தாள். 6-15 ஆனவுடன் நட்ன மங்கை சர்வ ஆபரண பூஷிதளாகி அம்மன்முன் கம்பீரத் தோற்றத்துடன் வந்தாள். முகத்தில் தூய ஒளி பிரகாசித்தது. அம்மனை நெஞ்சாரத் தொழுது இராட்டினத்தருகில் சென்றாள். முத்துச்சாமிக்கோ இவளை தூக்கு மேடைக்குக் கொண்டு செலுத்துகிறார்களே என்ற ஏக்கம் வந்தது. பொதுமக்களோ அவளைக் கண்டும், அவள் முக விலாசத்தைக் கண்டும் ஒரு தெய்வமாதோ என்று எண்ணி ஆரவாரித்தார்கள். ஒரு நிமிஷத்தில் அவளை அந்த ராட்டினத்தின் நடு வளையத்தில் பிணைத்தார்கள். அவளும் கம்பீரமாக நின்றாள். நன்றாகப் பிணைத்த பிறகு அந்தச் சட்டம் விரைவாக உருட்டப்பட்டது. அது தலைகீழாக உருண்டது. பிறகு பரவலாக சட்டத்தைத் திருப்பினார்கள். அதுவும் விரைவோடு திரும்பியது. பிறகு முழு இராட்டினத்தையும் மெதுவாகத் திருப்பினார்கள். அது இரண்டு சுற்றுச் சுற்றி மூன்றாம் சுற்றுச் சுற்றும்போது மக்கள் பேரிரைச்சலோடு ஆரவாரித்து வெகு கூர்மையோடு கவனித்தார்கள். முத்துச் சாமிக்கோ உயிர் உலகில் இல்லை. கனவு காண்கிறேனா என்று நினைத்தான். இந்தத் தண்டனை ஏன்? இந்த மெல்லியலாளுக்குக் கொடுக்கவேண்டுமோ! என்று பரிதவித்தான். அதிகாரிகள் பண்டாரசன்னிதி இவர்கள்மீது ஆற்றொணாத கோபம் கொண்டான். ஒரு நிமிஷம்தான். அடுத்த வினாடியில் இராட்டினம் அம்மனுக்கு எதிரே நின்றது. அதுவரையில்

மங்கையின் உருவம் எவருக்கும் தெரியவில்லை. ஏனெனில் இராட்டினத்தில் வேகம் அத்தனை விரைவாக இருந்தது. மங்கை மலர்ந்த முகத்துடன் நின்றாள். ஆனால் மயக்கம் கொண்டவள்போலத் தோன்றிற்று. உடனே அருச்சகன் மிக விலை பொருந்திய பட்டாடை, பிரசாதம் இவைகளை அவள் கையில் நீட்டினான். அவளும் பெற்றுக் கொண்டு வணங்கினாள். செடில் சேவை வெற்றியுடன் நிறைவேறிற்று. பண்டாரசன்னிதிக்கு மிகவும் மகிழ்ச்சி. அதிகாரிகள் பெருமை பேசிக்கொண்டார்கள். மங்கையை விடுவித்து எடுத்துக்கொண்டு சென்றார்கள். அவள் தாய் உச்சி மோந்து மிகவும் வணக்கத்துடன் வெற்றி மதம் பிடித்தவள்போல நடந்தாள்.

முத்துச்சாமிக்கோ எல்லாம் கனவாகத் தென்பட்டது. உலக வாசனை வருவதற்கு வெகுநேரம் ஆயிற்று. பிரசாதம் கொடுத்ததும் அறியான். தாயார் கைப்பிடித்து வெளி யேற்றும் வரை அவன் எந்த உலகத்தில் இருக்கிறான் என்று அறியவில்லை. எவ்விதம் தண்டிக்கப்பட்டாள், அவள் என்ன குற்றம் செய்தாள், என்று எண்ணின வண்ணமாக இருந்தான். காலை எழுந்ததும் திருவிழா போதும் என்று சொல்லி ஊர் திரும்பினான். அவள்மீது கொண்டிருந்த இக்கொடிய வழக்கத்தை நிறுத்த முயற்சி செய்வதே தன் பிறவிப் பயன் என்று கங்கணம் கட்டிக்கொண்டான். மங்கையும் தான் பெற்ற அனுபவத்தை முன்னிட்டு தாசித் தொழிலுக்கே செல்லாமல் இருந்துவிட்டாள்.

# 15

## சாமி சொல்கிறது

ஆறு மிகப் பரவலானது. நீரோ சுருங்கிய அளவில் ஓடுகிறது. ஏனைய அடிப்பகுதி முழுதும் வெண் மணல். அதில் அடிவைத்தால் சுடுகிறது. ஆற்றின் இரு புறங்களிலும் கரை உயர்ந்து இருக்கிறது. அவற்றில் புதர்கள் மிகுதியாக வளர்ந்திருக்கின்றன. புதர்களின் இடையில் ஒற்றை அடிப்பாதை ஆங்காங்கு ஏற்பட்டிருக்கின்றது. அதன்வழியே கடுகி நடந்து நீர்ப்பகுதிக்கு ஓடுகிறார்கள். அந்நீரில் அடிவைத்தவுடனே கடவுளே என்ன பாக்கியம் தந்தாய் என்று வாழ்த்திவிட்டுச் சிறிது நேரம் நின்று இளைப்பாறு கிறார்கள். நீரை பையப் பையக் கடந்து எதிர்க்கரையை அடைந்து அதில் ஏறுகிறார்கள். எதிரில் தோன்றுவது பெரிய பனங்காடு. இடையிடையில் புளியமரமும் வேப்பமரமும் நிழலைக் கொடுக்கின்றன. அவற்றின் நிழலிலே நின்று ஒற்றை அடிப்பாதையில் ஒருவர்பின் ஒருவராக ஆயிரக்கணக்கான மக்கள் செல்லுகிறார்கள். சிறிது தொலைவிலே நெருங்கிய சனத்திரள் தெரிகிறது. அனேக பறைகள் அடிக்கும் ஒலி வருகிறது. ஆனால் அவ்வொலியோ கண்டபடி அடிக்கும் அரக்கர் ஒலி அல்ல. காதுக்கு இனிமைத் தரும்படியானதும், தாளத்திற்கு அமைந்ததாகவும் இருக்கும் ஒரு ஒலி. தூரத்திலிருந்து கேட்கிறபடியால் பறைகளின் கொடுமை குறைந்து போய் தாளத்தின் இனிமையே கேட்கிறது இவைகளையெல்லாம் கேட்டுக் கொண்டு பெருங்கூட்டம் செல்கிறது. அவர்களிலே சுப்பனும் குப்பனும் இரண்டு வாலிபர்கள் செல்லுகிறார்கள்.

''குப்பா, இது என்ன, சிரமமாய் இருக்கிறதா? அதோ தெரிகிறதே அந்தத் தோப்பில்தான் திருவிழா நடக்கிறது. இனி நிமிஷத்தில் சென்றுவிடுவோம்'' என்றான் சுப்பன்.

''எனக் கென்னமோ அங்கே செல்வதற்கு மனம் வரவே இல்லை. உன்னுடைய நிர்ப்பந்தத்தின் பேரில்தான் வருகிறேன். நமது

உபாத்தியாயர் இப்படிப்பட்ட திருவிழாவில் பிசாசுகள் தான் நடனம் ஆடுகின்றன. தெய்வபக்தியுள்ளவர்கள் போகக்கூடாது. என்று நேற்று கூடச்சொல்ல வில்லையா? நாம் ஏன் அங்கு போய் பாவம் சம்பாதித்துக் கொள்ளவேண்டும்?''

''எதையும் ஆராய்ந்து தெரிந்துகொள்ள வேண்டும் அல்லவா? நமது முன்னோர்கள் எல்லாரும் அறிவீனர்களோ? அவர்கள் கொண்ட வழக்கங்களில் ஒன்றாவது சரியில்லையா? அவைகளை நேரில் பார்த்து உண்மை தெரிந்து கொள்ளலாம். கடவுள் நமக்குப் பகுத்தறிவு கொடுத்தருளியிருக்கிறார். அல்லவா? நமது உபாத்தியாயர் விவிலிய சமயத்தைச் சேர்ந்தவர் ஆனதனால் நம்மையும் அதில் இழுத்துக் கொள்ளுவதற்காக சமயம் கிடைத்தபோது எல்லாம் நமக்கு இவ்விதமாகவே போதிக்கிறார்.

''சரி, நாம் போய்ப் பார்க்கலாம்'' என்று பேசிக்கொண்டே இருவரும் திருவிழா நடக்கும் தோப்பண்டை சென்றார்கள்.

தென்பாண்டி நாட்டிலே தண்பொருநை ஆற்றுக்குத் தெற்கே சிறிது தூரத்தில் உள்ள ஒரு தேரியின் அருகில் ஒரு சிறு ஊர் உண்டு. அத்தேரியின்மீது தானாகவே முளைத்துள்ள பனைத் தோப்புகளில் பலனை எடுத்து பிழைக்கும் குடிகள் அங்கே வாழ்வார்கள். அதற்கு அடுத்து ஒருசிறு சேரி உண்டு. அதிலே சுப்பனும் குப்பனும் இரண்டு அடுத்தடுத்த கூறை வீடுகளில் பிறந்த பிள்ளைகள். மற்ற சேரிப் பிள்ளைகளைக் காட்டிலும் சிறிது அறிவும் தெளிவும் படைத்தவர்கள். வாரம் தோறும் அந்தச் சேரிக்கு வரும் வழக்கத்தைக் கொண்ட உபதேசிகன் இப்பிள்ளைகளின் பரந்த நெற்றியைக் கண்டு அவர்களை அடுத்த ஊரில் இருந்தகிறிஸ்தவப்பள்ளியில் சேர்த்து விட்டான். படிப்பு இலவசம். ஆகையால் மிக்க ஏழைகளாக இருந்து அங்கே படித்து எளிதில் ஏழாவது வகுப்பில் தேறிவிட்டார்கள்.

உபாத்தியாயர் அடிக்கடி பிசாசுகளைத் தொழக்கூடாது, அவர்கள் கோயிலுக்குப் போகக்கூடாது, உண்மையான கடவுளையே தொழ வேண்டும் என்று வற்புறுத்தினார். நாளாவட்டத்தில் சில பிள்ளைகள் ஞானஸ்நாநம் பெறுவார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு வேலையும் கிடைக்கும். சுகமாகவும் வாழ்வார்கள். இவ்விஷயம் எல்லாம் இவ்விரு பிள்ளைகள் அறிவார்கள். இருந்தாலும் உண்மையையே அறிய வேண்டும் என்பது இவர்களுடைய நோக்கம். இதனை நிறைவேற்றிக் கொள்ளவே இந்தநாள் திருவிழாவிற்கு ஏகுகிறார்கள்.

சிறிது நேரத்தில் இரண்டு நண்பர்களும் திருவிழாத் தோப்பை அடைந்தார்கள். ஒருபெரிய ஆலமரத்தின் கீழே ஒரு அகலமான மேடை இருந்தது. அதன் பேரிலே ஐந்து மாடங்கள் கட்டப்பட்டிருந்தன. சதுரக் கோபுரங்கள் போல அவைகள் உருவம் இருக்கும். செங்கல்லில் நான்கு பட்டைக்கொண்ட மாடங்கள் அடியிலே 2 அடி சதுர மாகவும் உச்சியில் 1 அடி சதுரமாகவும், உயரம் 3 முதல் 5 அடி கொண்டதாகவும் உள்ளன. நடுவில் உள்ளது 5 அடியும் இருபுறங்களிலும் 4,3-ம் கொண்ட இவ்விரண்டு மாடங்கள் இருந்தன. இவைகளுக்கு வெள்ளை அடித்து குங்குமமும் மஞ்சளும் தீட்டியிருந்தார்கள். பின்னாலே பச்சைப்பனை ஓலைகளால் வளைவுகள் (பிரவைகள்) கட்டி அலங்காரம் செய்திருந்தார்கள். மேலே பச்சை இலைகளால் பந்தல்போட்டு முன்னாலே மண்டபம்போல சிங்காரித்திருந்தார்கள். அம்மண்டபத்தின் முன்னிலையில் மூன்று கவை கொண்ட கால் நிறுத்தி, அதன்பேரிலே எரிகிற சட்டி நிறுத்தியிருந்தார்கள். மாடங்களைப் பெரிய பூமாலைகளாலும் ஜிகினு மாலைகளாலும் சிங்காரித்தார்கள். முன்னாலே பூசை சாமான்கள் வைக்கப்பட்டிருந்தன. அவைகளிலிருந்து வெளிவரும் வாசனையிலிருந்து அது மதுபானம் என்று தெரிந்தது. இவைகளைக் கண்டு இரு வாலிபர்களுக்கும் அருவருப்பு ஏற்பட்டது. அடுத்திருந்த ஒரு பெரியவரை விசாரித்து இந்த ஐந்து உருவங்களும் ஐந்து தேவதைகளைக் குறிக்கிறது என்று அறிந்தார்கள். அவைகளுக்கு மாடன், சங்கிலிமாடன், சுடலைமாடன், இசக்கியர் இருவர் என்றும் பெயர்களாம். இவர்களுக்குப் பூஜை போட்டு அருள் பெறுவதே அந்த திருவிழாவின் நோக்கமாம். நாட்டில் பஞ்சம், தொத்துநோய் இவைகள் வராமலும் மழைபெய்து மக்கள் சுகமாக இருப்பதற்காகவும் இந்தத் திருவிழா நடக்கிறதென்று அறிந்தார்கள்.

''இந்த உருவங்களையும் இங்கு நடக்கிற பூஜையையும் பார்த்தால் உபாத்தியாயர் சொன்னது சரியென்று தோன்ற வில்லையா'' என்றான் குப்பன்.

''அவசரப்படவேண்டாம், இன்னும் கவனிப்போம்.''

''சரி என்ன பூஜை செய்தாலும் கள்ளை வைத்து ஏன் பூசிக்கிறார்கள்? கள்ளைக்குடிப்பது கெடுதல் என்று தெரிந்ததே?''

''ஆமாம், இவர்கள் அறியாதவர்கள். நாளாவட்டத்தில் நாட்டில் வழங்கும் துர்ப்பழக்கங்களை சாமிகளுக்கும் ஏற்றி விட்டார்கள். அவர்களை நல்லவழிக்குக் கொண்டு வருவது நமது கடமை.

''நாம் எல்லோரும் கிறிஸ்தவர்கள் ஆகிவிட்டால் இந்த அர்த்தமில்லாத பூஜையே நின்று போகும் அல்லவா?''

''நின்று போகலாம். ஆனால் மற்றொன்று கவனிக்க வேண்டும். நாம் வாசித்த நூல்களிலே இந்தக் கள்ளுக்குடி தெய்வங்களைப் பற்றிக் கூறியிருக்கிறதா? தமிழர் சமயம் இது ஆகுமா? நமது தெய்வப்புலவர் திருவள்ளுவனார் கள்குடிக்கப்படாது, கொலை செய்யக்கூடாது, என்று கூறியிருக்கிறார்கள் அல்லவா? இவர்கள் அதனை அறியாமல் செய்கின்றனர்.

''நீ சொல்வது சரிதான். நாம் தமிழர்களாகப் பிறந்தும் திருவள்ளுவர் பிறப்பில் பேதம் இல்லை என்று வற்புறுத்தியும் நம்மைத் தமிழர்கள் சேர்த்துக் கொள்ளுவதில்லையே? பழக்க வழக்கங்களை மீறி நாம் கட்குடி, ஊன் உண்ணல், முதலிய கெட்ட பழக்கங்களைக் கொண்டால் எவ்வாறு நம்மைச் சேர்த்துக் கொள்ளுவார்கள்.

''அதோ, தெரிகிறதே, உயர்ந்த மகத்தான கோபுரம் அது இந்துக்களுடைய கோயில். இரட்டைத் திருப்பதி என்று கூறுகிறார்கள். உள்ளே உயர்ந்த வகுப்பார் மட்டும் சென்று வழிபடலாம். நாமும் இந்துக்கள் தானே. நம்மை ஏன் உள்ளே விடுவதில்லை? திருவள்ளுவரும் இதனை ஏற்றுக்கொள்வாரா?

''நாமும் துர்ப்பழக்கங்களை விட்டு நற்பழக்கங்களைக் கைக் கொண்டால் நம்மையும் உள்ளே விடுவார்கள். அதற்கு நாமே காரணம்.''

''குற்றம் ஒருபுறத்தில் இருக்க மற்றொருபுறத்தில் ஏற்றுவதா? கிறிஸ்தவர்கள் தங்கள் கோயிலுக்குள் நம்மை விடுவதில்லையா?

''அவர்கள் நோக்கம் வேறு, சமயமாற்றம் ஒன்றே அன்றி வேறு எண்ணம் ஒன்றும் இல்லை. அதற்கு வழிகள்தான் ஏனைய சௌகரியங்கள். சில தடவைகளில் மாறின பிறகு யாதொரு சலுகையும் காட்டாமல் ஆலாப் பறக்க விடுவதைக் கண்டதில்லையா?

''சரி, இன்னும் என்ன நடக்கிறது பார்ப்போம்.'' இவ்வாறு பேசிக்கொண்டு மற்றொரு மரநிழலில் வில்லுப்பாட்டுப் பாடுவதைப் பார்த்து அங்கு சென்று அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். வில்லடிக்கு ஏற்ற தாளத்தில் ''இராமப்பையன் அம்மானை'' பாடிக்கொண்டு இருந்தார்கள். அந்தநாட்டுக்கதை பண்டைக்காலத்து ஆதிதிராவிட வீரனுடைய சரிதம். மிகுந்த உன்னதமான பண்புகள் நடுநடுவுள் வரும். மிகவும் சுவை பொருந்திய கருத்துக்கள், அழகான எளிய தமிழ்நடை, இனிய சந்தம், இக்கதையைக் கேட்ட இரண்டு நண்பர்களும் மிகுந்த மகிழ்சசியுடன் வெகுநேரம் அதிலேயே கேட்டுக் கொண்டிருந்ததினால் பொழுது போனதும் தெரியாமல் ஆழ்ந்திருந்தார்கள்.

மாலை ஆறுமணி சுமாருக்கு இரட்டை வெடி சப்தம் கேட்டது. கதையில் ஆழ்ந்திருந்த நண்பர்கள் திடுக்கிட்டு எழுந்தார்கள். எல்லாரும் திருவிழா மண்டபத்தை நோக்கினார்கள். நூறு பறைகள் ஒருங்கே அடித்தன. மக்கள் அந்த நோக்கி சென்றார்கள். வில்லுக்கதை தானே நின்றது. நல்ல சுவை உள்ள இடத்தில் சபையைக் கலக்கி விட்டார்களே என்று இரு நண்பர்கள் மனம் நொந்து ஏனைய மக்களுடன் சென்றார்கள். அங்கே ஒரே கூட்டம். மெதுவாகத் தள்ளிக்கொண்டு ஒரு இடத்தில் நின்று கொண்டு பார்த்தார்கள். கனல் எரியும் சட்டியை பூச்சட்டி என்று சொல்லுவது வழக்கம். அதைச்சுற்றிப் பத்துப்பேர் பறைகளை அடித்துக்கொண்டு குரவைக்கூத்து ஆடினார்கள். அதற்குத் தகுந்தபடி, சிந்து பாடினார்கள். சிறிதுநேரம் ஆனவுடன் ஒரு சேவல், ஒரு ஆட்டுக்குட்டி, ஒரு பன்றி இவைகளைக் கொண்டு வந்தார்கள். மஞ்சள் நீர் தெளித்தார்கள். தம் கதி இன்னது என்று அறியாத ஒரு பாவமும் அறியாச் சீவன்கள் அத்தண்ணீரை நக்கத்தொடங்கின. குளிர்நீர்பட்டவுடனே தலை குலுக்கின. அருகில் இருந்த பூசாரி ஒருபெரிய வாளை எடுத்து ஒரே வெட்டாக வெட்டினான். பாவம் அவ்வுயிர்கள் துடிதுடித்து, இரத்தம் சிந்தி நிலத்தில் சாய்ந்தன. தலை அறுந்தும் உடல் குதித்ததைக் கண்டால் என்ன நரகவாதனை என்று எவர் மனதிலும் இது தோன்றவில்லையே. இது பொது மக்கள்பால் இட்ட காவு. பிறகு தனிமனிதர்கள் தங்கள் பிரார்த்தனைக்கு ஏற்றபடி பல உயிர்களைக் கொண்டுவந்து காவு இட்டார்கள். மண்டபம் முழுதும் இரத்தமயம் ஆகிவிட்டது. உயிர்களைப் பலி இடும்போது அவைகள் கதறின கதறல்களைக் கேட்ட இரண்டு நண்பர்கள்

''அட்டா இரக்கமில்லாத இந்தப் பாவிகளை பூசாரிகள் என்று சொல்லுகிறார்களே? இவர்களுடைய பேச்சைக் கேட்டு இத்தனை குடிகளும் பாவத்திற்குள்ளாகினார்களே'' என்று பரிதவித்தார்கள். 'நம் தமிழர்களுடைய உண்மைமதம் திருவள்ளுவர் கூறுகிறபடி கொலை மறுத்தல் அல்லவா? சைவர்களும் வைணவர்களும் இதனையே வற்புறுத்துகிறார்கள்.' சிவாலயங்களிலும் வைணவாலயங்களிலும் உயிர்ப்பலி இடுவதில்லை யல்லவா? உயிர்கள் எல்லாம் ஈசனுடைய மக்கள் அல்லவா? ஒருமகன் மற்றொரு மகனுடைய கழுத்தை வெட்டினால் தகப்பன் சும்மா பார்த்துக் கொண்டிருப்பானா? ஆகவே இவர்கள் தொழும் தேவதைகள் பிசாசுகளே. என்று இரு நண்பர்களும் எண்ணி வருந்தினார்கள்.

சிறிது நேரத்திற்குள் முதலில் இட்ட முப்பலிகளின் உடல்களையும் பொங்கல்வைத்துச் சமைத்து மாடன்களின் முன் படைத்தார்கள். பிறகு மதுபான வகைகளையும் அருகில் வைத்தார்கள். பூசை நடந்தது. பூசைப்பாடல்களும் பாடப்பட்டன. சிலர் ஆடலும் ஆடினார்கள். ஒருத்திக்கு மருள்வந்து கண்டதைப் பிதற்றினாள். பூசை முடிவதற்குப் பத்துமணி ஆயிருக்கும். பிறகு பிரசாதம் வந்தவர்களுக்கு வழங்கப்பட்டது. முக்கியமான நாட்டாண்மை களுக்கு முதலிலும் பிறகு மற்றவர்களுக்கும் பிரசாதம் கொடுக்கப்பட்டது. எல்லாரும் வெகு திருப்தியோடு உண்டுவிட்டு ஆற்றில் கைகழுவிக் கொண்டார்கள். சுப்பனும் குப்பனும் இந்தப் பிரசாதத்தைச் சாப்பிடத் துணியவில்லை. தாங்கள் கொண்டுவந்திருந்த சிறிது உணவை அருந்தி விட்டு அங்கே வீற்றிருந்தார்கள். பூசாரி முதலிய சிலர் மதுபானம் செய்தார்கள். பலபேர் அக்கம் பக்கத்தில் உறங்கினார்கள். பூசாரி முதலியவர்கள் உறங்கவே இல்லை. பிரார்த்தனைக்காரர்களிடம் வசூல் செய்யும் தொழிலிலே இருந்தார்கள். நமது நண்பர்கள் மிகுந்த களைப்பினால் அடுத்திருந்த மணல் மேட்டில் படுத்து உறங்கினார்கள்.

நடுஜாமம் ஆயிற்று. திடீரென்று பத்து வெடிகள் கிளம்பின. எல்லாரும் திடுக்கிட்டு எழுந்தார்கள். சுப்பனும் குப்பனும் எழுந்தார்கள். ஆற்றுக்குப்போய் முகம் கழுவிக்கொண்டுவந்தார்கள். பெரிய கூத்துத் தொடங்கிற்று. முன் மண்டபத்திலே மாடன்களுக்கு முன்னிலையைச் சுத்தப்படுத்தி இருந்தார்கள். இரத்தமயம் எங்கு போயிற்றோ தெரியவில்லை. வெண்மணல் பரப்பப்பட்டிருந்தது.

அதிலே பூசாரியும் மற்ற சிலரும் கையில் பிரம்பு பிடித்துக்கொண்டு ஆடினார்கள். சிறிது நேரம் ஆடினதே சாமி சொல்லத் தொடங்கினார்கள். வந்த சனங்களிலே பலபேர் அது கேட்க ஆவலுடன் இருந்தார்கள். காணிக்கைக்குத் தகுந்தபடி சாமி சொல்லுமோ என்று நமது நண்பர்கள் நினைத்தார்கள். பலிகொடுத்த பல பேருக்கும் ஆரூடம் சொல்லப்பட்டது. சில பேர் மகிழ்ந்தார்கள். சில பேர் துயரப்பட்டார்கள். இவ்விதம் வெகுநேரம் ஆயிற்று. அரைமணிக்கு ஒருவர் மாறி மாறி ஆரூடம் சொன்னார்கள். மூன்று மணி ஆனவுடன் சில பெண்பிள்ளைகள் கூத்தாடினார்கள். எல்லாரும் கிழவிகளே, இவர்களும் குடித்தவர்களோ என்ற ஐயம் வந்தது. போதை இல்லாவிட்டால் அரைமணி நேரம் ஒரு பெண் குதிக்கமுடியுமோ என்று எண்ணவேண்டும். உண்மை அறிவதற்காகச் சுப்பனும் குப்பனும் நெருங்கினார்கள். இவர்களைக் கண்ட ஒரு கிழவி ஆவேசம் வந்து பாடத்தொடங்கினாள். ஆவேசம் உண்மையோ பொய்யோ என்று அறிவதற்காக அவ்விருவரும் மிகுந்த கூர்மையோடு கேட்டார்கள். சிறிது நேரம் ஏதேதையோ விளங்காதவற்றைக் கூறினாள். பிறகு அடியிற் கண்டபடி சொற்கள் வந்தன:

தேரியின் அருகொரு சேரியிலே-ஐயனே
நாரியர் இருவர் நன்கிருந்தார்.

அன்னவர் தமக்கிரு மக்களுளார்-அவர்
மன்னவர் மொழிதனில் மாண்புறுவார்.

விவிலியர் குலத்தவர் போதிக்க-அவர்
குவியலில் சேர்த்திட சூழ்ச்சியிட.

நம்பிக்கை சிறிது தளர்ந்திடவே-அவர்
நம்மிறை முன்னிலை வந்துளரே.

மதுவொடு நிணமும் மலிந்திருக்க-அவர்
விதிவிலக்கிதுவென வெறுத்திடுவார்.

அன்னவர் பெற்றோர் வரலாற்றை-இனி
முன்னமே நடந்ததை அருளுவனே.

முன்னொரு நாளில் புனிதமுடை-எங்கள்
துன்னிடு சோலையில் தேவதைகள்.
சேரியில் வருத்தம் செறித்திடவே-ஊரார்
கோரிய திருவிழா தொடங்கினரே.
இவ்விரு குட்டிகள் தந்தையரோ-அதற்கு
வெவ்விய கேலிகள் வீசினரே
திருவிழா முற்றும் போதினிலே-அவர்
கருவி முந்தெமனூர் ஏகினரே.
அதுமுதல் சேரியர் தெய்வமதை-நன்கு
விதிமுதல் வேண்டுதல் விடுத்தனரே.
இந்நாள் இச்சிறு காளையர்கள்-ஐயர்
முன்னால் செய்ததை விட்டொழிந்தால்,
நல்லதோர் பதவிகள் கிடைத்திடுமே-அஃது
இல்லதேல் இவர்கேடு ஊர்ந்திடுவார்.
இவர்பால் ஒருசொல் விடுத்திடுவேன்-இனி
தவறுவன் ஒருவன் தனிப்போவான்.
மற்றவன் மேல்மேல் பதவியினை-நன்கு
உற்றவன் சேரிக் குதவிடுவான்.
இந்தவோர் விதியினில் தவறில்லை-இனி
சிந்தனை செய்தலும் இவர்கடமை.

''என்ன ஆச்சரியமாயிருக்கிறது. இவள் சொன்னது உண்மையாகத் தெரிகிறதே'' என்றான் சுப்பன்.

''ஆமாம் ஆச்சரியம்தான். இதுவரை நடந்த கதை முழுதும உண்மையாகத்தான் கூறகிறாள். இவளுக்கு இது எல்லாம் எப்படித் தெரிந்தது?''

''நம் பெரியவர்களைப் பற்றிக் கூறினது உண்மையாக இருக்குமோ? அப்படியிருந்தால் பின்னால் வருவதும் உண்மையாகலாம்.

''என்னமோ எனக்கு நம்பிக்கையில்லை. ஒருபடிப்பில்லாத பெண்ணுக்குத் தெய்வீக உணர்ச்சியும் ஆரூடமும் சொல்லவருமோ?'' யாராவது ஒற்று சொல்லி இருக்க வேண்டும்.

''என்னமோ, அதைப்பற்றித் தீரவிசாரிப்போம்'' என்று சொல்லிக் கொண்டு வெளியே சென்றார்கள். விடியும்மட்டும் திருவிழா நடந்தது. பிறகு சுவாமி பவனி சென்றார். இவைகளையெல்லாம் பார்ப்பதற்கு இந்த நண்பர்களுக்கு மனம் இல்லை. ஊருக்குப் புறப்பட்டுவிட்டார்கள்.

ஊர் சேர்ந்ததும் உறவினர்களைத் துப்பு விசாரித்ததில் தம் பெற்றோர்களைக் குறித்து ஆவேசத்தில் சொன்ன உரைகள் எல்லாம் முற்றும் உண்மை எனத் தெரிந்தது. ஆகவே, இரு நண்பர்களும் இனி நடப்பதும் உண்மை ஆகுமா என்று எண்ணினார்கள்.

சில மாதங்கள் சென்றன. குப்பன்தான் உபாத்தியாயரிடம் நடந்ததை முழுதும் கூறினான். அவரோ பாதிரியாரிடம் கூட்டிச் சென்றார். பாதிரியார் பிசாசுகளிடம் ஆரூடம் கேட்டால் பொய்யும் உண்மை போலத் தெரியும். இயேசுவின் நாமம் பட்டால் அப்பிசாசின் வலைகள் சிதறிப்போகும். நீ ஞானஸ்நானம் பெற்றுக்கொள். பின்னால் உன் ஆன்மா சுத்தி அடையும் என்று உபதேசித்தார். குப்பன் அதனை நம்பிக் கிறிஸ்தவனானான். ஒரு பள்ளி உபாத்திமைத் தொழிலும் பெற்று வாழ்ந்துவந்தான். தன் பெயரையும் பீட்டர் கோபன் என்று மாற்றிக் கொண்டான்.

சுப்பனோ இன்ன செய்வது என்று முடிவு இல்லாமல் இருந்தான். அன்றிரவு கிழவி சொன்ன ஆவேசச் சொற்கள் மனதை உறுத்திக்கொண்டே இருந்தன. நாட்டில் எங்கும் சுதந்திரவாஞ்சை இயக்கம் பரவிற்று. ஹரிஜன சேவாசங்கம் வேலை செய்யத் தொடங்கிற்று. அச்சங்கத்துக் காரியதரிசி நெல்லைக்கு வந்தார். சுப்பன் அவரைக் காணச் சென்றான். சுப்பனுடைய படிப்பும் அறிவும் ஆற்றலும் கண்டு அவன் மீது அன்புகூர்ந்து அவனைத் தன்சங்க ஊழியனாகச் சேர்த்துக்கொண்டார். சுப்பன் அச்சங்கத்தில் ஈடுபட்டு தன் சேரியில் ஒரு இரவுப்பாடசாலையும் வாசகசாலையும்

ஏற்படுத்தினான். பிறகு ஒரு மாணவர் இல்லமும் வைக்கப்பட்டது. பலபேர் தேசீயத் தலைவர்கள் இந்த நிலையங்களைப் பார்வையிட்டு நற்சான்றுகளை வழங்கினார்கள். சுப்பனோ கெடுதலான வழிகளில் செல்லுவபவன் அல்லன். ஆகவே இந்தப் பொதுத் தொழிலில் வயிற்றுக்குப் போதுமான கஞ்சியும் கிடைக்கவில்லை. இருந்தாலும் நாட்டிற்கும் தன் இனத்தார்க்கும் சேவை செய்கிறேன் என்ற நன் மகிழ்ச்சி அடைந்து இன்புடன் இருந்தான்.

சில மாதங்களில் நாட்டில் தேர்தல் நடந்தது. தேசீயக் கட்சியின் சார்பில் அரிசனங்களுக்கு ஒரு இடம் கிடைத்தது. பலபேர் படிப்பில்லாதவர்கள் அதற்கு ஆசைப்பட்டார்கள். ஆனால், தேசீயத்தலைவர்களுக்கோ சுப்பன் செய்து வந்த சுயநலம் அற்ற தொழிலைப் பற்றித் தெரியும். இவனையே அந்த ஸ்தானத்திற்குத் தெரிந்தெடுத்தார்கள். வெகு சுலபத்தில் யாதொரு செலவும் இன்றி சுப்பன் சட்டசபைக்குத் தெரிந்தெடுக்கப்பட்டான். அப்போது அவனுக்கு அவசியமான ஊதியமும் கிடைத்தது. வெகு மகிழ்ச்சியுடன் தன் நாட்டிற்கும் குலத்திற்கும் தொண்டு செய்தான். இவனும் கிறிஸ்தவனாகி இருந்தால் இந்தப் பெருமை இவனுக்குக் கிடைத்திருக்குமா.

சுப்பனும் கோபனும் (முந்திய குப்பன்) நெல்லையில் ஒருநாள் சந்தித்தார்கள்.

''சென்ற ஆண்டு மாடன் திருவிழாவில் சொன்ன ஆரூடம் ஞாபகம் இருக்கிறதா?''

''அது பிசாசின் கூற்று. அதை மறந்துவிட்டேன்''

''சரி மறந்து விடலாம். ஆனால் சொன்ன சொற்கள் உண்மை ஆகிவிடவில்லையா?''

''எப்படி?''

''நீ இருபது ரூபாய் சம்பளத்தில் இருக்கிறாய்'' நான் 150ரூ. உதவிப் பணமும் பலவகை மேல் வரும்படியும் பெறுகிறேன்.

''ரூபாய் வருமானம் பெரிதா, ஆன்மா நற்கதி அடைந்திருக்கிறதா?

''அதற் கென்ன சந்தேகம்'' நீ கிறிஸ்தவனாகி நாள் தோறும் தொழுது கொண்டு மாத்திரம் இருக்கிறாய், நானோ திருத்தொண்டு

புரிந்து வருகிறேன். நம் இனத்து ஏழை மக்கள் கண் திறக்கும்படி வேலை செய்கிறேன். தவிர மாடன் கோயில்களில் நடக்கும் ஆபாசங்களை நிறுத்தி சாத்துவிகமான தொழுகை நிலைநிறுத்தும்படி செய்துவருகிறேன். ஈசன் கருணை இருந்தால் நான் வெற்றி அடைவேன்.''

''என்ன ஆனாலும் பிசாசு பிசாசுதான்.''

''கடவுள் கடவுள் தான்'' என்று கூறிவிட்டு விலகிப்போய்விட்டான் சுப்பன்.

இவனிடம் பேசிப் பயனில்லை என்று பச்சாதாபப்பட்டு சுப்பன் தன் இடத்திற்குச் சென்றான். கோபனோ இவன் சொல்லுவது சரியாகத்தான் தோன்றுகிறது என்று சொல்லிப் பொறாமைப் பட்டுக் கொண்டு வீடு சேர்ந்தான்.

# 16

## சிறந்த அறம் யாதோ

திருத்தேனாறு ஒரு பண்டைய சிவஸ்தலம். ஐவராலும் பாடல்பெற்ற சிறப்புடையது. ஆலயமோ தமிழ் நாடெங்கும் பெயர் பெற்றது. அதன் சிற்பக்கலையும் விசித்திர வேலைப்பாடும் மேற்கு நாட்டு வெள்ளைக்கலைஞர்களும் பார்த்து மெச்சித் தங்கள் அருமையான நூல்களில் அதன் பெருமைகளை வெளியிட்டி ருக்கின்றனராம். அத்தனை சிறப்பு வாய்ந்த புனிதத் தலத்திற்கு அன்றோ நம் குடும்பத்துத் திருப்பணி இருக்க வேண்டும் என்று நினைத்தார். சோ.ம.பெரி. சின்யைஞ்செட்டியார். திருப்பணி செய்வதற்காக நிச்சயம் செய்வதற்கு முந்தி பல தடவைகள் அந்தத் தலத்திற்குச் சென்று அதன் மகிமைகளைப்பற்றி விசாரித்தார். தமிழ்த் திருப்பாடல்களும் தமிழ்ப்புராணங்களும் அவருக்குப் போதுமான திருப்தி அளிக்கவில்லை. அவ்வாலயத்து முக்கிய அர்ச்சகர் பேச்சே அவர் மனதில் ஊன்றிவிட்டது. தேனாறுடைய பிரான் என்று பாசுரங்களில் கூறப்பட்டிருந்தபோதிலும் அதனை வடமொழியில் மதுநதீசுவரர் என்ற திருநாமம் படைத்துள்ளதெனவும் கலியுகத்தில் மதுநதிஆக உள்ள தீர்த்தம் கிருதயுகத்தில் பொன் நதி என்ற சுவர்ணநதியாக இருந்ததாகவும் ஒரு அரசன் அந்நதியில் ஒரு இரும்புக் குண்டை எறிய அது தங்கக்குண்டாக மாறியதாகவும் இந்தக் கலியுகத்திலும் அந்நதியின் தீர்த்தம் ஆயிரம் கங்கையினும் சிறந்த புனிதத் தன்மையை தரக்கூடியது என்ற பல வரலாறுகளைக் கூறி அர்ச்சகர் செட்டியாரை மகிழ்வித்தார். செட்டியாரும் அத்திவ்விய தலத்தின் திருப்பணியை ஏற்றுக் கொண்டார்.

அந்தத் தலத்துக் கோயில் அப்போது ஒரு முதலியார் குடும்பத்தின் மேல் பார்வையில் இருந்தது. அம் முதலியார் பரம்பரை பாத்தியம் பாராட்டி வந்தார். அவருடைய முன்னோர்களில் ஏற்கனவே மானிய நிலங்கள் எல்லாம் பராதீனம் ஆகிவிட்டன ஒன்றிரண்டு மீதி இருந்தவற்றை அந்தத் தற்கால தருமகர்த்தர் விற்று விட்டார். இப்போதோ உற்சவகாலத்துக் காணிக்கைகள்தான் வரும்படி. அவைகளை அர்ச்சகர் கைப்பற்றிக் கொள்வார்

சுவாமிக்குத் தானமாக வந்த நகைகள் புத்தகத்தில் பெயர் அளவில் உண்டே தவிர உண்மை நகைகள் எங்கு போயினவோ தெரியவில்லை. ஒரு மார்வாடிக்கடையில் அவைகள் பத்திரமாக இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள்.

சுவாமி இயற்கை உருவத்தில் தோன்றுவதே ஒரு அழகு என்று அவ்வூர்ப் பெரிய பண்டிதர் சொல்லுவார். ஆலய நந்தவனத்தில் எருக்கலை முளைத்திருந்தால் அதுதான் ஈசனுக்கு உகந்த மலர் என்று தைரியமாகச் சொல்லி விடலாம். ஆகவே அப்படிப்பட்ட தருமகர்த்தாவிடம் சென்றார் செட்டியார். உடனே தனக்கு உத்தரவு கிடைத்து விடும் என்று எண்ணினார். அது வீண் பிரமை ஆயிற்று. இறுதியில் அருச்சகர் தரகுபேசி ரூ. 1000 பிரதிப் பிரயோசனத்தின் பேரில் திருப்பணி செய்வதற்கு முதலியார் சம்மதித்தார். செட்டியாருக்கு ஒரு ஒப்பந்தப் பத்திரமும் எழுதிக் கொடுக்கப்பட்டது. செட்டியார் 1 1/2 லட்சம் ரூபாய்க்குத் திருப்பணி செய்வதாக மதிப்புப்போட்டார். ஆனால் இறுதியில 3 இலட்சத்துக்கு இழுத்துவிட்டது. கல்வெட்டுக் கற்கள் எல்லாம் குப்பை என்று விலக்கப்பட்டன. பல கற்கள் அஸ்திவாரத்துக்குள் சென்றன. மற்றவை எறியப்பட்டன. பண்டை சிற்பச்சிலைகளும் தூண்களும் அழகாக இல்லை என்று தள்ளப்பட்டன. திருவண்ணாமலைப் பட்டிக் குப்பம், கோவலூர், திருமெய்யம் முதலான இடங்களிலிருந்து கற்கள் தருவிக்கப்பட்டன. வேலை மும்முரமாகத் தொடங்கி ஒருவாறு முடிக்கப்பட்டது. செட்டியார் தனக்கு ஒரு விடுதியும் தம் இனத்தாருக்கு ஒரு மகா விடுதியும் கட்டிவைத்தார். அவ்வூரில் ஒரு வட்டிக்கடையும் அமர்த்தினார். திருக்குளம், வேதபாடசாலை, தேவாரபாடசாலை முதலியவைகளுக்காக வேறு ஒரு செட்டியார் ஏற்றுக்கொண்டார். அவ்வாறே நந்தவனம் பசு மடம் முதலியவைகளுக்கு மற்றொரு செட்டியாரும் வந்தார்.

சந்திக்காலம், தெப்பம், பிரமோற்சவம் இவைகளுக்காக மற்றும் சில ஆய்ச்சிமார்கள் பணங்களை ஒதுக்கியும் வைத்தார்கள். ஆகவே 3 வருஷங்களுக்குள்ளாகத் தேனாறு ஒருபுது ஷேத்திரமாகவே மாறிவிட்டது. கும்பாபிஷேகத்திற்கு ஒருநாளும் பார்க்கப்பட்டது. பத்திரிகையும் விடப்பட்டது. பந்தல் அலங்காரம் முதலியவைகள் தடபுடலாக நடக்கின்றன. செட்டியாரும் தேனாற்றில் ஒரு மாத காலமாக இருக்கிறார். கும்பாபிஷேகப் பத்திரிகை அழகிய உருவங்கள் தேனாற்றின் பண்டைய வரலாறுகள் திருப்பாசுரங்கள் முதலியவைகள் எல்லாம் பலவித வர்ணங்களால் அச்சடிக்கப் பட்டிருந்தன. தேனாற்றீசர் கிருபைக்குப் பாத்திரர்களாகும்படி எல்லா

ஆன்ம கோடிகளும் அழைக்கப்பட்டிருந்தார்கள். அழைப்புக் கடிதத்தின் அடியில் சோ.ம.பெரி. சின்னையன் செட்டியார் என்று அழகாக அச்சடிக்கப்பட்டிருந்தது. செட்டியாரும் எல்லா நாட்டுக் கோட்டை நகரத்தார்களுக்கும் மற்றப் பெரிய மக்களுக்கும் அழைப்பு அனுப்பியிருந்தார். பழைய தருமகர்த்தாவை மறக்கக்கூடாது என்று கருதி அவருக்கு ஒரு அழைப்பை அனுப்பியிருந்தார். தன்னிடம் நேரில் வந்து அழைக்காமலே தபாலில் ஒரு அழைப்பை அனுப்பியதைக் குறித்து முதலியார் கோபப்பட்டார். அப்போது அவரிடம் அவ்வூர் கணக்குப் பிள்ளை உட்கார்ந்திருந்தார். கணக்கனுக்கோ செட்டியார் தன்னை மதிக்கவில்லை என்பது ஒரு கோபம். ஆகவே முதலியார் முகத்தைக் கண்டுவிட்டு அவருக்குத் தூபம் காட்டத் தொடங்கினார். அழைப்புத் தாளை தான் வாங்கி வாசித்தார். பிறகு ''முதலியாரே, இது என்ன அநியாயம். தேனாற்றுக் கோயில் தங்கள் கோயில் ஆயிற்றே. கும்பாபிஷேகப் பத்திரிகையில் தங்கள் பெயர் இல்லையே!'' என்றார்.

''என் பெயர் எப்படி இருக்கும்? திருப்பணியோ செட்டியாருடையது அல்லவா? என்று பதில் சொன்னார்.''

''அட! பைத்தியமே திருப்பணி செட்டியாருடையதுதான். யார் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் தருமகர்த்தா உரிமை தங்களுடையது அல்லவா? அது எப்படி மாறும்? நெபத்திற்காகவாவது தங்கள் பெயர் போடலாகாதா?''

''நான் முன்னமே ஒப்பந்தம் எழுதிக் கொடுத்துவிட்டேனே.''

''எழுதிக் கொடுத்தால் என்ன. என் பெயர் போட்டுத் தான் தீரவேண்டும் இல்லாவிட்டால் கும்பாபிஷேகம் நிறுத்திவிடுவேன் என்று நோட்டீசு கொடுத்துவிடும். பிறகு பார்த்துக் கொள்ளலாம்'' என்று கூரிய புத்திமதி கூறினார். பார்த்தார் முதலியார். இதில் பலன் உண்டு என்று எண்ணினார். உடனே இருவரும் ஆலோசித்து ஒரு நோட்டீசு எழுதித் தபாலில் அன்றே நுழைத்துவிட்டார்கள். முதலியாரும் பிள்ளைக்கு ஒரு ரூபாய் இனாம் கொடுத்தார்.

செட்டியாருக்கு மறுநாள் நோட்டீசு கிடைத்தது. வாங்கிப் படித்தார். அது வெடி குண்டு விழுந்தாற்போல் இருந்தது. அழைப்பாளர்கள் எல்லோரும் வரத்தொடங்கிவிட்டார்கள். மறுநாள் கும்பாபிஷேகத் தொடக்கம். இந்தச் சமயத்தில் நோட்டீசு வந்தால் என்ன செய்வது? தன் காரியஸ்தனைக் கலந்து யோசித்தார். பத்திரிகையில் முதலியார் கையெழுத்து இடுவது என்றால் தான்

செய்த புண்ணியத்தில் பாதி கொடுத்தது ஆகும். தவிர இனிமேலும் ஆலய பரிபாலனத்தில் இடைவிடாத தொந்தரவு. ஆகவே அது கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது.

செட்டியார் இதுவோ கணக்கனுடைய வேலைதான் என்று ஊகித்தார். திருவிழா நடுவில் கலகம் ஏற்பட்டால் விபரீதம் ஆகும். ஆகவே சமாதானம் செய்து கொள்ள முயன்றார். வெகு தூரம் மத்தியஸ்தம் பேசி முதலியாருக்கு 500 ரூபாய் கொடுத்து விடுவது என்று ஒத்துகொள்ளப்பட்டது. வேண்டிய ஒப்பந்தமும் பூர்த்தியாயிற்று. பணம் பெற்றவுடன் கணக்கன் தன் பங்கை எடுத்துக் கொண்டான்.

கும்பாபிஷேகம் விமரிசையாக நடந்தது. யாகங்கள், அபிஷேகங்கள், ஆராதனைகள், சன்மானங்கள், ஊர்கோலங்கள், பொய்க்கால் குதிரை முதலிய வேடிக்கைகள், பாண வேடிக்கைகள், சதுர், பாட்டுச் கச்சேரி, நாதசுரம், காலட்சேபம் ஆர்ப்பாட்டங்கள் முதலியவைகள் குறைவில்லாமல் நடந்தன. எல்லோருக்கும் தராதரத்திற்கேற்றபடி சாப்பாடு முதலியன முடிந்தன. செட்டியார் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்த செய்தியைக் குறித்து அழகாக ஒரு சிலாசாசனம் தீட்டின கல் பதிக்கப்பட்டது. அதில் செட்டியார் திருப்புகழ்கள் எல்லாம் உரைநடையிலும் செய்யுளிலும் எழுதப்பட்டிருந்தன. வட மொழியிலிருந்து தென்மொழியில் பாடப் பெற்ற ஒரு நல்ல புராணம் மதுநதீஸ்வரர் மாகத்மியம் என்ற பெயரினால் வெளியிடப்பெற்றது. வடமொழி புராணமும் தமிழ் உரையுடன் மற்றொன்று பதிக்கப்பட்டது. இரண்டிலும் செட்டியார் வாழ்க்கைச் சரித்திரம் அழகிய உருவப்படங்களுடன் வெளிவந்தன. கும்பாபிஷேக நாளன்று இந் நூல்கள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டதோடு அன்று மாலை மகா மண்டபத்தில் ஒரு கூட்டம் கூட்டி அதில் அவர் நூல் அறங்கேற்றப்பட்டது. அப்போது செட்டியாரின் உருவப்படம் உருவச் சிலை முதலியவைகள் திறக்கப்பட்டன. திருவிழா ஒருவாறு நிறைவேறிற்று. கும்பாபிஷேகச் செலவு ரூ. 50000 என மதிப்பிடப்பட்டது. செட்டியார் மிகவும் திருப்தி அடைந்தார்.

மறுநாள் செட்டியார் கோயில் திருப்பணி காரியாலயத்தில் கணக்குப் பரிசீலனை செய்து கொண்டிருந்தார். அறையின் வெளிப்புறம் கோயில் மகா மண்டபம் அதில் இரண்டு பிரயாணிகள் உடகார்ந்து கொண்டு பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பேச்சு செட்டியாரின் காதினை இழுத்தது

''அண்ணே, சாப்பாடு எப்படி இருந்தது?''

''இந்தமாதிரி சாப்பாடு சாப்பிட்டு வெகு நாளாயிற்று. செட்டியார் மிகவும் உதாரகுணம் உடையவர்.''

''ஆமாம் திருப்பணி எப்படி இருக்கிறது?''

''நன்றாய்தான் இருக்கிறது. பர்மாவிலும் மலேயாவிலும் சம்பாதித்த பணத்தை நம்ம ஊருக்குத் தந்தாரே நமது பாக்கியம்தான்.''

''ஆனால் செட்டியார் சும்மாவா தந்தார். ஒருவிதப் பயனும் கருதாமலா கொடுத்தார்.''

'அவருக்கு என்ன பயன்? பின்னாலே புண்ணியமும் நற்கதியும் கிடைக்குமென்று இந்தத் திருப்பணி செய்திருப்பார்.''

''போ,போ, அசடே, இந்தக் காலத்திலே புண்ணியம் ஏது? புருஷார்த்தம் ஏது? புகழ் கிடைக்க வேண்டும் என்று தான் செய்திருப்பார்...

''சரி, புகழ்ச்சியிலே என்ன லாபம்.''

புகழ்ச்சியில்லையோ, போய் சிலாசானத்தைப் படித்துப்பார். அதில் செட்டியாரைக் கலியுகத்துக் கண்ணன் என்று எழுதியிருக்கிறது. உண்மையாக தருமம் செய்கிறவர்கள் அப்படிப்பட்ட தற்புகழ்ச்சி கொள்வார்களா ! ஒரு கை செய்த தர்மத்தை மற்றொரு கை அறியக் கூடாது என்பதல்லவோ தருமம் ஆகும்.

''என்ன உன் அபிப்பிராயம் சரியாக இல்லை. முன் காலத்து அரசர்கள் இராசராசன் முதலியவர்கள் மகத்தான கோயில்களைக் கட்டி வைத்துத் தம் பெயர்களைத் தீட்டிவைக்கவில்லையா? பின்னால் வருகிறவர்கள் அதனைக் கண்டு அதன் படி செய்ய வேண்டும் என்ற மேல் நோக்கத்துடன் முன்னிட்டு அல்லவா அவ்வாறு செய்யப்பட்டது? அது தற்புகழ் ஆகுமா! மேலும் அவ்வாறு எழுதிவைக்காமல் விட்டிருந்தால் ஆங்கிலேயர்கள் அம்மகத்தான செயல்களைப் புகழ்வது எப்படி? நம்நாட்டிற்குக் கீர்த்தி எப்படி ஏற்படும்?''

''பழைய கதையைப் பேசிப் பயனில்லை. இராசராசனுக்கு நம் செட்டியாருக்கும் என்ன சம்பந்தம். ஆனைக்கும் பூனைக்குமா இணைபோடுவது? மேலும் சோழியன் குடுமி சும்மா ஆடுமா? செட்டியார் இந்த கோயிலுக்கு ரூ.3 1/2 இலட்சம் ஏன் செலவழிக்க வேண்டும். இலாபம் இல்லாமலேயா? மூலஸ்தானங்களைத்

திருட்டுத்தனமாக எடுத்து விட்டு அடியில் இருந்த அபரிமிதமான பொருள்களை எடுத்துக்கொண்டதாகச் சொல்லுகிறார்கள். தவிர ஆபரண அறைச்சாவி அவரிடம் தான் இருக்கிறது. அதில் பழைய நகைகள் எங்கே போயிற்று?'' என்று இவ்விதப் பிரசங்கம் செய்துகொண்டிருந்தான்.

இந்தப் பேச்சுகளைக் கேட்டுக்கொண்டிருந்த செட்டியாருக்கு இனிமேல் கேட்க நெஞ்சு இடம் தரவில்லை. ''எத்தனை நன்மை செய்தாலும் மக்களுக்கு அழுக்காறு போகவில்லையே'' என்று சஞ்சலத்துடன் எழுந்து போய் விட்டார். மறுநாள் காலையில் ஒரு செய்தி வந்தது. திடுகிக்கிட்டார் செட்டியார். சிலாசாசனத்தில் ''தருமம்'' என்ற சொல்லுக்கோ முன்னால் யாரோ ''அ'' சேர்த்திருந்தார்களாம். என்ன நன்றிகெட்ட உலகம் இது என்று நொந்து கொண்டார் செட்டியார்.

மற்றொரு முறை செட்டியாரின் உருவச்சிலையண்டை யாரோ நின்றுகொண்டு பரிகசித்துக்கொண்டு இருந்தார்களாம். இதனைக் கேட்டு செட்டியார் நெஞ்சு புண்ணுகி விட்டார். சிலநாள் கழித்து மற்றொரு செய்தி வந்தது. சிலையின் அடியில் இருந்த செட்டியார் பெயர் அடிக்கப்பட்டிருந்தது. மற்றொரு முறை உருவத்தின் காதும், மூக்கும் பின்னம் செய்யப்பட்டிருந்தது. இதனைச் சர்க்காருக்குத் தெரியப்படுத்திப் பயனில்லாமல் போய்விட்டது. செட்டியார் அச்சின்னங்களைச் சரிப்படுத்த வெகு பணம் செலவழித்தார். அவைகளைப் பாதுகாக்க நிரந்தரமாகக் காவலும் வைத்தார். மேலும் செட்டியார் தன்னைப்போல மற்றொன்றும் செய்து கையில் விளக்கேந்தினது போல செய்து வைத்திருந்தார். இவைகள் கர்ப்பக்கிரகத்தில் சுவாமியின் சமீபமாக வைக்கப்பட்டிருந்தன. புது குருக்கள் ஒருவர் வந்து மனுஷப் பிரதிமைகளை கர்ப்பக்கிருகத்தில் வைக்கக்கூடாது என்று அவைகளை எடுத்து அர்த்தமண்டபத்தில் வைத்தார். செட்டியாருக்குப் பெரிய கோபம் வந்துவிட்டது. என்ன சொல்லியும் குருக்கள் கேட்கவில்லை. வேலையிலிருந்து நீக்கி விட்டார். உடனே குருக்கள் தன்னை நீக்கினது பிசகு என்று பிராது செய்தார். கச்சேரியில் குருக்களுக்கு அநுகூலம் ஆகிவிட்டது. பழைய பாக்கியுடன் சம்பளம் கொடுக்கவேண்டி வந்தது. குருக்களோ ஜெயபேரிகை அடித்துவிட்டு அந்த பதுமைகளை அர்த்தமண்டபத்தை விட்டு நீக்கி வெளிமண்டபத்துக்கு கொண்டு போய் வைத்து விட்டார். செட்டியாருக்கு கோபம் வந்தது. குருக்கள்மீது இன்ஜங்க்ஷன் பிராது கொடுத்தார். மத சம்பந்தமான விஷயத்தில் கோர்ட்டார்

பிரவேசிப்பதில்லை என்று வழக்கு தள்ளப்பட்டது. செட்டியார் இன்னது செய்வது என்று அறியாமல் திகைத்தார்.

இத்தனை அவமானமும் பட்ட பிறகு அந்த கோயிலில் இருக்கக்கூடாது என்று எண்ணித் தன் தருமகர்த்தா வேலையை விட்டுவிட்டார். இனிமேல் ஆலயத்திருப்பணிக்குச் செல்வதில்லை என்று நிச்சயித்துக்கொண்டார்.

ஆனால் அவருக்குத் தரும சிந்தனை போகுமா! தம் பொருள்களைப் பாடசாலை ஆஸ்பத்திரி முதலியவைகளுக்குச் செலவழித்தார். சிறிதுகாலத்தில் அரசியலார் பட்டமும் தந்தார்கள். வெகு திருப்தியோடு காலம் தள்ளிவந்தார். இறைவன் தனக்குச் செய்தவனைக் காட்டிலும் தன் குழந்தைகளாகிய மக்களுக்குச் செய்யும் தொண்டையே பெரியதாகக் கருதுகிறான் என்று செட்டியார் கண்டுகொண்டார்.

# 17

# இதில் வியப்பில்லை

திருக்கடுகூர் ஒரு பண்டையத் திவ்வியதேசம். அதில் உள்ள ஞானப்பிரான் கோயில் உலகக் பிரசித்தி பெற்றது. அதில் எழுந்தருளியிருக்கும் அர்ச்சாவதாரமூர்த்தியோ பக்தகோடிகளுக்குப் பண்டைய காலமுதற் கொண்டு, ஞானத்தை அளித்துக்கொண்டு, பரம காருண்யத்துடன் எழுந்தருளியிருக்கின்றார். வராகரூபமாக உள்ள அம்மூர்த்தி மக்களிடை உள்ள அஞ்ஞானமான இருளை அழித்து ஞானமாகிய ஒளியை அருளிச் செய்கிறார். திருமாமகளை ஆகத்தில் ஏந்திய அச்சுந்தரமூர்த்தியின் பிரபாவத்தை நாம் வர்ணிக்க முடியுமா? இத்தகைய பெருமாள் எழுந்தருளியிருக்கும் திவ்விய தேசத்தின் பெருமையை என்ன வென்று எழுதமுடியும்.

இத்திவ்விய தேசத்தில் ஸ்ரீ வைணவப் பெருங்குடிகள் நூற்றுக் கணக்கில் உண்டு என்றால் அது அதிசயோக்தி அல்ல. எல்லா பரம பாகவத சிரோன்மணிகளும் ஆலயக் கைங்கரியத்தில் ஈடுபடுகின்றவர்கள். ஒவ்வொரு வருக்கும் ஆலயத்தில் சுதந்திரம் உண்டு. முதல் தீர்த்தம் முதல் கொண்டு எல்லா வைபவங்களும் அக்குடும்பத்தார்களுக்குச் செவ்வனே நடைபெறும். இருந்தாலும் தீர்த்தப்பிரசாதங்களுக்கு உரிமை பாராட்டிக் கச்சேரி ஏறினது ஒரு தடவை அல்ல. சென்ற 150 வருடங்களாக கச்சேரிகளில் செய்திருக்கும் தீர்ப்பு முதலிய ரிகார்டுகள் அக்குடும்பங்களில் வண்டிக்கணக்காக உண்டு. அந்த ரிகார்டுகளை ஒருசிறிதும் பழுதுபடாமல் வெகு ஜாக்கிரதையாக பாதுகாத்து வருவார்கள். விவகாரத்துக்குத் தலைமைப் பட்டணம் சென்றால், சென்றது முதல் வீடு திரும்பும் வரை ஒரு துளி தீர்த்தமும் வாயில் விடாமல் வெகு ஆசாரமாக இருக்கும். ஐயங்கார், சுவாமிகள், கிறிஸ்தவன், மகமதியன், ஐரோப்பியன் முதலிய நீதிபதிகள் செய்துள்ள

தீர்ப்புக்களைப் பொன்னே போலப் போற்றிப் பாதுக்காப்பார்கள் சில தடவைகளில் அந்த ரிகார்டுகளுக்குக் கொடுக்கும் புனித மதிப்பு திருவாய் மொழிக்கும் ரிக், யஜுர் சாகைகளுக்கும் கொடுக்கப்படுமோ என்பது பலருடைய ஐயப்பாடு. ஆலயத்தில் தமக்கு ஏற்பட்ட ஒவ்வாரு கடமையும் ஒவ்வொரு சுதந்தரம் அல்லது உரிமையாகக் கொண்டு அவைகளில் ஒரு அணு குறையினும் ஐந்து கச்சேரிகளும் ஏறத் தயாராக இருப்பார்கள். அர்ச்சாவதாரத்தின் முன்னால் உரிமைகளில் ஒரு சிறிது குறையின் பின்னால் பரமபதத்தில் நித்திய சூரிகளாகத் துலங்கும் காலத்தில் அக்குறை எங்கே ஒட்டிக்கொள்ளுமோ என்பது அவர்கள் ஐயம் போலும். இவ்விதமான ஐயங்களுக்கு எல்லாம் இருப்பிடமாக இருந்ததினால்தான் அன்னார் ஐயங்கார்கள் என்று பெயர் படைத்தார்கள் என்று திருக்கடுகூரில சில குறும்புக்காரப் பேர்வழிகள் கூறுவார்கள். ஆனால் அதனை நாம் ஒப்புக் கொள்ளுவதில்லை. ஸ்ரீ வைஷ்ணவத்திற்குச் சேர்ந்த ஐந்து அங்கங்களையும் பூரணமாகப் பெற்றபடியால் அவர்கள் ஐயங்கார் எனப்பட்டார்கள் என்று அவர்கள் அறியவேண்டும்.

திருக்கடுகூரில் ஸ்ரீ வைஷ்ணவர்களில் வடகலை, தென்கலை என்ற இருகலையாரும் உண்டு. இரண்டு வகுப்பார்களும் ஞானப்பிரானைத் தத்தங்கலையினர் என வாதாடுவர். உண்மையில் மூலத்தானத்தில் இருவகைத் திருநாமமும் இல்லை. திருமண் மேலுக்குப் பூசப்படுமே ஒழிய சிலையில் உள்ளது திலகம்தான். இரு கலையினரையும் ஏமாற்றி கலையைக் கடந்த கடவுளாக அப்புனித மூர்த்தி நிற்கிறார். இதனை அறிந்தும் அறியாதவர்போல் இருகலையார்களும் பல தடவை கச்சேரி ஏறி இலட்சக்கணக்கில் செலவழித்திருக்கிறார்கள். எந்தக் கலையினர் கோயில் அதிகாரம் பெற்றார்களோ, அந்தக் கலைத்திருமண் சுவாமியின் திருமுகத்தில் விளங்கிக்கொண்டிருப்பது வழக்கம். மாறுதல் அடையும் போதெல்லாம் புது வியாச்சியம் தொடங்கும்.

இறுதியில் எதுவும் நிலையாக இல்லாமல் போய்விட்டது. 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' ஆகி விடும். இந்த நிலையில் இருக்கும் இத்திவ்விய தேசத்தில் கதை நடந்த காலத்தில்

தென்கலையார் ஆதிக்கத்தில் இருந்தார்கள். அதனால் வட கலையாருக்கு ஒரே புகைச்சல். கூடிய வரையில் கச்சேரிகள் ஏறியும் அவர்களை விலக்கமுடியாமல் போய்விட்டது. புதிதாக போர்டு ஆதிக்கம் ஏற்பட்டது. அதனாலும் மாறுதல் ஏற்படவில்லை. அவ்வூரில் வடகலை தென்கலைச் சச்சரவுகள் அதிகரித்து வந்த காரணத்தை முன்னிட்டு போர்டார் அவ்வாலயத்திற்கு ஒரு திட்டம் அல்லது ஸ்கீம் ஏற்படுத்தினார்கள். அதன்படி ஒரு நிர்வாக உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டார். அவருக்கே முழு அதிகாரம் கொடுக்கப்பட்டது.

முதலாக நியமிக்கப்பட்டவர் ஸ்ரீவைஷ்ணவர். அவராலே இக்கலைவாதம் அடக்க முடியவில்லை. வேலை வேண்டாம் என்று விலகிக்கொண்டார். இரண்டாவது ஒரு சைவர் நியமிக்கப்பட்டார். அவர் ஒருமாதம் கூட தங்க முடியவில்லை. அவர் வீட்டின்பேரில் கற்பூஜை முதலிய பல அபிஷேகங்கள் நடந்தன. அவர் வேறு ஆலயத்துக்கு மாற்றிக்கொண்டு சென்று விட்டார். மூன்றாவதாக ஸ்ரீகிருஷ்ணன் B.A. என்ற சுமார்த்தர் நியிமிக்கப்பட்டார். ஸ்ரீகிருஷ்ணன் நன்றாக வாசித்தவர். பக்திமான், B.A ஆக இருந்தும் சாஸ்திரங்களை வாசித்தவர். மிகவும் சீலம், ஆசாரம் இவைகளைக் கொண்டவர். தெய்வத்திற்குப் பயந்து நடப்பவர். இவர்தான் தகுந்த ஆள் என்று எல்லோரும் எண்ணினார்கள். கிருஷ்ணனோ இரு திறத்தார்களுக்கும் பொதுவாகவும் நியாயமாகவும் நடந்து கொண்டார். முதலில் சிலநாள் செம்மையாகக் காரியங்கள் நடந்தன. கிருஷ்ணன் ஆட்சி எப்போதும் வெற்றியாகவே இருக்கும் என்று எல்லோரும் நம்பினார்கள்.

இருதிறத்தாரையும் திருப்தி செய்ய வேண்டும் என்பது கிருஷ்ணன் எண்ணம். அது ஒருக்காலும் நிறைவேறாது அல்லவா? ஒரு விவாதம் வந்தால் தீர்ப்பு ஒரு கட்சிக்குத்தான் இருக்குமே அன்றி இருபுறத்திற்கும் இருக்காது. வெற்றிப்பெற்றவர் புகழ்வார்கள். தோல்வி அடைந்தவர்கள் இகழ்வார்கள். இவ்விதமாக போட்டி விவாதங்கள் சில வந்தன. ஒருமாதத்தில் சேர்ந்தாற்போல் நான்கு விவாதங்கள் வடகலையாருக்கு அனுகூலம் ஆயின. உடனே தென்கலையார் கிருஷ்ணன்மீது பழிசுமத்தத் தொடங்கினார்கள்.

போர்டுக்கும் சர்க்காருக்கும் பல மனுக்கள் அனுப்பப்பட்டன. கிருஷ்ணன் சத்தியவான் என்று அறிந்த அதிகாரிகள் அம்மனுக்களைக் குப்பைத் தொட்டிக்கு அனுப்பிவிட்டார்கள். ஆகவே தென்கலையார் வேறு ஒரு தந்திரம்செய்ய வேண்டும் என்று துணிந்தார்கள். கட்சி வாதம் என்னதான் செய்யக்கூடும் என்று இதனால் தெரியக் கூடும் அல்லவா?

ஒருநாள் போர்டுக்கு வந்த தபால்களில் கிருஷ்ணனுடைய மனு ஒன்று வந்தது. அதில் தனக்கு வேறு வேலை அதிகமாக இருப்பதாகவும் இதனால் தன் வேலையை ராஜிநாமா செய்து விட்டதாகவும் உடனே வேறு ஒருவரை நியமித்துத் தன் வேலையை ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும் அதில் கண்டிருந்தது. இதனை வாசித்துப் பார்த்த கமிஷனருக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. ஒருவேளை தவறுதலாக இருக்குமோ என்று எண்ணி ஒரு வாரம் வரை உத்திரவு செய்யாமல் வைத்திருந்தார். உடனே மற்றொரு கடிதம் வந்தது. தான் நீங்கிக்கொள்ள வேண்டியது அவசரம் என்றும் உடனே ஒரு ஆளை நியமித்து வேலையை ஒப்புக் கொள்ளச் செய்ய வேண்டும் என்றும் அதில் கண்டிருந்தது. இரண்டாவது கடிதம் வந்ததும், சந்தேகம் நீங்கி, கமிஷனர் ராஜிநாமாவை ஒத்துக் கொண்டு இராமசாமி B.A. என்ற வேறு ஒருவரை நியமித்து உத்தரவை அனுப்பினார்.

இராமசாமி வெகுநாளாக ஒரு வேலை வேண்டும் என்று காத்துக்கொண்டிருந்தார். ஆகவே உத்தரவு கிடைத்ததும் தானே அதை நேரில் வாங்கிக்கொண்டு திருக்கடுகூர் புறப்பட்டுவிட்டார்.

திருக்கடுகூர் சென்றதும் ஸ்ரீ இராமசாமி ஆலயத்துக்குச் சென்று கோயில் ஆபீஸுக்குள் நுழைந்தார். ஸ்ரீ கிருஷ்ணன் ஆபீசில் ஏதோ வேலைசெய்து கொண்டிருந்தார்.

''தாங்கள்தானா ஸ்ரீகிருஷ்ணன்?''

''ஆம், என்ன வேண்டும்?''

''தங்களுக்குப் பதிலாக நான் நியமிக்கப்பட்டுள்ளேன். இதோ போர்டார் உத்தரவு! சார்ஜ் கொடுத்துவிடும்.''

இவ்வார்த்தைகளைக் கேட்டவுடனே கிருஷ்ணனுக்குத் தூக்கிவாரிப் போட்டதுபோல் இருந்தது. ''ஏன் இந்த எதிர்பாரத உத்திரவு. இது எப்படி ஏற்பட்டது''என்று சொல்லிக்கொண்டு அவ்வுத்தரவைப் படித்தார். தனது இராஜிநாமாவின் மீது இந்த உத்திரவு ஏற்பட்டது என்று கண்டார்.

''ஏதோ தவறு ஏற்பட்டிருக்கிறது. நான் வேலையை இராஜிநாமா செய்யவில்லை. ஆகவே இதை விவரமாகத் தெரிந்த பிறகு வேண்டியபடி நடந்துகொள்வோம்'' என்று கிருஷ்ணன் சொன்னார்.

ஆனால் இந்தச்சமாதானத்திற்கு இராமசாமி ஒத்துக் கொள்ளுவாரா? ஒருக்காலமும் ஒத்துக்கொள்ள மாட்டார். வெகுகாலம்வரை காத்திருந்தவர் இச்சமயம் தப்பினால் இனி வேலை கிடைப்பது எப்போதோ? ஆகவே கண்டிப்பாக வேலையில் அமர வேண்டும் என்று தீர்மானித்து விட்டார்.

''என்ன ஐயா! நீர் சொல்லுவது விசித்திரமாக இருக்கிறது. இராஜிநாமா கொடுத்துவிட்டு அது அங்கீகாரமான பிறகு அது இல்லை என்றால் யார் ஒத்துக் கொள்ளுவார்கள். நீர் சார்ஜ் கொடுத்துவிட்டு வேணுமானால் போர்ட்டுக்கு அப்பீல் செய்துகொள்ளும்'' என்றார். இவ்விதம் வாக்குவாதம் ஆவதற்குள் இச் செய்தி தந்திபோல் ஊர் முழுவதும் பரவிவிட்டது. கிருஷ்ணன்மீது சிறிது ஆத்திரம் கொண்ட ஆலயப் பணி விடையாளர்களும் தென்கலைக் குடிகளும் புது உத்தியோகஸ்தர் பக்கமாகப் பேசினார்கள். கிருஷ்ணனுக்கோ யாது செய்வதென்று தோன்றவில்லை.

தப்பாக இருந்தாலும் போர்டு உத்திரவை மீறுதல் சரியல்ல. பின்னால் நேரில் சென்று உத்திரவை மாற்றிக் கொள்ளலாம் என்று தீர்மானித்து சார்ஜ் கொடுத்து விட்டார். இராமசாமி புது நிர்வாகஸ்தார் ஆனர்ர்.

கிருஷ்ணனுக்கோ ஆச்சரியத்தின் மேல் ஆச்சரியம். தான் இராஜிநாமா கொடுக்காதிருந்தும் யார் இவ்விதம் செய்திருப்பார்கள் என்று எண்ணி எண்ணி நெஞ்சு புண்ணுகியதே தவிர வேறில்லை.

தன்னைப்போல் வேறு யாராவது பொய்க் கையெழுத்து இட்டு அனுப்பியிருக்க வேண்டும் என்று தீர்மானித்தார்.

சார்ஜ் கொடுத்த அன்றே தலைமைப் பட்டணத்துக்குப் புறப்பட்டார்.

திருச்சி சேர்ந்ததும் இரயில் சந்தியில் தன் மைத்துனனைக் கண்டார். மாமனாருக்கு ஆபத்தாக இருக்கிறதென்றும் தன்னை அழைத்து வரும்படி அனுப்பினார் என்றும் கூறி அழைத்தார் உயிருக்கு ஆபத்து என்றால் யார்தான் செல்லச் சம்மதிக்கமாட்டார்கள்? உடனே ஈரோடு புறப்பட்டு மாமனார் வீட்டுக்குச் சென்றார். அவருடைய நோய் சிகிச்சை செய்வதிலே சில நாள் கழிந்தன. சென்னை செல்லமுடியவில்லை. போர்டு ஆபீசுக்கு ஒரு மனு செய்து கொண்டார். அதில் தான், இராஜிநாமா செய்யவில்லை என்றும், அதனைத் தீர விசாரிக்க வேண்டும் என்றும் எழுதியிருந்தார். இக்கடிதம் சென்ற போது கமிஷனர் சுற்றுப் பிராயணத்தில் இருந்தார். மனு அப்படியே உத்திரவில்லாமல் நின்று விட்டது. இராமசாமியும் இவ்விதத்தில் சிறிது கவனம் செலுத்தி வந்ததினால் கிருஷ்ணன் கடிதம் சென்றிருந்த இடம் தெரியவில்லை. கிருஷ்ணன் மறுபடியும் மனுசெய்து கொண்டார். இதற்குள் முன் இருந்த கமிஷனர் மாறுதல் அடைந்தார். ஆகவே மனுவைக் கவனிப்பார் இல்லை. இதற்குள் ஆறு மாதம் ஆயிற்று. 'பட்டகாலிலே படும் கெட்டகுடியே கெடும்' என்றபடி கிருஷ்ணனுக்குப் பலவிதக் கஷ்டங்கள் ஏற்பட்டன. வேலையில்லா உபத்திரவம் பிரமாதம் ஆயிற்று. பிறகு ஒரு நாள் கடன் வாங்கிக் கொண்டு கிருஷ்ணன் சென்னைக்குப் புறப்பட்டார். கமிஷனர்களைக் கண்டு தன் குறைகளைச் சொல்லிக் கொண்டார். பழைய ரிகார்டுகள் தேடப்பட்டன. இராஜிநாமா பொய் கையெழுத்து என்று நிரூபிக்கப்பட்டது. இவ்விசாரணை நடந்து முடிவதற்கு இரண்டு மாதம் சென்றது. முடிவில் கிருஷ்ணனுக்கு மறுபடியும் வேலை தரப்பட்டது. ஆனால் இராமசாமியை நீக்குவது சரியல்ல. கிருஷ்ணனுக்கு மறுபடியும் திருக்கடுகூர் செல்லத் துணிவில்லை. ஆகவே கிருஷ்ணன் வேறு ஒரு ஆலயத்திற்குச் சென்றார். அது ஒரு

சிவாலயம். அங்கு இருவிதக் கலைச் சண்டை இல்லாததனால் மிகுந்த அமைதியுடன் ஆட்சி புரிந்தார்.

திருக்கடுகூர் வைஷ்ணவர்களோ இராமசாமியைத்தான் ஒப்புக்கொண்டார்களா; கிருஷ்ணன் நல்லவன் என்று சொல்லி இராமசாமியைப் பகைக்கத் தொடங்கினார்கள். ஆனால் இராமசாமி இவர்களுக்குப் பயந்தவன் அல்லன். தன் இஷ்டப்படி சுயேச்சை அதிகாரம் நடத்தி வந்தான். ஆனால் அதன் விளைவு பின்னால் நடந்த செய்கைகளால் அறியலாம். அவைகளை இங்கு எழுதவேண்டியது அவசியம் இல்லை. ஆதலினால் நிறுத்தப்பட்டது.

முற்றிற்று

238860
KAMARAJ UNIVERSITY LIBRARY

ஒரு பூனை சில நூற்றாண்டுகளுக்கு முன் ஓர் ஆலயத்திற் புகுந்து கொண்டால் அதனை விலக்க வேறு எந்தப் பூனைக்கும் உரிமை இல்லை. அப்பூனையினுடைய பரம்பரையிலேயே அக்கோயில் முதல் உரிமைகள் வரவேண்டும்; அக்கோயிலிலே அதன் மகள், பேர்த்தி, அதனுடைய மகள் கொள்ளுப்பேர்த்தி, முதலிய வரிசைகளுடன் உரிமை பாராட்டும். இந்த உரிமைகள் நாகரிகம் பெற்றதாகத் தற்புகழ்ச்சி பேசிக் கொள்ளும் எந்த நாட்டில் உண்டு ? ஆகவே நம் நாட்டுக் கோயில்களில் உள்ள பூனைகளுக்கு ஏற்பட்ட வீரம். உரிமை முதலியவைகள் எந்த நாட்டிலும் எக்காலத்திலும் இருந்த தில்லை எனலாம்.